2845

# T.N.L.A. Debates

## OFFICIAL REPORT

VOL: VII NO: 2

JUNE 11th 1985

D 1
V211,31 N85
N85.7.2
136401

வெளியீடு 27-2-1986

Issued 27-2-1986

303/86

2841

24 ஏப் 1986

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஜூன் 11, 1985 - தொகுதி VII எண் 2

Tuesday, the 11th June 1985 - Volume VII No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly, Secretariat, Fort St. George.**
**Madras - 600 009**

விலை: ரூ. 3-00 காசுகள்]

[Price Rs. 3-00 paise

உள்ளடக்கம்.

11— 6 —1985


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்:
உடுக்குறியிட்ட வினாக்கள் 305—346

2. அறிவிப்பு:
மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி 346

3. கவன ஈர்ப்புகள் :
(அ) மின் வாரியம் சென்னை நகர வீடுகளில் மூன்று மாதங்களுக்கொருமுறை மீட்டர் கணக்கு எடுப்பதால் ஏற்படும் இன்னல்கள் குறித்து. 347—350
( ) நெல்லை மாவட்டத்தில் மின்வாரியம் மீட்டர் கணக்கின்மீது வெவி விதிப்பதால் அரிசி ஆலைகள் பாதிக்கப்படுவது 350—354

4. அரசினர் சட்ட முன்வடிவு:
வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1985. 355—359

5. வரவு-செலவுத் திட்டம், 1985-86, வாக்கெடுப்பு (தொடர்ச்சி) : 359—472
(அ) கோரிக்கை எண். 1—நிலவரித் துறை
(ஆ) கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம்
(இ) கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.
(ஈ) கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்
(உ) கோரிக்கை எண் 46—இழப்புகளும் ஒதுக்கீடுகளும்
மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 382
389—390
439—470

| | |
|---|---|
| திரு மா. சுந்தரதாஸ் | 363—368 |
| *திரு ஆ. பிரேம்குமார் | 368—376 |
| திரு அ. ரகுமான்கான் | 376—395, 446, 456—457, 468 |
| *திரு வே. இரா. ஜெயராமன் | 396—402 |
| *திரு கோ. வீரய்யன் | 402—412, 455 |
| திரு வே. கு. சின்னசாமி | 412—419 |
| *திரு கு. சுப்பராயன் | 419—426 |
| *திரு கே. உச்சி | 428—431 |
| திரு ந. சிவஞானம் | 431—439 |

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். 472—473


2845

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1985, ஜூன் 11, செவ்வாய்க்கிழமை.**

**வைகாசி 29, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2016.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"

சேர்க்கும் திறம் அறிந்து தீமை ஒன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்டு வந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

**214—(*வினா எண் 61) திரு. வே. இரா. ஜெயராமன் :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1983-84 இல் முன்னுரிமை அடிப்படையில், எத்தனை விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, 17,481 விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப் பட்டுள்ளது.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முன்னுரிமை அடிப்படை என்ற இந்த சீனியாரிட்டி அடிப்படையில் விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்குவதில் முறைகேடுகள் நடக்கின்றன. அந்த முறைகேடுகளைக் களையவும், மதுரை மின் திட்டத்திலே இதுவரை எந்தவிதமான விவசாய மின்சார பம்பு செட்டுகளுக்கும் இணைக்கப்படாமல் அங்கே நிலுவையிலுள்ள மின்சார

விநியோகத்தை வேண்டுவோருக்கு—அப்ளிகண்ட்ஸ்க்கு இதுவரை எந்தவிதமான பம்பு செட்டுகளுக்கும் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. இந்த ஆண்டு மதுரை மின் திட்டத்தில் எத்தனை விவசாய பம்ப் செட்டுகளுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, முறைகேடுகள் நடைபெறாவண்ணம் தடுப்பதற்காகத்தான் அவர்கள் எந்தத் தேதியில் மனுக் கொடுத்தார்கள் என்று பார்த்து, அந்தத் தேதியின்படி மின்னிணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. அதிலேயும் முறைகேடு இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருதுவார்களேயானால் நிச்சயமாக அது குறித்துத் தகவலை அரசுக்கு அனுப்பினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அரசைப் பொறுத்தவரையில், 31—3—1976-க்கு முன்னால் தரப்பட்ட மனுக்களுக்கு மின்சாரம் விவசாயப் பம்ப் செட்டுகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்று மின் வாரியத்தை அறிவுறுத்தியுள்ளோம். மதுரை திட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கு 31—3—1976-க்கு முன் தேங்கிய மனுக்கள் இல்லை. சொல்லப் போனால் 1977-78 இல் தரப்பட்ட மனுக்களுக்குக் கூட மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. வருகின்ற ஆண்டில் 40,000 பம்பு செட்டுகளுக்கு தமிழகம் முழுவதும் மின்சாரம் தருவதற்கான குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழில் துறைக்கு மின்னிணைப்பு துரிதமாகவும், விவசாயத் துறைக்கு மின்னிணைப்பு தாமதமாகவும் கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. இன்றைய மின்சார வாரியத்தின் விதிகளை மாற்றி தொழில் துறைக்கும், விவசாயத் துறைக்கும் மனுக்கள் போட்டால் உடனடியாக மின்சாரம் கொடுக்கின்ற அந்த நிலையை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, தொழில் துறைக்கும், விவசாயத் துறைக்கும் தனித்தனி முன்னுரிமைப் பட்டியல் வகுக்கப்பட்டு, தனித்தனியே மின்னிணைப்புகள் வழங்கப்படுகின்றன. அதற்கும் இதற்கும் ஒப்பிட்டுப் பார்ப்பது, முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுவதைப் போல.





**திரு. இ. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பம்ப் செட்டுகளுக்கு மின்னிணைப்பு தருவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளது. அப்படிப்பட்ட தமிழகத்திலே, கிணற்றுப் பாசனத்தை நம்பியிருக்கின்ற வடாற்காடு மாவட்டத்திற்கு அதிக அளவில் மின்னிணைப்பு கொடுப்பதற்கான சலுகை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, ஏற்கனவே 10,12,000 பம்பு செட்டுகளுக்குத் தமிழகம் மின்சாரம் தந்திருக்கிறது. இன்னும், 3,88,753 மனுக்கள் தமிழகத்திலே பாக்கியிருக்கின்றன. வருஷத்திற்கு 40,000 தருவது என்பதே பெரிய பிரச்னையாக இருக்கிறது. எந்தெந்த அளவிற்கு, எந்தெந்த மாவட்டம் என்ற தகவல் என்னிடத்திலே இல்லையென்றாலும், 31—3—1976-க்கு முன் தந்த மனுக்களுக்கு இவ்வாண்டு அறவே கொடுத்து முடிக்கப்பட்டு விடும்.

**திரு. டி. எம். வெங்கடாசலம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட தேதியில் விண்ணப்பித்தவர்களுக்கெல்லாம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். ஆனால், மிகவும் ஏழ்மையாக இருக்கிற பலருக்கு குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை. அலுவலகத்திலே, அதிகாரிகளிடத்திலே நாங்கள் போய் கேட்கும்போது, அலுவல் காரணமாக சில தவறுகள் ஏற்பட்டு விடுபட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அதற்காக, விடுபட்டவர்களுக்கெல்லாம் மின்சாரம் வழங்க அரசிடத்திலே மீண்டும் நாங்கள் ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்து தருவார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, முறையே பதிவு செய்யாமல் விடுபட்டிருக்குமானால், அத்தகைய விவரங்களைத் தந்தால், அதற்குரிய நியாயம் வழங்கப்படும்.

[1985 ஜூன் 11

**திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனை சிறிய விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது? அது எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது? குத்தகை விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நல்ல கேள்வி, தனியாகப் போடவும்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு பெற தகுதி இருந்தும் சிலருக்கு டிரான்ஸ்பார்மரில் லோடு இல்லை என்ற காரணத்தைக் காட்டியும் கம்பம் நடுவதற்கும் லைன் இழுப்பதற்கும் பக்கத்து நிலச் சொந்தக்காரர்கள் ஆட்சேபணை செய்கிறார்கள் என்று காரணம் காட்டியும் மின் இணைப்பு மறுக்கப்படுகிறது. அத்தகைய குறைகள் களையப்படுமா? களைவதற்கு மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, டிரான்ஸ்பார்மர்களைப் பொறுத்தவரையிலே கூடுதல் திறன் கொண்ட டிரான்ஸ்பார்மர்கள் தேவைப்படலாம். அதற்கும் ஏற்பாடு செய்துவிட்டு அதற்குப் பிறகு மின் இணைப்பு கொடுத்தால்தான் பொருத்தமாக இருக்கும். மின் இணைப்பு வழங்கப்படுகிற பொழுது பக்கத்து நிலத்துக்காரர் ஆட்சேபணை செய்தால் அதனால் மின் இணைப்பு தர முடியாது என்ற நிலைமை நிச்சயமாக இல்லை, அதைப் பற்றி அரசு ஆராயும்.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனியாரிட்டி முறையில் உரிமம் பெற்று மோட்டார்கள் வாங்கி வைக்காதவர்களை விட்டுவிட்டு, மோட்டார்கள் வாங்கி பிக்ஸ் செய்து மின் இணைப்பு கோரியவர்களுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க அமைச்சர் ஏற்பாடு செய்வாரா என அறிய விரும்புகிறேன்.



1985 ஜூன் 11]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மின்சாரம் கிடைக்கும் என்று தெரிந்தால் எல்லோருமே உடனடியாக மோட்டார் வாங்கி விடுகிறார்கள். ஆகையினாலே அதிலே ஒன்றும் சிரமங்கள் இருப்பதில்லை. நமக்கு இருக்கிற பிரச்னை எல்லாம் தேவையிருக்கிற அளவுக்கு நிறைவு செய்ய முடியவில்லை என்பதுதான்.

**திரு. கு. அ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு மின்சாரம் இலவசமாகத் தந்தது உண்மையிலேயே பாராட்டக்கூடிய ஒன்று. இருந்தாலும் வறட்சியாக இருக்கிற சில பகுதிகளில் ஒரு குதிரை மின்திறனுக்கு ரூ. 75 என்று போடப்படுகின்ற நேரத்தில் அந்த அளவுக்குக் கூட அங்கே மின்சாரத்தைப் பயன்படுத்த முடியாத விவசாயிகளது மனுக்கள் அரசுக்கு வந்திருக்கிறதா? அதைப் பற்றி அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இது கொள்கை சம்பந்தமான கேள்வி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தான் முடிவு எடுக்க வேண்டும்.

**திரு. செ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை குடிசைவாசிகளுக்கு ஒரு விளக்கு மின் இணைப்பு கொடுக்க விண்ணப்பித்தால் மின் வாரியத்தினர் மெட்டீரியல்ஸ் இல்லை என்று கூறி பல பேர்களுக்கு என் தொகுதியில் மின் இணைப்பு கொடுக்க காலதாமதம் செய்கிறார்கள். எனவே, மெட்டீரியல்ஸைத் தடையின்றி வழங்கி, குடிசைகளுக்கு ஒரு விளக்கு மின் இணைப்பு வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரங்களைத் தர இயலும். இருந்தாலும் இந்தக் குறையை நிவர்த்தி செய்ய மின் வாரியத்திற்கு ஆலோசனை வழங்கும்.

[1985 ஜூன் 11

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசாங்கத்தால் சமீப காலம் வரை மின் இணைப்பு வழங்குவதிலே ஒரு சலுகை கொடுக்கப்பட்டு வந்தது. 'ஆன் தி லைன்' என்ற முறையிலே 100 அடி தூரம் இருந்தாலும் அதற்கு ஒரு போல் போட்டு விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கலாம் என்ற அறிவிப்பு இருந்தது. அதை இப்பொழுது அரசாங்கம் ரத்து செய்து விட்டதாக அறிகிறேன். ஆகவே, அப்படி விவசாயிகளுக்கு 100 அடி தூரத்திற்கு ஒரு போல் போட்டு விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்து மின்சாரம் வழங்கப் படுமா ?

அடுத்து, விவசாயிகளுக்கு 1 குதிரை சக்தி வேகம் உள்ள மின்சாரத்திற்கு ரூ. 75 கட்டணம் கட்ட வேண்டுமென்ற முறையிலே தர்மபுரி மாவட்டத்தில் பெரும்பாலும் மழையில்லாமல் வறட்சி ஏற்பட்டு அங்கு நிறைய விவசாயிகளது பம்ப் செட்கள் ஓடவில்லை. அதனால் சிறு விவசாயிகள் கூட அந்தத் தொகையை முழுமையாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. அதை அரசாங்கம் பரிசீலித்து அதற்கும் ஒரு தக்க பரிகாரம்—முந்தைய முறைப்படி செய்ய இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இந்த ஆண்டும் 'ஆன் தி லைன் சர்வீஸ்' பம்பு செட்டுகளுக்குக் கொடுக்க அரசு உரிய முறையில் ஆராயும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் பிற்பகுதி நான் ஏற்கெனவே சொன்னமாதிரி கொள்கைப் பிரச்சனை.

**215—(* வினா எண் 846) திரு. ஆர். கோவிந்தசாமி :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலாற்றுப் படுகையிலிருந்து 20 மைல் தூரம் வரை உள்ள விவசாய நிலங்களில் கிணறுகளில் பம்புசெட் அமைக்க பாலாற்று சான்றிதழ் வழங்குவதில் அதிக காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இம்முறையை நீக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?



1985 ஜூன் 11]

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பாலாற்று சான்றிதழ் வழங்குவதில் அதிக காலதாமதம் ஏற்படுவதாக அரசுக்கு தகவல் இல்லை. எனினும் பாலாறு படுகை விதிகள் அவ்வப்போது மாற்றியமைக்கப்படு கின்றன.

**216—(* வினா எண் 847) — திரு. ஆர். கோவிந்தசாமி :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு விவசாயிகளுக்கு கிணறுகளில் பம்புசெட் அமைக்க நிலத்தடி நீர் சான்றிதழ் வழங்க வேண்டும் என்ற முறையிலிருந்து விலக்கு அளிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, விவசாய விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு "நிலத்தடி நீர் சான்றிதழ்" வழங்குமாறு விவசாயிகளை தமிழ்நாடு மின் வாரியம் வற்புறுத்துவது இல்லை.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** தலைவரவர்களே, விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு அந்த விவசாயிகளுடைய கிணற்றில் தண்ணீர் இருந்தால் போதும். ஆனால் நடைமுறையில் முழு கிணறும் அவர்களுக்குச் சொந்தமாக இருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆகவே, சட்டப்படி உரிமை இருக்கிற விவசாயக் கிணற்றில் பங்கு இருந்தால் போதும் என்ற அடிப்படையில் அவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, சட்டப்படி உரிமை இருந்தால், இது சட்டப்படி ஆராயப்படும்.

## கோவில் பாதுகாப்பு நிதி.

**217—(* (வினா எண் 543)—திரு. ஆ. பிரேம்குமார் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில் பாதுகாப்பு நிதியிலிருந்து எவ்வகையான கோவில்கள் பழுது பார்க்கப்படுகின்றன ?

[1985 ஜூன் 11

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, கோயில் பாதுகாப்பு நிதியிலிருந்து கிட்டும். வட்டித் தொகையினைக் கொண்டு, நிதி வசதியற்ற கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணி மற்றும் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பாடல் பெற்ற திருக்கோயில்களுக்கு முன்னுரிமை அளித்து தகுதியான கோயில்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும்.

**திரு. ஆ. பிரேம்குமார் :** தலைவரவர்களே, திண்டுக்கல் வடக்குப் பக்கம் இருக்கிற அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில் ஒரு பிரசித்தி பெற்ற கோவில் ; பல்லாண்டுகால தொன்மை மிக்கது. அதைப்போன்று திண்டுக்கல் பகுதியில் அருள்மிகு சீனிவாசப்பெருமாள் கோவில், வடமதுரை சௌந்திரராசப் பெருமாள் கோவில் போன்ற திருக்கோவில்கள் மிகப் பழமையானவை. அவை சீர்செய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. இந்த கோவில் பாதுகாப்பு நிதியிலிருந்து அந்தக் கோவில்கள் எல்லாம் சீர் செய்யப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, இந்தத் திருக்கோவில்களுடைய திருப்பணிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற வைப்பு நிதி ஒரு கோடி ரூபாய். அதிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் அல்லது 11 இலட்சம் ரூபாய்தான் வட்டியாக வரும். இந்த வைப்புத் தொகை வைத்திருக்கிற நோக்கம் கிராமப்புறங்களில் ஏழை மக்கள் தாங்கள் வணங்குகின்ற ஆலயங்களுக்கு 5,000 ரூபாய், 10,000 ரூபாய் அளவில் திருப்பணி செய்ய முடியாத நிலையில் அரசிடம் வேண்டுகோள் வைத்தால் அதன் அடிப்படையில் உதவி செய்வது. அதற்காக இந்த வைப்பு நிதி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற திருக்கோவில்கள் மிகத் தொன்மை வாய்ந்த பெரிய கோவில்கள். அவைகளுக்குத் திருப்பணி 10 இலட்சம், 15 இலட்சம் ரூபாய் செலவில் நடைபெற வேண்டியிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட திருக்கோவில்களுக்குத் திருப்பணி செய்யும் முயற்சியும் செயல்முறைகளும் மக்களிடமிருந்து வந்தாக வேண்டும். மக்கள் அதற்கு முயற்சி எடுத்தால், அதன் பிறகு அறநிலையத் துறை அந்த உணர்வுகளுக்கு உயர்வு கொடுக்கும் முயற்சியில் ஈடுபடும்.



1985 ஜூன் 11]

**திரு. ஆ. பிரேம்குமார் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மக்கள் முயற்சி எடுத்தால் என்று சொன்னார்கள். எந்த வகையிலான முயற்சிகளை மக்கள் எடுக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கே அந்தந்த ஆலயங்களைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளிலே இருக்கின்ற மக்களிலேயிருந்து திருப்பணிக் குழு அமைக்கப் பெற்று அவர்கள் அதற்காகத் திட்டமிட்டு எவ்வளவு செலவிடவேண்டும் என்ற செயற் குறிப்புகளை எல்லாம் தயாரித்து அறநிலையத்துறைக்கு அனுப்பினால் மேலும் அதில் அவர்கள் எவ்வளவு வசூல் செய்து தருவார்கள் என்பதையும், சொந்தப் பணத்திலிருந்து எவ்வளவு போடுவார்கள் என்பதையும் தெரிவித்தால் அதற்குப் பிறகு அதற்கு அறநிலையத் துறை தன்னுடைய பங்காக எவ்வளவு உதவி செய்வது என்பதை முடிவு செய்யும்.

**திரு. ந. சிவஞானம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் பாதுகாப்பு நிதி என்பது எந்த நிதியாதாரங்களிலிருந்து தரப்படுகிறது? இந்த நிதியை ஒரு கோடி என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதனை உயர்த்துவதற்கான உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அறிவிப்பை ஒட்டி தமிழகத்தினுடைய திருக்கோயில்களிலிருந்து அதாவது அதிக வருமானம் உள்ள, உபரி நிதி வைத்திருக்கின்ற கோயில்களிலிருந்து 7 கோடி ரூபாய் நிதி தரப்பட்டு மூன்று திட்டங்களில் வைப்பு நிதியாகப் போடப்பட்டிருக்கின்றன. அதிலே ஆலயங்களில் அன்றாடம் ஒருவேளை பூசையாவது நடைபெறுவதற்காகவும், விளக்குகளை எரிப்பதற்காகவும், அந்த ஆலயங்களைப் பராமரிப்பதற்காகவும் 5 கோடி ரூபாய் வைப்பு நிதியாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஒரு கோடி ரூபாய் பழனி ஆலயத்திலிருந்து தனியாக அவர்கள்

நிதி ஒதுக்கீடு செய்து அந்த ஆலயத்தின் பெயரிலேயே வைப்பு நிதியாக வைக்கப்பட்டு இருக்கின்றது. அந்த நிதியிலிருந்து தான் இந்த கிராமப்புற கோயில்களுக்கு திருப்பணி செய்கின்ற அந்த நிதிகள் எல்லாம் வழங்கப்படுகின்றன. இன்னும் ஒரு கோடி ரூபாய் ஆலயங்களில் பணியாற்றுகின்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், நாதஸ்வரக்காரர்கள் போன்ற குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு உதவி செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டு வைப்பு நிதியாக வைக்கப்பட்டிருக்கின்றது. தமிழகத்தில் உபரி வருமானம் உள்ள பல ஆலயங்களிலிருந்து இந்த நிதிகள் அரசால் திரட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் கிராமப்புற கோயில்களுக்கு நிதி வழங்குகின்ற திட்டத்திற்காக 1 கோடி ரூபாயை பழனி கோயிலிருந்து தனிப்பட்ட நிதியாக ஒதுக்கப்பட்டு அது அந்த ஆலயத்தின் பெயரிலேயே வைப்பு நிதியாக போட்டு வைக்கப்பட்டிருக்கின்றது.

**திரு. துரை கோவிந்தராசன்**: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு பகுதியில் உள்ள அகஸ்தீஸ்வரர் ஆலயம் என்பது மிகப்பெரிய நிலப்பரப்பை உள்ளடக்கிய அதாவது 700, 800 ஏக்கர்களைக் கொண்ட மிகப் பெரிய ஆலயமாக இருக்கின்றது. அந்தப் பகுதி மக்கள் எல்லாம் அங்கே வந்து திருமணங்கள் போன்றவற்றை நடத்தி அந்த வகையில் ஆயிரக்கணக்கான திருமணங்கள் நடக்கின்ற இடமாக இருந்து அந்த ஆலயத்தில் இன்றைக்குத் திருமணங்களை நடத்த முடியாத அளவுக்கு அந்த நிலத்தை வைத்திருப்பவர்கள் ஆலயத்திற்குத் தர வேண்டிய குத்தகை பாக்கியைச் செலுத்தாத காரணத்தால் பராமரிக்கப்படாத நிலையில் இருக்கின்றது என்பதை அரசு அறியுமா? அப்படி அரசு அறிந்தால் உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்**: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட ஆலயத்தைப் பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதுபோன்று தஞ்சை மாவட்டத்தில்தான் இப்படி ஆலயங்களினுடைய இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து உழுதுகொண்டிருக்கின்ற விவசாயிகள் குத்தகை பாக்கியைத் தராத காரணத்தால் இப்போது ஆலயங்கள் எல்லாம் சங்கடப்பட்டு தங்களுடைய அன்றாடத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே தான் இப்படிப்பட்ட ஆலயங்களில் ஆயிரக்கணக்கான திருமணங்களை நடத்துவதற்கு ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு உரிய வசதிகளைச் செய்து கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது.



ஆனால் திருமண மண்டபங்களைப் பொறுத்தவரையில் அரசு ஒரு கொள்கையாக முடிவு எடுத்துக்கொண்டிருக்கின்றது. தமிழகத்திலே எங்கு பார்த்தாலும் இன்றைக்கு திருமணங்களை நடத்துவதற்கு ஏழை எளியவர்கள் சிரமப்படுகிறார்கள். அவர்களால் செலவு செய்ய முடியவில்லை. ஆகவே ஆலயங்களின் சார்பில் திருமண மண்டபங்களைக் கட்டித் தருவது என்ற கொள்கை இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. ஆகவே நிதிவசதி இல்லாத கோவில்களிலும் கூட நிதி வசதி இருக்கின்ற ஆலயங்களிலிருந்து கடனாக வழங்கி அந்தத் திருமண மண்டபங்களைக் கட்டித் தரலாம் என்ற கொள்கையை அரசின் அறநிலையத்துறை அறிவித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. இரா. தாமரைக்கனி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் தமிழக அரசின் முத்திரைச் சின்னத்தின் மாடலாக இருந்து கொண்டிருக்கின்றது. அந்த ஆலயத்திற்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களிலிருந்து குத்தகை வசூல் ஆகவில்லை. அங்கே உண்டியிலேயும் சரியாக வசூல் ஆகவில்லை. எனவே அரங்கநாதர் கோயில் ராஜகோபுரத்தை இந்த அரசு கட்ட முன் வந்தது மாதிரி அரங்கநாதரின் மனங்கவர்ந்த ஆண்டாள் கோவிலின் கோபுரத்தையும் கட்டித்தர அரசு முன்வருமா?

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்**: தலைவர் அவர்களே, ஆண்டாளுக்கு கோபுரம் இருக்கிறது. கட்ட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் திருப்பணிகள் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் முயற்சி செய்து ஒத்துழைப்பு தந்தால், விரைவிலே அந்த முயற்சிகள் நிறைவேற்றப்படலாம்.

[1985 ஜூன் 11

**திரு. மா. கதிர்வேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடஆற்காடு மாவட்டத்தில் வேலூரிலே ஜலகண்டேஸ்வரர் கோவில் இன்றையதினம் திறக்கப்பட்டு, அந்தக் கோவிலிலே திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றது. ஒரு சில தனிநபர்களால் அங்கே திருவிழாக்கள் நடத்தப்படுவதால் ஒழுங்கீனங்கள் நடைபெறுவதாகக் குற்றச்சாட்டு உள்ளது. ஆகவே, அறநிலையத்துறை அதை ஏற்று நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியை விட்டு தமிழகத்திலே இருக்கிற எல்லாக் கோவில்களைப் பற்றியும் கேள்விகளைக் கேட்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற கேள்வி முக்கியமானக் கேள்வி. வேலூரிலே இருக்கிற ஜலகண்டேஸ்வரர் ஆலயம் என்பது நம்முடைய நிர்வாகத்திலே இல்லை. மத்திய அரசினுடைய தொல் பொருள் ஆய்வுத் துறை நிர்வாகத்திலே இருக்கிறது. ஆகவே, அங்கே உள்ள நம்முடைய மக்கள் குட முழுக்கு விழா செய்து, திருப்பணிகள் நடத்தி, பூஜைகளையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மத்திய தொல் பொருள் ஆய்வுத் துறை, அதற்கு ஏன் நீங்கள் அனுமதித்தீர்கள் என்று நம்முடைய மாநில அரசின் மீதும், அதிகாரிகள் மீதும், அறநிலையத் துறையின் மீதும் வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். ஆகவே, இப்போதைய சூழ்நிலையிலே நாம் இடையிலே தலையிட்டு அந்த நிர்வாகத்தை எடுத்துக் கொள்ள முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய சிறப்புத் திட்டமாக 7 கோடி ரூபாயை கோவில் வைப்பு நிதியிலே வைத்து, அதனுடைய வட்டியைக் கொண்டு 3 திட்டங்களை நிறைவேற்றப் போவதாக அறிவித்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கிராமப்புறத்திலே இருக்கிற பல கோவில்கள் ஏழ்மையான நிலையிலே இருப்பதால், அந்த நிதியில் 1 கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டியை வைத்துக் கொண்டு அந்தக் கோவில்களை பராமரிக்க வேண்டும் என்பது அதிலே ஒரு திட்டம் என்றும் அறிவித்தார்கள். ஆனால் கிராமப் புறங்களிலே ஏழ்மை நிலையில் இருக்கும் அப்படிப்பட்ட கோவில்களின் எண்ணிக்கை மிகவும்



1985 ஜூன் 11]

அதிகமாக இருப்பதால், இந்த 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு குறைவாகவே இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, நம்முடைய மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, இன்னும் பல கோவில்களுக்கு, இதுபோன்ற ஏழ்மை நிலையில் இருக்கும் பல கோவில்களுக்கு, அதைப் பயன்படுத்தி இன்னும் சிறப்பாக அந்த திட்டத்தை நிறைவேற்ற, இந்த ஒரு கோடி ரூபாய் என்பதை 3 கோடியாகவாவது உயர்த்திக் கொடுத்தால் அதை வைப்பு நிதியிலே போட்டு அதன் வட்டியைக் கொண்டு, ஓரளவுக்கு ஏழ்மையில் உள்ள எல்லாக் கோவில்களையும் வாழ வைக்க இயலும். அந்த வகையில் நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு ஆலய நிதியிலிருந்து 7 கோடி ரூபாயை திரட்டிக் கொடுத்து, இதற்கென ஒரு வைப்பு நிதியை உருவாக்கிய செயல் முதல் முறையாக நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலே தான் நடைபெறுகிறது. அந்த 1 கோடி ரூபாய் வைப்பு நிதியிலிருந்து பெறும் வட்டி கிராமப்புற ஏழைக் கோவில்களுக்கு போதாது என்று தெரிகிறது. காரணம் கிராமப் புறங்களின் உள்ளே போனால் அங்கே இருக்கிற ஏழை மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், குறிப்பாக ஆதித் திராவிட மக்கள் தங்கள் பகுதியிலே ஆலயங்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள். அல்லது தங்களால் கட்ட முடியவில்லை கட்டிக் கொண்டிருக்கிற ஆலயம் பாதியிலே நின்றுக் கொண்டிருப்பதால் அதை முடித்துக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். நம்முடைய மக்களின் உணர்வுகள் இன்றைக்கு மிகச் சிறந்த முறையிலே ஆலய வழிபாட்டை நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கிறது. ஆலயங்கள் கட்ட வேண்டும் என்ற உணர்வும் வளர்ந்துக் கொண்டிருக்கிறது என்பதும் அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. ஆகவே, இந்த ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி என்பதை, அனேகமாக முயற்சி செய்து, இந்த ஆண்டிலோ அல்லது அடுத்த ஆண்டிலோ அதை 5 கோடியாக உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதற்காக பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 ஜூன் 11

**திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை தொகுதியில் உள்ள கிருஷ்ணாபுரம் கோவில் மிகவும் தொன்மை வாய்ந்த கோவில், மிகவும் பழுதடைந்த கோவிலாக இருக்கிறது. மேலும் அந்தக் கோவிலிலே சிறப்பான சிற்பங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த சிற்பங்களும் பழுதடைந்த நிலையிலேயே இருக்கின்றன. அவை களை விரைவான முறையிலே நடவடிக்கை எடுத்து சரி செய் வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற அந்த கிருஷ்ணாபுரம் கோவில் என்பது இந்தியாவிலே இருக்கிற மிகச் சிறந்த, அற்புதமான சிற்பங்கள் நிறைந்த கோவில்களிலே ஒன்று. ஆனால் அந்தக் கோவில் நெல்லை காந்திமதி ஆலயத்தினுடைய துணைக் கோவிலாக இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு என்று வருமானம் கிடையாது. இருக்கிற நிலங்களை வைத்துக் கொண்டிருக்கின்ற குத்தகைக்காரர்களும் குத்தகையை தருவதும் கிடையாது. ஆகவே அந்த ஆலயத்தைப் பாதுகாத்து, அந்தப் புகழ் பெற்ற சிற்பங்களை உலகத்திற்கு அறிவிக்கின்ற முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் திருப்பணிகள் அங்கே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் மேலும் அவைகளைப் பாதுகாப்பதற்கு அறநிலையத்துறை நடவடிக்கை எடுக்கும்.

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் தலைவர் அவர்களே, வைணவத் தலங்களில் தொன்மையாக, தலையாக விளங்கக்கூடிய திருவெள்ளரை ஆலய இராஜகோபுரம் இடிந்துகிடப்பது அரசுக்குத் தெரியுமா? இதைக் கட்டுவதற்கு ஆலயப் பாதுகாப்பு நிதி பயன்படுத்தப்படுமா? அப்படி ஆலயப் பாதுகாப்பு நிதி அதற்குப் பயன்படுத்துவதற்குரிய நிலையில் இல்லையென்றால் பெரிய பெரிய கோவில்களின் நிதியை அதற்குப் பயன்படுத்து வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, திருவெள்ளரை ஆலயம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது ஸ்ரீரங்கத்திற்கு அருகில், திருச்சி மாவட்டத்தி லிருக்கிற ஆலயம் என்று நான் கருதுகிறேன். மன்னிக்க

வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சமீப காலத்தில் ஆலயத்திற்குச் சென்று பார்க்கவில்லை என்று நான் அஞ்சுகிறேன். காரணம் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னால் தான் அந்த ஆலயத் திருப்பணி நடைபெற்று மிகப் பெரிய அளவில் குடமுழுக்கு விழா நடந்திருக்கிறது. ஆகவே யாரோ சொன்னதைக் கேட்டுச் சொல்கிறாரா அல்லது போய்ப் பார்த்து விட்டுச் சொல்கிறாரா அல்லது எப்போதோ பார்த்ததை வைத்துச் சொல்கிறாரா அல்லது கேட்டதை வைத்துச் சொல்கிறாரா என்று தெரியவில்லை. தயவுசெய்து அந்த ஆலயத்தைச் சென்று பார்த்து விட்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## தாங்கம்பாடி மாசிலாநாதர் கோவில் திருப்பணி.

**218 — (*வினா எண் 1224)—திரு. சா. துரைசாமி :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தாங்கம்பாடியில் அருள்மிகு மாசிலாநாதர் ஆலயம் மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இக்கோவிலை அரசே ஏற்று புதுப்பிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன :** (அ) அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) அருள்மிகு மாசிலாநாதர் திருக்கோயிலினை சீரமைத்து கட்டுவதற்கான நடவடிக்கைகளை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மேற்கொண்டுள்ளது.

**திரு. சா. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலயத் திருப்பணிக்கு திருப்பணிக்குழு அமைக்கப்பட்டிருக்கிறதா ? திருப்பணி செய்ய என்ன தொகை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது ? இந்த ஆலயத்திற்கு ஏதாவது நிரந்தரச் சொத்து அல்லது வருவாய் உள்ளதா என்பதையும் இதுபோன்ற தொன்மையான ஆலயங்கள் எல்லாம் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பராமரிக்கப்படாமல், கவனிக்கப்படாமல் சீர்கெட்டுப் போய்க் கிடக்கின்ற அந்த நிலையை மாற்றி தமிழகம்

முழுவதற்கும் ஒரு திருப்பணிக் குழு அமைத்து அதில் தமிழகத்தில் இருக்கிற ஆன்றோர்களையும் சான்றோர்களையும் தொழில் அதிபர்களையும் கொண்ட ஒரு குழு அமைத்து இதுபோன்ற தொன்மையான ஆலயங்களையெல்லாம் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலயம் தரங்கம்பாடியினுடைய கடற்கரையில் புகழ்பெற்ற தொன்மையான ஆலயமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் காலத்தால் கடலரிப்பால் அந்த ஆலயச் சுவர்கள் எல்லாம் பாதுகாப்பற்று இன்றைக்கு இடிந்து போகின்ற சூழ்நிலைக்கு வந்திருக்கிறது. 1980 ஆம் ஆண்டு ஒரு திருப்பணிக் குழு அமைத்து அந்த ஆலயத்தின் திருப்பணி செய்யவேண்டும் என்ற முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்று ரூ. 3,40,000 க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பெற்றிருக்கிறது. ஆனால் அங்கிருக்கிற சங்கடம் மீண்டும் மீண்டும் கடலரிப்பால் அந்த ஆலயத்திற்கு அபாயம் இருக்கிற காரணத்தால் அந்த ஆலயத்தை சுமார் 200 மீட்டர் தொலைவிலிருக்கிற இன்னொரு பெருமாள் கோவிலோடு இணைத்து அந்த வளாகத்திற்குள்ளே எழுப்பலாம் என்ற முடிவு சிலரால் மேற்கொள்ளப் பட்டது. இன்னும் சிலர் இன்னொரு இடத்தில் ஒரு ஏக்கர் நிலம் வாங்கி அதிலே இந்த ஆலயத்தை எழுப்பலாம் என்று முடிவெடுத்தார்கள்.

ஆனால் தாங்கம்பாடி பகுதியில் வாழ்கிற பொது மக்கள் இந்தப் புகழ்பெற்ற சைவ ஆலயம், சிவன் ஆலயம் தமிழ் நாட்டில் கடற்கரையில் சிவனுக்கு ஒரு ஆலயம் அமைக்கப் பெற்றிருப்பது இந்த இடத்தில்தான். ஆகவே அந்தக் கடற் கரையில்தான் அது இருக்க வேண்டும் என்று அவர்கள் உணர்வு பூர்வமாக முடிவு எடுத்துக்கொண்டு மற்ற இடங்களுக்கு இந்த ஆலயத்தை மாற்றுவதை அவர்கள் எதிர்த்துக் கொண்டிருக்கிறார் கள். அங்கேயே திருப்பணி செய்து மீண்டும் அந்த ஆலயத்தை நிலைநிறுத்த வேண்டுமானால் கடல் அலைகளால் அதற்கு சேதாரம் ஏற்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கு மிகப் பெரிய செலவாகும். ஆகவே எந்தளவிற்கு அந்த அபாயத்தைக் குறைத்து அலைகளால் ஏற்படுகிற கடலரிப்பிலிருந்து அந்த ஆலயத்தைப் பாதுகாத்து





அந்தத் திருப்பணியை நிறைவேற்றலாம் என்பது பற்றிய கருத்துக்களை ஒரு குழுவினரிடத்தில் ஒப்படைத்து பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அது முடிந்ததற்குப் பிறகு அந்தத் திருப்பணி நிறைவேற்றப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற ஆலயங்களினுடைய திருப்பணிக்கு தமிழகம் முழுவதற்குமாக ஒரு திருப்பணிக் குழு அமைக்கலாம் என்ற கருத்தைத் தெரிவிக்கிறார்கள். அது நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒன்று.

**திரு. சா. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் தொன்மைவாய்ந்த ஆலயங்களில் எல்லாம் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள தங்க நகைகளும் வைர நகைகளும் நாணயங்களும் அந்த ஆலயங்களிலே ஒரு பகுதியிலே புதைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அந்தக் காலத்தில் அரசர்கள் படையெடுப்பாலும் பணத்தைப் பாது காக்கிற பாதுகாப்புப் பெட்டகங்கள் இல்லாததாலும் ஆலயத்தில் ஒரு பகுதியில் புதைத்து வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு ஆதாரமாக ஹிஸ்டரி ஆப் திருநெல்வேலி டிஸ்ட்ரிகட் என்ற அந்தப் புத்தகத்தில் கால்ட்வெல் பாதிரியார் அவர்கள் அப்படிப்பட்ட தடயங்கள் இருப்பதாகவும் அதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறி இருக்கிறார்கள். எனவே அந்த அடிப்படையில் தமிழக அரசாங்கம் தொல்பொருள் ஆராய்ச்சி மூலமாக அந்த முயற்சியை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற இந்த கருத்தையொட்டி எங்கெங்கே புதையல்கள் இருக்கின்றன என்று தேட ஆரம்பித்தால், நாடு முழுவதும் தோண்டியாக வேண்டும். அது ஒரு மிக சங்கடமான வேலையிலே கொண்டுபோய் விட்டு விடும். குறிப்பாக, நம்முடைய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை ஆங்காங்கே கிடைக்கின்ற சில ஆதாரங்களை வைத்துக் கொண்டு, அகழ்வாராய்ச்சி நடத்துகின்ற நேரத்தில் சில சரித்திர சான்றுகள் கிடைக்கின்றன. அதை வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர, தமிழ்நாடு முழுவதும் தோண்ட ஆரம்பித்தால், அது இந்தக் காலத்திலே இந்த யுகத்திலே அதற்கு முடிவு கிடைக்காது.

[1985 ஜூன் 11

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மைவாய்ந்த கோயில்களைப் பாதுகாப்பதில் இந்த அரசுக்கு அக்கறை இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியதற்கு நன்றி கூறுகிறேன். அதே நேரத்திலே, திருவண்ணாமலையில் அண்ணாமலையார் கோயில் போன்ற தொன்மைவாய்ந்த கோயில்களில் சில பகுதிகள் சேமிப்பு கிடங்குகளாக மாற்றப்படுவதால், ஆலயங்களின் தொன்மையும், புனிதத் தன்மையும் பாதிக்கப்படுகின்றது. எனவே, அவற்றை நீக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய ஆசைப்படுகிறேன்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மக்களுடைய தேவைக்காகத் தான் மகேஸ்வரன் ஆலயங்கள் இருக்கின்றன என்ற அந்தக் கருத்தையொட்டி, ஆபத்துக்குப் பாவமில்லை என்கின்ற அந்தச் சூழ்நிலையில் நமக்குத் தேவையான உணவுப் பொருள்களை சேமித்து வைப்பதற்கு ஒரு தகுதியான இடமில்லை என்பதால், உணவுப் பொருள்களை பாதுகாக்க வேண்டுமென்ற உணர்விலே ஆயிரங்கால் மண்டபங்களையும், அதுபோன்ற பெரிய இடங்களையும் ஒரு காலத்திலே வாடகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் இப்போது அப்படி வாடகைக்குக் கொடுப்பதை அனுமதிப்பதில்லை. அந்த ஒப்பந்தங்கள் முடிவு பெற்றபின், அந்த இடங்களை காலி செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். ஆலயங்களுடைய எந்தப் பகுதியும் கோட்டுனாக, கிடங்காக மாற்றுகிற அந்தத் திட்டத்தை புரட்சித் தலைவர் அரசு இன்றைக்கு ஏற்றுக்கொள்ளவில்லை. அதைத் தடுத்துக் கொண்டிருக்கிறது.

சிறந்த நடிகர், நடிகையருக்கான பரிசுகள்.

**219—(*வினா எண். 1704)**—திரு. க. சோலைராசு : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறந்த நடிகர், நடிகை, படங்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது?

(ஆ) அவர்களுக்கு வழங்கப்பெறும் பரிசு மதிப்பு எவ்வளவு?



1985 ஜூன் 11]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அவையின் முன் அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை விவரமாகத் தந்திருக்கின்ற அமைச்சருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, தொன்மைவாய்ந்த வரலாற்று சிறப்புமிக்க சரித்திரப் படங்களுக்கு பரிசளிக்கும் கருத்திருக்கிறதா? இப்படிப்பட்ட படங்களை எடுப்பவர்களுக்கு அரசு உதவித் தொகை கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறந்த படங்களுக்கு பரிசுகள் வழங்குகின்ற திட்டத்திலே மக்களுடைய ஆதரவைப் பெறுகின்ற சிறந்த படங்களுக்கு என்ற தலைப்பில் ஒரு பரிசு வைத்திருக்கிறோம். அதற்கு ரூ. 25,000 தரப்படுகிறது. அதைத்தவிர, மக்களுக்குத் தேவையான கருத்துக்களை வழங்குகின்ற படங்களுக்கு நிதி உதவி தர ஒரு இலட்சம் ரூபாய் என்று வைத்திருக்கிறோம். ஆகவே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற அந்த சரித்திர படங்கள் இந்தத் தலைப்புக்குள் வருமானால், பரிசைப் பெற முடியும். உதவித் தொகையையும் பெற முடியும்.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரிசு பெறுவோர்கள் பட்டியலில் சண்டை பயிற்சி உள்பட பல திரைப்பட கலைஞர்களுக்கு பரிசுகள் தரப்படுகின்றன. ஆனால் இன்றைய இளைஞர்களும், பெரியவர்களும் ரசித்துப் பார்க்கக்கூடிய சிறந்த நடனக் கலைஞர்களுக்கு பரிசுகள் கொடுப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனவே, பரிசுப் பட்டியலில் நடன கலைஞர்களுக்கு பரிசு இல்லையென்றால், அவர்களுக்கு பரிசு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

---

* 47[illegible]—475 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தன் கடைசி சொட்டு இரத்தம் இருக்கின்ற வரையில் இந்த நாட்டிற்கு பாடுபட்டு உயிர்நீத்தார்கள். அவருடைய வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக எடுக்க முன்வருபவர்களுக்கு அரசு ஊக்குவிப்பு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, அப்படி திரைப்படம் எடுக்கிறவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தால் அவற்றின் அடிப்படையில் அரசு பரிசீலிக்கும். இப்போது உறுதியாகச் சொல்ல முடியாது. காரணம் திரைப்படம் எடுப்பது என்பது அவரவர்களுடைய சொந்த முயற்சியைப் பொறுத்ததாகும்.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் :** தலைவர் அவர்களே, சிறந்த நடிகர், நடிகை மற்றும் திரைப்படங்களுக்கு அரசு பரிசுகளைத் தந்து கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் சிறந்த நாடகங்களுக்கும், நடிகர், நடிகைகளுக்கும் இந்த அரசு பரிசுகளை வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, சிறந்த நாடகங்களை ஊக்குவிப்பதற்காக வேறு பல திட்டங்களை அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டங்களின் அடிப்படையில் அப்படி பரிசு வழங்குவதற்கு அவசியமானால் அரசு அதையும் பரிசீலிக்கும்.

**திரு. செ. தங்கராசு :** தலைவர் அவர்களே, தற்போது வெளியிடப்படும் திரைப்படங்கள் எல்லாம் மக்களுக்கு நல்ல கருத்துக்களை போதிப்பதாக இல்லை. ஆகவே அவைகளுக்கு பரிசுகளை வழங்குவதை நிறுத்தி மக்களுக்கு நல்ல கருத்துக்களை போதித்த 10 ஆண்டுகளுக்கு முன்பு திரையிடப்பெற்ற திரைப் படங்களுக்கு பரிசு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட படங்களுக்கு பரிசு கொடுப்பதென்று ஆரம்பித்தால் அதற்குப் பிறகு 50 ஆண்டுகளுக்கு முன்னால் எடுக்கப்பட்ட படங்களுக்கும் பரிசு கொடுக்கவேண்டுமென்று கோரிக்கை வரும். ஆகவே இது நடைமுறைக்கு உகந்ததல்ல.



**திரு. அ. மலர்மன்னன் :** தலைவர் அவர்களே, சிறந்த திரைப் படங்களுக்கும், சிறந்த நடிகர், நடிகைகளுக்கும் விருதுகளை இந்த அரசு அளித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மிகவும் தரம் குறைந்த, மக்களுடைய பண்பாடுகளை, கலாச்சாரத்தை கெடுக்கிற அளவிற்கு 'நியூட் படங்களை', அதாவது நிர்வாணப் படங்களை எடுக்கிற நடிகர், நடிகைகளை, அவர்கள் எவ்வளவு பெரிய இடத்திலே இருந்தாலும் இந்த அரசு தண்டிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, இத்தகைய படங்களுக்கு தண்டனை என்பது மக்கள் வழங்குகிற தீர்ப்பு தான். மக்கள் நிராகரித்து விட்டால் அதுவே பெரிய தண்டனை. ஆகவே அப்படிப்பட்ட தவறான படங்களை போய் பார்க்காமல் மக்கள் இருந்துவிட்டால் அதுவே அவர்களுக்கு தண்டனையாக அமையும்.

### நகர பஞ்சாயத்துக்களில் சாலைகள் மேம்பாடு.

**220—(*வினா எண் 595) திரு. க. பாரமலை :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் (Rural Labour Employment and Guarantee Programme) கீழ் நகரப் பஞ்சாயத்துக்களில் உள்ள சாலைகளை மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. மா. சுந்தரதாஸ் :** தலைவர் அவர்களே, எந்த வருடத்திலிருந்து ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தில் அது சேர்க்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் சேர்க்கலாமா என்பதை அரசு பரிசிலித்து வருகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** தலைவர் அவர்களே, இப்போது மாவட்ட அளவில் ஆர்.எல்.இ.ஜி.பி. மற்றும் என்.ஆர்.இ.பி. திட்டங்களுக்கு தொகை ஒதுக்குகிறபோது சிறிய ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அதே தொகை, பெரிய ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அதே தொகை என்ற அளவில் தான் அதிகாரிகள்

ஒதுக்குகிறார்கள். இந்த நிலைமை அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியென்றால் அதை மாற்றி ஊராட்சி ஒன்றியங்களின் பரப்பளவு, அதிலே இருக்கிற கிராமங்கள் இவைகளை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் இந்தத் திட்டங்களுக்கு வருகிற நிதியை ஒதுக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இதுவரையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு சமமாக பிரித்து கொடுத்து வருகிறோம். அதிலே மாற்றம் செய்வதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

## திருவண்ணாமலை பேருந்து நிலையம்.

**221—(* வினா எண் 1007) திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை நகரில் பொது பேருந்து நிலையம் அமைக்கும் பணி தாமதமாவதை அரசு அறியுமா ?

(ஆ) இதனை துரிதப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பொது பேருந்து நிலையம் அமைக்கும் பணி 1—1—1981 அன்று ஆரம்பிக்கப்பட்டு, 21—1—1985 அன்று முடிக்கப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** தலைவர் அவர்களே. இதில் என்னென்ன பணிகளுக்காக ஒப்பந்தம் போடப்பட்டது ? ஒப்பந்தத் தொகை எவ்வளவு ? அந்தத் தொகை ஒப்பந்தக் காரருக்கு பட்டுவாடா செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இதற்காக 13.71 லட்சம் ரூபாய் செலவினத்திற்காக முதல் கட்டத்திற்கும், 8.23 லட்சம் ரூபாய் செலவினத்திற்காக இரண்டாம் கட்டத்திற்கும். தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப் பட்டது. முதல் தவணையாக 5 லட்சங்கள் 18—4—1980-லும், இரண்டாவது தவணையாக 3.23 லட்சம் ரூபாய் 11—1—1981-லும்,

1985 ஜூன் 11]

8.70 லட்சம் ரூபாய் 15—5—1981-லும், 5 லட்சங்கள் 15—12—1983-லும் இந்தப் பணிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பேருந்து நிலையம் 24.76 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** தலைவர் அவர்களே, இன்னும் அந்தப் பேருந்து நிலையத்தில் சுற்றுப்புற சுவர் எழுப்பப்படாமல் இருப்பதும், உட்புற சாலை போடப்படாமல் இருப்பதும் அரசிற்கு தெரியுமா? உடனடியாக அந்தப் பணிகளையும் பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அவைகளுக்கான நிதியை ஒதுக்கியதாக எனக்குத் தெரியவில்லை. அதைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் தகவல் தர முடியும். அவர்கள் நிதி ஒதுக்கவில்லை. எனவே வேலைகள் எடுக்கப்படவில்லை.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, காமராஜ் மாவட்டத்தில் விருதுநகரிலே 16 லட்சம் ரூபாய் செலவிலே பக்கத்திலே உள்ள ஆட்டுச் சந்தையையும் சேர்த்து, பஸ் நிலையம் அமைக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். இதைப்பற்றி காமராஜ் மாவட்ட செய்தியில் ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டது. எப்போது இந்தத் துவக்க விழா ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதையும், இப்படிப்பட்ட முக்கியமான நிகழ்ச்சிகள் அந்தந்தப் பகுதி சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்க முடியும்.

**டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் நகராட்சி ஏறக்குறைய 100 ஆண்டுகளை எட்டிப் பிடிக்க உள்ளது. அதற்குத் தகுந்த போதுமான பேருந்து நிலையம் இல்லை. அதற்கு அரசு நல்ல முடிவு எடுத்து, அங்கே பேருந்து நிலையம் கட்ட முன்வருமா? கஷ்டப்படும் பயணிகளுக்கு உதவி செய்ய முன்வருமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி தான் வேண்டும்.

### பட்டுக்கோட்டை பேருந்து நிலையம்.

**222—(*வினா எண் 1699) — திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை புதிய பேருந்து நிலைய அமைப்புப் பணி வேலை தொடங்கப்பெற்று நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில். அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவர் அவர்களே, (அ) வேலை நிறுத்தப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே. பேருந்து நிலையத்தைப் பற்றி கேள்வி கேட்கப்பட்டு மூன்று மாதம் ஆகிறது. இடையிலே வேலை நிறுத்தப்பட்டு இருந்தது. இப்போது நடக்கிறது. அரசுக்கு நன்றி. ஆனால் இந்தப் பேருந்து நிலையம் கட்டுகின்ற இடம் ஒரு குளம். அந்தக் குட்டையைத் தூர்ப்பதற்கு நகராட்சியிடமிருந்து 50 ஆயிரம் ரூபாய் மேற்கொண்டு பணம் வேண்டும் என்று கேட்டார்கள். அந்தப் பணம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அப்படிக் கட்டிய பிறகும் கூட, இப்போது கோடை நாட்களில் பக்கத்தில் இருக்கின்ற இந்த நாடியம்மன் கோவில் குளத்திலிருந்து மண் எடுக்க வேண்டும். ஆனால் மண் எடுக்காமல், ஒப்பந்தக்காரர்களும், அங்கேயிருக்கின்ற எஞ்சினியர்களும் தாமதம் செய்கிறார்கள். இதை அரசு அறியுமா? இதை உடனடியாக முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலையாரிகுளம் என்ற இடத்தில் இருக்கின்ற அந்தப் பேருந்து நிலையம் கட்டும் பணிகள், 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருமழையின் காரணமாக அந்தப் பகுதி



பள்ளமாக ஆகி, பிறகு அதனுடைய ஒரு பகுதி தண்ணீரால் சூழப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு, அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக இப்போது 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மொத்தமாக இந்தத் திட்டத்திற்கு ஆரம்பத்திலே 20 லட்சமும், பிறகு 11 லட்சமும் ஒதுக்கப்பட்டு இன்னும் இரண்டு மாதங்களில் அந்தப் பணி அனைத்தும் முடிந்து விடும்.

### மாநகராட்சி மருத்துவமனைக் கட்டிடம், சைதை.

**223—(*வினா எண் 1016)—திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை 147 ஆவது வட்டம் மடுவின் கரையில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கும் மாநகராட்சி மருத்துவமனையை சொந்தக் கட்டிடத்தில் இயங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் பணிகள் துவங்கப்படாமல் இருப்பது ஏன்?

(ஆ) நடப்பு நிதியாண்டில் பணிகள் துவங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மடுவின் கரையிலுள்ள செங்கழனி அம்மன் கோயில் தெருவில் 28 ஆம் எண்ணுள்ள, தனியாருக்குச் சொந்தமான கட்டிடத்தில் இப்பொழுது மாநகராட்சி மருத்துவமனை இயங்கிக் கொண்டு வருகிறது. மேற்படி கட்டிடத்தை கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. மற்றும், அரசிற்குச் சொந்தமான நிலம் புல எண் 3 அடையாறு பிளாக் எண் 10-ல் உள்ள காலிநிலம், மாநகராட்சி மருத்துவமனைக்குத் தேவை என்று மாவட்ட ஆட்சியாளரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. மாவட்ட ஆட்சியாளர் மேற்படி நிலம் சென்னை குதிரைப்பந்தய சங்கத்திற்குச் சொந்தமானது என்றும், அதை மாநகராட்சிக்குக் கொடுக்க முடியாது என்றும் பதில் அளித்துள்ளார். எனினும், மேற்படி நிலம் குதிரைப்பந்தய சங்கத்தினால் உபயோகப்படுத்தப்படாமல் காலியாக இருப்பதால் அதை மாநகராட்சிக்கு அளிக்கும்படி மாவட்ட ஆட்சியாளரிடம் மீண்டும் கோரப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 11

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணியினை ஏறக்குறைய நான்கு ஆண்டுக் காலமாக தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தியும், காலியாக இருக்கின்ற அந்த இடத்தை, குதிரைப் பந்தயச் சங்கம் தர மறுக்கின்ற காரணத்தாலும், தேவையில்லாமல் கிடக்கிற அந்த இடத்தை, கட்டாயப்படுத்தி, கையகப்படுத்தி பொதுமக்களுக்கு பயன்படுத்துகின்ற அந்தப் பணியை மேற்கொள்ள சட்டச் சிக்கல் எது இருந்தாலும் அதையும் மீறி அதைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அந்த நிலம் குதிரைப்பந்தயச் சங்கத்திற்குத் தேவையில்லாமல் காலியாக இருப்பதாக தகவல் இருக்கிறது. அவர்களுக்கு உபயோகமற்ற அந்த நிலத்தை அரசு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருந்தகம் கட்டுவதற்கு நிர்ணயிக்கப் பட்டிருக்கின்ற தொகை எவ்வளவு? நடப்பு நிதியாண்டில் இப்பணி துவங்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படி அந்த இடத்தை எடுப்பதற்கு காலதாமதம் ஆனால், அருகாமையிலே காலியாக இருக்கின்ற வேறு இடத்தை அரசு எடுத்து மருந்தகம் கட்ட முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இடமே கிடைக்கவில்லை. எனவே, அதைப்பற்றிய வரை படத்தைப் பற்றியும், திட்டத்தைப் பற்றியும் எப்படிச் சொல்ல முடியும்?

### திண்டுக்கல் நகருக்கு குடிநீர் வழங்கு திட்டம்.

224 — (*வினா எண் 539) — **திரு. ஆ. பிரேம்குமார் மற்றும் மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பூாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லுக்கு குடிநீர் வழங்க அரசிடம் புதிய திட்டம் ஏதாகிலும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1985 ஜூன் 11]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நீர் ஆதாரம் நிர்ணயம் செய்வது குறித்து நீர் பயனீட்டுத் துணைக்குழுவின் யோசனைகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடுமையான, முதன்மையாக குடிநீர் பஞ்சம் உள்ள இடம் திண்டுக்கல் ஆகும். இங்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அருளால் இப்போது போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டு ஓரளவு சரி செய்யப் பட்டுள்ளது. இந்த நிலையில் இங்கே குளங்களும், கிணறுகளும் வற்றியிருக்கின்றன. இப்போதுள்ள தண்ணீர் இன்னும் 10 நாட்களுக்குத்தான் வரும் என்று அதிகாரிகள் எல்லாம் சொல்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் ரயில் மூலம் உடனடியாக திண்டுக்கல்லுக்கு தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அதேபோல் திண்டுக்கல்லில் அரசின் மூலம் செயற்கை முறையில் மழை பெய்விக்க ஏற்பாடு செய்து அதன் மூலமாக இந்தக் குடிநீர் பஞ்சம் தீர்க்கப்படுமா எனவும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் அங்கே தேவை என்பதை அரசு அறியும். அதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதை [illegible] அறியும். எந்த வகையில் இந்த ஏற்பாடுகளைச் செய்வது என்பதைப் பற்றி அரசு முடிவு எடுக்கும்.

### திருவில்லிப்புத்தூர் நகருக்கு குடிநீர் திட்டம்.

225—(*வினா எண் 588) — **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் நகருக்கு குடிநீர் வசதியை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட வேலை எப்பொழுது துவங்கப் படும்?

[1985 ஜூன் 11

(இ) மேற்படி திட்ட வேலைக்கு அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருவில்லிப்புத்தூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட பின்பு திட்டப்பணிகள் தொடங்கப்பெறும்.

(இ) இத் திட்டத்திற்கு ரூ. 214 லட்சம் தற்காலிக மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. முறையான ஒப்புதல் அளித்தபின் இத்திட்டத்திற்கு தமிழக அரசு ரூ. 91.73 லட்சம் கடனாக வழங்கும். மேலும் இத்திட்டத்திற்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 122.27 லட்சம் கடனாகப் பெறவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**திரு. இரா. தாமரைகக்னி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூரில் செண்பகத்தோப்பு அருகில் மழைக் காலங்களில் மழை பெய்யும்போது பெரிய நீர்த் தேக்கம் கட்டி அதிலிருந்து விவசாயத்திற்கு போக மீதித் தண்ணீரை குடிநீருக்கு உபயோகப்படுத்துவதற்காக அரசு அதிகாரிகள் ஆய்வு செய்து இருக்கிறார்கள். ஆனால் குடிநீருக்கு முன்னுரிமை கொடுத்து பி.டபிள்யூ.டி. அதிகாரிகளிடம் ஆலோசனை செய்து இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் நகரம் மட்டும் அல்லாது, காமராஜ் மாவட்டத்தில் உள்ள விருதுநகர், சிவகாசி, திருத்தங்கல், திருவில்லிப்புத்தூர், இராஜபாளையம் போன்ற எல்லா நகரங்களினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கிற அளவில் மேற்குத் தொடர்ச்சி மலையில் பம்பை ஆறு என்ற ஒரு ஆறு ஓடுகிறது. இந்த ஆற்றின் தண்ணீர் கடலில் வீணாகப் போய் கலக்கிறது. ஆதலால் இந்தத் தண்ணீரை நமது பகுதிக்குத் திருப்பி விடுகிற அளவில் நடவடிக்கையை நமது தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் தலைமைச் செய



1985 ஜூன் 11]

லாளர் அவர்களை உறுப்பினராகக் கொண்டு ஒரு குழு அமைத்து அந்தத் தண்ணீரை இங்கே குடிநீருக்காக திருப்பிவிடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ? இதற்குக் காரணம் இதில் பல இலாக்காக்கள் இருக்கிற காரணத்தால் குடிநீர் வடிகால் வாரியம் மட்டும் இந்த வேலையை செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிற காரணத்தால்தான் நம்முடைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்தால் இந்த மாவட்டத்தினுடைய குடிநீர்ப் பிரச்சினை தீரும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்தின் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அதற்கு ஏற்றாற்போல் நடவடிக்கை எடுக்கலாம்.

### நீலகிரி மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகள்.

**226—(*வினா எண் 1037)—திரு. எம். சிவக்குமார் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவர் பதவிகளைப் பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. உச்சி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பல்வேறு மருத்துவ மனைகளில் 5 பேர், 6 பேர், 10 பேர் என்ற அளவில் மருத்துவர்கள் இடங்கள் காலியாக இருக்கின்றன. அது மாதிரி எத்தனை மருத்துவமனைகளில், எத்தனை பதவிகள் காலியாக இருக்கின்றன என்பதைப் பற்றியும், அப்படி காலியாக இருப்பது போக அந்த ஊரில் பிறந்தவர்கள் வெளியிடத்தில், வேறு பகுதிகளில் டாக்டர்களாகப் பணியாற்றுகிறார்களே அவர்களை அந்த நீலகிரி மாவட்டத்திற்கு அனுப்ப அரசு

ஏதாவது திட்டம் வைத்துள்ளதா என்பதையும் அங்கே தொடர்ந்து பணியாற்றக்கூடிய நல்ல டாக்டர்களை வேறு மாவட்டங்களுக்கு மாற்றுவதையாவது நிறுத்திவைக்க முடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கேள்விகளை இணைத்து ஒரு கேள்வியாக எழுப்பியிருக்கிறார்கள். முதலில் அந்த முற்பகுதிக்கு நான் விடையளிக்கிறேன். 31—3—1985 அன்று (Six posts were vacant) 6 இடங்கள் காலியாக இருக்கின்றன. இவைகளை எல்லாம் உடனடியாக நிரப்ப வேண்டும் என்று நாம் சொன்னோம். ஆறு இடங்களில் 5 இடங்களில் உள்ள மருத்துவர்களுக்கு (Post-Graduate Course) படிப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்த காரணத்தினால் அந்த இடங்கள் காலியாக இருக்கின்றன.

(முற்பகல் 9-50)

ஒருவர் மட்டும் அங்கே டைரக்டர் ஆப் பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் அந்தப் பகுதிக்கு ரிலீஸ் செய்யப்பட்டிருக்கிறார். ஆறு இடங்களிலே 5 பேர் போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ்க்குப் போய்விட்ட காரணத்தினாலும் இன்னொருவர் இன்னொரு இலாகாவிற்கு அனுப்பப்பட்ட காரணத்தினாலும் 6 இடங்கள் காலியாக இருந்தன. இப்போது அந்த 6 இடங்களும் நிரப்பப்பட வேண்டுமென்று உத்திரவிடப்பட்டு இப்போது எல்லா இடங்களும் நிரப்பப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் இன்னொரு கேள்வியிலே நீலகிரி மாவட்டத்தினைச் சேர்ந்தவர்களை அந்த மாவட்டத்திலேயே போட வேண்டும் என்று சொன்னார்கள். இப்படி ஒரு மாவட்டத்திற்கு மட்டும் விதிவிலக்குக் கொடுப்பது சரியாக இருக்காது. ஏறத்தாழ 40 ஆண்டுகளாக மெடிக்கல் சர்வீஸ் மட்டுமல்ல, எந்த சர்வீஸாக இருந்தாலும் கூடிய வரையில் ஒரே மாவட்டத்திலே தொடர்ந்து போடாமல் ஒரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களைப் பிற மாவட்டங்களிலே போடக்கூடிய சம்பிரதாயம் தொடர்ந்து இருந்து வருகிறது. அந்த சம்பிரதாயத்தினால் நன்மை இருக்கிறது என்று அரசு கருதுவதால் அதைக் கடைப்பிடித்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை அந்த மாவட்டத்திலேயே

1985 ஜூன் 11]

போட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார், என்னிடமும் பலமுறை அதைச் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட தாக்கீது இலாகாவிற்கு நாம் போட முடியாது. என்றாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தைப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இராமநாதபுரம் மாவட்டத்தில் மூளைக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்.

227—(*வினா எண் 1395)—**திரு. க. பாரமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 1984 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மூளைக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களுக்கு எந்த வகையான சிகிச்சை அளிக்கப்பட்டது?

(இ) பாதிக்கப்பட்ட குழந்தைகளில் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர்?

(ஈ) மூளைக்காய்ச்சல் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏதும் அரசு எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹெண்டே:** தலைவர் அவர்களே,

(அ) 41 குழந்தைகள் பாதிக்கப்பட்டனர்.

(ஆ) நோயின் அறிகுறிகளுக்குத் தக்கவாறு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு, சிகிச்சையும், தக்க கவனிப்பும் அளிக்கப்பட்டு வருகிறது.

(இ) 17 குழந்தைகள் இந்நோயினால் இறந்துள்ளனர்.

(ஈ) இந்நோய் வராமல் தடுக்க தடுப்பு மருந்து ஏதுவும் இல்லை. ஆனால் நோயின் அறிகுறிகளைக் கொண்டு ஆரம்ப மருத்துவச் சிகிச்சை, நோய் கண்டவுடனேயே அளிக்கப்படுவதால், நோய் கட்டுப்படுத்தப்படுகிறது.

[1985 ஜூன் 11

## நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைக் கழிவுநீர்.

**228-—(* வினா எண் 1037) திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் இ.ஐ.டி. பாரி (இ) லிமிடெட் சர்க்கரை ஆலையின் கழிவு நீர் மக்கள் வாழுகின்ற நகரப் பகுதியின் வழியாக திறந்த வழியில் ஓடுவதை மாற்றி மூடிய குழாய்கள் வழியாக வெளியேற்ற அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் இ.ஐ.டி. பாரி (இ) லிமிடெட் சர்க்கரை ஆலையின் கழிவு நீர் அப்பகுதியை மாசுபடுத்தாவண்ணம், கழிவு நீரை தக்க முறையில் சுத்திகரித்து வெளிவிட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் இ.ஐ.டி. பாரி இந்தியா லிமிடெட் என்ற சர்க்கரை ஆலையிலிருந்து வெளிவருகின்ற கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு வெளியே அனுப்பப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், மிக்க நன்றி. ஆனால் அதே நேரத்திலே சுத்திகரிப்பு என்ற பெயரால் அவர்கள் அங்கே ஒரு தொட்டியைக் கட்டிவைத்து இருக்கிறார்களே தவிர முழுவதுமாக கழிவு நீர் ஊரைச் சுற்றி ஓடுகிற காரணத்தினால் நெல்லிக்குப்பம் நகரின் தூய்மை கெடுவதோடு மட்டுமல்லாமல் துர்நாற்றத்தின் காரணத்தினால் கொசுக்களும் நீரிலே நெளிகின்ற புழுக்களும் ஆக இருப்பதால் மக்கள் அவதியுறுகின்ற நிலை ஏற்பட்டு நோய்வாய்ப்படுகின்றார்கள் என்பதையும் அந்தப் பகுதியிலே உள்ள விவசாய நிலங்களும் அதனால் பாதிக்கப்படுகிறது என்பதையும் 1977 ஆம் ஆண்டுக்கு முன்னால் இருந்த அமைச்சர் பெருமக்களிடத்திலே இதைப்பற்றிப் பல முறைகள் எடுத்துச் சொல்லியும் எந்தவிதமான பலனும் ஏற்படவில்லை என்பதாலும் இந்த முறையாவது அமைச்சர் அவர்கள் நெல்லிக்குப்பத்திற்கு வருகை தருகின்ற நேரத்திலே அந்தப் பகுதியை நேரடியாகப் பார்த்து அந்த நகர மக்களுடைய சுகாதார நிலையைக் கருத்தில்கொண்டு அந்த ஆலைக் கழிவுநீரை மூடிய குழாய்களிலே கொண்டு போய் நகரத்திற்கு அப்பால் விடுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?



1985 ஜூன் 11]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பத்திலே உள்ள தொழிற்சாலையைப் பொறுத்தவரையிலே மாதத்தில் எரிசாராய உற்பத்தி 6 லட்சம் லிட்டர் ஆக இருக்கிறது. அதனால் நாளொன்றுக்கு கழிவுநீர் 4 ஆயிரம் கிலோ லிட்டர் வெளியேறுகிறது. இனிப்புப் பொருள், மிட்டாய், ஸ்வீட்ஸ் இவை மாதத்திற்கு 400 மெட்ரிக் டன் உற்பத்தியாகிறது. இதனால் ஆலையிலிருந்து வெளியேறுகிற கழிவுநீர் 520 கிலோ லிட்டர் ஆகும். எரிசாராயத் தொழிற்சாலையினுடைய கழிவு நீர் அங்கே உள்ள கழிவுநீர்க் குட்டை மூலமாக Ammonification Process) என்று ஆங்கிலத்திலே சொல்லப்படுகிற அதன் மூலமாக சுத்திகரிக்கப்படுகிறது. நீர்ப்பாசன வாய்க்கால் அருகிலே உள்ள இடத்திலே அது பாய்ச்சப்படுகிறது. அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் அந்த நீரை தங்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அந்த நீரைப் பயன்படுத்தி விவசாயத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது உண்மை. பல ஆண்டுகள் அவர்கள் சுத்திகரிப்பு செய்யாமல் விட்டுக் கொண்டிருந்தார்கள். நாம் பல முறை தாக்கீது கொடுத்து, பிறகு எச்சரிக்கை நோட்டீஸ் கொடுத்து, இப்பொழுது நல்ல வகையிலே அவர்கள் அந்தக் கழிவு நீரை சுத்திகரித்து வெளியே விட்டுக் கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். குழாய் மூலம் வெளியே விட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதிலே உள்ள ஒரு சிக்கல் என்னவென்றால், இப்பொழுது அங்கே சுத்திகரிக்கப்பட்டு Ammonification Process) மூலமாக அந்தத் தண்ணீரை விடுகின்றபோது பக்கத்தில் உள்ளவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் குழாய்கள் மூலம் விட்டால் அந்த விவசாயிகள் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்கின்ற நிலைமையை, அந்தப் பக்குவத்தைப் பெற்றிருக்கிறார்களா, ஏற்றுக்கொள்வார்களா என்பது ஒரு விஷயம். இன்னும் நல்லவகையிலே, B.O.D. (Content) நாம் எந்த எல்லைக்குள்ளே இருக்க வேண்டுமென்று சொல்கிறோமோ அந்த எல்லைக்குள்ளே இருக்கவும், சுத்திகரித்து வெளியிடுவதையும் நல்ல வகையிலே கண்காணித்தால் போதும் என்று கருதுகிறேன்.

[1985 ஜூன் 11

**திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, பண்ருட்டி தொகுதியிலே ஓடிக்கொண்டிருக்கின்ற அரவிந்த் டிஸ்டிலரீஸ் என்ற இடத்திலிருந்து சாராயக் கழிவு நீர் எனது நெல்லிக்குப்பம் தொகுதிக்கு ஓடி வந்து அங்குள்ள விளைநிலங்கள் பாதிக்கப்படுவதாக விவசாயப் பெருமக்கள் மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்தில்கொண்டு நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, இது விஷயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கடைகளில் விற்பனை விலைப் பட்டியல்கள்.**

229—(* வினா எண் 959)—**திரு. எஸ். சிவராமன் :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள மளிகை மற்றும் இதர கடைகளில் விற்பனை விலைப் பட்டியல் வைக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழ் நாட்டிலுள்ள அனைத்து சில்லரை மற்றும் மொத்த அங்காடிகளிலும் அத்தியாவசியப்பொருட்களை வணிகம் செய்யும் வியாபாரிகள் தமிழ் நாடு இன்றியமையாப் பொருட்கள் (இருப்பு மற்றும் விலைகளைத் தெரிவித்தல், கணக்குகளைப் பராமரித்தல்) ஆணை 1977-ன் கீழ் விலைப் பட்டியல் வைக்கப்பட்டு, அதனை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர். மேலும், அப்படி வைக்கப்படாத கடை வியாபாரிகள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகிறது.



1985 ஜூன் 11]

**திரு. எஸ். சிவராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கடைகளில் விலைப்பட்டியல் வைக்கப்படுவதாகவும், அதற்கென்று தனிப் பாதுகாப்புப் படை இருக்கிறது என்றும், அவர்கள் பார்த்து வருகிறார்கள் என்றும் கூறினார்கள். ஆனால் இன்றைய நிலையில் எந்தவொரு கடையிலேயுமே விலைப்பட்டியல் வைக்கப்படுவதில்லை. மளிகைக் கடையாக இருந்தாலும் சரி அல்லது சிறிய கடைகளாக இருந்தாலும் சரி விலைப்பட்டியல் இல்லாத நிலையில், வருகின்ற பொதுமக்கள் இன்ன விலை என்று தெரியாமல், கடைக்காரர்கள் சொல்லுகின்ற விலைக்கு வாங்கிச் செல்லுகின்ற நிலைமைதான் இருக்கிறது. எனவே, இந்தப் பாதுகாப்புப் படையை இன்னும் கொஞ்சம் முடுக்கிவிட்டு, இதுபோன்ற விலைப்பட்டியலை வைக்காத கடைக்காரர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும், உடனடியாக விலைப்பட்டியலை வைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 40 வகையாகப் பிரிக்கப்பட்டு, இருக்கின்ற இன்றியமையாத அத்தியாவசியப் பண்டங்களை வியாபாரம் செய்யும் வியாபாரிகள் அவற்றினுடைய விலைகளை—வாங்கிய விலையையும், விற்கிற விலையையும் அங்கே கண்டிப்பாக கடைகளின் முன்னால் உள்ள பலகைகளில் குறித்து வைத்தாக வேண்டும். அப்படி வைக்கப்படாதபோது இதற்கென்று இருக்கின்ற குழுவினர்—அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். இதுவரையில் சுமார் 15,220 கடைகளிலே பலகைகளிலே விலைப் பட்டியலை எழுதி வைக்காதவர்கள் மீது நடவடிக்கைகளை அரசு ஏற்கனவே மேற்கொண்டிருக்கிறது. இதன்படி. ஆங்காங்கே இதுபோன்ற குறைபாடுகள் தென்படுகின்ற பொழுது அரசுத் துறை அதிகாரிகள் முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கின்றபொழுது எந்தக் கடையிலேயும் வைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அப்படி ஏதாவது விலைப்பட்டியல் வைக்காத கடைகள் இருந்தால் அவர் சொன்னதைப்போல இந்தக் குழு அதிகாரிகள் வேகமாக முடுக்கிவிடப்பட்டு கண்டிப்பாக அதை நிறைவேற்றுகின்ற விதத்தில் அரசு கண்காணிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 ஜூன் 11

**திரு. எஸ். சிவராமன் :** மாண்புமிகு தலைவரவர்களே, அடுத்து, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், சிதம்பரம், கடலூர் போன்ற இடங்களில் விலைப்பட்டியல் வைக்கப்படவில்லை. அதுபற்றி அரசு கண்காணிக்க முன்வரும் என்று சொன்னார்கள், அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த படியாக, அங்கே விற்கப்படும் உணவுப்பண்டங்களான பருப்பு, எண்ணெய் போன்றவற்றில் கலப்படம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கலப்படத்தின் காரணமாக மனிதனுக்கு வியாதிகள் வருகின்றன. எனவே, இதுபோன்ற கலப்படம் செய்கின்றவர்களின் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்படத் தடைச் சட்டத்தின் கீழே இதுபோன்று கலப்படம் செய்கின்றவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அப்போதைக்கப்போது அவர்கள் வைத்திருக்கிற பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டு, அதில் தவறு இருக்குமானால் கிரிமினல் வழக்குகளும் தொடரப்பட்டு வருகின்றன. எனவே, உரிய நடவடிக்கைகள் தொடரப்படும்.

**சேலம் மாவட்டத்தில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயன் பெற்றவர்கள்.**

**230—(* வினா எண் 239) திரு. சீ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் எத்தனை பேர் கடன் பெற்றுள்ளனர்?

(ஆ) இதில் எத்தனை பேர் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள்?



1985 ஜூன் 11]

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** தலைவர் அவர்களே,

(அ) 1984-85-ம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1,790 பேர்களுக்கு ரூ. 349.72 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.

(ஆ) 1984-85 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் 14 ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மலைவாழ் பழங்குடியினருக்கும் மொத்தம் ரூ. 2.30 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.

**கடுக்காயிலிருந்து வாசனைப் பொருட்கள் தயாரிப்பு.**

**231—(* வினா எண் 960) திரு. எஸ். சிவராமன் :** மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் கல்வராயன் மலைப் பகுதியில் கிடைக்கக்கூடிய "கடுக்காய்" களை பயன்படுத்தி வாசனைத் திரவியங்கள் மற்றும் இரசாயனப் பொருள்களைத் தயாரிக்க ஒரு தொழிற்சாலையினை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**திரு. எஸ். சிவராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில், அவசர நிலைப் பிரகடனம் செய்தபொழுது, கொத்தடிமைகளாக இருந்த மக்களை விடுவித்தார்கள். அந்த நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. ஏ. எஸ். பத்மநாபன் அவர்கள் கடுக்காய்களைப் பயன்படுத்தி வாசனைத் திரவியங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் எல்லாம் செய்யலாம் என்று அரசுக்குப் பரிந்துரை செய்தார்கள். ஆனால், இதுவரையில் தொடங்கப்படாத காரணத்தால், கடுக்காய்களைப் பயன்படுத்தி வாசனை திரவியங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் தயாரிக்க ஒரு

தொழிற்சாலை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா என்று எழுப்பிய கேள்விக்கு இல்லையென்று பதில் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால், அவரால் கொடுக்கப்பட்ட அறிக்கை என்ன ஆனது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணத்தைப் பரிசீலிக்கிறோம். அது சம்பந்தமான விவரம் என்னிடத்திலே இல்லை. வாசனைப் பொருள் தயாரிப்புத் திட்டம் எதுவும் இப்போதைக்கு அரசிடம் இல்லை. ஆனால், கல்வராயன் மலைப் பகுதியிலும் தென்னாற்காடு மாவட்ட பிற பகுதிகளிலும் கடுக்காய்களைக் கொண்டு வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க தனியார் யாராவது முன்வருவார்களானால் அவர்களுக்கு ஊக்கம் அளித்து, அரசு முழு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்.

**232—(*வினா எண் 1291) திரு. க. சோலைராசு :** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓய்வு ஊதியம் பெறும் ஆதரவற்ற முதியவர்கள் இறந்தால் அவர்களை அடக்கம் செய்ய "மயானச் செலவு" தர அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, ஓய்வு ஊதியம் பெறும் ஆதரவற்ற முதியவர்கள் இறந்தால் அவர்களை அடக்கம் செய்ய "மயானச் செலவு" தரும் கருத்து அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவருடைய புனித அரசு தமிழ் மாநிலத்திலே தோன்றிய பிறகு ஆதரவற்ற முதியவர்களுக்கு உண்ண உணவும், உடையும், ஓய்வூதியமும் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு யாரும் பொறுப்பேற்பதில்லை, அவர்கள் அநாதை என்கிற வகையில், அரசே தத்து எடுத்துக் கொள்வது போன்ற

நிலையில் இப்படி உதவி வழங்கப்படுவதாக அறிகிறேன். எனவே, அவர்கள் உயிரோடு இருக்கும்போது உதவி செய்வதைப் போல, இறந்த பிறகு அவர்களுக்கு உதவி செய்வதற்கு, கிராம அலுவலர்கள் மூலம் அரிசன மக்கள் இறந்து விட்டால் மயானச் செலவு கொடுப்பதைப் போல, ஓய்வூதியம் பெறுபவர்களும் இறந்தால் மயானச் செலவு கொடுத்தால், அவர்கள் நன்றிக் கடன் பட்டவர்களாக இருப்பார்கள் என்று கருதுகிறேன். எனவே, அந்தக் கருத்தினை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் ஆதரவற்ற முதியோர்கள் இறந்துவிட்டால் அவர்களை அடக்கம் செய்வதற்கான பணத்தை யாரிடம் கொடுப்பது என்கிற பிரச்னைகள் எழுகின்ற சூழ்நிலை எழும்பும். எனவே, ஆதரவற்ற முதியோர்கள் இறந்தால் அவர்களை அடக்கம் செய்வதற்காக உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கை எடுக்கின்றன. அதன் மூலமாகத்தான் அந்தப் பிணங்களை அடக்கம் செய்து கொண்டிருக்கின்றனர் என்பதை இங்கே நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சோலைராசு:** தலைவரவர்களே, அவர்களுக்கு ஓய்வு ஊதியத்தை கொடுக்கும்போது கிராம நல அலுவலர்கள் மூலமாகக் கொடுக்கிறோம். ஆகையால் ஓய்வு ஊதியம் பெறுவோர் இறந்துவிட்டால் அந்த கிராம நல அலுவலர்கள் மூலமாகவே சவ அடக்கத்திற்கான செலவையும் கொடுக்கலாம். ஆதி திராவிட மக்களுக்கு அவர்கள் மூலமாகத்தான் கொடுக்கிறோம். மற்ற அமைப்புகள் சடலங்களை எடுத்து அடக்கம் செய்வதில் காலதாமதம் ஏற்படுவதால் நாற்றம் அடிக்கும் அவல நிலை ஏற்படுகிறது. ஆகவே கிராம நல அலுவலர்கள் மூலம் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தலைவரவர்களே, அவர்கள் உயிரோடு இருக்கும்போது அரசு ஆதரவற்ற முதியவர்களுக்கு உயிர் வாழத் தேவையான உணவு முதலியவை கொடுத்து கண்காணித்து வருகிறது. அவர்கள் இறந்த பின்னால் சவ அடக்கம் செய்வதற்கு உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 ஜூன் 11

## திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பனை உற்பத்தி.

**233—(*வினா எண் 857) திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பனைமர உற்பத்தியை அதிகரிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, பனை மர உற்பத்தியை அதிகரிக்க, திருவில்லிபுத்தூரில் பனை மர ஆராய்ச்சி நிலையம் ஒன்று 1980-ல் நிறுவப்பட்டது. இவ்வாராய்ச்சி நிலையம் ஆண்டொன்றுக்கு சுமார் 1 லட்சம் தாமான பனங்கன்றுகளை உற்பத்தி செய்ய ஒரு திட்டத்தை தயாரித்து தமிழ்நாடு மாநில பனை வெல்ல இணையத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. இத்திட்டம் இணையத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே, திருவில்லிப் புத்தூர் தொகுதியில் பனை ஆராய்ச்சி நிலையத்தை விரிவு படுத்தும் திட்டம் உள்ளதா? இந்தப் பனைப் பண்ணையில் எவ்வளவு பனங்கொட்டைகள் சேகரிக்கப்பட்டுள்ளன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** தலைவரவர்களே, இந்தத் திட்டம் இப்போது இணையத்தின் பரிசீலனையில் உள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் சுமார் 4.13 இலட்சம் பனங்கொட்டைகள் திருவில்லிப்புத்தூரிலுள்ள பனைப் பண்ணையின் மூலமாகச் சேகரிக்கப்பட்டு, விநியோகிக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே, பனைமர உற்பத்தியை அதிகரிப்பதற்கு பனை நாற்றுகள் உற்பத்தி செய்ய அரசிடம் சிறப்புத் திட்டம் உள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** தலைவரவர்களே, பனை மரங்கள் நடுவதை ஊக்குவிக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அதன் கீழ் இயங்கி வரும் திருவில்லிப்புத்தூர் பனைமர ஆராய்ச்சி நிலையத்தில்



1985 ஜூன் 11]

தரமான பனை நாற்றுகளை அதிகமாக உற்பத்தி செய்ய மூன்று ஆண்டு திட்டம் ஒன்றை சுமார் 10.9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தயாரித்து தமிழ்நாடு மாநில பனைவெல்ல இணையத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமான பகுதிகளில் பனை மரங்களிலிருந்து கிடைக்கின்ற கச்சாப் பொருள்களை வைத்து ஏராளமான தனியார்கள் தொழில் நடத்தி வருகிறார்கள். அதைப்போன்று அரசு அங்கே ஒரு மையம் அமைத்து, தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் திட்டத்தை வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விரிவான விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** தலைவரவர்களே, கேள்வி திருவில்லிப்புத்தூர் பனைமரம் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் பனைவெல்ல பயிற்சி நம்முடைய மாநிலத்தில் கூட்டுறவுத் துறையிலும் அரசாங்கத் துறையிலும் நடைபெறுகிறது. பனை மரங்களிலிருந்து பதநீர் இறக்குவது, பனை ஓலையிலிருந்து கூடை முடைவது போன்ற கைத்தொழில்களை ஊக்குவித்து வருகின்ற நம்முடைய அரசு அந்தத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிற பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு, 8, 10 ஆண்டு களுக்கு மேல் நீண்ட காலமாக இந்தப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குக்கூட பணி நிரந்தரம் செய்யாமல் அவர்களுக்கு குறைந்த ஊதியமே வழங்கப்படுவதை அறியுமா? குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி வட்டங்களில் நிறைய பனை மரங்கள் இருக்கின்றன. அரசாங்கத் துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் பனை மரங்களிலிருந்து பதநீர் இறக்குதல், பனை வெல்லம் காய்ச்சுதல் கூடை முடைதல் போன்ற தொழில்களுக்கு அதிக அக்கரை காட்டப்படுகிறது. அந்தத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு எல்லாம் குறைந்த ஊதியம்தான்

வழங்கப்படுகிறது. அவர்களுடைய பணி நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்களுடைய பணியை நிரந்தரமாக்கி, ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:* தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக கேள்வி போட்டால் விரிவான பதில் அளிக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-10)

2. அறிவிப்பு.

மேலவையிலிருந்து வரப் பெற்ற செய்தி.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1985).

2. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1985).

3. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1985).



3. கவன ஈர்ப்புகள்

(அ) மின் வாரியம் சென்னை நகர வீடுகளில் மூன்று மாதங்களுக்கொருமுறை மீட்டர் கணக்கு எடுப்பதால் ஏற்படும் இன்னல்கள் குறித்து.

*திரு. சா. துரைசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாநகரிலுள்ள வீடுகளில் 'மீட்டர் ரீடிங்' மாதம் ஒருமுறை கணக்கெடுப்பதற்குப் பதிலாக மூன்று, நான்கு மாதங்களுக்கொரு முறை எடுக்கிறார்கள். இதனால் நடுத்தர மக்கள் மூன்று, நான்கு மாதங்களுக்கு சேர்ந்தாற்போல் மின் கட்டணம் செலுத்த பெரிதும் அவதிப்படும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

சென்னை நகரில் சில இடங்களில் மாதமொரு முறையும், மற்ற இடங்களில் இரண்டு அல்லது மூன்று மாதத்திற்கொரு முறையும் மீட்டர் கணக்கெடுப்பு செய்கிறார்கள். வீட்டு பயனீட்டாளர்களுக்கு கணக்கெடுப்பு இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள் ஒருமுறை எடுக்கப்பட்டு, மின் கட்டணத் தொகை ரூ. 50-க்கு அதிகமாக இருந்தால் இரண்டு தவணைகளில் செலுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். மூன்று மாதத்திற்கு மேல் ஒருமுறை கணக்கெடுப்பு செய்தால் மூன்று தவணைகளில் செலுத்த அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் முன் மாதங்களில் கணக்கெடுப்பு செய்யப்படாத பயனீட்டாளர்களுக்கு அவர்கள் கட்ட வேண்டிய பாக்கி கட்டணத் தொகை அதிகரிக்காமல் இருக்கும் பொருட்டு முன்னுரிமை அளித்து கணக்கெடுப்பு செய்யப்படுகிறது.

2. சென்னை நகரில், மீட்டர் கணக்கெடுப்பு செய்யும் 'மதிப்பீட்டாளர்' பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இதற்கான காரணங்கள் பின்வருமாறு:—

"பயனீட்டாளர்களின் சௌகரியத்திற்கும், அதே நேரம் மின் கட்டண வசூலை துரிதப்படுத்தவும் ஏதுவாக ஜனவரி 1982

முதல் 'அட்டைப் பட்டியல் முறை' என்னும் புதிய முறை மின் வாரியத்தினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. மீட்டர் கணக்குகளை சரிபார்த்து மின் கட்டணத்தை உடனுக்குடன் விதிக்கவும், மின் கட்டணத்தை வசூலிக்கவும் 'அட்டைப் பட்டியல் முறை' திட்டம் உதவியாக இருந்தது. வாரியத்தின் சில தொழிலாளர் சங்கங்களுடன் சட்டப்படி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்ட பின் தான் மேற்கண்ட திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒப்பந்தத்தின் விதிமுறைகளை ஒப்புக்கொள்ளாத மற்ற சங்கங்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் பல நீதிப் பேராணை விண்ணப்பங்களை தாக்கல் செய்து, புதிய திட்டம் நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு முன், மின் கட்டண வசூல் செய்யும் பணியில் இருந்த பணியாளர்களை புதிய திட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என மின் வாரியம் வற்புறுத்தக் கூடாது என்று உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவையும் பெற்றது. இந்த உத்தரவை திரும்பப் பெறுவதற்காக மின் வாரியம் பல முயற்சிகளை எடுத்துக் கொண்டும் அவை யாவும் உயர் நீதிமன்றத்தின் பகுதி நடுவர் ஆய மன்றத்திலும், தலைமை நீதி மன்றத்திலும் தோல்வி கண்டன. இந்த நீதிப் பேராணை விண்ணப்பங்களை உயர் நீதி மன்றத்திலும் தலைமை நீதி மன்றத்திலும் விரைவாக தீர்வு செய்ய எடுத்துக் கொண்ட வாரியத்தின் முயற்சிகளும் தோல்வி கண்டன. மூன்று வருடங்கள் முடிந்த பின்னும் இந்த நேர்வுகள் தீர்வு செய்ய முடியாமல் இருந்ததாலும் 'அட்டைப் பட்டியல் முறை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு, பழைய முறை நிறுத்தப்பட்டதால், புதிய முறையின் கீழ் வர மறுத்த வாரியத்தின் 1,750 பணியாளர்களும் வேலை எதுவும் செய்யாமல் இருந்தாலும், உயர் நீதிமன்றம் மற்றும் தலைமை நீதிமன்றம் இவற்றின் ஆணைக்கிணங்க மின்வாரியம் இந்தப் பணியாளர்களுக்கு அவர்களின் ஊதியம் மற்றும் படிகளை வழங்க வேண்டி இருந்ததால், மின் வாரியத்திற்கு 6.57 கோடி ரூபாய் இதுவரை செலவாகியுள்ளது. இந்தச் செலவுத் தொகை மாதம் ரூ. 18 லட்சமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தத் தடையை நீக்குவதற்கும், ஒவ்வொரு மாதமும் வாரியத்திற்கு ஏற்படும் இழப்பைப் போக்குவதற்கும், நீதி மன்றத்தில் இது சம்பந்தமான வழக்குகள் முடிவாகாத நிலையில் இருந்த போதிலும், வாரியத்தின் ஏழு தொழிற் சங்கங்களுடன்





நீண்ட பேச்சுவார்த்தை திரும்பவும் மேற்கொள்ளப்பட்டு, தொழிலாளர்கள் நல ஆணையரின் ஒத்துழைப்புடன் அவரது முன்னிலையில் வாரியத்திற்கும், சங்கங்களுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதன்படி, திருத்தப்பட்ட 'அட்டைப் பட்டியல் முறை' 4—2—1985 முதல் அமுல்படுத்தப் பட்டு வருகிறது.

இதற்கு வேண்டிய கூடுதல் மதிப்பீட்டாளர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டதைப் போல அந்த நடவடிக்கை இருந்தால் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வர வேண்டிய அவசியமே இல்லை. எனவே அறிக்கையில் இருப்பது போன்று நடைமுறையில் இல்லாதது மாத்திரமல்ல, அவ்வாறு ஒரு நடவடிக்கை எடுக்காததன் விளைவாகத்தான் அந்த மக்கள் படுகின்ற நிலையைக் குறித்து அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வந்து இருக்கிறேன். எனவே இந்த நடவடிக்கை நடைமுறையில் இருந்தால் அந்த மக்கள் படுகின்ற சிரமங்கள் குறையும். எனவே இதனை நடைமுறைப் படுத்துவதைப் பொறுத்தவரையில் நன்கு கண்காணிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இங்கே சொல்லியிருப்பதைச் செயல்படுத்துவதற்குத் தீவிரமான நடவடிக்கைகளை மின் வாரியம் மேற்கொள்ள வேண்டும் என்று அரசு உத்தரவு வழங்கும்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் பணியாளர்கள் நியமிக்காத காரணத்தாலும் தொழிற் சங்கங்களில் ஏற்பட்ட நிலைமை காரணமாகவும் தான் இந்த நிலைமை என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே கூடுதலாகப் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு நியமித்து காலியிடங்களை நிரப்பி இத்தப் பணியை விரைவில் அமல்படுத்த உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது உண்மை. குறிப்பாகச் சொல்லப் போனால் 3 ஆண்டுகளுக்கு முன்னாலே கொண்டு வந்த இந்தத் திட்டத்தை எதிர்த்து சில தொழிற் சங்கத்தினர் நீதி மன்றத்திற்குச் சென்று சுமார் 1,750 பணியாளர்கள் மூன்றாண்டுக் காலமாக எந்த வேலையும் செய்யாமல் இருந்தாலும் அவர்களுக்குச் சம்பளம் வழங்க வேண்டும் என்று நீதி மன்றத்தின் உத்தரவும் பெறப்பட்டு சுமார் 6½ கோடி ரூபாயை நாம் இதற்காகச் செலவு செய்ய வேண்டுமா என்ற நிலையில் இப்படி சாதாரண ஒரு சீர்திருத்தத்தைக் கூட ஒரு பொதுத் துறையில் மேற்கொள்ள முடியாமல் போயிற்றே என்பது உண்மையிலேயே வருந்தத்தக்கதாகத்தான் இருக்கின்றது. ஆனால் நல்ல வேளையாக மற்ற சங்கங்கள் இதை ஒத்துக் கொண்டு, நீதி மன்றத்திற்கு சில சங்கத்தினர் போய் இருந்தாலும் கூட அவர்கள் அதை ஓரளவுக்குப் பேசித் தீர்த்து இப்போது எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை உருவாகி இருப்பது உண்மையிலே நமக்குள் நாமே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்; நடுவர் மன்றங்களுக்குச் சென்றால் எவ்வளவு வேதனை ஏற்படுகின்றது என்பதை நினைவுப்படுத்துகிறேன். இப்போது எல்லா சங்கங்களும் ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் சுமார் ஆயிரம் கணக்கீட்டாளர்கள் அதாவது அசஸர்கள் விரைவில் நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

**(ஆ) நெல்லை மாவட்டத்தில் மின் வாரியம் மீட்டர் கணக்கின் மீது லெவி விதிப்பதால் அரிசி ஆலைகள் பாதிக்கப்படுவது.**

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டத்தில் மின்சார மீட்டர் ரீடிங்கை கணக்கிட்டு லெவி விதிக்கப்படுவதால், சாத்தான்குளம் தொகுதியில் பல அரிசி ஆலைகள் மூடப்பட்டு, அரிசியின் விலை அதிக அளவில் உயர்ந்துள்ளது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

1985 ஜூலை 11] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அறிக்கை.

1984 ஆம் ஆண்டு நெல் மற்றும் அரிசி கொள்முதல் (லெவி) ஆணையின்படி அரிசி அரவை ஆலை நடத்துவதற்கு உரிமமும் மற்றும் 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையா வியாபாரப் பொருட்கள் வர்த்தக ஒழுங்கு முறை ஆணையின் கீழ் உரிமமும் பெற்றிருக்கும் ஒரு அரிசி அரைவை ஆலையின் சொந்தக்காரர், அரைவை செய்து அரிசியாக மாற்றி விற்பதற்காக கொள்முதல் செய்வதில் 50 விழுக்காடு அரசிற்கு கொடுக்க வேண்டும்.

2. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அரிசி அரைவை ஆலை சொந்தக்காரர்கள் ஆந்திர மாநிலத்திலிருந்தும் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்தும் லெவி கொடுத்த பின்பு கொள்முதல் செய்வதில் ஆர்வமுடன் இருக்கிறார்கள். உள்ளூரிலேயே கொள்முதல் செய்தாலும், கொள்முதல் செய்த அளவுகளை கணக்கில் சரியாகக் காட்டுவதில்லை. ஆனால் அரைவை ஆலையில் அரைக்கப்படும் அரிசியின் அளவு அதிகமாய் உள்ளது. ஏறத்தாழ 18 யூனிட்டுகள் மின்சாரச் செலவு ஆகியிருந்தால் ஒரு டன் நெல் அரைவை செய்ததாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். எனவே மின் அளவியில் உள்ள அளவுகளை வைத்து எவ்வளவு கொள்முதல் செய்து அரைவை செய்திருக்கிறார்கள் என்று கணக்கிடப்படுகிறதே தவிர அதை வைத்து லெவி விதிக்கப்படுவதில்லை. மேலும் சட்டப்படி கொடுக்க வேண்டிய அளவு லெவி கொடுக்கவில்லை என்பதற்காகவும், சரியான அளவில் கணக்குகள் இல்லாததாலும் மற்றும் சில முறைகேடுகளுக்காகவும் 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையா வியாபாரப் பொருட்கள் (வர்த்தக ஒழுங்குமுறை) ஆணையின் கீழ் உள்ள மொத்த வியாபார உரிமம் தான் தற்காலிகமாக ரத்து செய்யப்படுகிறதே தவிர அரிசி ஆலை உரிமங்கள் ரத்து செய்யப்படுவதில்லை. தற்காலிகமாக ரத்து செய்யப்பட்ட மொத்த வியாபார உரிமங்களும் திருப்பிக் கொடுக்கப்பட்டு அரிசி அரைவை ஆலைகள் வழக்கம் போல் இயங்கி வருகின்றன. கவன ஈர்ப்பு அறிவிப்பில் கூறியபடி மின்சார அளவியல் கணக்கிட்டு லெவி விதிக்கப்பட்டதால் எந்த ஒரு அரிசி ஆலையும் சாத்தான்குளம் தொகுதியில் மூடப்படவில்லை.

3. சாத்தான்குளம் தொகுதியில் வெளிச் சந்தையில் அரிசி தாராளமாகக் கிடைக்கிறது. பற்றாக்குறை எதுவும் இல்லை. ஒரு கிலோ சாதாரண ரக அரிசி ரூ. 3.40-லிருந்து ரூ. 3.60 வரையும் சன்ன ரக அரிசி ரூ. 3.30-க்கும் மிகச் சன்ன ரக அரிசி ரூ. 3.90-க்கும் தட்டுப்பாடின்றி பொது மக்களுக்கு கிடைக்கிறது. பாதிப்புகள் எதும் இல்லை. சில்லரை வியாபாரிகள் எல்லோரும் வழக்கம் போல் செயல்படுகிறார்கள்.

4. லெவி கொள்முதல் மூலம்தான் பொது விநியோகத் திட்டத்திற்கும், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்கும் வேண்டிய அரிசி ஈடு செய்யப்படுவதால் லெவி விதிப்பில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தயவுதாட்சண்யம் காட்டுவதில்லை, எனவே வியாபாரிகள் மின்சார அளவியல் அளவுகளை வைத்து லெவி விதிக்கப்படுகிறது என தவறாகக் கூறுகின்றார்கள்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது போல அங்கு நடவடிக்கைகள் இல்லை. ஏற்கெனவே இருந்த முறைப்படி, லெவி அரசாங்கத்தால் விதிக்கப்பட்டது போல இல்லாமல், மீட்டர் கணக்கின்படி தான் தரப்பட வேண்டும் என்று அங்கே சொல்லப்படுகிறது. அந்தப் பகுதியிலே 7 அரிசி ஆலைகள் இருக்கின்றன. இந்த 7 ஆலைகளுமே அந்த மீடிங் சிஸ்டத்தை வைத்துத்தான் லெவி கட்டுகிறார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே இந்த ஆண்டு விளைச்சல் கிடையாது. பக்கத்து இடங்களிலேயிருந்து நெல் கொண்டு வர வேண்டுமென்றால் இந்த அரிசி ஆலைகள் சிறிய ஆலைகளாக இருக்கின்றன. அங்குள்ள பொதுமக்கள் அரிசி வாங்குவதற்கு வாய்ப்பாக, உள்ளூரிலே இருக்கக்கூடிய நெல்லை சுமார் 6 கோட்டைக்கு விதம் 1 வாட்டு என்ற வகையில் கணக்குப் போட்டு அன்றாடம் வரக்கூடிய அந்த வருவாயை வைத்து அந்த ஆலையை நடத்தி வந்தார்கள். ஆனால் இப்பொழுது மீடிங் முறையிலே லெவி தர வேண்டும் என்று வைத்ததன் காரணமாக கிட்டத்தட்ட ஒரு நாள் ஒன்றுக்கு அவர்களுக்கு 80 ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதன்



காரணமாக லெவி கட்ட முடியாத நிலை அந்த ஆலைகளுக்கு ஏற்பட்டு இப்போது அந்த 7 ஆலைகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. தற்காலிகமாக அந்த ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த மூடப்பட்ட அரிசி ஆலைகள். . . (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியத்தின் மீது பேசுவது போல் கவன ஈர்ப்பில் பேசிக் கொண்டே போகக் கூடாது. கேள்வியாகக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே சொல்லியிருப்பதைப் போல கொள்முதல் செய்வதில் 50 விழுக்காடு அரசிற்கு லெவியாகக் கொடுக்க வேண்டும். அல்லாது உபயோகப்படுத்துகின்ற மின்சாரத்தினுடைய அளவை வைத்து லெவி விதிக்கப்படுவது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் அந்தப் பகுதியிலே தற்சமயம் எந்த ஒரு அரிசி ஆலையும், சாத்தான்குளம் தொகுதியிலே, அதுவும் இந்த லெவி காரணமாக மூடப்படவில்லை. அதற்கு மாறாக பல்வேறு குறைபாடுகளை அவர்கள் சொன்னார்களே அவற்றில் ஏதாவது ஒரு காரணத்திற்காக மூடப்பட்டிருக்குமானால், அதற்கு இந்த லெவி காரணம் அல்ல. லெவி கொள்முதல் செய்வது முக்கியமான காரணமாகத்தான். தமிழகத்திற்கு பொது விநியோகத்திற்கு தேவைப்படுவது 80 ஆயிரம் டன். மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவு திட்டத்திற்காக 25 ஆயிரம் டன் அரிசி தேவைப்படுகிறது. ஆகவே தேவைப்படுகிற ஏறத்தாழ 1 லட்சம் டன் அரிசியை தமிழகத்திலே இருக்கிற பல்வேறு இடங்களிலேயிருந்து தான் லெவி மூலமாகப் பெற்று பொதுமக்களுக்கு குறைந்த விலையிலே அரிசி விநியோகம் செய்யப்படுகிறது. சத்துணவு திட்டத்திற்கும் இனாமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, சற்று அதிகக் கண்டிப்புடனேயே லெவி வசூலிப்பதில் அதிகாரிகள் கடுமையாக இருக்கிற காரணத்தினாலே இதுபோன்ற பிரச்னைகள் அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கலாம். இருந்தாலும் அதைத் தவிர்ப்பதற்கு வேறு வழியே இல்லை. ஆனால் தவறான முறையிலே அதிகாரிகள் நடந்துக் கொண்டிருந்தால் அது அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வரப்படுமேயானால் அதற்கு அரசு தக்க நடவடிக்கையை எடுக்கும்.

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் ராத்தான்குளத்தில் இருக்கக் கூடிய இந்த 7 அரிசி ஆலைகளும் ரீடிங் முறையிலேதான் கட்டாயம் லெவி கட்ட வேண்டும் என்று சொல்லியதன் காரணமாகத்தான் தற்காலிகமாக அவைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்த தற்காலிக ஆர்டரை ரத்து செய்து லெவி முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் இன்று 4 ரூபாய் 50 பைசாவுக்கு ஒரு கிலோ அரிசி கிடைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இன்றைக்கு பொதுமக்கள் பாதிப்பு அடைந்து இருப்பதன் காரணமாக இந்த 7 அரிசி ஆலைகளையும் உடனடியாக இயங்க வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே உபயோகப்படுத்துகிற மின் அளவை கணக்கெடுக்கிறார்கள் என்பது உண்மை தான். அந்தக் கணக்கை வைத்து லெவி விதிப்பதில்லை. அவர்கள் என்ன கொள்முதல் செய்கிறார்களோ அதிலே 50 சதவிகிதம் லெவி தர வேண்டுமென்று தான் சட்டம் இருக்கிறது. அதைத் தான் வாங்குகிறார்களே தவிர, உபயோகப்படுத்துகிற மின் அளவை வைத்து அதைச் செய்வதில்லை. சுமார் 18 யூனிட் மின்சாரம் ஒரு டன் நெல்லை அரிசியாக்குவதற்கு தேவைப்படும். அதை வைத்து ஒரு கணக்கெடுப்பதற்கு அந்த முறையை கையாளுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல அரிசி ஆலைகளுடைய லைசென்ஸ் எதுவும் ரத்து செய்யப்படவில்லை. முறையாக லெவி தரவில்லை அல்லது கணக்குகளில் எதுவும் தவறு இருக்கிறதென்றால் அவர்கள் வியாபாரம் செய்கிற மொத்த வியாபார லைசென்ஸ் ரத்து செய்யப்படுகிறது. ரைஸ் மில்லுக்கான லைசென்ஸ் ரத்து செய்யப்படுவதில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்பி திருப்பி சொல்கிறார்கள் என்பதால் இதிலே ஏதாவது பிரச்னைகள் இருக்குமானால், மேலும் தகவல் கேட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.



### 4. அரசினர் சட்ட முன்வடிவு

### வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு பொறுப்பிலே வந்ததற்குப் பிறகு கோவை நகரத்தில் வேளாண் விளைபொருள் சந்தைகள் சட்டத்தை தனி அதிகாரிகளின் ஆட்சியை நீடிப்பதற்காக 10-வது தடவையாக இந்தச் சட்டத்தை இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். பத்து தடவைகள் இப்படி தனி அதிகாரிகளின் காலத்தை நீட்டிப்பதற்காக சட்டம் கொண்டு வந்த நேரத்தில் என்ன சொல்லப்பட்டது என்றால், தேர்தல் நடத்துவதற்காக தனி அதிகாரிகளின் காலத்தை நீட்டிக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லப்பட்டது. ஏறத்தாழ ஏழெட்டு வருட காலமாக தேர்தல் நடத்துவதற்கென்ற காரணத்தைச் சொல்லியே தனி அதிகாரிகளுடைய காலத்தை நீடிப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வந்து, அவர்களுடைய ஆட்சியை நீடித்துக்கொண்டு போகிற நிலைமை என்பது சரியல்லயென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது கூட 1985 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் தேதி மேலும் ஒரு ஆண்டு கால அளவிற்கு நீடிப்பதற்காக இந்தச் சட்டமுன்வடிவை கொண்டு வந்திருக்கிறார்கள். தேர்தலை நடத்துவதற்கு இப்படி ஒரு ஆண்டு காலம் நீடிக்க வேண்டிய தேவை இல்லை. இப்போது பல ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த பஞ்சாயத்துத் தேர்தல்களுக்கு கூட நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டு, நாள் நட்சத்திரம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிற இந்த நேரத்திலே மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கு தேர்தல் நடத்துவது அந்த அளவிற்கு பிரமாதமான காரியமல்ல.

ஆகவே இந்தத் தேர்தலை நடத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். தேர்ந்தெடுக்கப் பட்ட குழுக்கள் இல்லாததன் காரணமாக இன்றைக்கு நடுத்தர விவசாயிகள், ஏழை விவசாயிகள் மிகவும் கடுமையாக பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்காமல் இருக்கிறது. தனி அதிகாரிகளிடம் முறையிட்டால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. விவசாயிகளின் கஷ்டத்தைப் போக்குவதற்கு தகுந்த அளவிலே நிலைமைகள் இல்லாமல் இருப்பதால்தான் நாங்கள் இந்த தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிப்பதற்கான இந்தச் சட்டமுன்வடிவை அப்போஸ் பண்ணுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்தச் சட்டத்திலே ஒரு ஆண்டுகாலம் என்று சொல்லியிருப்பதை மூன்று மாத காலமாக குறைத்து, மூன்று மாத காலத்திற்குள்ளே தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும். ஒரு ஆண்டு நீடிப்பதற்கான இந்தச் சட்டத்தை அவர்கள் பிரஸ் பண்ணக்கூடாது. மூன்று மாத காலத்திற்கு இதைக் குறைத்து அந்த முறையில் நடைமுறைகளை சரி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனி அதிகாரிகளுடைய ஆட்சியை நிறுத்தக்கூடிய முறையிலே உடனடியாக ஏற்பாட்டை கொண்டு வரவேண்டும். அப்போது தான் விவசாயிகள் தங்களுடைய நிலைமையை பாதுகாத்துக் கொள்ள முடியும். விவசாயிகள் தங்களுடைய நிலைமையை பாதுகாத்துக்கொள்வதற்கு, தனி அதிகாரிகளின் ஆட்சி முடிவு ஏற்படுத்துவதற்கு மூன்று மாத காலத்திற்குள்ளே தேர்தல் நடத்துவதற்கான முறையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனி அதிகாரிகளின் காலத்தை ஒரு ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பதற்கான இந்தச் சட்டத்தை நான் எதிர்க்கிறேன்.

* திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலே எதிர்க்க வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம். காரணம் திராவிட முன்னேற்றக்





கழகத்தின் அரசு கலைக்கப்பட்டதற்குப் பின்னால் இந்தக் குழுவினை அவசர கோலத்திலே கலைத்தார்கள். அதற்குப் பின்னால் ஏற்பட்ட ஜனநாயக ஆட்சியும் இதுவரை தேர்தலை நடத்துவதற்கு உரிய விரிவான திருத்தங்கள் இன்னும் அரசின் பரிசீலனையில் இருந்து வருவதால் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். 8 ஆண்டுகாலமாக இந்தப் பரிசீலனை முடியவில்லை என்பது உண்மையிலேயே வேதனையான ஒரு செய்தியாகும். இன்றையதினம் விவசாயிகள் தங்களுடைய விளை பொருட்களுக்குத் தகுந்த விலைகளைப் பெறுவதற்கு அந்தக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருப்பதுதான் நியாயமான முறை என்ற வகையில் அரசாங்கத்தினுடைய இந்தப் போக்கை எதிர்க்கின்ற வகையில் இந்தச் சட்ட முன்வடிவை திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஆரம்ப நிலையிலே இதை நான் எதிர்க்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை துவக்கக் கட்டத்திலேயே நான் எதிர்க்கிறேன். அதற்கான காரணம், நோக்க விளக்கக் காரணத்திலே சொல்லப் பட்டிருக்கிற விஷயம், விரிவான திருத்தங்கள் செய்வது இன்னும் அரசின் பரிசீலனையில் இருக்கிற காரணத்தால் இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு முன்மொழியப்படுவதாகச் சொல்லப் பட்டு இருக்கிறது. 1977 ஆம் ஆண்டிலேயிருந்து, இன்றைக்கு 1985 ஆம் ஆண்டு வரையிலும், 8 ஆண்டுகாலமாக இந்த விரிவான திருத்தங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பது உண்மையிலேயே நியாமான காரணம் அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டம் வழங்கியிருக்கிற ஜனநாயக நெறிமுறைகளை சட்டத்தின் சந்து பொந்துகளைப் பயன்படுத்தி, மக்களுக்கு வழங்காமல் தடுப்பது என்பது நியாயமான முன் உதாரணமாக இருக்காது. மேலும் விவசாயிகள் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிற இந்த நேரத்தில், அவர்களை மேலும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்குகின்ற வகையில் தனி அதிகாரிகளுக்கு அதிகாரத்தை வழங்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவை திரும்பப் பெறவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது நகராட்சித் தேர்தலைப் போல, மற்றும்

உள்ளூர் தேர்தலைப் போல விரிவான ஏற்பாடுகள் செய்ய வேண்டிய அவசியமும் இல்லாத இந்த விஷயத்தில் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இதைத் திரும்பப் பெற்று உடனடியாக தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இந்தச் சந்தைக் குழுவில் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு, வேளாண் விளைபொருள் அங்காடிகளுடைய தனி அதிகாரிகளுடைய பதவி நீட்டிப்புக்காக கொண்டுவரப்படுகிறது, என்பதை நான் மறுக்கவில்லை. அதனால் விவசாயிகள் அதிகமான அளவில் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஆனால் இப்போதுள்ள சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்தினால் இன்னும் அதிகமான அளவில் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே செய்ய இருக்கின்ற சட்டத் திருத்தம் என்பது விவசாய பெருமக்கள், பயன் அடையத்தக்க வகையில்; உரிய வகையில் சட்டம் அமைய வேண்டும் என்பதற்காகத்தான் நாம் இத்தகைய சட்டத் திருத்தத்தைச் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கிற சட்டத்தினுடைய அடிப்படையிலே நாம் தேர்தலை நடத்தினால் தேர்தல் நடத்துவதற்கு மட்டும்தான், வேளாண் விளைபொருள் சந்தைகளுடைய வருவாய் பயன்படுமே தவிர, ஆக்கபூர்வமான எந்தப் பணிகளுக்கும் நிச்சயமாகப் பயன்படாது. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் தெரிவித்ததைப் போல சட்டத்திலுடைய சந்து பொந்துகளைப் பயன்படுத்திக்கொண்டு தப்பிக்க விரும்பவில்லை. சந்து பொந்துகள் இல்லாத ஒரு சட்டம் அமையவேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட திருத்தங்களை நாங்கள் கொண்டு வர இருக்கிறோம். ஏன் என்றால், இந்தத் துறை மட்டுமே, இந்தச் சட்டத்தை உருவாக்கவில்லை. இதிலே சட்டத் துறைக்கும் பங்கு இருக்கிறது. ஆகவே ஒரு நல்ல சட்டம், முறையான சட்டம்,

நீடித்து நிலைக்கக்கூடிய சட்டம், தொடர்ந்து வேளாண் விளைபொருள் அங்காடிகள் பயன் உள்ள வகையில் விவசாயிகளுக்குப் பாடுபட கூடிய வகையில், துணைபுரியக் கூடிய வகையில் ஒரு சட்டம் உருவாக்கப்பட இருக்கிறது. எனவே இதை நாம் அள்ளித் தெளித்து அவசரக்கோலத்திலே உருவாக்கி புதிய சூழ்நிலைகளை தோற்றுவிக்கக்கூடாது என்பதற்காகத்தான் இத்தகைய சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் 3 மாதம் அனுமதி அளித்தார்கள். மூன்று மாதம் அனுமதி அளித்த அந்தப் பெருந்தன்மைக்கு நன்றி கூறி, அதை ஒரு ஆண்டாக அவர்கள் ஆக்கித்தர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**:: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**5. வரவு-செலவுத் திட்டம், 1985-86, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).**

(அ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை; (ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்; (இ) கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு; (ஈ) கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்; (உ) கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.

**கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,26,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் வட்டத்திலுள்ள நிலங்கள் அனைத்தையும் அளந்து, முறைப்படுத்தி, நில அளவை வரைவேடுகளை சீர்படுத்த வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 14,26,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆறு ஆண்டு காலமாக நிலவரி வசூலிக்கப் படாமல் இந்த ஆண்டு ஒரே நேரத்தில் வசூலிக்க ஏற்பாடு செய்து, விவசாயிகள் மீது தொடுக்கப் பட்டிருக்கும் வழக்குகள் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

(முற்பகல் 10-30)

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,26,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,70,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."



Thiru T. R. VENKATARAMANAN: Sir, to discuss the need to consider outright sale of "2C' Patta Trees to the patta holders' I move the following cut motion: "That a sum of Rs. 33,70,03,000 under Demand No. 11—District Administration be reduced by Rs. 100".

**கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 40,38,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருப்பனந்தாள் ஒன்றியம், கதிராமங்கலம் ஊராட்சி வேலூர் அரிசனத் தெரு வெள்ளக் காலத்தில் பாதிக்கப்படுவதை தடுப்பது குறித்தும் பதகு சாலை ஊராட்சி அரிசன தெரு வெள்ளக் காலத்தில் பாதிக்கப்படுவதை தடுப்பது குறித்தும் விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 40,38,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் வட்டம், பெரியார் தும்பூர், கிராமத்துமேடு வடவூர், கருவேலங்கடை ஆகிய ஊராட்சிகளில் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டித் தருவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 40,38,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1985 ஜூன் 11

**கோரிக்கை எண். 42 — ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 56,45,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியங்கள் பெறும் பென்ஷனர்களுக்கு இடைக்கால நிவாரணம் கிடைக்காததாலும், பணியில் இருப்பவர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்தும்போது பென்ஷனர்களுக்கும் அந்தப் பயன் கிடைக்காமல் இருப்பதனாலும், குறைந்த பட்சம் ஓய்வூதியம் ரூ. 125 என்பது உயர்த்தப்படாமல் இருப்பதாலும் பென்ஷன்தாரர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்கள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 42 — ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 56,45,00,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**கோரிக்கை எண். 46 — இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 46 — இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 27,31,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.



1985 ஜூன் 11]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 5 மானியக் கோரிக்கைகளைப் பற்றிய குறிக்கோள்களும், விளக்க உரைகளும் * மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெளிவாக தெரிகின்ற வகையில் அவையின் முன் வைக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றை நான் படித்ததாக எடுத்து நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொண்டு விவாதத்தைத் தொடங்கலாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன். முதன் முதலாக கிராம அதிகாரிகள் 12,500 பேர் நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை அடுத்து ஆர்.டி.ஓ. ரெவின்யூ டிவிஷனிலிருந்து போட்டு இருக்கிறார்கள். அத்தகைய ரெவின்யூ அதிகாரிகள் சரியான முறையில் செயல்படுவது இல்லை. அவர்கள் சரியான சமயங்களில் வருவது இல்லை. முன்னால் இருந்த கிராம அதிகாரிகள்கூட தங்களுடைய ஊர்களில் இருந்து கொண்டு தங்களுடைய கிராமத்திற்கு தேவையான சான்றிதழ்களை தந்துக்கொண்டு இருந்தார்கள். இப்போது அடுத்த ரெவின்யூ டிவிஷனிலிருந்து வரவேண்டிய காரணத்தால் அவர்கள் சரியான முறையில் வந்து தங்களுடைய கடமைகளை சரியான முறையில் செய்வது இல்லை. ஒரு கிராம அதிகாரியிடம் சென்று மக்கள் தங்களுக்குத் தேவையான சான்றிதழ்களைப் பெற வேண்டும் என்று சொன்னால் அதற்கு மிகவும் காலதாமதம் ஆகிறது. ஆகையால் இந்த ஆண்டிலிருந்து கிராம அதிகாரிகளை தனித் தனியாக அவர்களுடைய சொந்தக் கிராமத்தில் போட்டால் நிர்வாகம் சரியான முறையில் நடக்கும் என்று நான் என்னுடைய கருத்தைக்கூற கடமைப்பட்டு இருக்கிறேன். மேலும் தாலூக்கா அலுவலகத்தைப் பொறுத்தவரையில் இங்குதான் மக்களுக்கு தேவையான **Death Certificate, Heir Certificate, Old age pension** போன்ற அனைத்து சான்றிதழ்களையும் பெற வேண்டியிருக்

* 475 மற்றும் 551 247 ஆம் பக்கங்களில் இணைப்புகள் II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

கிறது. இவைகளை வழங்குகின்ற அலுவலகம் தாலூக்காக்களில் இருக்கின்ற வட்ட ஆட்சியர் அலுவலகம் தான். இந்த அலுவலகத்தைப் பொறுத்தவரையில் எத்தனை அதிகாரிகளைக் கொடுத்து இருந்தாலும் கூட அங்கே இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள் சரியான அளவில் இல்லை. அந்த அலுவலகங்களுக்கு பல்வேறு அதிகாரிகளைக் கொடுத்து இருக்கிறார்கள். Death Certificate, Heir Certificate, Old Age Pension போன்ற சான்றிதழ்களை ஏழை மக்களுக்கு வழங்குகின்ற அதிகாரிகள் தாசில்தார்களாக இருந்தாலும் கூட அந்த அலுவலகங்களில் எழுதுவதற்கு ஒரே ஒரு எழுத்தர் தான் இருக்கிறார். என்னுடைய குளித்தலையில் உள்ள விளவங்கோடு தாலூக்காவைப் பொறுத்தவரையில் முன்னாள் அமைச்சர் திரு. எஸ்.டி.எஸ். அவர்கள் நேரில் வந்து பார்த்தார்கள். அங்கே உள்ள அதிகாரிகள் இங்கே போதுமான ஆட்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இத்தகைய பணிகளுக்கு பல கோடிக் கணக்கான ரூபாய்களை ஒதுக்கினாலும் அங்கே அதிகாரிகளின், பணியாளர்களின் எண்ணிக்கையை கூட்டவில்லை என்று சொன்னால் அதன் பலன் மக்களுக்கு நிச்சயமாக கிடைக்காது. குறிப்பாகச் சொன்னால் Old Age pension என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் காலத்தில் ஏராளமானவர்களுக்கு அனுமதித்து இருக்கிறார்கள். ஆனால் அங்கே சான்றிதழ்கள் வழங்குகின்ற இடத்தில் ஒரே ஒரு கிளார்க்தான் இருக்கிறார். குறிப்பாகச் சொன்னால் 35 ரூபாய் மணி ஆர்டர் அனுப்புவதற்கு அவர்கள் 3 மாதங்கள் வரை எடுத்துக்கொள்கிறார்கள். கேட்டால் நாங்கள் 4 ஆயிரம், 5 ஆயிரம் பேருக்கு மணி ஆர்டர் அனுப்ப வேண்டும் என்றும் நாங்கள் என்ன செய்வது என்றும் கேட்கிறார்கள். ஆகவே அங்கங்கே உள்ள கிராம அதிகாரிகளிடம் பணத்தை ஒப்படைத்து அவர்கள் மூலமாக நேரடியாகப் பணத்தைக் கொடுக்கலாம். அதை விட்டுவிட்டு போஸ்ட் ஆபீஸ் மூலமாக பணத்தை அனுப்புகிறபோது 4 ஆயிரம், 2 ஆயிரம் பேர்களுக்கு எப்படி அவர்கள் ஒரே ஒரு ஜூனியர் அசிஸ்டெண்ட் பணத்தை அனுப்ப முடியும், அதனால் 3 மாதம், 4 மாதங்கள் கழித்துத்தான் அவர்களுக்குப் பணம் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த முதியவர்கள் உதவித் தொகையைப் பொறுத்தவரையிலே கிராம அதிகாரிகளிடம் பணத்தை ஒப்படைத்து ஒவ்வொரு மாதமும் அவர்கள் அவர்களுடைய வீட்டிற்குச் சென்று கொடுக்கவோ அல்லது அவர்களைத் தங்க



ளுடைய அலுவலகங்களுக்கு வரச்சொல்லியோ நேரடியாகக் கொடுக்குமாறு செய்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து முதியோர் உதவிப் பணம் வேண்டுமென்று நிறையப் பேர்கள் விண்ணப்பம் கொடுக்கிறார்கள். ஆனால் அங்கே அதற்காக ஒரே ஒரு கிளார்க்தான் இருக்கிறார். ஆகவே அதிகமான கிளார்க்குகளையும் முடியுமானால் ஒரு டெபுடி தாசில்தாரையும் அதற்காக நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கம்யூனிட்டி சர்டிபிகேட்டு என்று சொல்கிறபோது கல்லூரிகள் திறக்கப்படுகின்ற இந்த நேரத்திலே இது முக்கியமானது. எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே அரிசன மக்கள் கிறிஸ்தவர்கள் என்று சொன்னால் பேக்வர்ட் ஆகிறார்கள். இந்து என்று சொன்னால் எஸ்.சி. சர்டிபிகேட் கொடுப்பதற்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் தயங்குகிறார்கள். எஸ்.சி. யாக இருக்கிறவர்கள் கிறிஸ்தவர்களாகி விட்டால் பேக்வர்ட் ஆகிவிடுகிறார்கள். அதன் காரணமாக அரிசன மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், கிராம அதிகாரிகள் அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறார்கள். சர்டிபிகேட் வழங்குவதில்லை என்ற நிலைமை இருக்கிறது, குமரி மாவட்டத்திலே அரிசனங்கள் கிறிஸ்தவர்கள் என்றால் பேக்வர்ட் ஆகிவிடுகிறார்கள் என்ற நிலைமை இருப்பதால் உடனடியாக இந்து என்று சொன்னால் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களோ கிராம அதிகாரிகளோ சான்றிதழ் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் இந்துவுக்கு என்ன என்ன சலுகைகள் உண்டோ அவைகளை அவர்களால் பெறமுடியவில்லை. இதுபற்றிப் பல புகார்கள் வருகின்றன. தாசில்தார் சொன்னால்தான் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கொடுக்கிறார் என்ற நிலைமை இருக்கிறது. பிடிக்காதவர்களை அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று எழுதி விடுகிறார்கள். அதன் காரணத்தினால் மத்திய மாநில அரசுகள் அளிக்கின்ற சலுகைகளை அவர்களால் பெறமுடியவில்லை. ஆகவே அதை அரசு கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஜப்தி நடவடிக்கையை ரெவின்யூ அதிகாரிகள் பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்ற விதிவரம்பு வைக்கப்படாததால் அவர்கள் இஷ்டம் போல் செயல்படுகிறார்கள், பிடிக்காதவர்கள்

என்றால் ஜப்தி நடவடிக்கை எடுக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் பிடிக்காதவர்கள் என்றால் அவர்கள் வீடுகளிலே சென்று ஜப்தி செய்கிறார்கள், தஞ்சாவூர், கோவை, குமரி மாவட்டங்களிலே உள்ள நிலைமை பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். ஜப்தி புரசீடிங்ஸ் காங்கிரஸ்காரர்களைப் பார்த்துச் செய்கிறார்கள். மற்றக் கட்சிக்காரர்களைப் பார்த்துச் செய்கிறார்கள். சிறிய விவசாயி என்றால் எத்தனை ஏக்கர் என்று ரெவின்யூ அதிகாரிகள் பப்ளிஷ் செய்யவில்லை. அப்படி பப்ளிஷ் செய்திருந்தால் நாம் போய் அவர் சிறு விவசாயி என்று சொல்லி தட்டிக் கேட்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே 5 ஏக்கருக்கு மேலே அல்லது கீழே என்ற முறையிலே வைத்திருக்கிறவர்கள் உடைய லிஸ்ட் வெளியிட வேண்டும். அரசு ஆணையை ரெவின்யூ இலாகா அதிகாரிகள் சரியாக கடைப் பிடிப்பதில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அரசு இதைக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குமரி மாவட்டத்திலே மூன்றில் இரண்டு பங்கு எஸ்டேட் இருக்கிறது. மலைப்பாங்கான பகுதிகள் அதிகமாக இருக்கின்றன. அங்கே 7, 8 பெரிய எஸ்டேட்கள் இருக்கின்றன. குமரி மாவட்டத்திலே உள்ள மூன்றில் இரண்டு பங்கை 8 முதலாளிகள் கைகளிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆம்பாடி, சிரீகாம் போன்ற 8 பேர்களுடைய கைகளிலேதான் பெரும்பாலும் இருக்கிறது. ஒரு ஏக்கர் 3 லட்ச ரூபாய் என்று சொன்னாலும்கூட ஏறத்தாழ 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தை அவர்கள் வைத்திருக்கிறார்கள். ரெவின்யூ அதிகாரிகள் கணக்குப்படி ஆகரைல்டு என்ற முறையிலே 10 ஆயிரம் எக்கர் ஆனால் எங்களுடைய கணக்குப்படி அது 25 ஆயிரம் எக்கருக்கு மேல் இருக்கும். அந்த நிலத்தை அரசு கையகப்படுத்தி ஒரு ஏழை விவசாயிக்கு குறைந்தது 50 சென்ட் என்ற முறையிலே கொடுத்தால் 20 ஆயிரம் ஏழைகளுக்குக் கொடுக்கலாம். அங்கே உள்ள அந்தப் பணக்கார முதலாளிகள் குமரி மாவட்டத்திலே இல்லை, சென்னையிலோ திருவனந்தபுரத்திலோ மதுரையிலோ இருந்துகொண்டு அவைகளை கைகளிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுடைய பட்டாவைப்பற்றி கேள்வி கேட்கவில்லை. பல கோடிக்கணக்கான ரூபாய் விலைப் பிடிப்பான நிலங்களை 25 ஆயிரம் ஏக்கர் வரையிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலத்தை ரெவின்யூ இலாக்கா

(முற்பகல் 10-40)

உடனடியாகக் கையில் எடுத்து, நிலம் இல்லாத ஏழை எளிய விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்தால் குறைந்த பட்சம் 10,000 அல்லது 20,000 பேர்களுக்குக் கொடுக்கலாம். அப்படிக் கொடுப்பதன் மூலம் 20,000 குடும்பங்களை வாழ வைக்க முடியும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். டி.டி.சி. யிலேயும் இது பற்றிச் சொல்லியிருக்கிறோம். இந்த 10,000 ஏக்கர்களும் கோடீஸ்வரர்களின் கைகளில் இருக்கின்றன. அதைப்பற்றி அரசு ஊன்றிக் கவனித்துப் பார்த்தால் 10,000 ஏக்கர்கள் அல்ல, 25,000 ஏக்கர்கள் அளவிற்குக் கூட இருக்கும். இருந்தாலும், அந்த 10,000 ஏக்கர்கள் என்று வைத்துக்கொண்டால்கூட, அதை ஏழை எளிய விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்தால் கிட்டத்தட்ட 20,000 குடும்பங்களை வாழ வைக்க முடியும். அதற்கு அரசு முன் வர வேண்டுமென்று எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1967 ஆம் ஆண்டில் சித்தாறு டேம் கரையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஒவ்வொருவருக்கும் ஐந்து ஏக்கர்கள் என்று ஒதுக்கப்பட்டது. ஆனால் ஒருசில வசதி படைத்தவர்கள், அரசியலிலே பிடிப்பு உள்ளவர்கள் பட்டா வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 110 குடும்பங்கள் சித்தாறு டேம் கரையில் இருக்கின்றன. பலபேர்களுக்கு ஒரு சென்ட் நிலம் கூட கொடுக்கவில்லை. அவர்கள் இருக்க இடம் இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். பல்வேறு சங்கங்களின் சார்பில் கன்னியாகுமரி மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தின் முன்னால் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். ஆனால் அதுபற்றி இன்னும் அரசு எதையும் செய்வதற்கு முன்வரவில்லை. எனவே, ஐந்து ஏக்கர்கள் என்று வசதி படைத்தவர்கள் பெற்றுக்கொண்டிருக்கிற நிலத்தை ஏழை அரிசன மக்களுக்குக் குறைந்தது ஒரு ஏக்கராவது கொடுத்து அவர்களை வாழ வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நெய்யாறு இடது கரைக் கால்வாய் இருக்கிறது. அங்கேயுள்ள குளங்களிலே தூர் எடுக்காத காரணத்தால் அவைகளில் தண்ணீர் தேங்கி பொது மக்களுக்குக் கிடைப்பதில்லை. ஆனால் தண்ணீர் கிடைக்கின்ற இடங்களுக்கு வசூலிப்பதைப்போல வரியை மட்டும் வசூல்

செய்து கொண்டிருக்கிறார்கள். ஆயக்கட்டு நிலங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை. ஆனால் வருவாய்த் துறையினர் தண்ணீருக்கு உண்டான டாக்ஸையும் கலெக்ட் செய்கிறார்கள். பலமுறை பல மனுக்களைக் கொடுத்தும் வருவாய்த் துறை அதிகாரிகள் இதுபற்றிக் கவனிக்கவில்லை. டேம் இர்ரிகேஷன் டாக்ஸைக் கலெக்ட் செய்வதைப்பற்றி பிரச்னை இல்லை. கேரள மாநிலத்திலிருந்து தண்ணீர் கொடுப்பார்கள். ஆனால் அந்தத் தண்ணீர்கூட எங்களுக்குக் கிடைப்பதில்லை. இர்ரிகேஷன் இலாக்காவிலிருந்து எங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதில்லை. ஆனால் கிட்டத்தட்ட 10,000 ஏக்கர்களுக்கு வரியை மட்டும் வசூலிக்கிறார்கள். எந்த இடத்தில் தண்ணீர் கொடுக்கிறார்களோ அந்த இடத்திற்கு மட்டும் இர்ரிகேஷன் வாட்டர் சார்ஜை கலெக்ட் செய்வதைப்பற்றிப் பிரச்னை இல்லை. ஆனால் தண்ணீர் கொடுப்பதற்கு எந்தவிதமான ஏற்பாட்டையும் செய்யாமல் அந்த வரியை வசூல் செய்யக்கூடாது என்பதைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, ஆத்தூர் தாலூக்காவிலேயும் இப்படிப்பட்ட பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. அதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய கருத்தை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. பிரேம்குமார் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வறியார்க்கொன்று ஈவதே ஈகை" என்ற குறளுக்கேற்ப நிதிநிலையில் கொடுத்துக்கொடுத்து, தமிழகத்தின் தரித்திரத்தை, தரித்து இரோம் என்று விரட்டி அடித்து வரும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவரை வணங்கி, புரட்சித் தலைவரின் புகழுக்குப் புகழ் சேர்க்கும்படி, "அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான், எஞ்ஞான்றுந் திறனறிந்தான் தேர்ச்சித் துணை" என்ற குறளுக்கேற்ப, நடமாடும் பல்கலைக் கழகம், அண்ணா மெச்சிய அறிவு மேதை, நல்ல தமிழ்க் காவலர், எங்கள் நாவலர் கொண்டு வந்துள்ள வருவாய்த்துறை மானியத்தை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

வாயளவில் அண்ணாவின் பெயரைச் சொல்லிக்கொண்டிருப்பவர்களுக்கு முன்னால் அண்ணாவின் புகழுக்குப் புகழ் சேர்க்கும் வண்ணம் மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து,





திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட "அண்ணா மாவட்டம்" அறிவித்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியினை முதற்கண் எனது தொகுதி மக்களின் சார்பாகக் கூறிக்கொள்வதில் பெருமை அடைகிறேன்.

அதுபோல புரட்சித் தலைவரின் மனு நீதி திட்டம், 6 ஹெக்டேர் பரப்பு கொண்ட 23 இடங்கள் தொடர்பாகப் பொது மக்களுக்குப் பயன்படும் மருத்துவமனை, மருத்துவ விடுதி, திரையரங்கம் ஆகியவைகளுக்கு 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி வரையில் நிலவரி விலக்களித்துள்ள புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டுகிறோம்.

அதேபோல, போரில் வீர மரணம் அடைந்தோர், ஏழை, ஆதி திராவிடர், கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள், முன்னாள் இராணுவத்தினர், பர்மா, ஸ்ரீலங்காவிலிருந்து திரும்பி வந்தவர்கள், பொற் கொல்லர்கள், கள் இறக்குவோர், விடுவிக்கப்பட்ட சிறைக் கைதிகளுக்கு எல்லாம் இந்த அளவுக்கு நில ஆர்ஜிதம் செய்து கொடுத்திருப்பது, அனைத்தும் வரவேற்கத்தக்க ஒன்று.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் வாழ்க்கையை உயரச் செய்வதற்கு மற்றுமொரு எடுத்துக் காட்டு ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட 2,12,487 வீட்டு மனைப்பட்டாக்கள்.

வருகின்ற 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 20 இலட்சம் ஆதி திராவிடர்களுக்குச் செலவிட திட்டமிட்டுள்ளது புரட்சித் தலைவரின் தாய் உள்ளத்தைக் காட்டுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். அதுவே மற்ற மாநிலங்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் வழிகாட்டியாகவும் உள்ளது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஓய்வு பெறும் வயதினை 55 ஆண்டுகளை 58 ஆண்டுகளாக்கி உயரளவு பணிக்கொடையை 31—3—1985 முதல் ரூ. 36,000-லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஓய்வு ஊதியம் பெறுபவர்களுக்கு மருத்துவச் சலுகைகள் பெறவும், பண்டிகை முன் பணம் தருவதும் அரசின் நல்ல எண்ணத்தைக் காட்டுகிறது.

[திரு. ஆ. பிரேம்குமார்] [1985 ஜூன் 11

குடும்ப ஓய்வூதியம் பெறும் அரசு பணியாளர்களின் மகன்கள், மகள்கள் திருமண வயதை முறையே 18, 21 என்று இருந்ததை 21, 24 என்று அமையும் வகையில் அரசு ஆணையிட்டதும், ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும் நகராட்சிப் பணியாளர்களுக்கும் உள்ள ஓய்வு ஊதியத்தை உயர்த்தியதும் புகழத்தக்கதாகும்.

இந்த மானியத்திலே என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறலாம் என்று நினைக்கிறேன். குடிநீர் தட்டுப்பாடு என்று எடுத்துக் கொண்டால், ஏறத்தாழ 25 ஊர்களை அப்படிப்பட்ட ஊர்களாக அறிவித்து உள்ளார்கள். இவை அனைத்திற்குமே சேர்ந்தாற்போல இன்று குடிநீர்ப் பஞ்சமானது வரும். திண்டுக்கல் மாநகரில்தான் குடிநீர் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது. போர்பந்தரை நினைத்தால் காந்தியடிகள் ஞாபகம் தான் வரும்: ஈரோட்டை நினைத்தால் தந்தை பெரியாரின் ஞாபகம்தான் வரும். காஞ்சிபுரத்தை நினைத்தால் அண்ணா அவர்கள் ஞாபகம்தான் வரும். அதே போல, குடிநீர் பஞ்சத்தை நினைத்தால் திண்டுக்கல் தான் ஞாபகம் வரும். அதற்காக அரசு ரூ. 1½ இலட்சம் வழங்கி உள்ளது. அதை வைத்து, திண்டுக்கல் மாநகரில் 100 டாங்குகளை வைத்து, அதன் மூலமாக, அங்கே இருக்கக்கூடிய பகுதிகளிலே ஒரு நாளைக்கு மூன்று தடவை தண்ணீர் வசதி செய்து கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இருப்பினும் அங்கே டீப் போர் வெல்கள் என்று சொல்லக்கூடிய ஆழ் துளை கிணறுகளை, பொன்மான்துறை, மலைக்கோட்டை, ஒடுக்கம் போன்ற பகுதிகளில் போட, ஜியாலஜிஸ்ட்கள் ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால், அந்த 3 இடங்களிலேயும் நீர்நிலைகள் சரிவர இல்லை. அதனால் அவை இன்னும் செயல்படுத்தப்படாமல் இருக்கின்றன. என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் சேர்ந்து இடங்களைத் தேர்ந்தெடுத்தோம். அந்த மூன்று இடங்களைத் தவிர, திண்டுக்கல் மாநகர்ப் பகுதியில் மற்றுமுள்ள இடங்களிலே ஜியாலஜிஸ்ட்கள் மூலமாக ஆய்ந்து, போர்க்கால அடிப்படையில் டீப் போர் வெல்கள் போட நடவடிக்கை எடுத்தால்தான் அங்கு குடிநீர் பஞ்சமானது ஒழிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஜூன் 11] [திரு. ஆ. பிரேம்குமார்]

உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திண்டுக்கல்லிலே, கூட்ஸ் ஷெட்டில் ஒரு டீப் வெல் போட்டிருக்கிறார்கள். அதை டீப் போர் வெல் என்றுகூடச் சொல்ல முடியாது. 290 அடிகள்தான் தோண்டியிருக்கிறார்கள். அந்த 290 அடிக்குள்ளேயே 45,000 காலன் தண்ணீர் தினமும் கிடைக்கக் கூடிய அளவிலே நிலைமை இருக்கிறது. அப்படி 290 அடிக்குள்ளேயே கிடைக்கிறது என்றால், டீப் போர் வெல் என்று சொல்லக் கூடிய 500 அல்லது 600 அடிக்கு மேல் சென்றால், நிச்சயமாக, திண்டுக்கல் மாநகரக் குடிநீர்ப் பஞ்சமே ஒழிக்கப்படும் என்று நம்புகிறேன்.

அதேபோல புரட்சித் தலைவர், பேரணைத் திட்டம் என்ற திட்டத்தினை இங்கே அறிவித்திருக்கிறார்கள். அத்திட்டத்திற்காக ரூ. 7 அல்லது ரூ. 8 கோடி எல்.ஐ.சி. மூலமாகவோ அல்லது உலக வங்கியின் மூலமாகவோ பெறப்பட்டு, செயல்படுத்தப்படும் என்று கூறி இருக்கிறார்கள். அதற்காக எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் திட்டத்தில் அணைப்பட்டியிலிருந்து செம்பட்டி வழியாக 25 கிராமங்களுக்குத் தண்ணீர் வருகின்றது. அந்த 25 கிராமங்களுக்கும் அதிலே இருந்து தண்ணீர் சப்ளை செய்யப்படும் என்றால் எங்களுக்குக் கிடைக்கும் நீர் கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகிவிட்ட கதையாக ஆகிவிடும். நான் 25 கிராமங்களுக்குச் சப்ளை செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர்களுக்கும் செய்யட்டும். திண்டுக்கல் மாநகர் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க வேண்டுமென்பதற்காக தனி பீடர்களை அமைக்க வேண்டுமென்று அரசை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அங்கேயிருக்கக் கூடிய நீர்நிலைகளும், குளங்களும், கிணறுகளும் வற்றி விட்டிருக்கின்றன. இந்த நேரத்திலே அதிகாரிகள் இன்னும் 10 தினங்களுக்குத்தான் திண்டுக்கல் மாநகருக்குக் குடிநீர் சப்ளை செய்ய முடியும்; அதற்கு மேல் என்ன செய்வது என்று தெரியவில்லை என்று சொல்கிறார்கள். சென்ற வருஷம் எவ்வாறு ரெயில்வேயின் மூலமாக, குடிதண்ணீர் எல்லாம் கொடுத்தார்களோ, அதுபோல, ரெயில் மூலமாக, திருச்சியிலிருந்தோ, மதுரையிலிருந்தோ, அல்லது நெய்வேலியிலிருந்தோ, உடனடியாக தண்ணீர் கொண்டு வந்து தரப்பட வேண்டுமென்ற கோரிக்கையைக் கவனிக்க வேண்டுமென்று

[திரு. ஆ. பிரேம்குமார்] [1985 ஜூன் 11

கேட்டுக் கொண்டு, அதுவும் போதாவிட்டால், திண்டுக்கல் மாநகர்ப் பகுதியில் செயற்கை மழை பெய்வித்தாவது, அதன் மூலமாகக் குடிநீர்ப் பஞ்சத்தை நல்ல வகையிலே நீக்கி, மக்களைத் திருப்திப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அதைப்போன்று ஒட்டன்சத்திரத்தில் தொப்பம்பட்டியில் குடிநீர் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. அதையும் தீர்க்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கணக்கப் பிள்ளை மணியக்காரர்களை மாற்றிவிட்டு, அவர்களுக்குப் பதிலாக வி.ஏ.ஓ. க்களை நம்முடைய அரசு நியமித்திருக்கிறது. அது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. ஆனால் அவர்கள் எல்லாம் வில்லேஜ் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர் என்று சொல்லக்கூடிய தன்னுடைய நிலையை மறந்து, தாங்கள் ஏதோ பெரிய அதிகாரி என்று நினைத்துக் கொண்டு அவர்கள் பணியாற்ற வேண்டிய பகுதிகளுக்குச் சென்றுவர கூச்சப்படுகிறார்கள்; அச்சப்படுகிறார்கள். அவர்களுக்கு இருக்கின்ற பணி என்ன என்பது தெரியவில்லை. அவர்கள் இருக்கக்கூடிய பகுதியில் இருக்கிற நிலங்களின் மதிப்பு என்ன என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. மேலும் ஜமாபந்தி என்று வரும்போது அவர்கள் 'லீவ்' போட்டுவிடுகிறார்கள். இந்த நிலையில் பழைய கணக்குப் பிள்ளைகளையும், நாட்டாண்மைக்காரர்களையும் திரும்பத் திரும்பத் தேட வேண்டியதிருக்கிறது.

வி.ஏ.ஓ.-க்களுக்கு செய்ய வேண்டிய பணி பற்றிய விவரம் சரியாகத் தெரியவில்லை. அதனால் யார் வந்தாலும், சம்பந்தப்பட்ட பகுதியில் அவர்களுக்கு ஒரு மாதம் பயிற்சி கொடுக்க வேண்டும். நிலத்தின் தரம் என்ன? சர்வே எண் என்ன? நில அளவை, நிலத்திற்கு விதிக்கப்படும் வரி போன்றவைகளை அவர்கள் தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதைப் போன்று சம்பந்தப்பட்ட வி.ஏ.ஓ.-க்களுக்கு உட்பட்ட பகுதிகளில் நிலம் சம்பந்தப்பட்ட ஸ்கெச் போட்டு, அதை கண்ணாடி போட்டு அவர்களுடைய அலுவலகத்தில் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதைப் போன்று நிலவரி பற்றிய குறிப்புகளையும் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தப்



1985 ஜூன் 11] [திரு. ஆ. பிரேம்குமார்]

பகுதியில் எந்த அளவுக்கு நிலவரி வசூல் செய்யப்படுகிறது என்ற விவரங்களை எல்லோரும் பார்த்துத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டால் பக்கத்து நிலத்துக்காரர் எவ்வளவு வரி செலுத்தி இருக்கிறார், நாம் கொடுப்பது சரியானதுதானா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். அதனால் ஊழல் தவிர்க்கப்படும். மக்களுக்கு திருப்தி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று நகரத்திலும் கிராமத்திலும் **It will avoid discrimination in collecting the revenue** என்று சொல்ல வேண்டும்.

தாசில்தார்களைப் பொறுத்த வரையில், தாசில்தார்கள் அனைவரும் அலுவலகத்தில் நிச்சயமாக இருக்க வேண்டுமென்று அரசு சொல்லியிருக்கிறது. ஆனால் அவர்களை அங்கே பார்க்க முடியவில்லை. எங்கே என்று கேட்டால் ஏதோ ஒரு பிரச்சனையைப் பார்வையிடச் சென்றார், அமைச்சர்களைப் பார்வையிடச் சென்றார் என்று சாக்குப்போக்குச் சொல்கிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டும்.

'டெனன்சி கோர்ட்' என்று இருக்கிறது. அது தாசில்தார் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தாசில்தார்களாக இருக்கின்றவர்களுக்கு அந்தச் சட்டத்தைப் பற்றியும் விதியைப் பற்றியும் ஒன்றும் தெரியாமல் இருக்கிறார்கள். எங்களுக்கு அதுபற்றி தெரியாததால் வாய்தா தான் போடுவோம், வேறு ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். அதனால் அதிகமான வழக்குகள் தேங்கியிருக்கின்றன. இந்த நிலையை மாற்ற, தாசில்தாரிடமிருந்து இந்தப் பொறுப்பை எடுத்து, முன்சீப் கோர்ட்டிலோ அல்லது வேறு நீதிமன்றத்திலோ கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று ஆதி திராவிட மக்களுக்கு பட்டா வழங்குகின்றார்கள். அதை நல்லவிதமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு செய்து வருகிறது. ஆனால் வறுமையின் காரணமாக ஆதி திராவிட மக்கள் அந்த பட்டா நிலத்தை விற்று விடுகிறார்கள். அவர்களுக்கு பட்டா வழங்கும் நிலத்தை மற்றவர்களுக்கு 12 வருடங்களுக்கு மாற்றக்கூடாது என்று ஒரு விதியை வகுக்க வேண்டும். ஏற்கெனவே மாற்றப்பட்டிருக்கிற நிலத்தை திரும்ப எடுத்து, சம்பந்தப்பட்டவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆ. பிரேம்குமார்] [1985 ஜூன் 11

அதைப்போன்று பட்டா வழங்குவதிலே தமிழக அரசு முதன்மை இடம் பெற்றிருக்கிறது. இப்படி பட்டா வழங்குவதோடு ஒவ்வொரு ஆண்டும் அந்த நிலத்தில் ஏதாவது வில்லங்கம் இருக்கிறதா, அதாவது என்கம்பிரன்ஸ் சர்டிபிகேட் பெற்று, அவர்களுடைய நிலத்தில் இருக்கிற வில்லங்கம் என்ன? விற்றிருக்கிறார்களா, வாங்கியிருக்கிறார்களா, அதிலே லீஸ் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ளும் வகையில் அந்த பட்டா புத்தகத்திலே ஒரு பகுதியில் குறித்து வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குத் தேவையான தொகையை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வசூல் செய்து, அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திண்டுக்கல் தொகுதியில் சிறுமலை, ஆத்தூர் தொகுதியில் பன்றிமலை, தோணிமலை பகுதிகளில் வாழைக்கு முடிக்கொத்து நோய் வந்து பெருமளவுக்கு பாதிக்கப் பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகளில் வரி வசூல் செய்வது ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. வாழைக்கு ஒரு வரி, எலுமிச்சைக்கு ஒரு வரி, காப்பிக்கு ஒரு வரி என்று வைத்திருக்கிறார்கள். வாழைக்கு விதிக்கப் பட்டிருக்கிற வரி மிகவும் அதிகமாக இருக்கிறது. முடிக்கொத்து நோயினால் வாழை பெருமளவுக்கு பாதிக்கப்பட்டிருந்தாலும் அந்த வாழைக்குச் சொந்தக்காரர்கள் பழைய நிலையிலேயே வரி கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அவர்களுடைய நிலையை இந்த அரசு கவனித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனே வரியை நீக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் திண்டுக்கல் பகுதி மிகவும் வறட்சியான பகுதியாக இருப்பதன் காரணத்தால் திண்டுக்கல் பகுதியினை வறட்சிப் பகுதி என அறிவித்து வரிவிலக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு வரி விலக்கம் செய்ய முடியாவிட்டால் கூட தற்போதைக்காவது அந்த வரி வசூலிப்பதை சற்று நிறுத்தி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முதியோர் பென்ஷன் கொடுப்பதைப் பொறுத்த வரையில் தமிழக அரசு மற்றைய மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கின்றது. ஆனால் தகுதியுள்ளவர்கள் அதாவது விதவைகளும், பெரியோர்களும், முதியோர்களும் இந்த

1985 ஜூன் 11] [திரு. ஆ. பிரேம்குமார்]

பென்ஷன் வாங்குவதற்காக மனு செய்தும் பெற முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் மனு செய்த மூன்று மாதத்திற்குள்ளாக, இதனால் எவ்வளவு நிதி செலவானாலும் பரவாயில்லை என்ற நிலையில், உடனடியாக தகுதியுள்ள அனைவருக்கும் கிடைக்க புரட்சித் தலைவரின் அரசு ஏற்பாடு செய்யும் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து, வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் அவ்வாறு வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்கின்ற ஒவ்வொருவருக்கும் நில வரியிலிருந்து குறைந்தது 2 சதவீதமாவது வரி விலக்கு செய்தால் அது வரவேற்கத் தக்கதாக இருக்கும் என்று கூறிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களின் அன்பால் அண்ணா மாவட்டம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அரிசன நலத் துறைக்கும், கள்ளர் சீரமைப்புக்கும் தனி வருவாய் அதிகாரிகளை நியமித்தால் நல்ல முறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடைத் தரகர்களை ஒழிக்க வேண்டும் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதற்காக அரசு ஆவன செய்து வருகின்றது. இருப்பினும் இன்னும் ஒழிக்கப்படாத சூழ்நிலை சில நகரங்களில் இருக்கின்றது. அப்படிப்பட்ட இடைத் தரகர்களை கடுமையாக சட்டம் கொண்டு வந்து ஒழிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நிலவுடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டப்படி தொகுப்பு ஊதிய ஒப்பந்தப் பணியாளர்கள் 1982 ஆம் ஆண்டு நவம்பரில் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 8,000 பேர்கள் நியமிக்கப் பட்டார்கள். அவர்களுக்கு அகவிலைப் படி, போனஸ் போன்றவைகள் மற்றவர்களுக்குக் கொடுப்பது போல் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் அன்புடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். பனைமரத் தொழிலாளர்கள் கீழே விழுந்து இறந்துவிட்டால் அரசு உடனடியாகத் தொகை கொடுக்கின்றது. கட்டிடத் தொழிலாளர்கள் இறந்துவிட்டால் அவர்களுக்கும் அரசின் திட்டத்தின்படி தொகை கொடுக்கப் படுகின்றது. அதுபோல் இவர்களையும் கவனித்து இவர்களுக்கு அப்படிப்பட்ட சூழ்நிலை நேருகின்றபோது அரசு அன்புடன் உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஆ. பிரேம்குமார்] [1985 ஜூன் 11

தமிழ்நாடு நில அளவைத் துறையில் எழுத்தர் பிரிவில் 2,500 எழுத்தர்கள் பணிபுரிகிறார்கள். இவர்கள் சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் கூட வேலை செய்து வருகிறார்கள். இவர்கள் டெம்பரரியாகத்தான் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சீனியாரிட்டியை இழந்து விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களில் பெரும்பாலோர்களுக்கு 28 வயதுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் இவர்கள் நில அளவைத் தொழில் நுட்பத்தில் நன்கு தேர்ச்சி பெற்று நில அளவர்களுக்கு இணையாக நல்ல திறமையாக செயல்படக்கூடியவர்களாக இருக்கிறார்கள். 30—9—1985-ல் திட்டப் பணி முடிந்து விடும் என்று சொல்லப்படுவதால் அவர்களைப் பணி நீக்கம் செய்ய உரிய வாய்ப்பு இருக்கின்றது என்று சொல்கிறார்கள். எனவே இப்படிப்பட்டவர்கள் வேலை நீக்கம் செய்யப்படாமல் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு கொடுத்து, உடனடியாக மாற்று வேலை கொடுக்க அரசு ஆவன செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமச்சாவடிகள், கால்நடைப் பட்டிகள் அமைக்கின்ற திட்டம் விரிவுபடுத்தப்படுவதாக அரசு அறிவித்திருக்கின்றது. இந்தத் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் தொகுதியில் வெள்ளோடு, புதுப்பட்டி போன்ற இடங்களிலும் மற்றும் ஆத்தூர் தொகுதியிலும், பொன்மாந்துறையிலும் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வருவாய் மானியத்தை வரவேற்று, இந்த அளவுக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மானியங்கள் குறித்து நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சில கருத்துக்களை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இங்கே ஓய்வூதியம் பெறுபவர்கள் தமிழ் நாட்டில் பல பேர் இருக்கிறார்கள். ஆனால் அந்த ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இடைக் கால நிவாரணம் அரசாங்க ஊழியர்களுக்கு தரப்படுவது போல் தரப்படுவதில்லை. அகவிலைப் படியும் அவர்களுக்குக்



1985 ஜூன் 11] [திரு. அ. ரகுமான்கான்]

இடையாது. ஆகவே ஓய்வூதியம் என்பது குறைந்தபட்சத் தொகையாக 125 என்று அவர்களுக்கு இருந்தது நான்காவது சம்பளக் கமிஷன் அறிக்கை வந்ததற்குப் பிறகு 235 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது. இதை ஒரு சாதனையாக நான்

(முற்பகல் 11-00)

ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. காரணம் இன்றைக்கு அந்தத் தொகையை நீங்கள் 235 என்று—ஓய்வு பெறுகிற மாநில ஊழியர்களுக்கு எல்லாம் குறைந்த பட்சம் 235 என்று—நிர்ணயித்து இருப்பது, அதையும் 4-வது சம்பளக் கமிஷன் நிர்ணயித்து இருப்பது போதுமானதாக இல்லை. இன்னும் அந்தத் தொகை உயர்த்தித் தரப்பட வேண்டும் என்று இந்த மன்றத்திலே நான் கோரிக்கை வைக்க விரும்புகிறேன். அதற்குக் காரணம் சட்ட மன்ற உறுப்பினர்களுடைய சம்பளம் உயர்த்தப் படுகிறது. அமைச்சர்களுடைய சம்பளம் உயர்த்தப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் ஓய்வு ஊதியம் பெறுகிறவர்களுக்கு வழங்கப்படும் தொகை குறைந்த பட்சம் 235 ஆக ஆக்கியிருப்பது இன்னும் உயர்த்தப்பட்டாக வேண்டும், அது போதாது என்று இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். காரணம் இன்றைக்கு ஓய்வு காலத்தை அவர்கள் மகிழ்ச்சிகரமாக அனுபவிக்க முடியவில்லை. வாழ்க்கைப் போராட்டத்திலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். காரணம் தமிழகத்திலே நிலவி வரும் விலைவாசி உயர்வை அவர்கள் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இரட்டை இலைக்கு அவர்கள் ஓட்டு போட்டிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள்; சர்க்கரை விலையை உயர்த்தியிருக்கிறீர்கள்; பால் விலையை உயர்த்தியிருக்கிறீர்கள். மக்கள் எந்தப் பாவமும் செய்யவில்லை, உங்களுக்கு ஓட்டுப் போட்டதை தவிர. உங்களுக்கு ஓட்டு போட்டிருக்கிறார்களே என்ற காரணத்திற்காக இப்படிப்பட்ட அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளை எல்லாம் நீங்கள் குறைக்கிற முயற்சியிலே ஈடுபட வில்லை. எனவே மாதம் 235 என்று குறைந்த பட்ச ஓய்வு ஊதியம் இருக்குமானால், அதை வைத்துக் கொண்டு அவர்கள் வாழ்க்கையை வளமாக நடத்த முடியாது என்பது மட்டும் அல்ல,

குறைந்த பட்சத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்து வாழ முடியாத நிலையில், வாழ்க்கை நடத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு எல்லாம் ஓய்வு ஊதியம் தர வேண்டும் என்பது வரவேற்கத் தக்கது. காரணம் சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை இந்தியத் துணைக்கண்ட வீதிகளிலே பிடி சாம்பல் ஆக்கிய சிறைச்சாலைகளில் சித்திரவதைகளை அனுபவித்த அந்த தியாகச் சுடர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள் தாம். அவர்களுடைய தியாகம் ரூபாய்களில் இல்லை. அவர்களுடைய தியாகம் பணத்தில் இல்லை. ஆனால் துரதிருஷ்டவசமாக அந்த தியாகிகள் இன்றைக்கு வறுமையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள்; வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆரம்ப காலத்திலே ரூபாய் 125 தான் ஓய்வு ஊதியம் என்று நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் நான் அறிகிறேன் இப்போது அவர்களுக்கு 250 ரூபாயாக அதை ஆக்கியிருக்கிறார்கள் என்று. அந்த 250 ரூபாய்தான் சுதந்திரத்தின் விலையா? அந்த 250 தான் தியாகத்தின் விலையா? இன்றைக்கு பொது வாழ்க்கையிலே எந்த விதமான அக்கறையும் காட்டாத நபர்கள் கூட, பதவிகளில் துரதிருஷ்டவசமாக வந்து, இன்றைக்கு அந்தப் பதவிகளின் மூலம் வாழ்க்கையின் வசந்தங்களை அனுபவித்துக் கொண்டிருக்கக் கூடிய நேரத்தில், இந்த தேசத்தின் விடுதலைக்காக, அரும்பாடுபட்டு போராடிய அந்த தியாகிகள் வறுமையிலே வாடுகிறார்கள். எனவே அந்தத் தொகையை உயர்த்தித் தர வேண்டும். எந்தெந்த நடிகைகளுக்கோ, சிறப்பு ஊதியம் என்று சொல்லிக் கொண்டு தருகிற இந்த அரசு, இதிலே இன்னும் கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொன்றையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால் அந்த சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு முடிந்தால் வீடுகளைக் கட்டி ஒதுக்கித் தர முடியுமா என்று ஆலோசனை செய்வது கூட நியாயம். காரணம் டெல்லியிலே ராஜநாராயணன் போன்றவர்கள் [illegible]





ஆண்டு காலம் சிறையிலே இருந்தவர்கள். குடி இருக்க ஒரு வீடுகூட இல்லாமல் இன்றைக்கு இருக்கிறார்கள். நம் தமிழகத்தில் கூட வீடுகள் இல்லாத தியாகிகள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். முடிந்தால் அரசு அவர்களுக்கு வீடுகளை ஒதுக்கீடு செய்கிற காரியத்தைச் செய்வதற்கு பரிசீலிக்க வேண்டும், என்று அந்த தியாகிகளின் சார்பாக, தியாகத்தின் சார்பாக இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்னை. இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கு குரல் கொடுத்த தியாகச் செம்மல்கள் பற்றி. இந்த அரசும் அண்ணா வழி நடக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்தி ஆதிக்க எதிர்ப்பில் அக்கறை இருப்பதாகச் சொல்கிறார்கள். நேருவினுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு தீர்மானம் கொண்டு வரப்போகிறோம் என்று ஆர்ப்பாட்டமாக நாவலர் அவர்கள் இந்த மன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்தியை என்றைக்கு எதிர்ப்போம்?

இந்தி திணிப்புக்கு எதிராக எத்தனை கோட்டாலும் கூட்டி வரும் என்று போர் பரணி பாடி. இந்தி திணிக்கப்பட்டால் நாம் மூன்றாம் தர, இரண்டாம் தர குடிமக்கள் ஆவோம், ஒரு குறிப்பிட்ட மாநிலத்திற்குச் சொந்தமான இந்தி மொழியை இந்தியாவின் ஆட்சி மொழியாக, ஆளுகின்ற மொழியாக ஆக்கினால் நாம் 3 ஆம் தர மக்கள் ஆகிவிடுவோம் என்பதை உணர்ந்து, இந்தி எதிர்ப்புக்காக குரல் கொடுத்து சிறைச் சாலைகளில் சித்திரவதைகளை அனுபவித்த அந்த செம்மல்களை எல்லாம் இன்றைக்கு நிதியமைச்சராக இருக்கும் நாவலர் அவர்கள் மறந்திருக்க மாட்டார் என்று கருதுகிறேன். அந்த செம்மல்களுக்கு அன்றைக்கு இருந்த தி.மு.க. சர்க்கார் ஒரு 500 கோடி ரூபாய்க்குள் வரவு செலவுகளை செய்து கொண்டிருந்த நிலையிலேயே தங்களால் இயன்ற அளவு ரூபாய் 75 கொடுக்கிறோம் என்று அறிவித்தார்கள்.

ஆனால் துரதிருஷ்டவசமாக இந்த நாட்டிலே எதற்கும் நீதி மன்றத்திற்கு போகக்கூடிய நபர்கள் சட்டத்தின் சந்து பொந்துகளைக் காட்டி இந்தியாவினுடைய தேசிய ஒற்றுமையை இது உலை வைக்கிறது, இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டை இது குலைக்கிறது என்று சொல்லி அரசியல் சட்டத்தின்

பிரிவுகளைக் காட்டி இந்தி ஆதரவிற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களுக்கு சர்க்கார் உதவித் தொகை கொடுக்குமேயானால் அது இந்தியாவினுடைய ஐக்கியத்திற்கு வேட்டு வைப்பதாகும் என்று நீதியின் பெயராலே சட்டத்தின் பெயராலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

எனவே ஆயிரக்கணக்கான தொண்டர்கள் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து சிறை சென்றவர்கள் பெற்று வந்த அந்தத் தொகை இன்றைக்கு பெற முடியாத நிலை ஏற்பட்டது. அதற்குப் பிறகு நீங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தீர்கள். அதை பரிசீலிப்பதாகச் சொன்னீர்கள். இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த அந்த தியாக வீரர்களுக்கு மாதப் பணம் வேறு வகையிலே தருகிறோம் என்று சொல்லி, தமிழைப் பாதுகாத்தவர்கள் என்று திருத்தச் சட்டம் கொண்டு வந்தீர்கள். நாவலர் அவர்கள் கம்பீரமாக பேசினார்கள். மசோதா நிறைவேற்றினீர்கள். நான் கேட்க விரும்புகிறேன். அந்த மசோதா உயிரோடு இருக்கிறதா? அல்லது அந்தச் சட்டம் சமாதி ஆகிவிட்டதா? நடைமுறைப் படுத்தப்படுகிறதா? காரணம் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த, வீரர்கள் வறுமையால் வாடுகிறார்கள். கொடுக்கப்பட்ட பணம் நிறுத்தப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், அதைக் காட்டிலும் இந்தச் சர்க்காருக்கு என்ன வேலை இருக்குமென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

காரணம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதிகளை அள்ளி வீசுவதிலே வல்லவர். முடிந்தால் அதற்காக அவருக்கு ஒரு நோபில் பரிசு கூட கொடுக்கலாம். என் கையில் உங்களுடைய அதிகாரபூர்வமான அண்ணா பத்திரிகை இருக்கிறது. உங்கள் அனுமதியோடு அதிலிருந்து வாசிக்கிறேன். சென்னையிலே கம்பீரமாக முழங்குகிறார் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள். என்ன சொல்கிறார் என்றால் இந்திப் போராட்டத்திலே சிறை சென்றவர்களுக்கு மாதம் ரூ. 150 வழங்கப்படும். சொல்வது உங்களுடைய அண்ணா பத்திரிகை. சிறை சென்றவர்களுக்கு மாதம் 150 ரூபாய் வழங்கப்படும், முதல்வர் புரட்சித் தலைவர் அறிவிப்பு. அறிவிப்பு மன்னராக திகழ்கிற முதல்வர் அவர்களின் அறிவிப்புகளில் [illegible] நான் கேட்க விரும்புகிறேன்,



மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து ஓராண்டு உருண்டோடி விட்டது. இவ்வளவு நாட்களுக்கு பிறகு நீங்கள் சிந்தித்ததுண்டா? பாமர மக்களை ஏமாற்றுவதற்கு இந்த அறிவிப்புகளை கருவியாக பயன்படுத்துகிறீர்களே தவிர, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த வீரர்களுக்கு 150 ரூபாய் தரப்படும் என்று பொறுப்பு வாய்ந்த முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்களே, அதைச் சிந்தித்தீர்களா? அதை எண்ணிப் பார்த்தீர்களா? அதைக் கொடுக்கிற முறையில் ஈடுபட்டீர்களா? என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எனவே இந்தச் சர்க்கார் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து சிறை சென்றவர்களுக்கு, இன்பத் தமிழை காப்பதற்கு தங்களுடைய இன்னுயிரையும் தருவதற்கு தயாராக இருந்த அந்த சகோதரர்களுக்கு பென்ஷன் தொகை வழங்குகிற காரியத்தை செய்ய சர்க்கார் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நான்காவது சம்பள குழுவில் நீங்கள் ரூ. 30 முதல் ரூ. 150 வரையில் சம்பள உயர்வு என்று அறிவித்திருக்கிறீர்கள். நான் கேட்க விரும்புகிறேன். அரசாங்க ஊழியர்களுக்கு போனஸ் வழங்கப்படும் என்று தேர்தல் கால வாக்குறுதியாக கொடுத்திருக்கிறீர்களே, அதை நிறைவேற்றினீர்களா? தொழில் வரி ரத்து செய்யப்படும் என்று அறிவித்தீர்களே, அதை நிறைவேற்றினீர்களா? இருமுறை பயணச் சலுகை அளிக்கப்படுமென்று சொன்னீர்களே, அதை நிறைவேற்றினீர்களா? அரசாங்க ஊழியர்களுக்கு மருத்துவப்படி வழங்கப்படுமென்று சொன்னீர்களே, கொட்டி முழங்கினீர்களே, அப்பாவி மக்களை பார்த்து பேசினீர்களே, நான் கேட்க விரும்புகிறேன், இரட்டை இலைச் சின்னத்தில் ஓட்டுகளைப் பெற்றீர்களே, அந்த அரசாங்க ஊழியர்களுக்கு நீங்கள் தந்திருக்கிறீர்களா? இன்னும் சொல்லப் போனால், உங்களுடைய நிர்வாகத்தில் பணியாற்றுகிற தலைமைச் செயலாளர், மரியாதைக்குரிய அந்தோணி அவர்களை பத்திரிகை நிருபர்கள் கேட்கிறார்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு சமமாக இந்த ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டால் தலைமைச் செயலாளர் அந்தோணி அவர்கள் சொல்கிறார், அரசாங்க ஊழியர்கள் ஐ.நா. சபையில் இருக்கிற ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகிற சம்பளம் போல் கூட கேட்பார்கள் என்று சொல்லி கிண்டல் செய்கிறார்கள், நான்

கேட்க விரும்புகிறேன். * * *

என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். காரணம் அரசியல் வாதியைப் போல ஒரு அதிகாரி பேசக் கூடாது. பேச முடிந்தால் முதலமைச்சர் நிருபர்கள் கூட்டத்தில் பேசியிருக்கலாம். நாவலர் அவர்கள் அனுமதிக்கப்பட்டிருப்பாரானால் அவர்கள் பேசியிருக்கலாம். மாறாக ஒரு அதிகாரி அரசியல்வாதியைப் போல பேசியிருப்பது எந்த விதத்திலே நியாயம்? இன்றைக்கு உங்கள் சர்க்காரிலே அதிகாரிகள் எல்லாம் அரசியல்வாதிகளாக மாறிக் கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அது ஆரோக்கியமான அரசியலுக்கு உகந்ததல்ல. எந்தக் கட்சியும் ஆட்சிக்கு வரலாம், போகலாம். ஆனால் பியூரோகிரசி, அதிகாரிகளின் ஆணவம், அதிகாரிகளுடைய அதிகாரம் என்பது அபாயகரமானது. அது ஜனநாயகத்தையே சவக்குழிக்கு அனுப்பி விடும் என்பதை உங்கள் மூலமாக இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். நான் கேட்கிறேன். நீங்கள் கொடுத்திருக்கிற இந்த 30-லிருந்து 150 வரையில் உள்ள குறைந்த பட்ச ஊதியம் என்பது கோளாவில் அதுதான் நிலைமையா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஊதிய குழு பற்றி, அதனுடைய விதங்கள் பற்றி, நடைமுறைப்படுத்துவது பற்றி, பிற மாநிலங்களில் இருப்பதை பற்றி, மத்திய அரசில் இருப்பதை பற்றியெல்லாம் பேசுவதற்கு அவருக்கு முழு உரிமையுண்டு. அதற்கு இந்த மானியக் கோரிக்கை இடம் தராது. அதை அப்ரோப்ரியேஷன் வருகிறபோது அதில் பேசலாம். வேறு பல வகைகளில் வருகிறபோது பேசலாம். இன்றைக்கு எடுத்துக் கொண்டிருக்கிற வருவாய்த் துறையின் பிரச்சினைகளுக்கு பதில் சொல்கிற நிலைமை இல்லை; நேரமும் கூட இருக்காது. நீங்கள் நான் பதில் சொல்வதற்கு நேரத்தையும் வைத்து, அதற்குரிய வாய்ப்புகளும் ஏற்படுகிற போது விரிவாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும், திட்டமாகவும் நீங்கள் எங்களைப் பற்றி சொல்ல வேண்டியவைகளை எல்லாம் வழக்கம் போல் சொல்லிவிட்டு, அதையும் சொல்வீர்களானால், அதற்குப் பதில் சொல்ல நான் தயாராக இருக்கிறேன்.



(முற்பகல் 11-10)

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பென்சன் என்பது அரசாங்க ஊழியர்கள் சம்பந்தப் பட்டது என்ற காரணத்தாலே சொன்னேன். இருந்தாலும் நாவலர் அவர்கள், கோரிக்கையை ஏற்று, அடுத்த பிரச்சனைக்குப் போகிறேன். துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிர்வாகத்திற்கு உட்பட்ட ஒரு அலங்கோலம். தேர்தல் காலத்தில், விவசாயிகள் கடன், சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்ற பேச்சுக்கு எல்லாம் இடம் கிடையாது. கருணாநிதி வளவளா என்று பேசுகிறார் என்றீர்கள், நான் தெளிவாகக் கேட்கிறேன். விவசாயக் கடன் அனைத்தும் ரத்து செய்யப்படும் என்று அதிகாரபூர்வமாக முதல்வர் அவர்கள் பேசினார்கள். பத்திரிகையிலே பிரசுரம் ஆனது. அப்பாவி மக்கள் அதை நம்பி வாக்குகளை வழங்கினார்கள்.

அதுமட்டுமல்ல, கோட்டையிலே கொலு விற்று இருக்கிற முதல் அமைச்சர் அவர்கள், கோட்டையிலே கொடி ஏற்று விழாவிலே ஆகஸ்ட் 15-ஆம் நாள் பேசும்போது சொன்னார்கள். அவர்கள் சொல்லிய வாசகத்தை உங்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். விவசாயிகள் கடன் மட்டுமல்ல, அவர்கள் வாங்கியிருக்கிற கடனுக்கு இருக்கிற வட்டியும் ரத்து செய்யப்படும் என்று ஆகஸ்ட் 15-லே பேசியிருக்கிறார்களா, இல்லையா? ஆகவே தேர்தல் நேரத்தில் விவசாயக் கடன்கள் அனைத்தும் ரத்து செய்யப்படும் என்று சொன்னது யார்? நீங்கள் தானே. கடனுக்கு வட்டி, ரத்து செய்யப்படும் என்று சொன்னது, யார்? நீங்கள் தானே. உங்களிடத்திலே கேட்கிறோம். துணைச் சபாநாயகர் அவர்களே, முனுஆதி அவர்கள் தலைமையிலே ஒரு உயர்மட்டக் குழு போட்டீர்கள். அது உயர் மட்டக் குழு என்பதாலோ, என்னவோ, ஒரு உயர்வான கருத்தைச் சொல்லி இருக்கிறது. அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுத்து இருக்கிறது. இந்த விவசாயிகள் கடன் மற்றும் ஜப்தி நடவடிக்கைகளை தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் நல்ல பல கருத்துக்களை எல்லாம் சொல்லியிருக்கிறது. நீங்கள் போட்ட உயர்மட்டக் குழு, உங்களுடைய முனுஆதி, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, கருத்துக்களை திரட்டி வந்திருக்கிறார்கள். அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை நீங்கள் பார்த்து

இருப்பீர்கள். அந்த அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக இன்றைக்கு எங்கு பார்த்தாலும், ஜப்தி நடவடிக்கைகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

மாண்புமிகு அமைச்சர் திருநாவுக்கரசு அவர்கள் என் இனிய நண்பர், அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவருடைய வட்டம் பட்டுக்கோட்டை. அங்கேயிருக்கிற நாடிமுத்துப் பிள்ளை அவர்கள் எங்கள் கட்சிக்காரர் அல்ல, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். அவருடைய வீட்டிலே ஜப்தி செய்கிறார்கள், விவசாயக் கடன் பாக்கிக்காக. செய்யக்கூடாது என்பதல்ல. நாடிமுத்துப் பிள்ளையை அடிக்கிறார்கள், உதைக்கிறார்கள், போலிஸ் பட்டாளம் போகிறது. பயங்கரமான ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உங்களோடு கூட்டணியிலே இருக்கக்கூடிய இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள், அகில இந்திய அண்ணா தி.மு.க. சர்க்காரினுடைய காட்டு தர்பாரை எதிர்த்து போராடுவோம், ஜப்தி செய்வதை நிறுத்தவேண்டும், எங்கள் கட்சித் தலைவர் நாடிமுத்துப் பிள்ளை அவர்கள் மீது போலிசை வைத்து அடித்திருக்கிறார்கள் என்று. .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைமுன் விவாதத்தில் இருக்கும் மானியக் கோரிக்கைக்கு சம்பந்தம் உள்ளதைப் பேச வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, இது வருவாய்த் துறை மானியம். ஜப்தி வருவாய்த்துறை மானியத்திற்கு உட்பட்டதா, இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வருவாய்த்துறை சட்டத்தின் கீழ் இது செய்யப்படுவதில்லை.

We are not collecting the dues under the Revenue Act.

கூட்டுறவுத்துறையில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி சொல்லி, ஒருவர் அடிக்கப்பட்டார் என்று சொல்வது எல்லாம் வேண்டாம். இந்த மானியக் கோரிக்கைக்கு உட்பட்ட விஷயங்களை மட்டும் பேசுங்கள்.





**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரியாதது அல்ல. நிலவள வங்கிகள், பிரைமரி பேங்குகள் இருக்கின்றன. கூட்டுறவுக் கடன்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் நிலங்களிலே கிணறுகள் தோண்டவும், பம்ப்செட்டுகளை வைக்கவும், டிராக்டர்கள் வாங்கவும் கடன் கொடுப்பதுதான் இந்த பிரைமரி டெவலப்மெண்ட்டினுடைய பணிகள். இதிலே ரெவின்யூ சம்பந்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அதேபோல் விவசாயிகள் கடன் என்று சொல்வது, உங்களுக்கு நன்றாகத் தெரியும். நிலவரியாக இருந்தாலும், தண்ணீர் வரியாக இருந்தாலும், விவசாய உற்பத்திக்காக வாங்கியிருக்கின்ற கடன்கள். இன்னும் சொல்லப் போனால், ஜப்தி நடவடிக்கையின்போது, ஆர்.டி.ஓ., டி.ஆர்.ஓ. சம்பந்தப்பட்ட தாசில்தார்கள், போலீஸ் அதிகாரிகள் எல்லாம்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தத் தகவலே தவறானது. குத்தகை அதிகாரிகள், ஆர்பிட்ரேசன் அதிகாரிகள் தான் போவார்கள். வருவாய்த்துறை சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றி மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு). நீங்கள் சொல்கின்ற குற்றச்சாட்டுக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். இப்படி நிகழ்ச்சிகள் நடக்கிறதா இல்லையா என்பதை கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். அவர்கள் பேசுவதற்கான வாய்ப்பு இல்லாமல் இப்படிப் பேசக்கூடாது.

**திரு. அ. ரகுமான்கான்:** கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி கேபினெட்டுக்கு இருக்கிறது. அதற்காக நான் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி என்றால் 24 அமைச்சர்களுடைய துறைகளைப் பற்றியும் மாண்புமிகு நாவலர் அவர்கள் எப்படி சொல்ல முடியும்? தயவுசெய்து இந்த மானியத்தைப்பற்றி மட்டும் பேசி முடியுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜப்தி நடவடிக்கை என்று சொல்வது கிராம நிர்வாகத்தில் விவசாயிகளை பெரிதும் பாதிக்கக்கூடிய காரியமாக இருக்கிறது என்பதற்காகவும், இது எல்லாம் மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் பேங்குகள், கூட்டுறவு கடன்களாக இருந்தாலும் மாவட்ட நிர்வாகத்தின்கீழ் இருக்கக்கூடிய விவசாயிகளை பாதிக்கிற ரெவின்யூ போர்டு ஸ்டேண்டிரோலில் வருகிறது என்ற காரணத்தாலும் சொன்னேன். ஆனாலும்

இதனுடைய நோக்கம் என்ன என்று கேட்டால் இந்த ஜப்தி நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பது தான். திருத்துறை போன்ற பகுதிகளிலும், இன்னும் பல்வேறு பகுதிகளிலும் இது போன்ற காரியங்கள் நடைபெறுகின்றன. அரசு இந்த ஜப்தி நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்சினை குடிநீர்ப் பிரச்சினை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி இந்த பாலிசி நோட்டில் சொல்லப்பட்டு இருக்கிறது. 26 பகுதிகள் என்று கருதுகிறேன். வறட்சி பகுதிகளாக குடிநீர் வசதி அற்ற பகுதிகளாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. சென்னை நகரத்தினுடைய குடிநீர்ப் பிரச்சினை பற்றி கூட இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் குடிநீர் வடிகால் வாரியம் இந்த மாதிரி குடிநீர் பிரச்சினைத் தீர்ப்பதற்கு தயார் நிலையில் இருக்கிறது; முடுக்கி விடப்பட்டு இருக்கிறது என்று எல்லாம் ஒரு கருத்து இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் ஒன்றை இங்கே நான் உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

நம்முடைய அரசின் சார்பாக இந்து பத்திரிகையில் ஒரு அறிக்கை, செய்தியை வெளியிட்டு இருக்கிறார்கள். குறிப்பாக குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நீங்கள் எந்தநேரத்திலும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என்று சொல்லி ஒரு நம்பர் வேறு அதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த நம்பருக்கு நீங்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டு இயக்கினால் உடனே உங்கள் குறைகள் எல்லாம் கேட்கப்பட்டு அதற்கான பரிகாரம் செய்யப்படும் என்று இந்து பத்திரிகையில் வந்து இருக்கிறது. அதை கூட நான் இங்கே உங்கள் கவனத்திற்கு என் பேச்சின் இறுதியில் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஏன் என்றால் ஆதாரம் இல்லாமல் பேசுகிறேன் என்று கருதக் கூடாது என்பதற்காக.

ஆனால் என்னுடைய தொகுதி சென்னை சேப்பாக்கம் தொகுதி. அங்கே இவர்கள் அரசின் சார்பாக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் ஒரு விளம்பரம் வெளியிட்டு இருக்கிறார்கள், குடிநீர்ப் பிரச்சினைப் பற்றி, கவலைப்பட வேண்டாம், நீங்கள் இந்த நம்பருக்கு ரிங் செய்தால் உடனே அதிகாரிகள் உங்கள்





பிரச்சினையை கவனிப்பார்கள், குடிநீர் பிரச்சினை தீர்க்கப்படும் என்று அதில் போட்டு இருக்கிறார்கள். காலை 7½ மணி முதல் இரவு 7 மணி வரை அந்த அலுவலகம் திறந்து இருக்கும் என்று அதில் சொல்லப்பட்டு இருக்கிறது. என்னுடைய தொகுதியைச் சேர்ந்தவர்கள் போனார்கள், நானும் தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்கு அந்த நம்பரைச் சுற்றினேன். விசாரித்துப் பார்த்ததில் டெலிபோனே வைக்கப்படவில்லை. டெலிபோன் வைக்கப்படாத நிலையில் டெலிபோன் வைத்து இருக்கிறோம் இந்த நம்பரை டையல் செய்யுங்கள் என்று ஒரு அதிகாரி அறிக்கை விட்டு இருக்கிறார். இந்து பத்திரிகையில் பொறுப்பான பத்திரிகையில் விளம்பரப்படுத்தியிருக்கிறார். இது நியாயம் தானா? என்று நான் கேட்டு தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, குறிப்பிட்ட நோக்கப்படி அது நடைபெறுகிறதா என்றால் அதுவும் இல்லை. இதை எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால் நம்முடைய குடிநீர் வடிகால் வாரியம் தயார் நிலையில் இருக்கிறது என்று இந்த அறிவிப்பில் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட நிலையில் இல்லை என்பதற்காகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் சிந்தாதிரிப்பேட்டைப் போன்ற பகுதிகளில் பாடர் தோட்டம் போன்ற பகுதிகளில், ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற காக்ஸ் காலனி போன்ற பகுதிகளில், லாக் நகர் போன்ற பகுதிகளில் பரியல் கிரவுண்டு போன்ற பகுதிகளில் எல்லாம் இன்றைக்கு கடுமையான குடிநீர் பிரச்சினை இருக்கிறது. குறிப்பாக நாவலர் அவர்களுக்குத் தெரியும் நான் இருக்கக்கூடிய தொகுதி மாண்புமிகு நாவலர் அவர்கள் கடந்த கால தொகுதி. அவர்களுக்கு நான் சொல்லுகின்ற இடங்கள் தெரியும். 87-வது வட்டம் சிந்தாதிரிப்பேட்டை, குருவப்பச் செட்டித் தெரு, ராஜகோபால் நாயக்கன் தெரு, குட்டி நாயக்கன் தெரு, கிருஷ்டப்ப செட்டி தெரு, பழைய, புது பங்களா தெரு போன்ற பகுதிகளில் எல்லாம் இன்றைக்கு குடிநீர் வசதி இல்லாமல் மக்கள் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நான் முன்பு சொன்ன அந்த நம்பரை சொல்கிறேன். 847176. இந்த போன் நம்பர் மே மாதம் 29 ஆம் தேதி இந்து பத்திரிகையில் வந்து இருக்கிறது. ஆக நான் கேட்கவிரும்புகிறேன், இந்த பகுதியில் இருக்கக்கூடிய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் இந்த அரசு எடுக்காமல் இருப்பதற்கு வருந்தத்தக்கது உரியது. அது மட்டும் அல்ல, குமரி மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது.

[திரு. அ. ரகுமான்கான்] [1985 ஜூன் 11

(முற்பகல் 11-20)

அதைப்போலவே நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய உசிலம்பட்டித் தொகுதியிலே கடுமையான குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆண்டிபட்டித் தொகுதிதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தொகுதி. திருத்திக்கொள்ளுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** நினைவுபடுத்தியதற்கு நன்றி. ஆண்டிபட்டித் தொகுதியிலே இன்றைக்குப் பயங்கரமான தண்ணீர்ப் பஞ்சம் தாய்மார்கள் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். நானும் அந்தப் பக்கத்திலே இருப்பவன் தான், தாங்களும் அந்தப் பகுதிக்குப் பக்கத்திலே இருப்பவர்கள்தான். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் தொகுதியிலேயே இன்றைக்கு தண்ணீர்ப் பஞ்சம் பயங்கரமாக இருக்கிறது. . . .

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு உறுப்பினர் வருவாய்த் துறை மானியத்திலே பேசுகிறாரா? அல்லது குடிநீர் சம்பந்தப்பட்ட துறையிலே பேசிக்கொண்டிருக்கிறாரா? மெட்ரோவிலே பேசவேண்டியதை இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்களே, இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?

**திரு. அ. ரகுமான்கான்:** இதற்குப் பெயர் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை என்று கொடுத்திருக்கிறார்கள். பாலிசி நோட்டிலே சொல்லியிருக்கிறார்கள். அதிலே இயற்கை இடர்ப்பாடுகள், குடிநீர்ப் பிரச்சினை என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குடிநீர்ப் பிரச்சினை இந்த டிமாண்டிலே வராது. தண்ணீர்க் கட்டண விகிதங்கள்தான் வருகிறது. நான் பார்த்துவிட்டேன். சீக்கிரமாக முடித்து விடுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்னிக்க வேண்டும். நான் உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே குடிநீர் தட்டுப்பட்டால் பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்து விவாதிக்கப்பட்டது என்று சொல்லிவிட்டு குடிநீர்ப்பற்றாக்குறை நிலவும் பகுதிகள் என்று 25



1985 ஜூன் 11] [திரு. அ. ரகுமான்கான்]

வட்டங்களைச் சொல்லிவிட்டு சென்னை நகரில் கடைமுனைப் பகுதிகளில் குறைந்த அளவு நீர் கிடைக்கும் நிலைமையைச் சமாளிக்க சென்னை மாநகரப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் முடுக்கிவிடப்படும். பம்பு செட்டுகளைப் பழுது பார்த்து பராமரித்தல், குடிநீர்க் கிணறுகளை தூர் எடுத்தல் அடைப்புகளைச் சுத்தப்படுத்தல் முதலிய நடவடிக்கைகளைத் துரிதமாகச் செயல்படுத்துவது தற்போதைய குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்படும் என்று பக்கம் 8 இல் சொல்லப்பட்டிருக்கிறது. தயவுசெய்து படித்துப் பாருங்கள். ஆகவே தயவுசெய்து என்னைத் திசைதிருப்புகின்ற பணியிலே ஈடுபட வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரமாக முடியுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** அது வேறு விஷயம். குடிநீர்ப் பிரச்சினை பற்றி இதிலே உண்டா இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாவட்ட நிர்வாகம் என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் தான் நடத்துகிறார். போலீசிற்கு இருக்கிற எக்சிகியூடிவ் பவரைப் பயன்படுத்துகிற போது அதைப்பற்றி இதிலே பேசினால் போலீஸ் மானியம் வரும். ஆகவே அது வேண்டாம். சீக்கிரமாக முடியுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** குடிநீர்ப் பிரச்சினைபற்றிப் பேசுவதற்கு இந்த டிமாண்டிலே இடம் இருக்கிறதா இல்லையா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேசலாம், அதனால் உங்களுக்கும் பயன் இல்லை. எங்களுக்கும் பயன் இல்லை. பேசினால் அதற்குப் பதில் சொல்லக்கூடிய நிலையிலே நான் இருக்கமாட்டேன். துயர் தணிப்புப் பணிகள் என்று வருகிறபோது துயர் தணிப்பதற்கு எல்லாத் துறைகளையும் சேர்த்து அணைத்துக்கொண்டு கூட்டுழைப்பு என்ற முறையிலே இயங்குகிற துறையாகத்தான் வருவாய்த் துறை இருக்கிறது. தூண்டிவிடுதல், துணைபோதல் ஆகிய பணிகளையும் வருவாய்த் துறை செய்யவேண்டும். அந்த வகையிலே திரு. ரகுமான்கான் எடுத்துச் சொல்வதை நான் தவறு என்று சொல்லவில்லை. சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை. சென்னை மாநகரக் குடிநீர்ப் பிரச்சினையை ஆய்ந்து தெளிந்து

தீர்க்க வேண்டியது குடிநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்தது. அதைப்பற்றி அந்த அமைச்சர் தீவிரமாகக் கவனிப்பார். ஆகவே அவர்களிடத்திலே தெரிவித்தால் பயன் ஏற்படும். இல்லா விட்டால் பாலையிலே பெய்த மழையெனப்போய்விடும் என்பதற் காகத்தான் சொல்கிறேன். ஆகவே உங்களுக்கும் பயன்பட வேண்டும், நாட்டிற்கும் பயன்பட வேண்டும் என்ற முறையிலே உங்களுடைய அருமையான நேரத்தினை நல்லமுறையிலே பயன் படுத்திக் கொள்ளுங்கள் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

**திரு. அ. ரகுமான்கான் :** கொடுக்கப்பட்டிருக்கிற கட் மோஷன் களிலே எடுத்து வைத்த கருத்துக்களை நான் விரிவாக்குகின்ற முறையிலேதான் பேசுகிறேன். நான் பேசக்கூடாது என்றால் கட்மோஷன்களை ஏன் அரசு ஏற்றுக்கொண்டது என்று தெரிய வில்லை. நீங்கள் சொல்வதற்கு நான் பதில் சொல்கிற நிலை யிலே இல்லை என்று நாவலர் அவர்கள் சொன்னார்கள். எனவே, நான் கேட்க விரும்புகிறேன், பலயிடங்களில் விவசாயிகளுக்கு நீர்ப் பாசன வசதி கிடைக்கவில்லை. உரிய நேரத்தில் நீர் வரத்து இல்லாததால் விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். குமரி மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள தால் நிலவரி ரத்து செய்ய வேண்டும் என்பதுபற்றி திரு. ரெத்தின ராஜ் அவர்கள் கட்மோஷன் கொடுத்திருக்கிறார்கள். உசிலம் பட்டி தொகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாக அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. முத்துராமலிங்கம் அவர்கள் கட்மோஷன் கொடுத்திருக்கிறார்கள். அதைப் போலவே, திண்டிவனத்தில் வறட்சி நிலவுவதாக இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. தங்கமணி கவுண்டர் அவர்கள் கட்மோஷன் கொடுத்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், பாதிக்கப்பட்ட வறட்சிப் பகுதி களிலேயாவது குறைந்த பட்சம் இந்த நிலவரியை நீக்குவதற்கு முயற்சியெடுக்க வேண்டும்; நிலவரியை ரத்து செய்ய வேண்டும்; தண்ணீர் வரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள் வதற்காகத்தான் சொல்கிறேன்.

இதே அவையிலே விவாதம் நடந்தது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள், நாடோடி மன்னன் படம்தான் எனது சர்க்காரின் கொள்கை என்று சொன்னார்கள். அதிலே ஒரு காட்சியில், நாடு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக் கிறதே, மன்னா என்ன செய்யலாம் என்று கேட்கின்றபொழுது

நம்முடைய முதலமைச்சரவர்கள் மார்த்தாண்ட மன்னராக வந்து, எல்லா வரிகளும் ரத்து செய்யப்படும் என்று சொல்வார்கள். அப்படி நாடோடி மன்னன் படத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் எல்லா வரிகளையும் ரத்து செய்வதாகச் சொன்னார்கள். எனவே, ஆட்சி வேறு, காட்சி வேறு என்று சொல்லாமல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எல்லாம் நிலவரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்த மாவட்டப் பிரிவினை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மரியாதைக்குரிய நாவலர் அவர்கள் இதற்குப் பதில் சொல்லுகின்ற நிலையில் இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

பல மாவட்டங்கள் நிர்வாக வசதி காரணமாகப் பிரிக்கப்படுவது குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் மனப்பூர்வமாக வரவேற்கிறது. காரணம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது புதுக்கோட்டை மாவட்டம் பிரிக்கப்பட்டது. அதைப்போல காங்கிரஸ் இயக்கம் ஆண்டபோது தர்மபுரி மாவட்டம் என்றும், சேலம் மாவட்டம் என்றும் பிரிக்கப்பட்டது. அதைப்போல இன்றைக்கும் மாவட்டங்கள் பிரிக்கப்படுவதற்கான செயற்குறிப்புகள் இருக்கின்றன. இன்னும் திருநெல்வேலி மாவட்டம் பிரிக்கப்படாத நிலையில் இருக்கிறது, அதைப்போல வடாற்காடு மாவட்டம் பிரிக்கப்படாத நிலையில் இருக்கிறது. அவைகளைப் பிரிப்பதற்கான செயற்குறிப்புகள் வருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நிதி ஆதாரம் பற்றிய பிரச்னை வருகிறது. அரசாங்கப் பணிமனைகள் கட்டுவது இன்னும் மற்றக் காரியங்களுக்கு நிதி வசதி பற்றிய பிரச்னை வருகிறது.

ஆனால் இன்றைக்குச் சில மாவட்டங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்ற நேரத்தில் ஒரு கோரிக்கையை நான் இந்த நேரத்தில் வைக்க விரும்புகிறேன். அது மிகவும் முக்கியமான கோரிக்கையாகும். செங்கல்பட்டு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்தை அண்ணா பெயரால், அண்ணா மாவட்டம் என்று அழைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் மட்டுமல்ல, உங்கள் கட்சியை சார்ந்த உறுப்பினர் ஒருவரே இதே சட்டசபையில் பேசியிருக்கிறார்.

மரியாதைக்குரிய உகம்சந்த் அவர்கள் பேசுகையில் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவர் பேசிய அந்தக் கருத்து சபைக் குறிப்பிலே இருக்கிறது. வேண்டுமானால் நான் அதை வாசித்துக் காட்டுகிறேன்.

1070-வது பக்கம், வரவு செலவுத் திட்டம், 1983-84 வாக்கெடுப்பிலே நம்முடைய உகம்சந்த் அவர்கள், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர், அவர் பேசுகிறார், பெரிய மாவட்டங்களையெல்லாம் பிரிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு அறிவித்திருக்கிறது. எங்களுடைய செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து அண்ணா அவர்கள் பெயரால் ஒரு மாவட்டத்தையும், மறைமலையடிகள் பெயரால் ஒரு மாவட்டத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது அன்றைக்கு உங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினருடைய வேண்டுகோள். அதுமட்டுமல்ல, இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த முன்னாள் எம்.பி., சகோதரர் அன்பரசு அவர்கள் அண்ணாவின் பெயரிலே அந்த மாவட்டம் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, 1978-ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதம் 28-ஆம் நாள் மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், கலெக்டர் தலைமையில் ஏகமனதாக ஒரு தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. அதில், காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அண்ணாவின் பெயரால் அந்த மாவட்டம் அழைக்கப்பட வேண்டுமென்ற கருத்து, அரசியல் பிரச்னையாக ஆக்கப்படாமல், அபிப்பிராய பேதங்களுக்கு அப்பாற்பட்டு, அது அண்ணாவிற்குச் செய்யும் மிகப்பெரிய காரியம் என்ற வகையில் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

நாங்களும் அதையேதான் வலியுறுத்துகிறோம். அதே நேரத்தில் நம்முடைய அரசாங்கத்தின் சார்பில், முதலமைச்சர் சார்பாக, அமைச்சர் பெருமக்கள் சார்பாகச் சொல்லப்படும் கருத்து, அண்ணா நாட்டிற்குப் பொதுவானவர் என்று சொல்கிறார்கள். அண்ணா நாட்டுக்குப் பொதுவானவர் என்பதைப் பற்றிப் பட்டிமன்றம் நடத்த வேண்டிய அவசியமில்லை. "

**It is an admitted fact** நடைமுறையிலே ஒத்துக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.





தந்தை பெரியார் அவர்கள் எல்லோருக்கும் தெரிந்தவர்தான். ஆனால் அவர் பிறந்த ஈரோட்டைத் தலைநகரமாகக் கொண்டுதான் அந்த மாவட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவேதான், தியாகச்சுடர் காமராஜ் அவர்கள் எல்லோருக்கும் பொதுவானவர்தான். அவர் விருதுநகருக்கு மட்டும் சொந்தக்காரர் அல்ல. ஆனால் இன்றைக்கு முகவை மாவட்டத்தைப் பிரிக்கின்ற பொழுது அவர் பிறந்த விருதுநகரைத் தலைநகரமாக வைக்கின்ற அடிப்படையை ஏற்றுக் கொண்டு காமராஜ் மாவட்டம் என்று அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, அமைச்சர்கள் சொல்லுகின்ற அந்த வாதம் சரியானதல்ல. அண்ணா பொதுவானவர் என்று சொல்லுகின்ற அந்த வாதம் இதற்குச் சரியானது அல்ல. அண்ணா காஞ்சிபுரம் மண்ணிலே பிறந்து, அந்த மண்ணிலேயே வளர்ந்தவர் என்பது என்னைக் காட்டிலும் நாவலர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். ஆகவே, அப்படிப்பட்ட அண்ணாவுக்கு, அவர் பிறந்த பூமியிலே; செய்கின்ற விதத்திலே அந்த மரியாதையைச் செய்திருக்க வேண்டும்.

(முற்பகல் 11-30)

இன்னொரு வேடிக்கையான காரணம் சொல்லப்பட்டது. அகில இந்திய அண்ணா தி.மு.க. முதன் முதலாக, திண்டுக்கல்லிலே ஜெயித்தது. ஆகையினாலேதான் நாங்கள் அந்தப் பெயரை வைக்கிறோம் என்று சொல்லப்பட்டது. மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஒரு பகுதிக்கு திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட பகுதிக்கு, அண்ணா மாவட்டம் என்று அங்கே பெயரை வைக்கிறீர்கள்; அவர் பெயரை எங்கேயும் வைக்கலாம், அது வேறு விவகாரம். ஆனால், வைக்க வேண்டியதை வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும். அப்பொழுதுதான் சிறப்பாக இருக்கும். அந்த அடிப்படையிலே காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அண்ணா மாவட்டம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று சொல்கிறோம். நம்முடைய துணை சபாநாயகர் அவர்களும் நானும் கூட, நீங்கள் பெயரிட்டிருக்கிறீர்களே, திண்டுக்கல் — அண்ணா மாவட்டம் என்று, அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான். எனவே, அண்ணா பெயர்

[திரு. அ. ரகுமான்கான்] [1985 ஜூன் 11

இருப்பது குறித்து மகிழ்ச்சிதான். ஆனால், நான் கேட்க விரும்புவதெல்லாம், காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு அந்தப் பெயர் வைக்க வேண்டுமே தவிர, திண்டுக்கல்லுக்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் வைப்பது எந்த விதத்திலும் பொருத்தமானது அல்ல.

திண்டுக்கல்லிலே முதன் முதலாக ஜெயித்தோம். ஆகவே, அண்ணாவின் பெயரை வைக்கிறோம் என்று சொன்னால், அண்ணாவும் காஞ்சிபுரத்திலே 1957-லே முதன் முதலாக ஜெயித்திருக்கிறார். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காட்டிலும் அண்ணா பெரியவர்: காரணம் கட்சியினுடைய பெயரே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். கொடியில் அண்ணா படத்தை வைத்திருக்கிறீர்கள். ஆகையினாலே நான் கேட்க விரும்புவது, காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு, அண்ணாவுக்கு மரியாதை செய்கின்ற விதத்திலே, அண்ணா மாவட்டம் என்று அதை அழைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நாவலர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். கிராம அதிகாரிகள் பொறுத்த மட்டில் பல பேர்கள் இன்றைக்கு வேலைக்கு வந்திருக்கிறார்கள், மீண்டும் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். 10,000 போஸ்ட்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன். இன்னும் 2,000 போஸ்ட்கள் நிரப்பப்படவில்லையென்று கருதுகிறேன். 10-ஆம் வகுப்பு பரீட்சை எழுதாத கிராம அதிகாரிகள் எல்லாம் விடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வறுமையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். நெஞ்சம் கொதிக்குதடா என்று சொல்கின்ற நிலையில் அவர்களுடைய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. நான் இந்தச் சபையிலே சொல்ல விரும்பவில்லை. வறுமையில் இருக்கின்ற அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கின்ற விதத்திலே அரசு திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அல்லது 5 ஆண்டு, 3 ஆண்டு என்று ஒரு கால வரையறை செய்து, அவர்கள் 10-வது வகுப்பு பாஸ் பண்ணினால் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கிராம அதிகாரிகள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூன் 11] [திரு. அ. ரகுமான்கான்]

நியமிக்கப்பட்டவர்களது ப்ரொபேஷன் பீரியட் முடிந்துங்கூட அவர்கள் இன்னும் பர்மனென்ட் ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் பர்மனென்ட் ஆக்கப்பட வேண்டுமென்றும் கிராம நிர்வாகத்திலே கிராம அதிகாரிகளும் வருகின்ற காரணத்தால் சொல்கின்றேன்.

கடைசியாக ஒரு வேண்டுகோள். 7,500 பணியாளர்கள், நில அளவை மற்றும் பதிவேட்டுத் துறையிலே வேலை செய்கிறார்கள். அவர்கள் 2½ ஆண்டுகாலமாக ரூ. 450 சம்பளத்திலே—குறைந்த சம்பளத்திலே — தொகுப்பு ஒப்பந்தத்தின் பெயரிலே பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு கிடையாது. இன்னும் சொல்லப் போனால், பல பேர்கள், மருமகன் வேலை பார்க்கிறான் என்று சொல்லி, பெண் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள்; குழந்தைகள் எல்லாம் பெற்று விட்டிருக்கிறார்கள். திடீரென்று அவர்கள் வேலை 30—9—1985-லே முடியப் போகிறது. 7,500 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள். மருமகனும், மாமனாரும், மணப் பெண்ணும், குழந்தைகளும் தெருவிலே நிற்க வேண்டிய அபாயகரமான சூழ்நிலையிலிருக்கிறது. குடும்பத்திலே ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்பது நம்முடைய சர்க்காரின் கொள்கை; கொத்தனாருக்குக் கூட பயிற்சி கொடுத்து வேலை கொடுக்கிறோம். நல்ல வேளை, சித்தாளுக்குப் பயிற்சி கொடுத்து வேலை கொடுக்கும் திட்டம் இல்லை. ஆகவே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இந்த 7,500 ஊழியர்களைத் தெருவிலே நிற்க விடாமல், வேறு ஏதாவது ஒரு துறையிலே அவர்களை அப்சார்ப் செய்து, அவர்களைக் காப்பாற்றுங்கள் என்று சொல்லி, என் உரையை நிறைவு செய்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபொழுது அரசு நிர்வாகத்திலே இருக்கிறவர்களைப் பற்றியோ, அல்லது அதிகாரிகள் பற்றியோ சுட்டிக்காட்டலாம். ஆனாலும் சட்டமன்றத்திலே தலைமைச் செயலாளரைப் பற்றி பேசுகின்றபொழுது, * *
என்று குறிப்பிட்டது சபைக் குறிப்பிலே இருக்கலாமா என்பதை நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** ; அவரது நடவடிக்கையைப் பற்றி விமர்சித்தால் பரவாயில்லை. அவர் * * என்று கேட்க வேண்டியதில்லை.

**திரு. அ. ரகுமான்கான்** : நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் 'ஐ.நா. மன்றத்தின் ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளத்தைப் போல் கொடுக்க வேண்டுமென்று கேட்பார்கள் போல் இருக்கிறது' என்று பேசியிருக்கிறார். இதை அமைச்சர் பேசலாம், அரசாங்கத்தின் சார்பாக இருக்கிற அதிகாரி என்ற முறையில் பேசக் கூடாது. எனவே அவர் அதிகாரியா அல்லது * * என்று கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** ; அவரை விமர்சிக்கலாம், அது சரி. ஆனால், குறிப்பிட்ட அந்த வாசகங்கள் வேண்டாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : துணைத் தலைவர் அவர்களே, அவர் அப்படி பேசியிருக்கக் கூடாது என்ற கருத்துக்களைச் சொல்ல உரிமையுண்டு. * *

இப்படிப்பட்ட வகையிலே விமர்சிக்க வேண்டாம். அது தவிர, மற்ற சொற்றொடர்கள் இருக்கலாம். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : * * என்று குறிப்பிட்டதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் ; மற்றவை இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அந்தப் பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகின்றன.

*** திரு. வே. இரா. ஜெயராமன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த வருவாய்த் துறை மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களை அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





எனக்கு முன்னால் பேசிய அருமைச் சகோதரர் ரகுமான்கான் அவர்கள் கலைஞர் ஆட்சியின்போது, இந்திப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு 75 ரூபாய் நிதி உதவி அளித்தார்கள். பின்னால் புரட்சித் தலைவர் ஆட்சியில் அந்த உதவித் தொகை 150 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டு, சட்ட சிக்கல் காரணமாக இன்றையதினம் கொடுக்கப்படாமல் இருக்கிறது என்ற கருத்தை வலியுறுத்தி, புரட்சித் தலைவர் அறிவிப்பு மன்னராக இருக்கிறார் என்று சொன்னார். அதற்கு நான் பதில் கூற விரும்புகிறேன். இதே மாமன்றத்தில் கலைஞர் முதலமைச்சராக இருக்கும்போது மால்கோ நிறுவனத்தை தேசியமயமாக்குவோம் என்று சொன்னார். உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்குவேன் என்று கூறினார். நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் டிரஸ்ட் நிலத்தை எல்லாம் எடுப்பேன் என்று சொன்னார். இப்படி பல அறிவிப்புகளை கரவொலிகளுக்கிடையே அறிவித்தார். இப்படி அறிவிப்பு செய்ததை எல்லாம் இன்றைக்கு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. இந்த நிலையில் பார்த்தால் கலைஞர்தான் அறிவிப்பு செய்வதில் வல்லவர் என்பதையும் புரட்சித் தலைவர் அவர்கள் கொடுப்பதிலேதான் வள்ளலாக வாழ்ந்திருக்கிறார் என்பதையும் வலியுறுத்திக் கூறி
என்ற கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்**: துணைத் தலைவரவர்களே, * * என்று சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் களத்திலே போட்டியிட்டு, தோல்வியடைந்து விடுவதினாலே அரசியலில் ஒருவர் தாழ்ந்துவிட மாட்டார். பேரறிஞர் அண்ணா அவர்கள் தோல்வியடையவில்லையா? மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்கள் தோல்வியடையவில்லையா? பெரும் தலைவர் காமராஜர் தோற்கவில்லையா? தேர்தல் வெற்றித் தோல்வியை வைத்து ஒருவர் நிலையை எடை போட முடியாது. அந்த நிலையில் பார்த்தால் * * என்று கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்களைப்பற்றி விமர்சித்ததையும் முதலமைச்சர் அவர்களைப் பற்றி விமர்சித்த

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம். மற்ற அறிவிப்பு பற்றிச் சொல்லியதெல்லாம் வாதத்திற்கு வாதம் என்ற வகையில் இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கலைஞர் அவர்களைப் பற்றியும் முதல்வர் அவர்களைப் பற்றியும் விமர்சித்ததை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** அடுத்தபடியாக, மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இன்றையதினம் மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். அப்படி இரண்டாகப் பிரிப்பதற்கு முன்னால் அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் கலந்து பேசியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இப்போது பிரிக்கப்பட்டிருக்கிற மதுரை மாவட்டத்தில் பெரியகுளம் வருவாய்க்கோட்டமும், உத்தமபாளையம் வருவாய்க்கோட்டமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது எப்படி இருக்கிறது என்றால் பெரியாறு, வைகை பாய்கின்ற வளமிக்கப் பகுதி மதுரை மாவட்டமாகவும் வறட்சியான பகுதி அண்ணா மாவட்டமாகவும் இருக்கிறது: இப்படிப் பிரித்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11-40)

ஆகவே இந்தப் பிரிவினை சம்பந்தமாக மறுபரிசீலனை செய்து உத்தமபாளையம், பெரியகுளம் ஆகிய தாலுக்காக்களை அண்ணா மாவட்டத்தோடு சேர்த்து பிரிப்பதன் மூலம் சமமான ஒரு சம நிலைக் கோட்பாடு ஏற்படும். எனவே அந்த வகையில் அவற்றைச் சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தாலுக்காக்கள் ஏற்படுத்துவதைப் பொறுத்தவரையில் தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தாலுக்கா அமைக்கப்பட வேண்டும். அந்தத் தாலுக்காவின் பெரும் பகுதிகள் சில ஜமீன்களுடைய ஆளுகைக்குட்பட்டதாக வெகு காலம் இருந்து வந்தது. அது மலைப்பகுதியாக இருந்து

1985 ஜூன் 11] [திரு. வே. இரா. ஜெயராமன்]

வருவதன் காரணத்தால் அதாவது அவுட் சைட் தி பர்வியூ ஆஃப் தி ஜமீன் ஆக்ட் என்பதால் அந்த விவசாயிகளுக்குப் பட்டா கிடைக்காமல் இருந்து வருவதன் காரணத்தால் ஜமீன் அபாலிஷன் ஆக்டை முறைப்படுத்தி அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்குப் பட்டா கிடைக்கின்ற வரையில் திருத்தியமைக்கின்ற அந்தத் தேதியை இன்னும் நீட்டித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாவட்ட பிரிவினையைப் பொறுத்தவரையில் பிரத்யட்சமாக நடைமுறைக்கேற்ப பிரிப்பதாக இருந்தால் மதுரை மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாகப் பிரித்திருக்க வேண்டும். திருமங்கலம், மேலூர், மதுரை, நத்தம் ஆகிய தாலுக்காக்களை உள்ளடக்கிய ஒரு பகுதியை ஒரு மாவட்டமாகவும், திண்டுக்கல், பழனி, வேடசந்தூர், நிலக்கோட்டை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய ஒரு மாவட்டமாகவும், பெரியகுளம், கொடைக்கானல், உத்தமபாளையம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு மாவட்டமாகவும் பிரிந்திருந்தால்தான் அது சாலப் பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். அதனால்தான் இந்தக் கருத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அண்ணா மாவட்டத்தில் இன்றையதினம் திண்டுக்கல் தலைமையிடமாக இருக்கின்றது. அங்கே இருக்கின்ற வேடசந்தூர், பழனி வருவாய் கோட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. வேடசந்தூருக்கு மிக அருகாமையில் இருப்பது திண்டுக்கல்தான். திண்டுக்கலுக்கும், வேடசந்தூருக்கும் இருக்கின்ற நியரஸ்ட் டிஸ்டன்ஸ் 9 கிலோ மீட்டர். ரிமோட் வில்லேஜினுடைய தூரம் 46 கிலோ மீட்டர். ஆகவே வேடசந்தூர் பகுதியைத் திண்டுக்கல் வருவாய் கோட்டத்தோடு இணைப்பதுதான் சாலப்பொருத்தம் இன்னும் சொல்லப்போனால் பழனிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய வேடசந்தூரில் இருக்கின்ற கிராமங்களினுடைய தூரம் 55 கிலோ மீட்டர். ரிமோட் வில்லேஜினுடைய தூரம் 116 கிலோ மீட்டர். இவ்வளவு தூர இடர்பாடு இருக்கின்ற காரணத்தால் வேடசந்தூர் வட்டத்தைத் திண்டுக்கல்லோடு இணைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1985 ஜூன் 11

வீட்டுமனை ஒப்படைப்பு. சேஞ்ச் ஆஃப் க்ளாசிஃபிக்கேஷன் என்பதைப் பொறுத்தவரையில் நத்தம் என்றிருந்தால் அதைத் தாசில்தார்களே வீட்டுமனை போட்டுக் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் அதேநேரத்தில் சாலைப் புறம்போக்கு, ஊருணிப் புறம்போக்கு இவைகளை எல்லாம் பொறுத்தவரையில் நிலத் தன்மையை மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ அல்லது வருவாய் ஆணையாளரிடமோ சென்று வரக்கூடிய சூழ்நிலை இருப்பதால் இவைகளில் மிக, மிகக் காலதாமதம் ஏற்படுகின்றது. அந்தக் காலதாமதத்தை தவிர்க்கின்ற வகையில் அவ்வாறு மாற்றுகின்ற அதிகாரத்தை தாசில்தார்களுக்கு வழங்கினால் மிக விரைவில் பட்டாக்களைக் கொடுக்கின்ற நிலைமை ஏற்படும்.

அரிசனப் பெருங்குடி மக்களைப் பொறுத்தவரையில் அரிசன வெல்ஃபேர் டிப்பார்ட்மெண்ட் நிலங்களைக் கையகப்படுத்திக் கொடுப்பதற்குச் சட்டம் வைத்திருக்கிறார்கள். ஆனால் அரிசனங்கள் அல்லாதவர்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு, விவசாயிகளுக்கு வீட்டுமனை கொடுப்பதற்கான எந்தவிதமான சட்டமும் இல்லாத காரணத்தால் மற்றவர்களுக்கெல்லாம் வீட்டுமனை கொடுக்க நிலங்களை ஆர்ஜிதம் செய்வதுபோல் இவர்களுக்காகவும் ஒரு தனிச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நிவாரணமும் புனர் வாழ்வும் என்ற வகையில் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகின்றபோது அரசு உதவி வருகின்றது. மழை பெய்யும்போது, புயல் அடிக்கும்போது, தீ விபத்துக்கள் ஏற்படுகின்றபோது இப்படி பல்வேறுவிதமான இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகின்றபோது மக்களின் துயரைத் துடைக்க இந்த அரசு மிக விரைவாக முன்வந்து உதவி செய்வதைப் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் தமிழகத்தில் அதிகமாக இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் வைத்திருக்கின்ற பயிர்களுக்கு நோய் ஏற்படுகின்றது, பூச்சிகளால் பாதிப்பு ஏற்படுகின்றது, எனவே அவர்களுக்கும் உதவ வேண்டும். பூச்சிகள் அனைத்தும் கால மாறுபாட்டால், சீதோஷ்ண மாறுபாட்டால்தான் ஏற்படுகின்றது என்று விஞ்ஞான வல்லுநர்கள் கூறுகிறார்கள். எனவே அவ்வாறு விவசாயிகளுடைய பயிர்கள் பாதிக்கப்படுகின்றபோது விவசாயிகளுக்கு நிலவரி ரத்து, கடன்களைத் தள்ளிப்போடுதல் போன்ற நிவாரணங்களை வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 11] [திரு. வே. இரா. ஜெயராமன்]

அதற்கு அடுத்தபடியாக வீட்டு மனைப் பட்டாக்கள் ஒதுக்குகிறபோது நத்தம், மற்றும் ஆட்சேபனை அற்ற ஆக்கிரமிப்புகள் என்று வகைப்படுத்தியிருக்கிறார்கள். ஆட்சேபனையற்ற ஆக்கிரமிப்புகள் என்ற வகையில் கிராமங்களில் ஆக்கிரமிப்புகளைச் செய்தால், அந்த ஆக்கிரமிப்புகளை காலி செய்வது என்பது முடியாத காரியமாக இருக்கிறது. ஏனென்றால் அங்கேயிருக்கிற விவசாயிகள் தங்கள் குப்பை கூளங்களை கொட்டுவதற்காக ஆண்டாண்டுக் காலமாக ஒரு சில இடத்தை ஒதுக்கி வைத்துக் கொண்டு, அது எங்கள் இடம், அது எங்கள் இடம் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் வீடு இல்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைப்பட்டா கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த நிலையைப் போக்குவதற்கு தனியான வகையில், இந்த ஆட்சேபனையற்ற ஆக்கிரமிப்புகளை எல்லாம் ஒருங்கிணைத்து அங்கே இருக்கக் கூடிய தாலுக்கா அளவிலேயே ஒரு முடிவு எடுத்து அவற்றை பட்டா செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

அடுத்தபடியாக மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் 3 மாதங்களுக்கு ஒருமுறை டி.டி.சி. மீட்டிங் நடத்தப்படுகிறது. அது பெரும்பாலும் அங்கேயிருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்தான் தலைமை ஏற்று நடத்துகிறார்கள். அந்த வகையிலே அந்த மக்களுடைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அது ஒரு ஆலோசனைக் குழுவாகத்தான் பயன்படுகிறதே தவிர, அவைகளினால் சரியான முடிவுகளை விரைவாக எடுக்க முடியவில்லை. அத்தோடு டி.டி.சி. மீட்டிங்கில் எடுக்கப்படுகிற முடிவுகள் அல்லது தீர்மானங்கள் குறித்து அரசால் அது தீவிரமாக பரிசீலிக்கப்பட வேண்டும். ஆனால் இப்போது அரசுத் துறைகள் அவற்றை ஏனோதானோ என்று கவனிக்கும் சூழ்நிலைதான் இருக்கிறது. இந்த நிலை மாற்றப்பட்டு, அந்த ஆலோசனைகள் விரைவாகப் பரிசீலிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டாக வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக குத்தகை பாக்கிச் சட்டத்திலே, குத்தகைக்காரர்களைவிட, குத்தகைக்கு விட்டவர்கள் பொருளாதாரத்தில் மிகவும் மோசமான நிலையிலே இருந்தால், அந்தக் குத்தகை நிலத்தை அவர்களுக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும். அல்லது நிலத்தின் பாதி கிரயத்தையாவது திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற வகையில் ஒரு திருத்தத்தை அந்தச் சட்டத்திலே கொண்டு வர வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு குத்தகைக்கு நிலத்தை விடுபவர்களிலே சில விதவைகளும் இருக்கிறார்கள். கணவன் இறந்ததற்குப் பின்னால், குத்தகை எடுத்தவர்கள் அந்த விதவைக்கு குத்தகை பணத்தைக் கொடுப்பதேயில்லை. ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கும் அந்த நிலத்தை திருப்பிக் கொடுப்பதற்கு சட்டத்திலேயே விதிவிலக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று அமர்கிறேன். வணக்கம். நன்றி.

**திரு. கோ. வீரய்யன்:** மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் கொண்டு வந்திருக்கக்கூடிய வருவாய்த் துறை கோரிக்கைகளின் மீதும் மற்றும் சில கோரிக்கைகள் மீதும் இங்கே முன்மொழியப்பட்டிருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

இந்த அரசாங்கத்தினுடைய கொள்கைகள், நடவடிக்கைகள், செயல்பாடுகள் முழுவதும் கிராமப்புற ஏழைகளுக்கு குறிப்பாக விவசாயிகளுக்கு உதவுவதாக அமையவில்லை என்பதை வருத்தத்தோடு கூறிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நடவடிக்கைகள் முழுவதும் விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் எதிராகத்தான் இருக்கிறது என்பதை குறிப்பிட்டுச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. மத்தியிலேயும், மாநிலத்திலேயும் வேறு வேறு கட்சிகள் ஆட்சி நடத்தினாலும்கூட, கட்சிகள் வேறுபட்டாலும், மந்திரிகள் வேறுபட்டாலும் கொள்கைகள் ஒன்றாக இருக்கக்கூடிய காரணத்தின் விளைவாக மத்திய அரசு எப்படி விவசாயிகளுக்கு ஒரு கட்டுப்படியான விலை கொடுப்பதற்கு மறுத்து வருகிறதோ, எப்படி கடன் நிவாரணம் அளிப்பதற்கு மறுத்து வருகிறதோ எப்படி இடு பொருள்களுக்கு விலை குறைக்க மறுத்து வருகிறதோ, எப்படி இயற்கையின் பாதிப்புக்





களுக்கு ஏற்ற ஈட்டுத் தொகையை வழங்க மறுத்து வருகிறதோ, அதே நிலையிலேதான் அதே கொள்கையிலேதான் நமது மாநில அரசும் செயலாற்றுகிறது என்பதை கூறாமல் இருக்க முடியாது.

குறிப்பாக நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டில் நிலச் சீர்திருத்தம் என்பது அரசு ஏற்று இருக்கிற ஒரு கொள்கை. ஆனால் அந்தக் கொள்கை உண்மையிலேயே இந்த அரசுக்கு இருக்கிறதா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். நிலச் சீர்திருத்தத்தை பொறுத்தமட்டில் ஒரு சரியான கொள்கையை அமல் நடத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அத்தோடு, நில வரியைப் பொறுத்தமட்டில் கிராமப்புறங்களிலே அங்கே இருக்க வேண்டிய கிராம அதிகாரிகள் இல்லாத இருந்த காரணத்தினாலே முதலிலே அந்த நிலவரியை வசூலிக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டது. இயற்கை பாதிப்பு ஏற்பட்ட காலத்தில், வறட்சியாலும், வெள்ளத்தாலும், புயலாலும் பாதிப்பு ஏற்பட்ட காலத்தில் அரசே நிலவரியை ரத்து செய்வதாகக்கூட அறிவித்திருக்கிறது. அப்படி இருந்தும்கூட இன்றைக்கு கிராமப்புறங்களில் நிலவரியை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த ஆண்டின் கூட டிசம்பர் மாதத்திலிருந்து கடந்த மே மாதம் வரையில் மழையின்றி மிகப் பெரிய அளவுக்கு வறட்சியால் நமது கிராமப்புறங்கள் பாதித்து இருக்கக்கூடிய நிலையில், குடிதண்ணீர் கூட கிடைக்காத நிலையில் மக்கள் அவதிப்படும்போது, அரசு கொடுத்திருக்கக்கூடிய குறிப்புகளிலே அவர்களுடைய கணக்கிலே 1390 ஆம் ஆண்டு பசலி முதல் 1394 ஆம் ஆண்டு — 4 ஆண்டுகள் வரை—நிலவரி பாக்கித் தொகையாக சுமார் 45 கோடி ரூபாய் பாக்கி நிற்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-50)

அந்த பாக்கிகள் இயற்கை பாதிப்பினால் ஏற்பட்டிருக்கிற பாதிப்புகள். அதிகாரிகள் இல்லாததால் ஏற்பட்டிருக்கிற பாக்கிகள். அரசு குறிப்பின்படி பார்த்தாலும் நான்கு ஆண்டு பாக்கிகள். அரசு குறிப்பின்படி பார்த்தாலும் நான்கு ஆண்டு காலமாக தேங்கியிருக்கிற பாக்கிகள். இந்தப் பாக்கிகளை ஒரே ஆண்டிலே ஒரே நேரத்தில் வசூலிப்பது, நிலவரி பாக்கியை வட்டியும் சேர்த்து வசூலிப்பது, ஜப்தி போன்ற நடவடிக்கைகளில்

ஈடுபடுங்கள் என்று அதிகாரிகளை ஏவிவிடுவது விவசாயிகளுக்கு விரோதமானதா? அல்லது விவசாயிகளுக்கு சாதகமானதா என்பதை அரசு கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல 10 ஆண்டுகளாக தேங்கியிருக்கிற குத்தகை பாக்கிகள், அந்தக் குத்தகை பாக்கிகள் முழுவதும் வாங்கியிருப்பதால், ஏற்பட்டிருக்கிற கடன் இல்லை. விளையாததன் காரணத்தினால் இயற்கை பாதிப்பினால் ஏற்பட்டிருக்கிற கடனே தவிர குத்தகைதாரர்கள் வாங்கிய கடனால் ஏற்பட்டிருக்கிற பாக்கிகள் அல்ல. ஆறு ஆண்டுகளாக இருக்கிற நிலவரி பாக்கியும், பத்து ஆண்டுகளாக இருக்கிற குத்தகை பாக்கிகளும், 12 ஆண்டுகளாக இருக்கிற கூட்டுறவுக் கடன்களும், இவைகள் முழுவதையும் ஒரே ஆண்டில் வசூலிப்பதற்கு விவசாயிகள் மீது அரசு அடக்குமுறையை ஏவி விடுவது அல்லது ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவது, ஒரு படையெடுப்பைப்போல கிராமப்புறங்களுக்கு ஜப்திக்கு போகிற போக்கு சரியல்ல. தாசில்தார்கள், வருவாய்த் துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், கூட்டுறவுத் துறை அதிகாரிகள் அத்தனைபேரும் சேர்ந்து ஒரு படையெடுப்பைப் போல கிராமப்புறங்களில் செல்வது எப்படி சரியாக இருக்கும்? அப்படிப்பட்ட அடக்குமுறைகளை விவசாயிகள் மீது ஏவி விடுவது சரியானதல்ல என்று எடுத்துக் கூற விரும்புகிறேன். அப்படி சொன்னால் திருப்பி கேட்பீர்கள். வசதி படைத்தவர்களிடமிருந்து வாங்க வேண்டாம் என்று சொல்கிறீர்களா என்று கேட்பீர்கள். வசதி படைத்தவர்களுக்காக வாதாடுவதாகக் கூறுகிறார்கள். நிச்சயமாக சொல்கிறேன். வசதி படைத்தவர்களிடம் வாங்க வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் கேட்க விரும்புகிறேன். நிலவரி பாக்கியை வசூலிக்கும்போது, கூட்டுறவுக் கடன்களை வசூலிக்கும்போது. அதேபோல குத்தகை பாக்கிகளை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்கும்போது, வசதி படைத்தவர்களுக்கு வாதாடுகிறீர்களா என்று கேட்பவர்களுக்கு இன்னொரு கேள்வியை கேட்க விரும்புகிறேன். நிலச் சீர்திருத்தத்தை நீங்கள் அமல்படுத்துங்கள். நிலப்பிரபுக்களிடம் இருக்கிற நிலங்களை எடுங்கள் என்றால் அதிலே இந்த அரசு மவுனமாக இருக்கிறதே, அதற்கு என்ன காரணம்? யாருக்காக நீங்கள் மவுனமாக இருக்கிறீர்கள்?





பினாமி நில ஒழிப்புச் சட்டம் இந்த அவையிலே ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. குடியரசுத் தலைவர் கையொப்பம் பெறாமல் திரும்பப் பெறப்பட்டதே, அது கிடப்பிலே கிடக்கிறதே, அதிலே நடவடிக்கை எடுக்காமல் இந்த அரசு மவுனம் சாதிக்கிறதே, என்ன காரணம் என்று கேட்க விரும்புகிறேன். ஏழைகளுக்கு உதவி செய்வதற்கா என்று நான் கேட்க விரும்புகிறேன். இதுவரையில் உச்சவரம்பு சட்டத்திலே எடுத்திருக்கிற நிலம் இந்தக் கொள்கை குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு லட்சத்து 62 ஆயிரத்து 632 ஏக்கர்கள் எடுக்கப்பட்டிருப்பதாகவும், அதிலே ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 120 ஏக்கர்கள் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே நான் ஒன்றை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். விவசாயிகளுக்குப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரையில் அவர்கள் கையில் நிலம் ஒப்படைக்கப்படவில்லை. பட்டாவைப் பெற்று அவர்கள் பணம் கட்டுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு நிலம் கிடைக்கவில்லை.

இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். மன்றாடியாரிடத்திலிருந்து மேய்ச்சல் நிலங்களுக்கு விதிவிலக்கு அளித்திருந்தது ரத்து செய்யப்பட்டு எடுக்கப்பட்டதே அவற்றை அரசு கையகப்படுத்தியதா? பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டதன் விளைவாக எடுக்கப்பட்ட நிலங்களை இதுவரையில் அரசு கையகப்படுத்தியதா? கையகப்படுத்தப்பட்டிருக்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல கரும்பு பண்ணைக்கு இருந்த விதிவிலக்கை ரத்து செய்து வடபாதிமங்கலத்தாரிடமிருந்து நிலம் எடுக்கப்பட்டதே, அந்த நிலம் யாருக்கு கொடுக்கப்பட்டது? அது கரும்பு பண்ணைக்குக் கொடுக்கப்பட்டு, கரும்புப் பண்ணை நடத்தியதால் அரசுக்கு இதுவரையில் ஒரு கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டதுதான் மிச்சம். நிலமற்ற விவசாயிகளுக்கு அந்த நிலம் கொடுக்கப்பட்டிருந்தால் பல்லாயிரக்கணக்கான ஏழைகளுக்கு நிலம் கிடைத்திருக்கும். அரசுக்கும் 1 கோடி நஷ்டம் ஏற்பட்டிருக்காது. ஆகவே மன்றாடியாரிடம், வடபாதிமங்கலத்தாரிடம், மற்ற நிலப்பிரபுக்களிடத்திலிருந்து நிலங்களை எடுங்கள் என்று சொன்னால் அரசு மவுனம் சாதிக்கிறது. வரியைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று சொன்னால் வசதி படைத்தவர்களுக்கு ஆதரவாக பேசுகிறீர்களா என்று கேட்கிறார்கள். அதேபோல எதெதற்கோ

[திரு. கோ. வீரய்யன்] [1985 ஜூன் 11

மேற்கு வங்கத்தை உதாரணமாக இந்த அவையிலே கூறக்கூடிய இந்த அரசு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் மேற்கு வங்கத்தை பின்பற்றுவார்களா என்று கேட்க விரும்புகிறேன். அப்படி பின்பற்றுவது ஏழைகளுக்கு உதவி செய்வதாக இருக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே மேற்கு வங்க அரசை இந்தப் பிரச்சனையிலே மாநில அரசு பின்பற்றுவதற்கு விரும்பாது என்பதை நான் அறிவேன். காரணம் முன்னாலே சொல்லியதைப்போல, மத்திய அரசும், மாநிலத்தில் இருக்கக்கூடிய அரசும் ஒரே கொள்கையில் இருப்பதாலே, மற்றைய காங்கிரஸ் மாநில அரசுகளுக்கும் இந்த மாநில அரசுக்கும் இந்த நிலச்சீர்திருத்த துறையிலே மாறுபட்ட, வேறுபட்ட கொள்கை இல்லை என்பதனுடைய விளைவாலேதான் இந்த நிலைகள் ஏற்பட்டு இருக்கின்றன என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவேதான் இந்த குத்தகை விவசாயிகளைப் பொறுத்தவரையில், பதிவு செய்தது போக மீதி இருப்பவர்களைப் பதிவு செய்வதற்காக, ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு, அதற்காக வட்ட வாரியாக குழுக்கள் போடப்பட்டு, 57 வட்டங்களில் இந்தக் கமிட்டிகள் போடப்படுவதாக இந்த அறிக்கையிலே கூறப்பட்டு இருக்கிறது. இந்தக் கமிட்டிகள் இதுவரையில் என்ன செய்திருக்கிறது? ஏறக்குறைய ஒரு ஆண்டுக்காலமாக, 57 வட்டங்களில் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டாலும், அவைகள் நல்ல முறையில் செயல்படவில்லை. இப்படி இருக்கும் போது, மற்ற வட்டங்களைப் பற்றி என்ன செய்யப் போகிறோம் என்பதைப்பற்றி இந்த அறிக்கையிலே தகவல் இல்லை. ஆனால் இதிலே குறிப்பிடப்பட்டு இருப்பது, இந்த ஆண்டிலே பதியப் பட்டு இருப்பது 4,39,582 பேர்கள் குத்தகை விவசாயிகளாக இதிலே பதியப்பட்டு இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால் சென்ற முறை கொடுக்கப்பட்ட பாலிசி நோட்டிலே, போன ஆண்டைப் பொறுத்தவரையிலும் பதியப் பட்டது 4,39,464 என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்த பாலிசி நோட்டுக்கும், இதற்கும் நாம் கணக்குப் போட்டு பார்த்தால் மீதி வருவது 118 பேர்கள்தான். எனவே ஒரு ஆண்டுக் காலத்திலே பதியப்பட்ட குத்தகைதாரர்கள் 118 பேர்கள்தான். இப்படி பணிகள் நடைபெற்றால், பல்லாயிரக்கணக்கான, லட்சக் கணக்கான விவசாயிகளை நாம் பதிவு செய்வதற்கு எத்தனை

ஆண்டுக்காலம் ஆகும். எனவே அமைக்கப்பட்ட கமிட்டிகள் எல்லாம் சரியான முறையில் செயல்படவில்லை என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது. எனவே சரியான முறையில் குத்தகை விவசாயிகளைப் பதிய வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதோடு மட்டுமல்லாமல், அந்த விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை நான் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே இந்த குத்தகை விவசாயிகளைப் பொறுத்த வரையில் இந்த குத்தகை பாக்கிகள், இயற்கையின் இடர்ப்பாடுகளில் அவர்கள் சிக்குண்டபோது, பல்வேறு சந்தர்ப்பங்களிலே இந்த அரசு அவர்கள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, அந்த விவசாயிகள் மீது கோர்ட் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சொல்லப்பட்டு இருந்தாலும், விவசாயிகளுக்கு சரியானபடி விளைச்சல் இல்லாமல் இருந்தபோதும், அந்த பாக்கியை வசூல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. எனவே இந்த பாக்கிகளை தள்ளுபடி செய்து, 75:25 என்ற வாரச் சட்டத்தை அமுலாக்குவதோடு, கோயில் நிலத்திலே சாகுபடி செய்யக்கூடிய அந்த விவசாயிகளுக்கு, கோயில் நிலங்களைப் பட்டா செய்து கொடுத்து, அதற்கு ஒரு நஷ்ட ஈடு விதித்து, அந்த நஷ்ட ஈட்டைப் பெற்று, அதை வைத்து, கோயில் நிர்வாகத்தை நடத்தலாம். குத்தகை வரவில்லை, எனவே கோயில் மூடிக் கிடக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு இடம் இருக்காது. விவசாயிகள் அவதிப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கும் இடம் இருக்காது. அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக அவர்களை ஆக்கி அதிலேயிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்து, அவர்களும் அந்தக் கோயில்களை நடத்த முடியும். அப்படிப்பட்ட ஒரு முடிவை அரசு துரிதமாக எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவேதான் குடிமனைப் பட்டா வழங்குவதிலேயும் இதிலே கொடுக்கப்பட்டிருக்கிற இந்தக் கொள்கைக் குறிப்பிலே பார்த்தால் 1973 ஆம் ஆண்டு குடியிருப்பு மனைகள் வழங்கும் சட்டத்தின் கீழே, 31—3—1985 வரையில் 1,60,083 . பேர்களுக்கு வழங்கியிருப்பதாக சொல்லப்பட்டு இருக்கிறது. இதே கொள்கைக் குறிப்பிலே போன ஆண்டு கொடுக்கப்பட்டதிலே குறிப்பிடப்பட்டு இருப்பது, 1,80,041 பேர்களுக்கு குடிமனைப்

பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது என்று. எனவே இந்த ஆண்டு பூராவும் பார்த்தால் போன ஆண்டு கொடுத்த கொள்கைக் குறிப்பிற்கும், இந்த ஆண்டு கொடுத்த கொள்கைக் குறிப்பிற்கும் இடையில் கொடுக்கப்பட்டு இருக்கிற குடிமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை வெறும் 42 தான். இப்படி வெறும் 42 பேர்களுக்கு மட்டும் குடிமனைப் பட்டா வழங்கியிருப்பது, இந்த அரசு எந்த அளவிற்கு குடியிருக்க மனை இல்லாதவர்கள் மீது அக்கறை காட்டுகிறது, கவலைப்படுகிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

அதேபோல் கூலிச் சட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழகம் முழுவதிலும் குறைந்தபட்சக் கூலிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறதே தவிர, இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு என்ன நிர்வாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திலேயும், செங்கற்பட்டு மாவட்டத்திலேயும், சென்னை நகரத்தைச் சுற்றியிருக்கக்கூடிய அந்தப் பகுதியிலேயும், இந்தக் குறைந்த பட்சக் கூலிச் சட்டம் நிறைவேற்றப்படுகிறதா, அமுல்படுத்தப்படுகிறதா? இதற்கு ஏதாவது நிர்வாக ஏற்பாடுகள் உண்டா, என்றால் இல்லை. விவசாயப் பெண்களுக்கு குறைந்தபட்சம் 8 ரூபாய்க்குக் குறைவாகக் கொடுக்கக் கூடாது என்று இந்தச் சட்டத்திலே இருக்கிறது. ஆனால் 2½ ரூபாயும், 3 ரூபாயும்தான் அவர்களுக்குத் தரப்படுகிறது. எனவே இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? நாம் சட்டம் போட்டு இருக்கிறோம் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதுமா? சர்க்கரை இனிக்கும் என்று எழுதி நக்கி விட்டால் தித்திக்குமா? காசுக்கு வாங்கிச் சாப்பிட்டால்தானே தித்திக்கும். எனவே குறைந்தபட்ச கூலிச் சட்டத்தை அமுல் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஒரு விஷயத்தை வரவேற்க கடமைப்பட்டு இருக்கிறோம். நியாயக் கூலிச் சட்டம் கீழ்த் தஞ்சையிலே இருப்பதைத் திருத்தி அதை ஒரே சட்டமாக ஆக்குவதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. எனவே அதைப் பரிசீலித்து, அதன் மீது முடிவு எடுக்கும் வரையில் கூலியை உயர்த்தி அறிவிக்க இருக்கிறோம் என்று இந்தக் குறிப்பிலே இருக்கிறது.





(நண்பகல் 12-00)

அதை நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன். அதை வரவேற்கிறேன். ஆனால் அந்த உயர்த்தி அறிவித்து இருப்பதை தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய அந்த குறைந்தபட்சக் கூலிச் சட்டம், இன்றைக்கு இருக்கக்கூடிய தேவைகள், இன்றைக்கு வளர்ந்து இருக்கக்கூடிய வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு இவைகளைக் குறைந்தபட்சம் ஈடு கட்டுவதற்கு போதுமானதாக அந்த கூலி என்பது இல்லை. அதைத் தமிழகம் முழுவதும் மறு பரிசீலனை செய்து இந்தக் கூலியை உயர்த்த வேண்டும். இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்டில் பெரும் பகுதி நாட்கள் வேலை கிடையாது. வேலை நாட்களில் அவர்களுக்கு கொடுக்கக்கூடிய கூலியும் மிகவும் குறைவாக இருக்கிறது. கூலி உயர்வுக்காக இருக்கக் கூடிய சட்டம் அமல் ஆகவில்லை. அவர்கள் குடியிருப்பதற்கு மனையும் இல்லை. உபரி நிலத்திலும் அவர்களுக்கு கிடைப்பதற்கு வகை இல்லை. குத்தகை விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு எந்தவிதமான ஏற்பாடுகளும் இல்லை.

அதேபோல் இந்த விவசாயிகள் இயற்கை இடர்பாடுகளினால் பெரும் பாதிப்புக்கு— வெள்ளத்தினால் பாதிப்பு—சென்ற ஆண்டு பெரும் பாதிப்புக்கு— தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் ஏற்பட்டது. இந்த ஆண்டு கடுமையான நோயினால் மதுரை மாவட்டம், தஞ்சை மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டு விளை பொருட்கள் பெரும் அளவுக்கு நோயினால் பாதிக்கப்பட்டது. இப்போது சமீபத்தில் பெய்த மழையினால் குமரி மாவட்டத்தில் வாழையும், ரப்பர் பயிர்களும் பெரும் அளவு அழிந்து நாசம் ஆகி அவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படி இந்த இயற்கை பாதிப்புகள் என்பது தொடர்ந்து வரக் கூடிய ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. எனவே இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அரசு தன்னுடைய வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு சதவீதத்தை இதற்கு உத்திரவாதமான முறையில் ஒரு நிரந்தர நிதியாக ஒதுக்கி வைத்து இயற்கை இடர்ப்பாடுகளினால் விவசாயிகள் பாதிக்கப்படும்போது இந்த உதவியைச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

அதேபோல் கோவில் நிலங்களிலிருந்து விவசாயிகளை வெளியேற்றப்போவதாக அரசு அச்சுறுத்திக்கொண்டு இருக்கிறது. அதைக் கைவிடவேண்டும். கோவில் நில விவசாயிகளுக்கே அந்த நிலத்தை சொந்தம் ஆக்கித் தருகிற முறையில் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் விவசாயிகளிடம் தேங்கி இருக்கக்கூடிய இந்த நிலவரியை வசூலிப்பதற்காக ஜப்தி நடவடிக்கைகள் எடுப்பதை அரசு கைவிட்டு அந்த நிலவரி பாக்கிக்கு வட்டி விதிக்காமல் எத்தனை ஆண்டுகள் அந்த வரி பாக்கிகள் தேங்கியிருக்கிறதோ அத்தனை ஆண்டுகளை 1 பிளஸ் 1 என்ற முறையில் அந்த நிலவரியை திருப்பி வாங்கிக்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

அதேபோல் இந்த 12 ஆண்டுக் காலமாக தேங்கிக் கிடக்கக் கூடிய—ஆனால் கடன் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசு ஒரு துரிதமான நடவடிக்கையை எடுக்காமல் விவசாயிகள் மீது பாய்வது அல்லது அடக்கு முறைகளை உபயோகிப்பது அவர்களை அவமானப் படுத்துவது சரியல்ல. இன்றைக்கு ஆலை முதலாளிகள் இந்த அரசை எவ்வளவோ ஏமாற்றுகிறார்கள் அல்லது அரசை அச்சுறுத்துகிறார்கள். உதாரணமாக சொல்லவேண்டும் என்றால் 10 கோடி ரூபாய் மின்சார கட்டணம் பாக்கி கொடுக்க வேண்டிய ஒரு பெரும் முதலாளி கோர்ட்டுக்குச் சென்று அந்த 10 கோடி ரூபாய் கொடுக்க வேண்டியது இல்லை என்று கோர்ட்டு தீர்ப்பை வாங்கி இந்த அரசு எடுத்த நடவடிக்கை பின்னுக்குத் தள்ளப்பட்டு ஆலை முதலாளிகள் அந்த அளவுக்கு இந்த அரசை அச்சுறுத்துகிறார்கள். சாதாரண விவசாயிகள் மீது கிராமப்புற ஏழைகளை அச்சுறுத்தி அவமானப்படுத்தி இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் தாலியைக்கூட ஜப்தி செய்யக்கூடிய அளவுக்கு இந்த அதிகாரிகள், இந்த அரசின் நடவடிக்கைகள் சென்று இருக்கின்றது. இது சரியல்ல. இந்தப் போக்குகளை அரசு கைவிட வேண்டும். இது விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவுவதாக இருக்காது என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

அதேபோல் மலைவாழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இருக்கக்கூடிய இடங்களை பட்டா செய்து கொடுப்பதற்கு போதிய சர்வேயர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். கல்வராயன் மலையில், ஜவ்வாது மலையில் பட்டா அளந்து கொடுப்பதற்கு போதிய சர்வேயர்கள் இல்லை என்று அங்கே





இருக்கக்கூடிய அதிகாரிகள் கூறுகிறார்கள். எனவே சில டீம்களை அங்கே போட்டு அந்த இடங்களை சர்வே செய்து அவர்களுக்குப் பட்டா வழங்கவேண்டும். அங்கே பட்டா கொடுக்கும் போது கீழே கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகள் 1½ ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 3 ஏக்கர் புஞ்சை நிலம் என்று கீழே தரையில் கொடுக்கக்கூடிய அந்த விதிமுறைகளை மலையில் இருப்பவர்களுக்கு உபயோகிக்கக்கூடாது. ஏன் என்றால் அங்கே மிகவும் மேடும் பள்ளமும் நிரம்பியிருக்கிற பகுதியாக இருக்கிறது. அதற்கு என்று தனியாக விதிமுறைகளை இயற்றி அந்த முறையில் அவர்கள் வைத்து இருக்கக்கூடிய நிலங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

அதேபோல் இந்த கொல்லி மலையில் ஒரு பகுதி ராசிபுரம் தாலுக்காவிலும் இன்னொரு பகுதி நாமக்கல் தாலுக்காவிலும் இருக்கிறது. அவ்விரண்டையும் பிரித்து கொல்லி மலையைத் தனியாக ஒரு வருவாய் வட்டமாக ஆக்கித் தரவேண்டும். அதேபோல திடீர் என்று இந்தத் தண்ணீர்த் தீர்வையை அரசு நான்கு மடங்காக உயர்த்தயிருப்பது சரியல்ல. அதேபோல் கோவை மாவட்டத்தில் உள்ள பி.ஏ.பி. பகுதிக்கு முழுவதும் பல மடங்கு தண்டத் தீர்வை விதித்து அவர்களைத் துன்புறுத்துவது சரியான போக்கு அல்ல. இந்தப் போக்கை கைவிட்டு விவசாயிகளுக்கு ஒரு அனுசரணையான முறையில் உதவக்கூடிய முறையில் இந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதேபோல் இந்த குடிமராமத்து வேலைகளை செய்ய அந்த நில உடமையாளர்கள் சரி பாதியை முன்னாலேயே கொடுத்தால்தான் குடிமராமத்து வேலைகள் செய்யப்படும் என்று அரசு அறிவித்து இருக்கிறது. முன்பு எல்லாம் குடிமராமத்து வேலைகள் செய்ய, முழுவதையும் அரசு செய்துவிட்டு பின்பு பாதித் தொகையை அந்த நில உடமையாளர்களிடமிருந்து நிலவரியோடு சேர்த்து வசூல் செய்துகொண்டிருந்தது. இப்போது அந்த சரிபாதித் தொகையை முன்னால் கொடுத்தால்தான் செய்ய முடியும் என்று அறிவித்திருப்பதன் விளைவாக தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 30 லட்சம் ரூபாயில் 5 லட்சம் ரூபாயை மட்டும்தான் அங்கே பயன்படுத்த முடிந்து இருக்கிறது. மீதி 25 லட்ச ரூபாயை அரசுக்குத் திருப்பிக் கொடுக்கக்கூடிய நிலையிலே மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். அரசு உத்திரவிட்டு அவர்களுக்கு அதைச் செய்து கொடுத்துவிட்டு பிறகு வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடன்கள், நிலவரி, குத்தகை பாக்கிகள் இவைகளுக்கு தீர்வு காணுகின்ற முறையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏழை விவசாயிகளுக்குப் பயிர் செய்ய நம்மால் இப்போது நிலம் கொடுக்க முடியவில்லையென்றாலும்கூட குடியிருப்பு மனைகள் என்ற முறையிலேயாவது 15 சென்ட், 10 சென்ட் கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழைகளுக்குக் கொடுத்து உதவவேண்டும்.

ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை மாற்றி சாதாரண ஏக்கர் என்று விதித்து 15 ஏக்கர் என்று வைத்து விதிவிலக்கு என்று இருப்பதை ரத்து செய்து மிச்சம் இருக்கக்கூடிய நிலங்களை ஏழைகளுக்குக் கொடுப்பதற்கான நிலச் சீர்திருத்தச் சட்டத்தை விரைவிலே அரசு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் இப்போது சில மணி நேரம்தான் நடக்கின்றன. ஒருநாள் முழுவதும் அது நடக்கக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய அரசு ஆணையிடவேண்டும்.

கடைசியாக நான் நிதியமைச்சர் அவர்களிடம் ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவன் நான் என்ற முறையிலே நான் இந்தக் கோரிக்கையை வைக்கவில்லை, அப்படி நான் கேட்க மாட்டேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நாடு முழுவதற்கும் நிதியமைச்சர் என்ற முறையிலே ஏறத்தாழ எல்லாப் பகுதிகளும் முன்னேற வேண்டுமென்ற முறையிலே மாவட்டங்களைப் பிரிக்கின்ற முறையிலே தஞ்சாவூர் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து நாகையைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு காயிதே மில்லத் மாவட்டம் என்றும் திருவாரூரைத் தலைநகராகக் கொண்ட வள்ளியம்மை மாவட்டம் என்றும் இந்த நிதியாண்டிலேயே அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. வே. கு. சின்னசாமி:** தாற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற வருவாய்த் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கைகள் குறித்து என்னுடைய கருத்துக்





களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக இங்கே திரு. ரகுமான் கான் அவர்கள் பேசுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் மட்டும் சம்பளத்தை அரசு அதிகரித்துள்ளது என்று குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதிலே அவரும் அடங்குவதாக இருந்தாலும் அவர் ஏன் இதைச் சொன்னார் என்பது எங்களுக்குத் தெளிவாகப் புரியவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டினுடைய முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் கிராமப் பகுதிகளிலே அடித்தளத்திலே பணியாற்றுகின்ற கிராமக் காவலர்கள் என்று சொல்லப்படுகிற பழங் காலத்திலே தண்டல்காரர்கள் என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்ட அந்த ஊழியர்களுக்கு 100, 120, 140 ரூபாய் என்று இருந்த சம்பளத்தை இரண்டு மடங்காக உயர்த்தியவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம், மிட்டாமிராசுகளாக பரம்பரையாக மணியக்காரர்கள் என்று இருந்தவர்கள் தனி அந்தஸ்தோடு இருந்தவர்கள் அதிகாரம் செலுத்திக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் வீட்டுக்கு அனுப்பப்பட்டு கிராம நல அலுவலர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் ஏறத்தாழ 12,500 பேர்கள் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கிராம ஊழியர்களாக, கிராம அலுவலர்களாகப் பணிபுரிந்தவர்களின் குறிப்பாக தண்டல்காரரின் மகன் கூட கிராம நல அலுவலராக பணிபுரிகிறார் என்பதைத் தெரிவிப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடித்தளத்திலே பொருளாதாரத்திலே சமுதாயத்திலே பின்தங்கி இருக்கிறவர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு, தகுந்த வேலை வாய்ப்புக் கொடுப்பதில் இந்த அரசு எந்த அளவுக்கு உன்னிப்பாக இருக்கிறது என்பதைக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். அப்படி நியமிக்கப்பட்ட நேரத்திலே 250-க்கு மேற்பட்ட பெண்களும் பணியிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அருமை நண்பர் திரு. ஜெயராமன் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்திலே பட்டாக்கள் வழங்குவதிலே எவ்வளவு சிரமங்கள் உள்ளன என்பதை எடுத்துச் சொன்னார்கள். குறிப்

பாக கிராமப்புறங்களிலே வனத்துறைக்குச் சொந்தமான நிலங்களிலே ஆதிவாசிகள், ஆதி திராவிடர்கள் குடியிருந்து வருகிறார்கள். ஹைவேஸ்க்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களிலேயும் அவர்கள் குடியிருந்து வருகிறார்கள். அல்லது காட்டுப் புறம்போக்கு நிலங்களில் ஆதிதிராவிட ஏழை எளிய மக்கள் குடியிருக்கிறார்கள். பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடங்களிலே குடியிருக்கிறார்கள். வாரி புறம்போக்கு என்று சொல்லப்படுகின்ற இடங்களிலே குடியிருக்கிறார்கள். ஆனால், நத்தம் புறம்போக்கு நிலங்களிலே இருப்பவர்களுக்கு மட்டும், வட்டாட்சியரின் அனுமதியின் பேரில் பட்டா கொடுப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்படுகிறது. ஆனால், இப்படிப்பட்ட மற்ற இடங்களான வனத்துறைக்குச் சொந்தமான, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடங்களில் இருப்பவர்கள் 10, 15 ஆண்டுகள் குடியிருந்தும் பட்டா கொடுக்கப்படாத நிலைமை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 12-10)

குறிப்பாக, பவானிசாகர் தொகுதியிலே செஞ்சல்குட்டையில் 20, 30 ஆண்டுகளாக முத்தரையர் சமுதாயத்தைச் சேர்ந்த மீனவர்கள் குடியிருந்து வருகிறார்கள். ஃபாரஸ்டுக்குச் சொந்தமான அந்த இடத்தை வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு மாற்றி பட்டா கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தும் காலதாமதமாகிக்கொண்டே வந்துள்ளது என்பதை வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இவற்றையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாகப் பார்த்தோ அல்லது மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் நேரடியாகப் பார்த்தோ குறிப்பிட்ட ஆண்டு காலத்திற்குள்ளாக அப்படிப்பட்ட நிலங்களில் குடியிருப்பவர்களுக்குப் பட்டாக்கள் தந்தாக வேண்டுமென்ற கடுமையான உத்தரவை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





வாரி புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பவர்களுக்குப் பட்டாக்கள் கொடுக்கப்படுவதில்லை என்பதை நான் இந்த நேரத்தில் அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், வாரிப் புறம்போக்கு என்று இருந்தால் மழைக் காலங்களில் அடித்துச் செல்லப்பட்டு விடும் என்ற பழங்காலக் கதை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் நூற்றுக்கணக்கான வருஷங்கள் அவர்கள் அங்கே குடியிருந்து வருகிறார்கள். வாரி புறம்போக்கு என்று புத்தகத்திலே எழுதி வைக்கப்பட்டிருக்கிறதே தவிர உண்மையிலேயே அவைகள் வாரி புறம்போக்கு அல்ல. ஆகவே, அப்படிப்பட்ட இடங்களுக்கும் தனி விதிவிலக்கு கொடுத்து அவர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும். அப்படி இல்லையென்றால் வேறு இடத்திலேயாவது நில ஆர்ஜிதம் செய்து அவர்களை அந்த இடங்களுக்கு மாற்றி பட்டா கொடுத்து அவர்களுக்கும் அரசாங்கச் சலுகைகள் கிடைக்கின்ற வகையில் செய்ய வேண்டும். அவர்கள் தங்கள் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலமோ அல்லது வீட்டு வசதி சங்கத்தின் மூலமாகவோ கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிலங்களை ஆர்ஜிதம் செய்கின்ற நேரத்தில் பொது மக்களிடத்திலிருந்து நிலங்களைக் கேட்கிறார்கள். குறிப்பாக மின்சார வாரியத்திற்கு இத்தனை ஏக்கர் நிலம் வேண்டுமென்று கேட்கிறார்கள் அல்லது குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வேண்டுமென்று கேட்டு ஆர்ஜிதம் செய்கிறார்கள். குறிப்பாக, பவானிசாகர் பகுதியில் ஒத்தமங்கலம் என்ற பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக கிட்டத்தட்ட ஐந்து ஏக்கர்கள் வரை நிலத்தை ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய பணம் மின்சார வாரியத்தால் வருவாய்த் துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டு விட்டது. ஆனால் வருவாய்த் துறை அதிகாரிகளிடமிருந்து அந்தப் பணம் இதுவரையில் சம்பந்தப்பட்ட அந்த நிலச் சொந்தக்காரர்களுக்குச் சென்று சேரவில்லை என்பதைக் குறிப்பாகக் கூற விரும்புகிறேன். காரணம், இரண்டாண்டுகளுக்கு முன்னால் கொடுக்கப்பட்ட பணம், வருவாய்த் துறை அதிகாரிகளின் கவனக் குறைவின் காரணமாக இன்னும் உரியவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. அது சத்தியமங்கலம் வட்டாட்சியர் எல்லைக்குட்பட்ட

பகுதியாகும், பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்தது. எனவே, இப்படிப்பட்ட நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்பொழுது பொது மக்களுக்குச் சேர வேண்டிய பணத்தை உடனடியாகக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து அது போய்ச் சேர வேண்டுமென்று விவசாயிகளின் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரிசனங்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் நிலம் கொடுக்கின்ற நேரத்தில், அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கிறார்கள். ஆனால் ஒரு சில பகுதிகளில் ஒரு சில பேர்களுக்கு இன்னும் பட்டா கொடுக்கப்படாமல் இருக்கிறது. அப்படிப் பட்டா கொடுக்கப்படுகின்ற நேரத்தில், 10, 15 ஆண்டுகளுக்கு அந்த நிலத்தை வேறு யாருக்கும் விற்றுவிடக் கூடாது, அப்படி விற்றால் பட்டா செல்லுபடி ஆகாது என்று செய்வது பாராட்டதலுக்குரிய ஒன்றாகும். நான் இன்னொன்றையும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர்களுக்கு, ஏழை எளிய அரிசனங்களுக்கு இடங்கள் அரசாங்கத்தாலே ஒதுக்கப்பட்டால், அந்த நிலங்களை அவர்கள் விற்க முன்வந்தால் அதை யாரும் வாங்கக் கூடாது என்ற உத்தரவையும் அரசாங்கம் பிறப்பிக்க வேண்டும். காரணம், சில நேரங்களில் அவர்கள் அந்தப் பூமியை விற்றுவிட்டு அந்தப் பணத்தை எப்படியோ செலவு செய்துவிட்டுத் தவிக்கிறார்கள். இதனால் அரசாங்கம் எந்த நோக்கத்திற்காகக் கொடுக்கிறதோ அந்த நோக்கமே வெற்றி பெறாமல் போய்விடுகிறது. ஆகவே, அரிசனங்களுக்குப் புறம்போக்கு நிலங்களைக் கொடுக்கின்றபொழுது அல்லது வேறு உபரி நிலங்களை ஆர்ஜிதம் செய்து கொடுக்கின்றபொழுது, இந்த உத்தரவையும் போட்டு, அந்த நிலத்தை யாரும் வாங்கக்கூடாது, காலம் முழுவதும் அந்த நிலத்தை அவர்கள் விற்கக்கூடாது என்ற முறையில் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பவானிசாகர் பகுதியில், பவானிசாகர் நீர்த் தேக்கத்திலிருந்து இரண்டாம் போக சாகுபடிக்காகத் தண்ணீரைத் திறந்துவிட்டார்கள். கொஞ்சம் குறைவாகத் தண்ணீர் இருந்தது. தண்ணீர் போதுமா போதாதா என்ற நிலைமை இருந்தது. காரணம் அந்தப் பகுதியிலே நெல்லைத் தவிர வேறு பயிர் செய்தால் வராது, கசிவு நீர் போகாத காரணத்தால். அணையினுடைய



தண்ணீர் அளவு குறைந்துபோன காரணத்தால், பயிர்களுக்குத் தண்ணீர் வருவதற்குள்ளாக, தண்ணீர் விடுவதை நிறுத்தி விட்டார்கள். அதனால், இன்றையதினம் பவானிசாகர் ஆயக்கட்டிலே இருக்கிற ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்கள் காய்ந்து வறண்டு விட்டன. அப்படிப்பட்ட நிலங்களுக்கு நில வரியும், தண்ணீர் வரியும் ரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசிய நண்பர்களில் ஒருவர் பட்டாக்கள் கொடுக்கப்பட்டும் அவர்களுக்குரிய இடங்கள் இன்னும் தரவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் கிராமங்களிலே இருக்கிற ஏழை, எளிய அரிசனங்களுக்குப் பட்டா கொடுக்கிற நேரத்தில் வரைபடம் போட்டு, வரைபட புள்ளி விவரத்தோடு அவர்களுக்குப் பட்டா கொடுக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, திரு. ரகுமான்கான் போன்ற நண்பர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது, கடந்த காலத்தில், மதிப்பிற்குரிய முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் ஆட்சியில் இருந்த காலத்தில், சத்தியங்கலம் தாலூக்காவில் ஆயிரக்கணக்கான பட்டாக்கள் தயார் செய்ய வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டார்கள். அங்கேயிருக்கிற அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்றால், தங்களுடைய அறையிலேயே உட்கார்ந்துகொண்டு, இவ்வளவு நிலங்களுக்கு இவ்வளவு பட்டாக்கள் என்று போட்டார்கள். ஆனால், அவர்கள் யாருக்கு ஒரு சென்ட் என்று பட்டா போட்டார்களோ, அவர்கள் குடியிருந்த இடம் 2½ சென்ட், 3 சென்ட் ஆக இருந்தது. பட்டாக்களோ ஒரு சென்ட்டுக்குத்தான் கொடுக்கப்பட்டது. காரணம், அவசரக் கோலத்தில் அவ்வாறு செய்தார்கள். அவசரத்தில் செய்த காரியம் இன்றைக்கு அவல நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. குடியிருக்கிற நிலம் 2½ சென்ட் அல்லது 3 சென்ட். ஆனால், பட்டா 1 சென்ட்டுக்குக் கொடுக்கப்பட்டதால், அந்த இடத்திலே குடியிருப்பவர்கள் வீட்டு வசதிச் சங்கத்தில் கடன் வாங்குவதற்குத் தகுதியற்றவர்களாகப் போய்விடுகிறார்கள்; அல்லது வேறு வகையிலே கடன் வாங்கத் தகுதியற்றவர்களாகப் போய் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு சென்ட் பட்டா கொடுத்ததை மாற்றி, உண்மையிலே எவ்வளவு

[திரு. வே. கு. சின்னசாமி] [1985 ஜுன் 11

இடத்தில் இருக்கிறார்களோ அந்த இடத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலத் துறையில் தனி வட்டாட்சியர் நியமிக்கப் படுகிறார்கள். அவர்கள் அந்த, அந்தப் பகுதியிலே இருக்கிற ஆதி திராவிடர்களுக்கு எந்த இடங்கள் வேண்டுமோ அந்த இடங் களை ஆர்ஜிதம் செய்து கொடுக்கிறார்கள். இரண்டு தாலுக்காக் களை ஒன்றாகச் சேர்த்து, சத்தியமங்கலம் பகுதியிலே ஒரு தனி வட்டாட்சியர் வைத்திருக்கிறார்கள். அவருக்கு இன்றையதினம் ஜீப்போ, வேறு வாகன வசதியோ செய்து தரப்படவில்லை. அவர் கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால், ஆதி திராவிடர் வாழும் இடங்களுக்குப் போக வேண்டுமென்றால், வாகன வசதி அவசியம் வேண்டும். ஆகவே, அதை அவசியம் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் கூலி வேலை செய்கின்ற பின்தங்கிய சமுதாயத் தினர் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு குடும்பத்திலே 3, 4, 5 பேர்கள் இருக்கிறார்கள். பின்தங்கிய சமுதாயத்தினர் என்ற அடிப்படையில் அவர்களுக்கும் தனி வட்டாட்சியர் அமைத்து, அவர்களுக்கும் குடியிருப்பு வீட்டு மனைகளை ஆர்ஜிதம் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

குத்தகைக்கு உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற அடிப் படையில் குத்தகைப் பட்டா கிடைக்கும் என்று சொல்கிறார்கள். சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 50 சென்ட் பூமியை எடுத்துக்கொண்டு, சில பேர்கள் குத்தகைக்கு உழுகிறேன் என்ற உரிமையை எடுத்துக்கொண்டு அந்த நிலத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். அப்படி மறுக்கப்படுகிற நேரத்திலே குத்தகை விவசாயம் செய்பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மறுபரிசீலனை செய்து, உண்மையிலேயே சர்வே செய்து, செய்து, அப்படி இருக்குமானால், அந்த நிலத்தை அரசாங்கத்தின் மூலம் அவர்களுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள் கிறேன்.



1985 ஜுன் 11] [திரு. வே. கு. சின்னசாமி]

மனு நீதித் திட்டத்தை கிராமப்புறங்களிலே அமுல் செய்கி றார்கள். மனு நீதித் திட்ட கூட்ட நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக வருகிறார். ஆனால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. அந்தப் பகுதியிலே இருக்கின்ற சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதோடு, குறிப்பாக அமைச்சர்களுக்குத் தெரிவிக்கப்பட்டால்கூட நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கூட்டத் திலே நாங்களும் கலந்துகொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

இன்னும் ஒரு கருத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன். இன்றைக்கு 25 வட்டங்களை உயர்த்தியிருக்கிறார்கள். பெரியார் மாவட்டத்தில் பவானிசாகர், தாராபுரம் பகுதிகளில் தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது. சத்தியமங்கலம் பகுதியில் இன்றைக்கு வனத்துறையில் மிருகங்களுக்குக் கூட தண்ணீர் கிடைக்காத அளவுக்கு வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு அங்கே தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது.

குறிப்பாக சத்தியமங்கலம் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு பெரு மளவில் இருக்கிறது. இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப் பினர் இளங்கோவன் அவர்கள்கூட அதுபற்றி குறிப்பிடுவார்கள் என்று கருதுகிறேன். அங்கே தண்ணீர் தட்டுப்பாடு கடுமையாக இருக்கிறது. தண்ணீர் வழங்கும் திட்டத்திலே அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னு டைய கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*** திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர் களால் அவை முன் வைக்கப்பட்டிருக்கிற வருவாய்த் துறை மானியக் கோரிக்கைகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

[திரு. கு. சுப்பராயன்] [1985 ஜூன் 11

வருவாய்த் துறையிலே இந்த மாநில அரசு கடைப்பிடிக்கிற கொள்கை அநேகமாக விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் பெருமளவில் பாதிப்பதாகவே இருக்கிறது. குறிப்பாக வருவாய்த் துறையினர் விவசாயிகளிடமிருந்து கடன்களை வசூலிப்பதில் கடைப்பிடிக்கிற கொள்கை எப்படி இருக்கிறது என்றால் "கழுத்திலே சுருக்குக் கயிறை மாட்டி இறுக்குவது" மாதிரி இருக்கிறது. கோவை மாவட்டத்தில் பொங்கலூர் வட்டாரத்தில் பி.ஏ.பி. தண்ணீர்த் தீர்வையை வசூல் செய்வதற்கு இப்படிப்பட்ட கெடுபிடி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஜப்தி நடவடிக்கை மிகக் கடுமையாக இருக்கிறது. மனிதாபிமானம் பற்றியும் நியாயம் பற்றியும் நிரம்பப் பேசுகிற இந்த மாநில அரசு, இயலாமையால் கட்ட முடியாமல் இருக்கக் கூடிய விவசாயிகள் மீது எடுத்து வருகின்ற நடவடிக்கை இந்த அரசு அறிவித்திருக்கிற கொள்கைக்கு முற்றிலும் நேர் விரோதமாக இருக்கிறது.

இந்த அரசு, நாங்கள் உழவு மாடுகளை ஜப்தி செய்ய மாட்டோம்; பம்புசெட்டுகளை ஜப்தி செய்யமாட்டோம்; கறவை மாடுகளை ஜப்தி செய்யமாட்டோம் என்று மேடைகளிலே தொடர்ந்து வாக்குறுதி தந்தது. ஆனால், கோவை மாவட்டம் பொங்கலூர் வட்டாரத்தில் என்ன நடந்திருக்கிறது என்று பார்த்தால், இந்த அரசு எதை எதைச் செய்ய மாட்டோம் என்று மேடையிலே சொல்லியதோ அதை மட்டுமே நடைமுறையில் செய்திருக்கிறார்கள். இந்தக் கொடுமையை செய்தது மட்டுமல்ல. குதிரை கீழே தள்ளியது மட்டுமல்லாமல் குழியையும் பறித்தது என்று சொல்வதைப் போன்று, ஜப்தி செய்த மாடுகளை அதிகாரிகளே ஏதோ செய்துவிட்டு விவசாயிகள் மீது மாடுகளைத் திருடியதாகத் திருட்டுக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். இப்படி இரண்டு வழக்குகள் அங்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

தண்ணீர்த் தீர்வை கட்டவில்லை என்பதற்காக இளங்கன்றுள்ள எருமை மாடுகளையும் ஜப்தி செய்திருக்கிறார்கள். ஜப்தி செய்தபோது கன்றை விட்டுவிட்டு, தாய் மாட்டை மட்டும் ஜப்தி செய்திருக்கிறார்கள். இது என்ன மனிதாபிமானம் என்று கேட்கிறேன். மாடு மட்டும் ஜப்தி செய்யப்பட்டு, கன்று வீட்டிலே விடப்பட்டிருக்கிறது. இது முறைதானா?



1985 ஜூன் 11]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** உழவு மாடுகளை ஜப்தி செய்தார்கள் என்று சொல்கிறார்கள். உழவு மாடுகளுக்கு எப்படி கன்று இருக்கும்?

**திரு. கு. சுப்பராயன்:** உழவு மாடுகளையும் ஜப்தி செய்திருக்கிறார்கள். கன்று போட்ட மாடுகளையும் ஜப்தி செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவரவர்களே, இது மனிதாபிமானம் அல்ல, மாடு அபிமானம் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் (சிரிப்பு).

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது மாதிரி இது மாடு அபிமானமில்லாமல் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. செய்யப்பட்ட ஜப்திக்குப் பின்னால், ஜப்தி செய்த அதிகாரிகளே மாடுகளை வெறும் கட்டாந்தரையில், பாதுகாப்பற்ற நிலையில் கட்டிப் போட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். அவை காணாமல் போன பிறகு அந்த மாடு யாரிடமிருந்து ஜப்தி செய்யப்பட்டதோ அவர்கள் மீது திருட்டுக் குற்றம் சாட்டி, 'நான்-பெயிலபிள்' வழக்கில் சுமார் பத்து பேர்களை கைது செய்து, பின்னால் ஜாமீனில் விட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள்தான் அந்த மாடுகள் களவு போனதற்குக் காரணம். அவர்கள்தான் குற்றவாளிகளே தவிர விவசாயி ஒருபோதும் குற்றவாளி அல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டிருக்கிற பிரச்சினையைப் பொறுத்தமட்டில் இந்த அரசு அறிவித்திருக்கிற அறிவிப்புகளுக்கும் இன்றைய நிலைமைக்கும் சிறிதும் பொருத்தம் இல்லை.

குறிப்பாக குடிசைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டால் ரூபாய் 300 என்று அறிவித்திருக்கிறீர்கள். ஒரு பகுதி பாதிக்கப்பட்டால் 150 என்று அறிவித்திருக்கிறீர்கள். முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இவை எல்லாம் ஒரு பிரச்சாரத்திற்காக பயன்படுமே தவிர பிரச்சினைக்குத் தீர்வாகப் பயன்படாது. பொதுவாக இந்த அரசு இலவச வேஷ்டிகள் தரும், இலவச சேலைகள் தரும். இவ்வாறு இலவச வேஷ்டிகள்,

இலவச சேலைகள் அவற்றை விலை கொடுத்து வாங்க இயலாத அனைவருக்கும் தருவதுதான் இந்த அரசின் திட்டமா? அல்லது இப்படி ஒரு பிரச்சாரம் செய்யவேண்டும், அது எதிர்காலத்திலே ஓட்டுப் பிடிக்க ஒரு நல்ல உத்தி என்ற முறையில்தான் பயன்படுகின்றதா என்று புலப்படவில்லை. உண்மையிலேயே அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்றால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எவ்வளவு பேர்களுக்கு நடைமுறையில் பயன்பட்டு இருக்கின்றன?

இலவச வேஷ்டி, சேலை பெறும்போது பல பேர் நசுங்கி, நூற்றுக்கணக்கான அரிசனத் தோழர்கள் மயங்கி விழுந்தார்கள். எவ்வளவு நெரிசல் ஏற்பட்டது? ஆகவே இந்த அரசின் அறிவிப்புகளைப் பொறுத்தவரையில் பிரச்சாரத்திற்குரிய திட்டமாகத்தான் பல விஷயங்களை அறிவிக்கிறார்கள். உண்மையிலே பிரச்சினைக்கு ஆட்பட்டுக்கொண்டிருக்கின்ற மக்களுக்கு உதவி அளிக்கவேண்டும் என்பது இவர்களின் அந்தரங்க நோக்கமாக இல்லை என்பதைத்தான் நடைமுறை அனுபவம் நிரூபிக்கின்றது. ஆகவேதான் இந்த விஷயத்தில் குறிப்பாகச் சொல்ல விரும்புவது தீ விபத்தானாலும், வெள்ளமானாலும், வறட்சியானாலும் இன்னபிற இயற்கைச் சீற்றங்களானாலும் அவற்றுக்கு ஆட்படக்கூடிய, பாதிக்கப்படக்கூடிய பொதுமக்களுக்குக் குறைந்தபட்சம் அந்த பாதிப்பில் ஒரு 50 சதவிதமாகவாவது ஈடு செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

கடந்த 15—8—1984 ஆம் தேதிய சுதந்திர தின உரையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3,500 ரூபாய் வருமானத்திற்குக் கீழ் உள்ளவர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கப்படுமென்று அறிவித்தார்கள். ஆனால் எவ்வளவு பேர்களுக்கு அறிவிக்கப்பட்டபடி வழங்கப்பட்டிருக்கின்றது? தமிழ்நாட்டு மக்கள் பொதுவாகவே ஞாபக மறதி உள்ளவர்கள். எனவே, அவர்கள் எதையும் மறந்துவிடுவார்கள் என்பதையே ஒரு மூலதனமாக வைத்துக்கொண்டிருக்கின்றது இந்த ஆட்சி. எனவே எந்த அறிவிப்பை அறிவித்தாலும் யாரும் ஏன் என்று கேட்க மாட்டார்கள். தேர்தல் காலத்தில் தளுக்கி, மினுக்கி ஓட்டுப் பெறுகின்ற உத்தி இந்த ஆட்சிக்குத் தெரியும். ஆகவே, அந்த நேரத்தில் செய்ய வேண்டியதைச் செய்வார்கள். செய்து முடிந்ததற்குப் பிறகு வெற்று அறிவிப்பை மட்டும் அறிவிப்பார்கள். இது தான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.





நான் குறிப்பாகக் கேட்க விரும்புகிறேன். அறிவிக்கப்பட்டிருக்கின்ற அறிவிப்பின்படி எவ்வளவு ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்கப்பட்டிருக்கின்றது? தமிழகத்து நிலத்தை எல்லாம் கரையான் அரித்துவிட்டதா? அல்லது களவாடப்பட்டுவிட்டதா? பிறகு அவற்றைப் பிரித்துத் தருவதில் என் தயக்கம்? மனம் இருந்தால்தானே மார்க்கம் இருக்கும். மனம் இருப்பதுபோன்ற ஒரு பாவனை காட்டப்படுகிறதே தவிர வேறொன்றுமில்லை. எனவே தான் அதை நிறைவேற்றவில்லை. இன்னும் ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். மறைந்த அண்ணா அவர்கள் இந்த அவையிலே இருந்தபோது குறிப்பிட்டார்கள் உச்சவரம்புச் சட்டம் பற்றி. உங்கள் அரசின் பெயரிலேயே நீங்கள் அண்ணாவின் பெயரை இணைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ரொம்ப மகிழ்ச்சிதான். ஆனால், அண்ணா அவர்கள் உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றி என்ன சொன்னார்? இது உச்சவரம்புச் சட்டமல்ல, மிச்சவரம்புச் சட்டம் என்று சொன்னார். எனவே உண்மையிலே மிச்சவரம்புதானே இன்றைக்கு. எனவே உங்களுக்கு அண்ணாவின் மீது அந்தரங்க ஈடுபாடு இருக்குமானால் அவருடைய கருத்துக்களின் மீது உங்களுக்கு உண்மையிலேயே ஈடுபாடு இருக்குமானால் உச்சவரம்புச் சட்டத்திலுள்ள விதிவிலக்குகளை எல்லாம் முழுமையாகத் திருத்த இந்த ஆட்சி தயாராக இருக்கின்றதா என்று நான் அறிய விரும்புகிறேன். கோயில் நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும், மற்ற நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும், ஒரு குடும்பம் என்கிற வரையறை 5 பேர் என்று வைத்துக்கொள்ளப்படும் என்பனவற்றை எல்லாம் திருத்தக்கூடாதா? இவற்றுக்குத் திருத்தம் கொண்டுவர வேண்டுமா, இல்லையா? நிலப்பிரபுக்கள் பற்றியும், இன்னும் பிற பெரும் பணக்கார விவசாயிகள் பற்றியும் மேடைகளில் பேசுகின்ற அல்லது ஊருக்கு அறிவிக்கக்கூடிய இந்த ஆட்சி, நடைமுறையில் உச்சவரம்புச் சட்டத்தில் இருக்கக்கூடிய விதிவிலக்குகளை எல்லாம் அடைக்கிற வகையில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்பதை இங்கே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல் விவசாயிகளிடத்திலே கடன்களை வசூலிக்கின்ற போது விவசாயிகளுக்கு எதிரான ஒரு யுத்தத்தையே தொடங்குகின்றது இந்த ஆட்சி. பத்திரிகையில் விளம்பரம் கொடுக்கின்றது, விவசாயிகளில் எவ்வளவு பேர் பணக்கார விவசாயிகள் இருக்கிறார்கள், யார், யார் கொடுக்கவில்லை, அவர் கொடுக்க

வில்லை, இவர் கொடுக்கவில்லை என்றெல்லாம் பட்டியல் போடுகிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன். விவசாயிகளிடத்திலே வசூலிக்கக்கூடாது என்பது எங்களுடைய நோக்கம் அல்ல. அல்லது கட்டுகின்ற தன்மை உள்ளவர்களும் கட்டக்கூடாது என்று நாங்கள் ஒருபோதும் சொல்லவில்லை. ஆனால் கட்ட முடியாமல், கடனை ரத்து செய்யவேண்டும் என்று கோரிக்கை வைக்கப்படுகின்றபோது அவர்களால் ஏன் கட்ட முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது என்பதை இந்த மாநில அரசு பொறுப்புணர்ச்சியோடு பரிசீலித்தது உண்டா? விவசாயிகளின் விளைபொருள் நிர்ணய கமிஷன் இருந்து என்ன பயன்? விவசாயிகளுக்கு விலை நிர்ணயிக்கப்படுகின்றதா? நாம் பாக்கெட்டில் வைத்துக்கொண்டு குடிக்கின்ற சிகரெட்டுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அதை யாராவது குறைத்துக் கேட்கிறார்களா? ஆஃப்டர் ஆல் ஒரு பீடி சாம்பலாக்கி, எச்சிலாக்கி எறியப்படுகின்ற பீடிக்கு விலை உண்டு. ஆனால் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற புகையிலைக்கு விலை கிடையாது, பருத்திக்கு விலை கிடையாது. அவர்களுக்கு

(பிற்பகல் 12-30)

எந்தப் பொருள்களுக்கும் விலை நிர்ணயிக்க வழி இல்லை. அவற்றிற்கு எதிராக மத்திய அரசை நிர்ப்பந்திக்க இந்த ஆட்சி தயாராக இருக்க வேண்டாமா? ஆனால் தயாராக இல்லையே. உழவர்கள் கொடுக்கவில்லை என்றால் அவர்களுடைய கழுத்திலே துண்டு போட்டு இழுக்கத் தெரியுமே தவிர, அவர்களை நிர்ப்பந்திக்கத் தெரியுமே தவிர, போலீஸ் தர்பாரை நடத்தி மிரட்டத் தெரியுமே தவிர, வருவாய்த் துறை அதிகாரிகளை விட்டு, ஊருக்குள்ளே ராணுவ ஊர்வலம் நடத்துவதுபோல நடத்தி விவசாயிகளை பீதியடையச் செய்யத் தெரியுமே தவிர, அந்த விவசாயிகளுக்கு கட்டுபடியாகிற விலையை கொடுக்கின்ற கொள்கை இந்த அரசிடம் இல்லை. எனவேதான் அவர்களால் கட்ட முடியவில்லை. ஆனால் கட்ட இயலாதவர்களைக் கட்டும்படி நிர்ப்பந்திக்கிற பழக்கம் இந்த ஆட்சியிலே நிலவுகிறது. எனவே நான் இந்த ஆட்சிக்கு குறிப்பாக சுட்டிக்காட்ட விரும்புவது, உங்களின் ஆட்சியின் கீழ் விவசாயிகளின் மீது செய்யப்படும் இந்த நிர்ப்பந்தங்களைத் தவிர்த்து, அவர்களின் கோரிக்கைக்கு இணங்கி, அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிற இயக்கத்தை நீங்கள் முன் நின்று மத்திய அரசிற்கு எதிராக நடத்த வேண்டும் என்பதுதான்.



அதேபோல விவசாயிகளிடத்தில் நெளிவு சுளிவு கொண்ட அப்ரோச், ஒரு பாசிடிவ் அப்ரோச் என்று சொல்வார்களே, அத்தகைய அப்ரோச் உங்களுக்கு இருக்க வேண்டும். அதை விட்டு உயர்மட்டக் குழுவை அமைத்துவிடுவதாலோ அல்லது வேறு மலிவான அறிவிப்புகளைச் செய்து விடுவதாலோ அவர்களின் குறைகள் மொத்தமாகத் தீர்க்கப்படுவதில்லை. அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பாக சுட்டிக் காட்டிக் கொள்வதோடு மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் எனக்கு முன்னால் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களே குறிப்பிட்டதைப்போல குறைபாடுகள் பல இடங்களில் இருக்கின்றன. பட்டா வழங்குவதில் எவ்வளவு முறைகேடுகள் இருக்கின்றன? எவ்வளவு காலதாமதம் ஆகிறது. உங்களுடைய அறிவிப்பின்படி வீட்டுமனைகள் அனைவருக்கும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இந்தியாவிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதி தமிழ் மாநிலம்தான். நீங்கள் வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் அனைவருக்கும் வீட்டு மனைகள் வழங்குவோம், வீடுகள் வழங்குவோம் என்று உச்சி மீது ஏறி ஊருக்கு ஒரு கொள்கையை அறிவித்திருக்கிறீர்கள். அந்தக் கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் இருக்கிற நிலங்களைப் பிரித்து அளிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஏதாவது நிர்வாக உத்திரவாதம் உண்டா? அரசு அதைச் செய்ய வேண்டுமா இல்லையா? நத்தம் புறம்போக்கு என்றால் மட்டும்தான் அதுவும் தாசில்தார் அலுவலகத்தில் ஆளும் கட்சியின் பலமான சிபாரிசு வருமேயானால் செய்யப்படும். இல்லையெனில் இல்லை. ஆகவே இவற்றையெல்லாம் உடனடியாகச் சீரமைத்து உரிய மனுக்களை ஒழுங்காக பைசல் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளுக்கான உத்திரவாதத்தை முதலில் இந்த ஆட்சி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். தியாகிகள் பென்ஷனைப் பொறுத்த விஷயம். தியாகிகள் பென்ஷனைப் பொறுத்தவரையில் பாண்டிச்சேரியிலே கூட அதை ஏற்றியிருக்கிறார்கள். மத்திய அரசு பென்ஷனை பெறுகிறவர்கள் கூட மாநில அரசுக்கு தனியாக அதற்கான அத்தாட்சிகளைக் கொடுக்க வேண்டுமாம். புரிந்துகொள்ள முடியாத புத்திசாலித்தனமான நடைமுறைகள். மத்திய அரசிடமிருந்து

பென்ஷனை தியாகிகள் பெறுகிறபோது, அந்த அத்தாட்சியே போதாதா, புதியதாக வேறு ஒரு அத்தாட்சி தேவையா? இதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தியாகிகள் என்பவர்கள் இந்தியா முழுவதும் சில லட்சம் பேர்கள்தான் இருப்பார்கள். அதுவும் தமிழ்நாட்டில் சில ஆயிரம் பேர்கள்தான் இருப்பார்கள். தயவுசெய்து அவர்கள் இந்தியா விடுதலை பெறுவதற்காக கொடிய அக்கினி குண்டத்திலே தங்களையே ஆகுறுதியாக அர்ப்பணித்துக் கொண்டவர்கள் என்பதை உணர்ந்து அவர்களின் மனம் நோகிறபடி இந்த ஆட்சியை நடத்தாமல் அவர்களுக்கு வீட்டு மனையும் அவர்களுக்கு வேண்டிய பென்ஷனையும், அதிகபட்ச அளவு உயர்த்தித் தருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தயவு செய்து அரசு அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீடிக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன். * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதையெல்லாம் பேசக்கூடாது. அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன்.

**திரு. கு. சுப்பராயன்:** நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லையே . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டப் பேரவைச் செயலகத்தைப்பற்றி மறைமுகமாக எதுவும் பேசக் கூடாது. அந்தப் பகுதிகள் நீக்கப்பெறுகின்றன.

**திரு. கு. சுப்பராயன்:** ஆகவே அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பது என்பது ஊழலுக்கும், முறைகேடுகளுக்கும் ஜனநாயகத்தினுடைய நெறிமுறைகளை மறுப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்பதால் அத்தகைய நடைமுறைகளை அரசு கைவிட வேண்டும் என்று கேட்டு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்வதற்காக நான் எழுந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது சென்னைப் பெருநகர் குடிதண்ணீர் வழங்கு துறை சார்பாக ஒரு விளம்பரம் கொடுக்கப்பட்டதைப்

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பற்றிச் சொன்னார்கள். அதிலே இந்த எண்ணுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும், கவனிக்கப்படும் என்ற வகையிலே விளம்பரம் வந்தது. ஆனால் அப்படி தொலைபேசி இல்லையென்று சொன்னார்கள். அது தவறான கருத்து என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த விளம்பரம் கொடுக்கப்பட்ட நாளில் தொலைபேசி இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, அந்த விளம்பரம் இந்து பத்திரிகையில் வந்தது. அதை அமைச்சர் மறுக்கவில்லை, நன்றி. தொலைபேசி எண் கொடுக்கப்பட்டிருக்கிறது. 847176 என்று நம்பர். 30-ம் தேதி 31-ம் தேதி வரையில் 847176 தொலைபேசி அலுவலகத்தில் பொருத்தப்படவில்லையென்று நான் மிகுந்த நம்பிக்கையோடு மட்டுமல்ல, பொறுப்பேற்றுக்கொண்டு சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்களா, மறுக்கிறார்களா என்பதை தெரிய விரும்புகிறேன். தவறான தகவல் சொன்னால் உரிமைப் பிரச்சினையாக நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஆதாரத்தைச் சொல்கிறார்கள். அந்த ஆதாரமே சேதாரம் என்பது தான் என்னுடைய கருத்து. மே 16-ம் தேதி தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டது. 29-ம் தேதி அந்த விளம்பரம் வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, ஒருவேளை தொலைபேசி இயங்காமல் இருந்திருக்கலாம். தொலைபேசித் துறை பிரச்சினைக்காக நம்முடைய நேரத்தை எதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** இன்னொன்று கூட நான் நினைக்கிறேன். ஒருவேளை ராங் நம்பருக்கு கூட உறுப்பினர் சுற்றி இருக்கலாம்.

[1985 ஜூன் 11

**Thiru A. RAHMANKHAN :** I will read out the matter that appeared in The Hindu. "A Complaint Cell is functioning at Metro Water from 7-30 a.m. to 7 p.m. daily. The Cell will record your problems and follow up with swift action. Just ring up or drop in personally. We are here to help you."

என்று விளம்பரம் வந்த உடனே நானே அந்தத் தொலைபேசி நம்பருக்கு தொடர்பு கொண்டேன். ஆனால் எனக்கு கிடைத்த தகவல் 30, 31-ம் தேதி வரையில் 847176 தொலைபேசி அலுவலகத்தில் பொருத்தப்படவில்லை. தொடர்பு கொண்ட எல்லோருக்கும் ஏமாற்றம் தான் கிடைத்தது. குறிப்பிட்ட நேரத்தில் அந்த அலுவலகம் திறக்கப்படவில்லை என்று தகவல் கொடுக்கப்பட்டு, சட்டமன்றத்திலே இதைப் பேச வேண்டுமென்று என்னுடைய தொகுதி மக்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தத் தகவல் முறைப்படி கொடுக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டுதான் தரப் படுகிறது. அமைச்சர் அவர்கள் அதை மறுக்கிறார்கள். மீண்டும் இதுகுறித்து விளக்கத்தைத் தரவும் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** இது தவறான தகவல் என்பது தான் என்னுடைய கருத்து. 16—5—1985 அன்று தொலைபேசி இணைப்பு தரப்பட்டு விட்டது.

* **திரு. கே. உச்சி :** துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர் தேனி ஜெயராமன் அவர்கள் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டங் களைப் பற்றி. எடுத்துக்காட்டினார்கள். அதிலே எள்ளளவும் தவறில்லை என்பது தான் என்னுடைய கருத்து. மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டம் என்பது ஒரு சாதாரண நடை முறைக்குத்தான் பயன்படுகிறது. அதிலே மக்களால் தேர்ந் தெடுக்கப்பெற்ற உறுப்பினர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய குன்னூர் வட்டத்தை கோத்தகிரி வட்டமென்று தனியாக வட்டமாக 1978-79-ம் ஆண்டில் பிரித்து அறிவித்ததற்கு அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். குன்னூர் வட்டத்தின்



1985 ஜூன் 11] [திரு. கே. உச்சி]

பரப்பளவு கிட்டத்தட்ட 225.56 சதுர கிலோமீட்டர். ஆனால் கோத்தகிரி வட்டத்தின் பரப்பளவு 251.50 சதுர கிலோமீட்டர். அதேநேரத்தில் உதகையையும், கூடலூரையும் பார்ப்போமானால் உதகை வட்டத்தின் பரப்பளவு 1,034.47 சதுர கிலோமீட்டராகும். கூடலூர் வட்டத்தின் பரப்பளவு 856.48 சதுர கிலோமீட்டராகும். இப்படி மிக அதிகமான சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள உதகையை குந்தா வட்டமென்றும், கூடலூரை பந்தலூர் வட்ட மென்றும் இரண்டு வட்டங்களாகப் பிரிக்கவேண்டுமென்று அங்கே யுள்ள மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் பலமுறை மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நம்முடைய அரசு உடனடியாக அந்த புதிய வட்டங்களை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

உதகை வட்டத்தைச் சேர்ந்த சோலூர், தூனேரி பிர்க்காக்கள் மற்றும் கேத்தி பகுதிகள் கடுமையான வறட்சியால் பாதிக்கப் பட்டு, அங்கே உருளைக்கிழங்கு விவசாயம் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளது. இந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாகக் கருதி, கூட்டுறவுக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில், கோட்டி, ஜக்கலோரை, தாவணி, மல்லிகொரை ஆகிய பகுதிகளில் கடுமையான கல்மழை பெய்துள்ளது. அதனால் அங்குள்ள உருளைக் கிழங்கு மாத்திரம் அல்ல, எந்தப் பயிரும் பிரயோசனம் இல்லாமல் கருகிவிட்டது. ஆகவே அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு அனைத்துக் கடன்களையும் தள்ளி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்தில் உள்ள ஜென்ம உடைமைகள் ஒழிப்பு ஒருகாலத்தில் இருந்தது. அந்த ஜென்ம பூமிகள் ஒழிப்பதில் ஒருசிலர், கையகப்படுத்தி வைத்துள்ளவர்கள், அரசுக்கு அந்தக் காலத்தில் சம்பந்தப்பட்டவர்களாகவோ, அல்லது தெரிந்தவர்களாகவோ, வேண்டியவர்களாகவோ, இருந்ததன் காரணமாக அவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு உள்ளது. ஆனால் சிலருக்கு, அரசுக்கு அப்பாற்பட்டவர்கள், விவரம் தெரியாதவர்களாக, ஏழை எளியவர்களாக இருந்தவர் களுக்கு பட்டா அந்த நேரத்தில் வழங்கப்படவில்லை. இப்பாப்பு

களில் அளவைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நில அளவைப் பகுதிகளை மீண்டும் அளவை செய்து, ஏழை எளியவர்களுக்கு இந்த ரயத்துவாரி பட்டா கிடைக்க அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாக, கூடலூர் தொகுதியில் கிட்டத்தட்ட ஐந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பனியர்கள் என்று சொல்லக்கூடிய ஆதி வாசிகள், அடுத்து, குரும்பர்கள், இருளர்கள், காட்டு நாயக்கர்கள் மற்றும் அரிஜன மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குவதில் சற்று காலதாமதம் ஏற்படுகிறது. எனவே எந்த வகையில் அரசாங்க அதிகாரிகள் காலதாமதம் செய்கிறார்கள் என்பதை அரசு கவனித்து, அவர்களுக்கு நிலப்பட்டா வழங்குவதில் நம்முடைய அரசு அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராம நத்தங்களைப் பொறுத்தவரையில், நத்தங்கள் விரைவாக இத்துறையால், சரியான முறையில் அளவை செய்யப் படவில்லை. எனவே இந்த நத்தப் பகுதிகளை எல்லாம் விரைவாக அளவை செய்யும் பணியை நடப்பு ஆண்டிலாவது தீவிரமாகச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மானியமாக கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு ஒத்தகைச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், அநேக சுதந்திரப் போராட்ட வீரர்கள் தங்களுடைய நிலங்களை வைத்துக்கொள்ளாமல் விற்று விட்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய நிலையை அறிந்து, இதைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எனவே அவர்களுக்கு ஒத்தகைச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும்.

மனு நீதி திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மூலை முடுக்குகளில் உள்ள கிராமங்களில் எல்லாம், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படி நடைமுறைப்படுத்தும் போது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கவேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, நீலகிரி மாவட்டத்தில் தஞ்சை பல்கலைக் கழகத்தின் ஆய்வு மையம் ஒன்றை, நஞ்சை நாடு என்ற கிராமத்தில் அமைக்க இருப்பது குறித்து நான் இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே 25 ஏக்கர் நிலம் ஒப்படைக்க ஏற்பாடுகள் நடந்து உள்ளன. எனவே அங்கே உடனடியாக பல்கலைக் கழகத்தின் ஆய்வு மையம் அமைக்க ஏற்பாடுகளைச் செய்து விட்டு, மீதி உள்ள நிலங்களில் ஃபாடர் போடும் அளவிற்கு நிலங்கள்—அசிங்கப்படுத்தப்படாமல், ஃபாடர் போடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

**திரு. ந. சிவஞானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்து சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நம்முடைய மாநில அரசு, ரெவின்யூ போர்டை ஒழித்தது. பழம் பெரும் முறைகளை வெள்ளைக்காரன் காலத்தில் இருந்துவந்த அந்த பழக்கவழக்கங்களை ஒழித்து, நாட்டு மக்களுக்கு நல்லதொரு அளவிற்குப் பணியாற்ற, ஆணையாளர், சிறப்பு ஆணையாளர் என்ற முறையிலே பல்வேறு அதிகாரிகளை இன்றைக்கு போட்டிருக்கிறார்கள். அதேபோல் மக்களுக்கு முழு அளவிலே கிடைக்கக்கூடிய பல்வேறு நன்மைகள் ரெவின்யூ போர்டிலே கீழ் மட்டத்திலே உள்ள சிகப்பு நாடா முறையால் கிடைக்காமல் இருக்கின்றன. எனவே இந்த முறையை ஒழித்தால்தான், பல்வேறு அனுகூலங்கள், குறிப்பாக வருவாய்த்துறையின் மூலமாக ஏழை மக்களுக்குப் போய்ச் சேருகின்ற வகையில் நாம் சிறப்பாகச் செய்ய முடியும். எனவே அந்த வகையில் இப்போது இருக்கின்ற திட்டத்தை மாற்றி, சுலபமான முறையிலே அதை நடைமுறைப்படுத்துவதற்கு மாநில அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பல பொறுப்புகள் இருக்கின்றன. நிலவரி, தண்ணீர் வரி வசூல் செய்வது ஒரு பொறுப்பு, அதிலும் டெவலப்மெண்டு ஆக்டிவிட்டிஸ் செய்ய வேண்டியது ஒரு பொறுப்பு, அதேபோல் IRDP, NREP, RLEGP போன்ற திட்டங்கள் என்றால் அதை நிறைவேற்ற வேண்டியதும் அவர்கள் பொறுப்பு. இயற்கை சீற்றத்தால் வெள்ளம் வந்தாலும், புயல் வந்தாலும் அதை ஒருங்கிணைத்து மாவட்ட அளவில் செய்யவேண்டிய பொறுப்பு

[திரு. ந. சிவஞானம்] [1985 ஜூன் 11

மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்கிறது. இப்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பெரிய பொறுப்புகளை கொடுப்பது மட்டும் அல்லாமல் அங்கே நம்முடைய அமைச்சர்கள் அந்தப் பகுதிகளுக்கு வந்தால் அதற்கு தலைமை ஏற்கின்ற பொறுப்பும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இருக்கிறது. இப்படி பல்வேறு பொறுப்புகள் இருக்கிற காரணத்தால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நல்லமுறையில் வேலைகளை செய்யமுடியவில்லை என்பது என்னுடைய கருத்து. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இடத்தில் இருக்கிற வருவாய்த்துறை ஒரு கால கட்டத்தில் வசூல் செய்யவேண்டிய பொறுப்பு இருந்தாலும் ஜனநாயக முறைப்படி இன்று ஆளுகின்ற நாம் எல்லாம் பல்வேறு மக்களுக்கு பல்வேறு ஆக்கபூர்வமான காரியங்களை செய்வதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பொறுப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே பொறுப்பு அதிகமாகி இருக்கிறது. இதன் காரணத்தால் காரியங்கள் பல தடைபடுகின்றன என்பதை என்னால் சொல்லமுடியும். வருவாய்த்துறையைப் பொறுத்த வரையில் டி.ஆர்.ஓ. வை போட்டு இருக்கிறார்கள். ரெவின்யூ முழுவதையும் அவரிடத்தில் கொடுக்கலாம். அதுபோல் கொடுத்தால் தான் நாட்டில் இருக்கக்கூடிய பல காரியங்கள் நடைபெறும். டி.ஆர்.ஓ.-வுக்கு இன்னும் அதிகாரங்கள் கொடுக்க வேண்டும். அதுபோல் பரவலாக மாநில அளவில் இருக்கிற அதிகாரிகளிடத்தில் வேலைகளை பிரித்துக் கொடுக்கவேண்டும். வெள்ளம் என்றால் நிலவரியை தள்ளுபடி செய்யவேண்டும், வறட்சி என்றால் தள்ளுபடி செய்யவேண்டும், வேறு இயற்கை கோளாறு என்றால் தள்ளுபடி செய்யவேண்டும். நிலத்தில் இருக்கிற விளைப்பொருட்களை மஞ்சள் நோய் தாக்கி விடுகிறது என்றால் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்கிறார்கள்.

ஆகவே இப்படிப்பட்ட நிலையை நாம் சந்திக்கும்போது தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நிலவரி ஏராளமாக நம்முடைய வருவாய்த்துறையில் இருக்கிறது. அரசினுடைய கொள்கையின் காரணமாக நிலவரியை தள்ளி இப்போது அதை வசூல் செய்வதில் கெடுபிடி செய்கிறார்கள். நிலவரியாக இருந்தாலும், கூட்டுறவுத்துறை வசூலாக இருந்தாலும் கெடுபிடி நிலையில் இன்றையதினம் செய்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்



1985 ஜூன் 11] [திரு. ந. சிவஞானம்]

கூட்டுறவுத் துறையில் ரெவின்யூ அதிகாரிகளின் சம்பந்தம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் நிச்சயமாகச் சொல்கிறேன், இந்தக் கூட்டுறவுத்துறை வசூலிலும் வருவாய்த்துறை அதிகாரி களை வைத்துக்கொண்டு கெடுபிடி வசூலை அங்கே செய்கிறார்கள். குறிப்பாக இன்றையதினம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருந்தாலும் மாவட்டத்தில் இருக்கிற ரெவின்யூ அதிகாரிகள் இருந்தாலும் கூடுதலாக இருக்கிற வருவாய் அதிகாரிகள் இருந்தாலும் தாசில்தார்கள் இருந்தாலும் இப்படிப்பட்ட அதிகாரிகளை வைத்துக்கொண்டு இந்தக் கடன்களை வசூல் செய்கிறார்கள், கூட்டுறவுத் துறையில் கெடுபிடி வசூல் ஜப்தி என்றாலும் வருவாய்த்துறை அதிகாரிகளை வைத்துக்கொண்டு அந்த முறையில் வசூல் செய்கிறார்கள். அரசாங்கம் ஆணையிட்டு மக்கள் கட்டமுடியாத நிலையில் பல்வேறு வசூல்களை இன்றைய தினம் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் வலியுறுத்துகிறேன். ஆனால் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டியது போலீஸ் துறை.

ஆனால் அதேபோல் இன்றையதினம் ரெவின்யூ அதிகாரிகள் செய்தால்தான் முடியும் என்ற நிலையில் செய்துகொண்டு இருக்கி றார்கள். ஆனால் விவசாய பெருங்குடி மக்களுக்கு கட்டக் கூடாது என்ற எண்ணமே இல்லை. ஆனால் பிரதானமாக தஞ்சை மாவட்டம் பாதித்துவிட்டது. வெள்ளம் பாதித்தது. வறட்சியால் பாதிக்கப்பட்டது, புயலால் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக கட்ட இயலாத காரணத்தினால் இன்றைய தினம் நம்முடைய கடன் சுமை அதிகமாக இருக்கிற காரணத் தால் அதற்கு நிவாரணம் வேண்டும் என்பதால் இன்றையதினம் அரசு தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறவர்களை பிரதானமாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முன்னால் பல சலுகைகள் செய்து இருக்கிறார்கள். நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால் இன்றையதினம் இந்த நிலையை உணர்ந்து இன்றைக்கு ரெவின்யூ அதிகாரிகளை வைத்துக்கொண்டு சாதாரணமாக சட்டம் ஒழுங்கை வைத்துக் கொண்டு மக்கள் இடத்தில் விவசாயத்தில் இருக்கிற மக்களுக்கு, சாகின்றவனுக்கு சாதாரணமாக உழக்குகூட மிஞ்சாது என்ற நிலையில் இப்படி கெடுபிடி வசூல் செய்வதை நாம் நிறுத்திவைக்க வேண்டும். அவர்களுக்கு சலுகை காட்ட வேண்டும் என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ந. சிவஞானம்] [1985 ஜூன் 11

அதேபோல் கிராம மட்டத்தில் இருக்கிற கிராம நிர்வாக அதிகாரிகளை கிராம அளவில் புதியதாக ஏறத்தாழ எல்லோரையும் போட்டு இருக்கிறார்கள். ஆனால் சாதாரணமாக இப்படிப்பட்ட காலத்தில் பணியில் சேர்க்கவேண்டும், பள்ளியில் சேர்க்கவேண்டும், கல்லூரியில் சேர்க்கவேண்டும் என்று சொன்னால் ஜாதி சர்ட்டிபிகேட் போன்றவைகள் வாங்கவேண்டும் என்றால் அதற்கு ஏதோ ரேட் பேசுகிறார்கள். நான் முன்னால் பல ரூபாய்கள் கொடுத்து இங்கே வந்து இருக்கிறேன், 10, 15 ஆயிரம் கொடுத்து வந்து இருக்கிறேன் ஆகவே நீங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்தநிலை மாற வேண்டும். அதேபோல் தாலுக்கா அலுவலகத்தில் ஏழை எளிய மக்கள் சாதாரண சான்றிதழ்கள் கேட்டால் கூட அங்கேயும் லஞ்ச லாவண்யம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த ஜாதி சான்றிதழ்களை உடனடியாக அவர்களுக்கு நல்ல முறையில் வழங்கவேண்டும். குறிப்பிட்ட நாட்களுக்குள் கொடுக்கவேண்டும். சாதாரணமாக 5 மைல், 8 மைல் சென்று அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் அந்தச் சான்றிதழ்களை வாங்கவேண்டும் என்றால் ஒருநாள் இரண்டு நாள் காத்து இருந்து 3-வது நாளிலும் கிடைக்குமா கிடைக்காதா என்ற நிலையில் காத்துக்கொண்டு இருக்கிற சூழ்நிலை இப்போது இருக்கிறது. இந்த நிலையை நாம் மாற்ற வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றினால் நன்றாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அடுத்து ஆட்சேபணைப் புறம்போக்கு, மந்தவெளிப் புறம்போக்கு, மேய்ச்சல் தரை, களம் போன்றவைகள் இந்த நாட்டிற்கு மிக அவசியம். நாட்டிலே கால்நடைகள் வளரவேண்டுமென்பது நம்முடைய கொள்கையாக இருக்கிறது. அதற்காகத்தான் அந்தக் காலத்திலே இதுபோன்ற சில இடங்களை வைத்திருந்தார்கள். அந்தக் காலத்திலே ஒரு கிராமத்திலே 2 ஆயிரம் கால்நடைகள் இருந்தன என்றால் அதற்காக மேய்ச்சல் தரை ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்த இடங்கள் எல்லாம் இன்றைக்கு இல்லை, அந்த இடங்கள் எல்லாம் பிடுங்கப்பட்டு, அல்லது பட்டாக்களாகக் கொடுக்கப்பட்டு அல்லது ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கிற காரணத்தினால், எது எது எந்த எந்தக் காரியத்திற்கு என்று



1985 ஜூன் 11] [திரு. ந. சிவஞானம்]

ஒதுக்கினார்களோ அந்த நிலங்கள் எல்லாம் இன்றைக்கு இல்லாமல் போய்விட்டன. விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கிற முறையிலே போதுமான இடங்களை கால்நடைகள் மேய்வதற்கும் தங்குவதற்கும் வசதியாக புறம்போக்கு நிலங்களை ஒதுக்க அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே அவைகளையெல்லாம ஆட்சேபணைப் புறம்போக்கு என்று சொல்லி தாசில்தார்கள் அரசுக்கு எழுதி அவைகளை வேறு காரியத்திற்குப் பயன்படுத்துகின்ற முறையை அறவே ஒழிக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது புதிதாகப் போடப்பட்டு இருக்கிற கிராம அதிகாரிகள் கிராமங்களிலே நிர்வாகத்திலே நல்லமுறையிலே செயல்படும் பொருட்டு அவர்களுக்குத் தேவையான வீட்டு வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டியது மட்டுமல்லாமல் அவர்கள் நிர்வாகத்திற்காக அலுவலகங்களையும் ஒரு பேஸ்டு புரகிராமாக கட்டிக் கொடுகக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஜமாபந்தி முறை ஒழிக்கப்படவேண்டும். வரி வசூலிப்பதை நாம் பசலி, பசலி என்று வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் பத்தாம பசலி முறையை ஒழித்துவிட்டு இந்தக் கால கட்டத்திலே—விவசாயி எப்போது அறுவடை செய்கிறாரோ அப்போது வசூலிக்கின்ற முறையிலே—அந்த முறையினை மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலே வசூல் செய்கிறார்கள். மார்ச்சுக்குப் பிறகு வசூல் செய்தால் இரண்டு போகம் விவசாயம் செய்கிறவர்கள் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கும். ஆகவே அந்த முறையை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று நில அளவைப்பற்றி உங்களுக்கு எல்லாம் தெரியும். கூட்டுப்பட்டாக்களைப் பிரித்து நிலங்களை அளக்க வேண்டும். நில அளவைப் பணிக்கான பல்வேறு ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது. சர்வே பள்ளியொன்றை தஞ்சை மாவட்டத்திலே உள்ள ஒரத்தநாட்டிலே வணிகவரித் துறை அமைச்சர் அவர்களும், அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். நான் அதைப் பாராட்டுகிறேன். அந்தப் பகுதி கிராமப்புறங்கள் அடங்கிய பகுதியாக இருக்கிறது. அந்த இடத்திலே நிலம் இல்லை, கட்டடம் கட்டு

[திரு. ந. சிவஞானம்] [1985 ஜூன் 11

வதற்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அந்த இன்ஸ்டிட்யூட்டிற்கு நல்ல கட்டடத்தைக் கட்டிக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் அலுவலர்கள் தங்குவதற்கு கட்டடங்கள் கட்டிக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்ட வரலாறு நூறாண்டு வரலாறு. அந்தப் போராட்டத்திலே ஈடுபட்ட வீரர்களுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டும். அது மிக மிக அவசியம் என்ற முறையிலே தான் பாரதப்பிரதமர் அவர்கள் மத்திய அரசு அவர்களுக்குக் கொடுத்துவந்த 300 ரூபாயை 500 ரூபாயாக உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள். அதைப்போலவே மாநில அரசும் கொடுப்பதை உயர்த்தவேண்டும். நாம் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். வெள்ளையன் ஆட்சிக் காலத்திலே போராட்டத்திலே ஈடுபட்டு எதையும் எதிர்பாராமல் தியாகச் செம்மல்களாகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் அந்தச் சுதந்திரப் போராட்ட வீரர்கள், அவர்களுக்கு உதவி செய்யவேண்டியது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல, 100 ஆண்டுக்காலம் சிறப்புமிக்க வரலாற்றையொட்டி நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிற இந்தக் கால கட்டத்திலே மாநில அரசால் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற 150 ரூபாயிலிருந்து 250 அல்லது 300 ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரையிலே அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஆயிரமல்ல, நூற்றுக்கணக்கிலே தான் இருக்கிறார்கள், அவர்கள் இன்றைய தினம் வறுமையிலே வாடுகிறார்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். அதைக் கருதி இதைச் செய்ய வேண்டும்.

அதேபோன்று முதியோர் உதவித் தொகை அளிப்பதற்கு குறியளவு வைத்திருக்கிறார்கள். அது குறைவாக இருப்பதால் அதை அதிகமாக்கி அதிகமான பேர்கள் உதவித் தொகை பெறுவதற்கு ஏற்ற முறையிலே அதிகப்படுத்தி எவ்வளவு பேர்கள் மனுச் செய்தாலும் தகுதி உள்ளவர்கள் அத்தனை பேர்களுக்கும் நிச்சயமாகக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 11] [திரு. ந. சிவஞானம்]

இயற்கைச் சீற்றத்தால் புயல், வெள்ளம் வருகிறது. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்படுகின்ற இடங்கள் அதிகமாக இருக்கின்றன. அரசாங்கமும், ரெட் கிராஸ் சொசைட்டியும் புகலிடங்களைக் கட்டுகின்ற நல்ல பணிகளைத் துவக்கியிருக்கின்றன. பல்வேறு இடங்களில் கட்டி இருக்கிறார்கள். இன்னும் நாகப்பட்டினம், வேதாரண்யம் ஆகிய இடங்களிலும் இதுபோன்ற கட்டடங்களை நிச்சயமாக அரசு கட்டித் தர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே உள்ள அலுவலகத்திலே ஒரு வளாகம் இருக்கிறது. அந்த இடத்தில் புதுக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலமற்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வேட்டி, புடவைகளைச் சென்ற ஆண்டில் நமது மாண்புமிகு முதல்வரவர்கள் கொடுத்தார்கள். ஆனால் இப்பொழுது அது கொடுக்கப்படவில்லை. இலவசமாக வேட்டி, புடவைகள் வழங்குகின்ற திட்டத்தை இந்த அரசு உடனடியாக மீண்டும் செய்ய வேண்டும். குறிப்பாக, ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள், இன்றைய ஆட்சியில் நமது முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் கட்டுவதற்குக்கூட வேட்டி, புடவைகள் வழங்கியிருக்கிறாரே என்று நினைக்கக் கூடிய அளவிற்கு வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களுக்கு நல்ல வாய்ப்பாக அது இருந்தது. ஆகவே, இதை அரசு மேலும் பயன்படுத்திக்கொண்டு இந்தத் திட்டத்தை இந்த நிதியாண்டிலேயும் விஸ்தரித்து செய்ய வேண்டும். அதற்கு அதிகம் செலவாகாது. பல இலட்சங்கள்தான் செலவாகும் எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இப்பொழுது கொடுத்திருப்பது மட்டும் போதாது. மீண்டும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தீ விபத்து ஏற்பட்டால் 30 ரூபாய் உதவித் தொகை என்று ஒரு கால கட்டத்தில் இருந்தது. ஆனால் அது 100 ரூபாய், 200 ரூபாய் என்று ஆகி, 300 ரூபாய் என்று உயர்த்தியிருப்பதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் விலைவாசி ஏற்றத்தின் காரணமாக பல்வேறு கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த 300 ரூபாய் என்பது போதாது. இன்றையநிலையில் அதை 500 ரூபாய் என்று உயர்த்தி பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ந. சிவஞானம்] [1985 ஜூன் 11

சமீபத்தில் நம்முடைய சென்னை மாநகரத்தில் யாரும் எதிர் பாராத வண்ணம் ஏற்பட்டுவிட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர் களுக்கு, 2,000 ரூபாய் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது. ஆனால் அதுகூடப் போதாது. அங்கே பல கோடிக்கணக்கான ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும் எல்லாத் தொகை யையும் அரசாங்கத்தால் கொடுக்க முடியாது. ஆனால் அவர் களுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்தில் இன்னும் கூடுதலான தொகைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக 26 தாலுக்காக்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மாநில அளவில் எடுத்துக்கொண் டால்கூட, கோடை காலத்தில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக நிலத்தடி நீரின் மட்டம் வெகு ஆழத்திற்குப் போய்விட்டது. ஆகவே, வறட்சியினால் ஏற்பட்ட குடிநீர்க் கஷ்டத்தைக் கணக்கில் கொண்டு மாநிலத்தில் உள்ள எல்லா இடங்களுக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும். அந்த இடங்களையெல்லாம் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டும். 26 தாலுக்காக்கள் என்று அரசாங்கம் குறிப்பிட்டிருந்தாலும், பல இடங்களில் வறட்சி ஏற்பட்டுள்ளதாக ஆளுங்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப் பினர்களெல்லாம்கூடச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதை மீண்டும் அரசாங்கம் பரிசீலித்துப் பார்த்து நிவாரண நடவடிக்கைகள் நிச்சயமாகத் தேவை என்று கருதப்படும் இடங் களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வருவாய்த் துறை என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறை என்பதை நாம் உணர்கிறோம். எனவே, தனியாக ஒரு வாரியம் அமைத்து நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் அமைக்கும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. நிலச் சீர்திருத்தம் என்பது எப்படி அவசியமானதோ அதைப்போல நிர்வாகச் சீர்திருத்தமும் அவசியமாகும். எனவே, அதற்கென்று ஒரு வாரியம் அமைத்து அதை நல்லமுறையில் செய்ய வேண்டும். வாரியம் என்றால் முன்பு இருந்ததைப் போன்ற வாரியம் அல்ல, நிர்வாக வாரியம் அமைத்துச் சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1985 ஜூன் 11] [திரு. ந. சிவஞானம்]

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு நூற்றாண்டு விழா நடக்கின்ற இந்தக் காலக் கட்டத்தில் நிச்சயமாக நமது மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் செய்திட வேண்டுமென்பதை மீண்டும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலவரித் துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கான நன்மைகளும் மற்றும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 5 கோரிக்கைகளின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு மாண்புமிகு உறுப் பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்துள்ளனர். அவற்றில் விளக்கங்களும் இருந்தன, வேண்டுகோள்களும் இருந்தன, பரிந்துரைகளும் இருந்தன; அவற்றோடு பாராட்டுரை கள், போற்றுரைகள், புகழுரைகள் இருந்தன; அவற்றோடுகூட குறை கூறுதல்களும் இருந்தன; குற்றச்சாட்டுகளும் இருந்தன; இடையிடையே கேலி கிண்டல்களும் மலிந்திருந்தன. இவை அத்தனை வகைகளிலேயும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள், தங்கள் இயல்புக்கேற்ப, நோக்கத்திற்கேற்ப, அணுகுமுறைக்கேற்ப கருத்துக்களை இங்கே வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் நியாயத்தின் அடிப்படையிலே எடுத்து வைத்த கருத்துக்கள் அவ்வளவும் இந்த வருவாய்த் துறை யினரால் கூர்ந்து ஆய்வு செய்யப்பட்டு அவற்றின்மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை முறைப்படி உரிய காலத்தில் எடுப் பார்கள் என்பதை முதலிலேயே நான் பொதுவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வருவாய்த் துறை நீண்ட பெருங்காலமாகவே சிலபல துறை களுக்கு ஒரு தாய்த் துறையாகவும் சிலபல துறைகளுக்கு மூத்த உடன்பிறப்புத் துறையாகவும் இருந்து வருகின்ற ஒரு தன்மை யைக் கொண்டது. ஏற்கனவே வெள்ளையர்கள் ஆண்டபொழுதும் சரி, அதற்கு முன்னால் முகலாயர்கள் ஆண்டபொழுதும் சரி, இந்த நிலவரித் துறைதான் மிக முக்கியமான ஒரு துறையாகக் காணப்பட்டதைப் போன்று இப்பொழுதும் இந்த நிலவரித்

துறைதான் மிக முக்கியமான ஒரு துறையாக அமைந்திருக்கிற பாங்கினை நாம் காண்கிறோம். இப்பொழுதும் சரி அது முக்கியமான துறையாகக் கருதப்படுவதோடு மட்டுமல்லாமல், முழு முதல் முறையாகவும் இருந்து வந்திருக்கிற பாங்கினை நாம் காண்கிறோம். இந்தத் துறையைப் பொறுத்து இதற்கான சொற்களை நாம் காண வேண்டுமானாலும்கூட இந்தத் துறையைப் பொறுத்து இருக்கிற சொற்கள், சொற்றொடர்கள் எல்லாம் பார்த்தால், முகலாயர்கள் காலத்து, ஆங்கிலேயர்கள் காலத்து, சொற்றொடர்கள்தான் தொடர்ந்து இருப்பதை எல்லாம்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் கூர்ந்து கவனித்திருக்கவும் கூடும். அந்த வகையிலே பல்வேறு சொற்களும் இன்றைக்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

ஆகவே, இந்த மானியத்தைப் பற்றி பேசுவதோடு நில்லாமல் கொஞ்சம் இலக்கியத்தைப் பற்றியும் பேசுவதும் நல்லதுதான், கேட்பவர்களுக்குச் சுவையாக இருக்கும் என்பதற்காக நான் சொல்கிறேன். இப்பொழுது நம்மிடத்திலே ராஜஸ்தானி, ஜில்லா, தாலுகா, பிர்கா, சிரஸ்தார், தாசில்தார், ஹெவில்தார், தபேதார், நாசர், முன்சீப், ஹமீனா, கொத்தவால், கச்சேரி, முசோரி பங்களா, மகஜர், தஸ்தாவேஜு, ஜவாப், நாவா, நமூனா, அசல், ஆர்ஜிதம், தாக்கீது, வக்காலத்து, பிராது, வக்கீல், பசலி, ஜமாபந்தி, பந்தோபஸ்து, முகாம், ரூபா என்றெல்லாம் உள்ள சொற்கள் முகலாயர் காலத்திலேயிருந்து தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிற ஒன்றாகவே அமைந்திருக்கிற பாங்கினைக் காண்கிறோம். இதை ஏன் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால் இது ஒரு பழம் பெரும் துறையாக இருந்து வருகிறது என்பதோடு மட்டும் அல்லாமல், பல துறைகளுக்குத் தாய்த் துறையாக இருந்து பணியாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு உடையதாக இருக்கிறது என்பதற்குத்தான். இப்பொழுதுங்கூட, வட்ட அளவிலும் சரி, மாவட்ட அளவிலும் சரி, அங்கே நடைபெறுகின்ற எல்லா நிகழ்ச்சிகளைப் பொறுத்தும் பார்த்து, அதற்கு வேண்டியவர்களை, அந்தந்தப் பகுதியிலே இருக்கிற பல்வேறு துறைகளையெல்லாம் இணைத்துச் செல்ல வேண்டிய பொறுப்புடையவர்களும், பல்வேறு துறைகளுக்கிடையே மக்களுக்கு ஆக வேண்டிய காரியங்களைச் செய்கின்ற வகையில் கூட்டு உறவையும், கூட்டு ஒத்துழைப்பையும் செய்ய வேண்டிய பொறுப்புகளையும் இந்தத் துறையைச் சேர்ந்த வருவாய்த்துறை அதிகாரிகளிடத்திலே அமைந்திருக்கிற



தன்மையை நாம் நன்றாகக் காண்கிறோம். அப்படித்தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கி வரும் பிற துறைகளோடு தொடர்பு கொள்ள வேண்டிய பொறுப்பும் அவர்களிடத்திலே இருக்கிறது என்பதோடு மட்டுமல்லாமல் அவற்றிற்கான முடிவு காண வேண்டிய பொறுப்பும் அவர்களிடத்திலே இருக்கிறது.

ஒரு கணக்கெடுத்து பார்த்ததில் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே மட்டும் கிட்டத்தட்ட 30-க்கு மேற்பட்ட பொறுப்புகளை நாம் ஒப்படைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவஞானம் அவர்கள் எடுத்துச் சொன்ன மாதிரி, ஏராளமான பொறுப்புகளுடைய அடிப்படையிலே அன்றாடக் கடமைகளை ஆற்ற வேண்டிய நிலை வருவாய்த் துறையினுடைய மேல்மட்டத்திலேயிருந்து அடி மட்டம் வரையில் இருக்கின்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்ல, அவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிற பொறுப்புகள் 30-க்கு மேற்பட்டு இருக்கின்றன என்பது மட்டுமல்லாமல் அவர்கள் பிற துறைகளோடு தொடர்பு கொண்டு ஏற்றுச் செய்ய வேண்டிய கடமைகளாகவும் அதைப்பார்த்து ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்புகளாகவும் 32-க்கு மேல் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்கிறேன், இலவசக் கண் சிகிச்சை முகாம் அமைத்தல், ஊனமுற்றவர்களுக்குக் கருவிகள் எல்லாம் வழங்குவதற்கு அவர்கள் ஊனமுற்றவர்களா என்று சரிபார்த்து, அவர்களுடைய நிலைமைகளை எல்லாம் சரிபார்த்து, அந்தத் துறைக்கு எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று அந்தப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு, விதவைகளுக்கும், மற்றவர்களுக்கும், நலிந்த பிரிவினருக்கும் செய்ய வேண்டிய செலவைச் செய்வதற்கு அவர்கள் 40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்கிறார்களா? உள்ளபடியே ஆதரவற்று விளங்குகிறார்களா? திக்கற்றவர்களா? அவர்களுக்குத் துணை செய்கிறவர்கள் யாரும் இல்லையா? என்பதைக் கண்டறிந்து சொல்ல வேண்டிய பொறுப்பும் இந்த வருவாய்த் துறை அதிகாரியிடம் இருக்கிறது.

ஆதிதிராவிடர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு பல்வேறு சலுகைகளும், வசதிகளும், வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்படுகின்றன. அவர்களுக்கு அவை சரியாகக் கிடைக்கின்றனவா என்பவற்றை எல்லாம் கண்டறிந்து, நிறைவேற்ற வேண்டிய பொறுப்பையும் அவர்கள்தான் செய்யவேண்டும்.

பிற்பட்டோர் நலத் துறையில் அளிக்கப்படுகின்ற சலுகைகளைப் பெறுவதற்காக ஒருவர் தான் பிற்பட்ட வகுப்பை சேர்ந்தவன், வருமானம் இவ்வளவுதான் என்று குறிப்பிட்டு, ஒரு கணக்கைச் சொல்லி, பிற்பட்ட நலத் துறையிலே வழங்கப்படும் உதவிச் சம்பளம் மற்றவற்றை வாங்கிவிட்டால், மற்றவர்கள் யாராவது அவருக்கு அந்தச் சலுகை வழங்கியது தவறு என்று குற்றஞ்சாட்டி எழுதினால், போய் விசாரித்து, கண்டறிந்து, அவருடைய தந்தையாரின் வருமானம் என்ன, நிலம் எவ்வளவு இருக்கிறது, அதன் வருமானம் என்ன, அவர் தெரிவித்த விவரம் சரியா, இல்லையா என்பதைக் கண்டறிந்து, தவறு என்றால் கொடுத்தப் பணத்தைத் திரும்ப வாங்க நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பும், அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதும் இந்த வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்குத்தான் இருக்கிறது. இப்படி சுமார் 32 பொறுப்புகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் நான் இங்கே படிக்க வேண்டுமென்று விரும்பவில்லை.

வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இப்படியெல்லாம் பொறுப்புகளை ஏற்று செயல்படும்போது மற்ற மற்ற துறைகளில் இருக்கிறவர்கள் குறிப்பிட்ட ஒரு பொறுப்பை ஏற்று செயல்படுகிறார்கள்; அதோடு தொடர்புடைய ஒன்றிரண்டு பொறுப்புகளையும் பார்க்கிறார்கள். வருவாய்த் துறையினர் இப்படிப் பல்வேறு பொறுப்புகளை ஏற்று செயல்படுகின்றபோது சில நேரங்களில் இங்கொன்றும் அங்கொன்றுமாக சில குறைபாடுகள் நேர்ந்துவிடுகின்றன. சில குற்றங்கள் சில நேரங்களில் நிகழக்கூடும். அவர்களுக்கு இருக்கின்ற பொறுப்புகளின் காரணமாக அவை ஏற்படக்கூடும். ஒரு வட்டாட்சித் தலைவர் அல்லது ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இவ்வளவு பொறுப்புகளை ஒப்படைத்திருக்கும்போது அவற்றை முழுமையாகக் கவனிக்க முடியாமல் இப்படி ஏற்படக்கூடும். இவ்வளவு பொறுப்புகள் இருந்தபோதிலும் இப்படிப்பட்ட பணிகளில் கவனம் செலுத்தி, அக்கறையோடு ஆர்வத்தோடு அவர்கள் ஈடுபடுகிறார்கள், பணிகளை நல்ல முறையில் நிறைவேற்ற முயற்சி செய்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நாம் எல்லாபடியும் பெருமைப்படுகிறோம்.

வருவாய்த் துறையைச் சேர்ந்தவர்களுக்கு இவ்வளவு அதிகமான பொறுப்புகள் இருப்பதால், அவற்றை நிறைவேற்றுவதற்கு பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் அவர்களுக்கு இருக்க





வேண்டும். ஆக, வளர்ச்சிப் பணிகளானாலும் சரி, நிவாரணப் பணிகளானாலும் சரி, ஊரை வளப்படுத்தி, செம்மைப் படுத்தி, சீர்படுத்தும் பணிகளாக இருந்தாலும் சரி, கிராமப்புறத்திட்டங்களை நிறைவேற்றும் பணியாக இருந்தாலும் சரி, இத்தகையப் பணிகளில் அந்தந்த ஊரில் இருப்பவர்கள் ஒத்துழைப்புத் தருவார்களானால் நல்ல வசதியும் வாய்ப்பும் ஏற்படும்.

இப்படி அதிகமான பொறுப்புகளின் காரணமாக இங்கொன்றும் அங்கொன்றுமாக சிலபல குறைபாடுகள் இருந்தாலும் இவ்வளவு பெரும் பொறுப்புகளை ஏற்றுச் செய்யும்போதும் அவர்கள் ஆர்வத்தோடும் அக்கரையோடும் செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாவட்டங்களை நிர்வாக வசதி காரணமாக, ஏழை எளிய மக்களோடு வருவாய்த் துறை அதிகாரிகள் நேரடியாகத் தொடர்பு கொண்டு பணியாற்றும் நோக்கத்தோடு, பெரிய மாவட்டங்களை எல்லாம் இரண்டாக, சிறு சிறு மாவட்டமாகப் பிரிக்க வேண்டுமென்ற முயற்சியிலே இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதைப்போன்று பெரிய வட்டங்களைப் பிரித்து, இரண்டு வட்டங்களாக ஆக்கும் முயற்சியையும் குறு வட்டங்களாகப் பிரித்த பின்னால் அவைகளை வளப்படுத்தி உயர்த்தும் முயற்சியையும் இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அந்தவகையிலே இயன்ற வகைகளிலே எல்லாம் ஆங்காங்கே புதிய வட்டங்களை ஏற்படுத்தித் தர முடிந்த இடங்களில் எல்லாம் ஏற்படுத்தித்தருவதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருந்துவருகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1977-78 ஆம் ஆண்டில் 15 மாவட்டங்களாக இருந்தது இன்றைய தினம் 18 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. 48 கோட்டங்கள் இருந்ததற்குப் பதிலாக இன்றையதினம் 55 கோட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 133 வட்டங்கள் இருந்த இடத்தில் இப்போது 166 வட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 774 குறுவட்டங்கள் இருந்த இடத்தில் 1,097 குறுவட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும், சீர்படுத்தவும், பொதுமக்களோடு அதிகாரிகளும் மற்றவர்களும் நெருங்கிய தொடர்பு கொண்டு சிறப்பாகச் செயல்படவேண்டும், காரியங்கள் ஆற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு இவை எல்லாம் முறைப்படி செய்யப்பட்டு வருகின்றன.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூன் 11

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வேறுபல மாவட்டங்களைப் பிரிக்கின்ற கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அந்தவகையிலே கணக்கிடும்போது இன்னும் 9 மாவட்டங்களைப் பிரிக்க முடியும் என்று கணக்கிட்டு வைத்து, ஆளுநர் உரையிலே எடுத்துச் சொல்லும்போது, அவற்றை படிப்படியாக நிறைவேற்றுவோம் என்ற கொள்கையை அறிவித்தோம். அந்தக் கொள்கையைப் படிப்படியாகச் செயல்படுத்தி வருகிறோம். அதன் அடிப்படையிலே இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாக சென்ற ஆண்டு பிரிக்கின்ற விழாவினை நடத்தினோம்.

(பிற்பகல் 1-10)

அதற்கான முன்னேற்பாடுகளை எல்லாம் செய்து அவற்றை முறைப்படி மாவட்டங்களாகக் கொண்டு வந்து இயக்குகின்ற தன்மையை இந்த ஆண்டிலே தான் நாம் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதேபோல் மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒன்றை மதுரை மாவட்டமாகவும் மற்றொன்றை திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட மாவட்டமாகவும் அதாவது, அண்ணா பெயரால் மாவட்டம் அமைத்து ஒரு புதிய மாவட்டம் துவக்கப்படும் என்ற நோக்கத்திற்கிணங்க இந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளில் துவக்க விழா நடத்த வேண்டும். அவ்வாறு துவக்க விழா நடத்துகின்ற நிலையில் அண்ணா மாவட்டத்தை இயங்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் அதற்கான பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் தகுதியில் ஒருவரை தனி அலுவலராக நியமித்து அவருக்கு உறுதுணையாக இருந்து பணியாற்ற மற்ற அலுவலர்களையும், அதிகாரிகளையும் நியமித்து பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

அதையொட்டித்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது அண்ணா அவர்கள் பிறந்த இடமாக இருக்கின்ற காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் ஒரு மாவட்டமாக ஆக்கவேண்டும் என்றும், செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்றும் சொன்னார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த மாவட்டம் அது. எனவே அதை



1985 ஜூன் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அண்ணா மாவட்டம் என்று அறிவிப்பதில் தவறு இல்லை, ஆட்சேபணை இல்லை. ஆனால் அண்ணா போன்றவர்கள் நாடு தழுவிய தலைவர்களாவார்கள். அவர்கள் நாடு முழுவதும் புகழ் பெற்றவர்கள். எந்த ஒரு மாவட்டத்திற்கும் அவர்களுடைய பெயரை வைக்கின்ற தகுதியும் திறமையும், புகழும் பெற்றவர்கள். ஆனால் ஏற்கெனவே இருக்கின்ற மாவட்டங்களில் சிலவற்றைப் பிரித்து ஒன்பது புதிய மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அப்படிப் பிரிக்கின்றபோது பழைய மாவட்டத்தின் பெயரை ஒரு பிரிவிற்கும், மற்றொரு பிரிவிற்கு ஒரு தலைவரின் பெயரையும் வைக்கின்ற நிலைமையில்தான் முடிவெடுக்கப் பட்டிருக்கின்றது.

உதாரணமாக நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒரு மாவட்டத்திற்கு நெல்லை மாவட்டம் என்று வைத்துவிட்டு மற்றொரு மாவட்டத்திற்கு வ.உ.சி. அவர்களின் பெயரை வைக்கலாம் என்ற வகையிலே முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. தஞ்சை மாவட்டத்தை மூன்றாகப் பிரிக்கிறோம் என்றால் அதில் ஒன்றுக்கு ஏற்கெனவே இருந்த தஞ்சை மாவட்டம் என்பதை வைத்துவிட்டு மற்றவற்றைப் பொறுத்தவரையில் ஒன்றுக்கு வள்ளியம்மை மாவட்டம் என்றும் இன்னொன்றுக்கு காயிதேமில்லத் மாவட்டம் என்றும் பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது. அதேபோல் மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்றபோது அவற்றில் ஒன்றுக்கு ஏற்கெனவே இருந்த மதுரை மாவட்டம் என்ற பெயரை வைத்துவிட்டு திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட மற்ற மாவட்டத்திற்கு அண்ணாவின் பெயர் அமையும் என்கின்ற வகையில் அண்ணா மாவட்டம் என்று பெயரிடப்பட்டது. ஆனால் அவரவர்கள் பிறந்த மாவட்டத்திற்குத்தான் அவரவர்கள் பெயர் வைக்கப்படவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவரவர்கள் பிறந்த மாவட்டத்திற்கும் அவர்கள் பெயரை வைக்கலாம். மற்ற இடங்களுக்கும் வைக்கலாம். அறிஞர் அண்ணா, பெரியார், காமராஜர் போன்ற பெருந் தலைவர்களின் பெயரை எங்கே வேண்டுமானாலும் வைக்கலாம். எந்த இடத்திற்கும் வைக்கலாம். ஆகவே அவ்வாறு பொருத்த முடைய வகையில்தான் நாம் ஏற்கெனவே திட்டமிட்டபடி ஒன்பது மாவட்டங்களைப் புதிதாக ஏற்படுத்தி திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு அண்ணா பெயரால் அங்கே மாவட்டம் அமையலாம் என்ற வகையில் வைத்திருக்

கிறோம். காயிதே மில்லத் அவர்கள் பிறந்த இடம் நெல்லை மாவட்டத்தினுடைய பேட்டைப் பகுதியாகும். அவரவர்கள் பிறந்த இடத்திற்குத்தான் அவர்கள் பெயரை வைக்கவேண்டும் என்றால் காயிதே மில்லத் அவர்களின் பெயரை நெல்லை மாவட்டத்திற்குத்தான் வைக்கவேண்டும் என்று வரும். ஆனால் அப்படி வைக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அதேநேரத்தில் வைக்கக்கூடாது என்ற எண்ணமும் இல்லை. அண்ணா பிறந்த மாவட்டத்திற்கு கட்டாயம் அண்ணா பெயர் இருக்கக்கூடாது என்றல்ல. யார் பேசினாலும் எந்த ஒரு கருத்தைப் பேசினாலும் நிச்சயமாக அண்ணா பிறந்த இடம், வாழ்ந்த இடம் காஞ்சிபுரம் என்றுதான் சொல்லப்போகிறோம். ஆனால் அதற்குத்தான் அண்ணா பெயரை வைக்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் எண்ணலாம். நாங்கள் இப்படியும் எண்ணலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களிலிருந்து ஒரு சிறு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்கள் பிறந்த மாவட்டம் ஈரோட்டை மையமாகக் கொண்டது. எனவே அதற்குப் பெரியார் மாவட்டம் என்ற பெயரை நாம் வைக்கவில்லையா ? அதேபோல் காமராஜர் அவர்கள் பிறந்த ஊரை மையமாகக் கொண்டு காமராஜர் மாவட்டம் என்று வைக்கப்பட்டது. அதுபோலவே வ.உ.சி. அவர்கள் பிறந்த இடத்தைச் சுற்றியுள்ள மாவட்டத்திற்கு வ.உ.சி.யின் பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது. இங்கெல்லாம் அந்த முறைகள் பின்பற்றப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்? அவர்கள் எல்லாம் இந்த மண்ணில் பிறந்தாலும் கூட இந்தத் தமிழகத்திற்குச் சொந்தமாக இருந்தாலும் அவர்கள் பெயரை எல்லாம் இப்படி வைக்கிறீர்கள். அதேபோன்று காஞ்சிபுரத்திற்கும் அண்ணாவின் பெயரை வைக்கலாம். காயிதே மில்லத் பெயரைக்கொண்டுபோய் வேறு ஒரு இடத்திலே வைத்திருக்கிறோம், என்று சொன்னார்கள். ஆனால் திருநெல்வேலியிலே அவர் பிறந்ததன் காரணத்தால் காயிதேமில்லத் பெயரை திருநெல்வேலி மாவட்டத்திற்கே கூட வைக்கலாம். அதைப்போலவே அண்ணாவின் பெயரை இங்கே வைப்பதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. இவைகளை எல்லாம் பார்க்கின்றபோது காஞ்சிபுரத்திற்கு அண்ணா பெயரை வைக்க வேண்டும் என்று வருகிறபோது மட்டும் ஒருவகையான அணுகுமுறை இருப்பதற்கு காரணம் அதில் ஏதேனும் பின்னணி இருக்கின்றதா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

1985 ஜூன் 11]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஒரு பின்னணியும் கிடையாது. மாண்புமிகு ரகுமான்கான் அவர்களை விட அதிக அளவு ஆர்வமும் அக்கறையும் பேரறிஞர் அண்ணாவிடம் கொண்டவர்கள் தான் நாங்கள். செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிற செயற்குறிப்பு இல்லை. பிரிக்க வேண்டும் பிரிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்கள் பேசும்போது உதாரணமாக உகம்சந்த் அவர்களுடைய பேச்சை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும். பிரித்து காஞ்சிபுரத்தை தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு அண்ணா பெயரை வைக்க வேண்டும் என்று ஒரு விருப்பத்தை தெரிவித்தார்கள். விருப்பத்தை தெரிவிக்க எல்லோருக்கும் உரிமை உண்டு. ஆனால் ஏற்கெனவே பிரிக்கப்பட்டிருக்கிற ஒன்பது மாவட்டங்களிலேயே அதை ஒன்றிற்கு வைக்கலாம் என்று கூட நாங்கள் நினைத்தோம். தஞ்சை மாவட்டத்திலே ஒரு பகுதிக்கு வைக்கலாமா என்று கூட எண்ணினோம். ஆனால் பிறகு வள்ளியம்மையினுடைய பெயரை வைக்கலாம் என்ற முடிவு வந்தவுடனேயே திண்டுக்கல்லுக்கு அந்தப் பெயரை வைக்கலாம் என்று சொன்னோம்.

ஏன் பெரியார் பிறந்த ஊரிலே வைத்தது போல, காமராஜ் பிறந்த இடத்திலே வைத்தது போல, இதற்கும் ஏன் இல்லை என்று சொல்ல முடியாது. அதற்கு சில எடுத்துக் காட்டுகள் இருக்கலாம். இதற்கும் சில எடுத்துக் காட்டுகள் இருக்கட்டும் என்பதற்காகத்தான் பிறந்த இடத்திலேயே அவர்களுடைய பெயரை வைக்கலாம், வைக்கமுடியும் என்பதற்கு பெரியார், காமராஜ், பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயராலே உருவான மாவட்டங்கள் எடுத்துக் காட்டு. அப்படிப்பட்ட பெரியவர்களுடைய புகழ் எங்கும் பரவி இருப்பதால் எங்கும் வைக்கலாம் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. இப்போது கலைஞர் நகர் என்று சொன்னால் கலைஞர் பிறந்த ஊரான திருக்குவளையைச் சுற்றித்தான் அந்தப் பெயரை வைக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர் புகழ் நாடெங்கும் பரவியிருக்கிற காரணத்தால், சென்னையிலே கூட கே. கே. நகர் என்று வைப்பதுதான் அவருடைய புகழுக்கும், பெருமை வாய்ந்தது. ஆனால் அவர் சொல்கிறபடி வைக்கக்கூடாதா என்றால் வைக்கலாம். மற்றவர்கள் நினைக்கிறபடியே இருக்கலாமா என்றால் இருக்கலாம். ஆனால்

நாங்கள் நினைத்ததை வைக்கலாம் என்று நாங்கள் எண்ணுகிறோம் அதன்படி நாங்கள் வைத்தோம். அதுவே தவிர, கொள்கை வேறுபாடோ அல்லது வேறு எந்த வேறுபாடோ கிடையாது.

ஆகவே எங்கே இருந்தாலும் பேரறிஞர் அண்ணாவினுடைய புகழ் பல ஆண்டுக்காலம், பல நூற்றாண்டுக்காலம் இருக்க வேண்டும்; பெரியாருடைய பெயர் இருக்கவேண்டும் என்பதுதான் அடிப்படை நோக்கம். அண்ணா பிறந்தது இங்கேதான் என்றாலும் கூட, அவருடைய பெயராலே ஓடுகிற போக்குவரத்து வேறு ஒரு மாவட்டத்தில் தான். அழகிரி பிறந்தது வேறு ஒரு இடம் என்றாலும் கூட அவருடைய பெயராலே ஓடுகின்ற போக்குவரத்து வேறு ஒரு மாவட்டத்தில்தான் ஓடுகிறது. அவர்களுடைய பெயரிலேயே அவர்களுடைய இடத்திலேயும் ஓடுகிறது. பாண்டியனை எடுத்துக் கொண்டால், பாண்டியன் இருந்த இடத்தில்தான் அந்தப் போக்குவரத்து ஓடுகிறது. சேரனை எடுத்துக் கொண்டால் சேரன் வாழ்ந்த இடத்தில்தான் ஓடுகிறது. சோழனை எடுத்துக் கொண்டாலும் சோழனுடைய இடத்தில் தான் ஓடுகிறது. மற்ற பெயர்கள் எல்லாம் கூட இருக்கின்றன. அதற்கும் எடுத்துக் காட்டு உண்டு. இதற்கும் எடுத்துக் காட்டு உண்டு. அந்த வகையிலேதான் இதுவும் இருக்கிறதே தவிர இதிலே எந்தவிதமான மாச்சரியங்களும் இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாவட்டங்களைப் பிரிப்பது குறித்து ஏற்கெனவே கொள்கை குறிப்பில் சொன்ன போது கூட படிப்படியாக நிறைவேற்றுவோம் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. அதிலே இருக்கிற சங்கடங்களையும் மற்றவைகளையும் உணர்ந்துதான் அப்படிச் சொன்னோம். அதேபோல அவைகளை மெல்ல மெல்ல நிறைவேற்றுகிற முயற்சியிலே அரசு ஈடுபட்டிருக்கிறது. இதற்கென் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, மாவட்டம் மாவட்டமாக அவர்கள் ஆராய்ந்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மாவட்டத்திலே எந்த அளவிலே இரண்டாகப் பிரிக்கலாம் அல்லது மூன்றாகப் பிரிக்கலாம், எந்தெந்த பகுதிகளை உள் அடக்கலாம் என்பதையெல்லாம் வல்லுநர் குழு ஆராய்ந்து வருகிறது.





ஏற்கெனவே முன் கூட்டி ஆராய்ந்து முடிவு செய்த வகையிலேதான் இராமநாதபுரம் மூன்றாகப் பிரிக்கப்பட்டது. மதுரை மாவட்டத்தைப் பற்றி ஏற்கெனவே முன்கூட்டியே ஆராய்ந்து தெரிவித்த முடிவுகளை அரசு ஏற்றுக் கொண்டு, அரசு ஒப்புதல் அளித்ததற்குப் பிறகு அந்த மாவட்டத்தையும் இரண்டாகப் பிரித்துக் கொண்டு வருகிற அளவுக்கு ஏற்பாடுகளை தன்மைகளைச் செய்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு மாவட்ட தலைநகரை உருவாக்குவது என்று சொன்னால் அதற்காக பெரும் செலவை நாம் தாங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை மட்டும் ஏற்படுத்தி அங்கே மாவட்ட ஆட்சித் தலைவரை உட்கார வைப்பதால் மட்டும் ஒரு மாவட்ட பிரிவினை முழுமையாக அமைந்துவிடாது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தோடு எல்லாத் துறைகளினுடைய மாவட்ட அலுவலகங்களையும் அங்கே அமைக்க வேண்டும். எல்லாத் துறைகளினுடைய பணிகளையும் மற்றவைகளையும் அங்கே ஒருங்கிணைத்துக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அந்த வகையிலே காணுகிறபோது அனைத்துத் துறைகளின் தலைமை இடங்களையும் அங்கே கொண்டு சேர்க்கிற போது, ஆண்டு ஒன்றுக்கு மட்டும் தொடர்கிற செலவு மட்டும் 3½ கோடி ஆகிறது. தொடரா இனச் செலவு மட்டும் எடுத்த எடுப்பிலே ஒரு மாவட்டத்தை அமைப்பதற்கு மூன்று கோடி ஆகிறது. ஆனால் இறுதிக் கட்டமாக, 4, 5, 6 ஆண்டுகளில் எல்லாத் துறைகளிலும் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்த, கல்வித் துறையிலும் மாவட்டமாக்க வேண்டும், வேளாண்மை துறையிலும் மாவட்டமாக்க வேண்டும், வணிகத் துறையிலும் மாவட்டமாக்க வேண்டும். இப்படி அங்கே எல்லாத் துறைகளிலும் மாவட்ட அளவுக்கு உயர்த்தி அங்கே வசதி வாய்ப்புகளை கொண்டு வந்து சேர்ப்பிக்க வேண்டும். அதற்கு தனி அலுவலர்கள் அதிகாரிகள் மற்றவர்களையும் போடவேண்டும். அந்த வகையிலே பார்க்கிற போது தொடரா இனச் செலவு 5, 6 ஆண்டுகளிலே ரூ. 11 கோடிக்குமேல் வருகிறது ஒரு மாவட்டத்திற்கு.

அதிலே எடுத்த எடுப்பிலே ஒரு ஆண்டு இரண்டு ஆண்டுக் காலத்திலே மூன்று கோடி ரூபாய் தேவைப்படுகிறது. தொடர் இனச் செலவு 3½ கோடி ரூபாய் என்று தேவைப்படுகிறது. ஆகையினால் இந்த வருடத்தில் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியது, ஏற்கெனவே சென்ற ஆண்டு விழுப்புரம் என்று

போட்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டியிருப்பதால், இந்த ஆண்டு அது ஏற்றுக் கொள்ள வேண்டி வந்திருப்பதால் மூன்று மாவட்டங்களுடைய பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாள் மாவட்டங்கள் ஆரம்பிக்கப்படும்போது, அந்த தொடர் இன செலவுகள் தொடரா இனச் செலவுகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய தன்மைகள் இருக்கின்றன. அந்த அடிப்படையிலே தான். அந்த வல்லுநர் குழு கொடுக்கின்ற பரிந்துரைகளினுடைய அடிப்படையில் வருகிற ஆண்டுகளில் ஏற்றுக் கொண்டு, அத்தகைய திட்டத்தை படிப்படியாக ஆண்டுக்காண்டு சில பல திட்டங்களை ஒதுக்கி, நிதி வசதிக்கேற்ப செய்யப்படும்.

(பிற்பகல் 1-20)

அதேபோல கூடுதல் வருவாய்க் கோட்டம் ஒன்று அமைப்பது என்றாலும் கூட தொடரினச் செலவு 2 லட்சத்து 14 ஆயிரம் ஆகிறது. தொடரா இனச் செலவு 20 லட்சம் ஆகிறது. ஒரு கூடுதல் வட்டத்தை நாம் உருவாக்குகிறோம் என்றால்கூட அந்த வட்டத்தை உருவாக்குகிற நிலையில் தொடரினச் செலவு 3 லட்சத்து 60 ஆயிரம் ஆகிறது. தொடரா இனச் செலவு 29 லட்சம், 30 லட்சம் என்று ஆகிறது. இந்தக் காரணங்களை ஒட்டி தான் அந்த நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல வட்டங்களை பிரிக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். சிலபல கோரிக்கைகள் ஆய்விலே இருக்கின்றன. சிலபல கோரிக்கைகளை தள்ளிப் போடலாம் என்ற அளவிற்கு வைத்திருக்கிறார்கள். அவற்றின் விரிவான தன்மையை எடுத்துச்சொல்வதற்கு நேரம் இல்லை. இருக்கிற வட்டத்தை பிரிப்பதற்கு அதனுடைய பரப்பளவு கணக்கிடப்படுகிறது. ஏற்படுத்தப் போகும் புதிய வட்டங்களின் பரப்பளவு எந்த அளவிற்கு அமையும் என்பதை கணக்கிட வேண்டியிருக்கிறது. மக்கள் தொகையின் எண்ணிக்கை இரண்டாகப் பிரிக்கும்போது எப்படி அமையும் என்பதை கணக்கிட வேண்டியிருக்கிறது. நிலவரி வசூலின் தன்மை எப்படி இருக்கும் என்பதையும், பிற்பட்ட தன்மை எப்படி இருக்கும் என்பதையும் பார்த்து, ஒரு வட்டமாக இருக்கிறபோது வேலை செய்யமுடியாத அளவிற்கு வேலை பளு எப்படி இருக்கிறது என்பதையும், ஒரே வட்டமாக இருப்பதால் பொதுமக்கள்





எப்படிப்பட்ட வகைகளில் சங்கடங்கள் ஏற்படுகிறது என்பதையும், இப்படி இவைகள் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவிற்கு வந்ததற்குப் பிறகு, இரண்டு வட்டங்களாகப் பிரிக்கிற முயற்சியிலே ஈடுபட வேண்டியிருக்கிறது. அப்படி ஆராய்ந்து பார்த்த வகையில்தான் இதுவரையில் 33 வட்டங்களை புதிய வட்டங்களாக நாம் ஆக்கியிருக்கிறோம். மேலும் புதிய வட்டங்களை ஆக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதைப்போன்று மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களில் சிலபல வட்டங்களை பிரிப்பதற்கான அளவிற்கு தந்திருக்கிறார்கள். இது தவிர தனியாகவும் பல உறுப்பினர்கள் சில வட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அவைகள் அத்தனையும் துறையினருடைய ஆய்விலே இருந்து வருகிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, திருக்கோவிலூரிலிருந்து விழுப்புரத்திற்கு வருவாய்க் கோட்டத்தை மாற்றுவதற்கு உத்தேசம் இருக்கிறதா என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை. இப்போது மாவட்ட ஆட்சித் தலைநகரிலும் வருவாய்க் கோட்டத்தின் தலைநகரம் உண்டு. சில இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைநகரில் இல்லாமல் வேறு இடங்களிலும் உண்டு. ஆனால் விழுப்புரத்தை வைத்துப் பார்க்கிறபோது திருக்கோவிலூரில் இருப்பதை விழுப்புரத்திற்கு நகர்த்துவதற்கு, அங்கே கொண்டு வருவதாக யோசனை இல்லையென்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் இந்தப் பணிகளை கவனிப்பதற்கு கூட ஆண்டிற்காண்டு இந்தத் துறையின் தன்மையை வைத்து தொடர்ந்து பணிகளை விரிவாக்கி விரிவாக்கி, பணிகளை சீர்படுத்தி, செம்மைப்படுத்துகிற வகையில் 1966-ம் ஆண்டு துணை மாவட்ட ஆட்சியாளர்கள் 271 பேர் இருந்த இடத்தில் இப்போது 362 பேர்கள் 1985-ம் ஆண்டிலே நியமித்து பணியாற்றும்படியாக நாம் செய்திருக்கிறோம். அடுத்து டி.ஆர்.ஓ. கிரேடில் 1966 ஆம் ஆண்டில் 25 பேர்கள் இருந்தார்கள் என்றால், காலத்தின் தேவையை ஒட்டி, மக்களுடைய பணிகள் விரைவாக நடைபெற வேண்டும் என்பதற்காக இன்றைக்கு 107 பதவிகள், டி.ஆர்.ஓ. பதவிகளைக் கொண்டவைகளாக அமைந்திருக்கிற பாங்குகளை நாம் பார்க்கிறோம்.

புதிய கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று ஆண்டிற்காண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மிகவும் மோசமாக இருக்கிற இடங்களில் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்றும், புதிய மாவட்டங்கள், வட்டங்கள் உருவாக்குகிற இடத்தில் இடமில்லாத நிலை ஏற்படுமேயானால் அங்கே வேண்டிய நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

1978-79 முதல் 1985 வரையில் கணக்கிட்டு பார்ப்போமானால் மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகங்கள் ஐந்து கட்டிடங்கள் புதியதாக கட்டுவதற்கும், கோட்டாட்சியர் அலுவலகங்கள் 15 புதியதாக கட்டுவதற்கும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, வட்டாட்சியர் அலுவலகங்கள் 18-க்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டு 38 வட்டங்களுக்கும் கிட்டத்தட்ட 10 கோடியே 75 லட்சம் ஒதுக்கீடு செய்த வகையில் இவைகள் செய்து முடிக்கப்படவிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதைப்போல மேலும் சிலபல இடங்களை ஆண்டிற்காண்டு, ஏற்படுகிற நிதி வசதிக்கேற்ப அவை செய்து முடிக்கின்ற சூழ்நிலை ஏற்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நிலவரி பொறுத்தவரையில் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துப் பேசினார்கள். நிலவரியைப் பொறுத்தவரையில் நாம் கடைபிடிக்கிற வகையில் பல்வேறு அடிப்படைகளை வைத்து பணியாற்றிக்கொண்டு வருகிறோம். ஆகவே நிலவரியைப் பொறுத்தவரையில் பொதுவாக பசலி ஆண்டுகளில் மாவட்டத்தில் எந்தப் பகுதியிலாவது இயற்கை பாதிப்பினால் ஏற்படுகிற இடையூறுகள் காரணமாகவும், கடும் மழை காரணமாகவும், வெள்ளப் பெருக்கின் காரணமாகவும், கடும் வறட்சியின் காரணமாகவும், பெரும் சூறாவளி புயல் காரணமாகவும் பயிர்களுக்கு முழு பாதிப்பு ஏற்படுகிற சூழ்நிலை ஏற்பட்டால், நிலவரி முழுவதும் அப்படிப்பட்ட இடங்களில் தள்ளப்படுகிறது. பாதிப்பு அரைகுறையாக இருக்குமானால், பாதிப்பின் அளவிற்கேற்ப, வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் ஏற்ற அளவில் நிலவரி தள்ளுபடி செய்யப்படுகிறது. அத்தோடு பழைய பாக்கிக்காக நிலவரி ஒத்தி வைக்கப்பட்டு, அடுத்துவரும் ஆண்டில் மொத்தமாக வசூல் செய்யப்படுகிற முறையையும் நாம் மேற்கொண்டு வருகிறோம். ஆனால் எந்தந்தப் பகுதிகள்





பாதிக்கப்பட்டு இருக்கின்றன, எந்தந்தப் பகுதிகள் பாதிக்கப்படாமல் இருக்கின்றன என்பதை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கையின் அடிப்படையிலே, அவர்கள் சில பல முடிவுகள் எடுப்பதற்கு அதிகாரம் தந்திருக்கிறோம். அதற்கு மேலாக அவர்களுடைய அறிக்கை அரசினிடத்திலே வந்ததற்குப் பிறகு, அரசு ஆராய்ந்து, அதைப் பொறுத்து, அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே கூட ஏற்பாடுகளைச் செய்கின்றன. நிலவரி வசூலிலே கடுமையாக இருக்கிறோம் என்றெல்லாம் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னார்கள். ஆகவே நிலவரி வசூல் செய்யவேண்டும் என்பதிலே அக்கறையும் ஆர்வமும் கொண்டு இருக்கிறோம். ஓரளவிற்கு அவர்களுடைய நிலைமையைக் கண்டறிந்து, பணியாற்றி வருகிறோமே தவிர, ஜப்தி போன்ற நடவடிக்கைகளின் மூலம் இதைச் செய்யவேண்டும் என்ற அத்தகைய தன்மைகளை நாம் நிலவரி வசூலிலே எடுக்கவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக நிலவரி வசூலில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சொத்துக்கள் ஜப்தி செய்யப்படுகின்றன என்ற கூற்று, அவ்வளவாக பொருந்தி வராது. ஏன் என்றால் பொதுவாக அவர்களிடம் கூடுமானவரையில் பேசிச் செய்யவேண்டும் என்று தான் இருக்கிறோம். உதாரணமாக உங்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். மொத்தமாக 24—5—1985-லே இருப்பதைக் கணக்கிட்டுப் பார்ப்போமானால் டிமாண்ட், மட்டும் 74,88,83,612 ரூபாய் இருக்கிறது. இதிலே வசூல் ஆனது மட்டும் 29,65,92,898 ரூபாய். வசூல் ஆகாமல் இன்னும் நிலுவையில் இருந்து வருவது 45,22,90,714 ரூபாய். உள்ளபடியே நாம் ஜப்தி போன்ற கடுமையான நடவடிக்கைகளைக் கையாண்டு இருந்தால், இவ்வளவு நிலுவைகள் இருப்பதற்கான காரணங்கள் ஏற்பட்டு இருக்காது. ஆகவே வசூல் ஆகவேண்டிய பணத்தில் 30.2 சதவிதம் தான் வசூலாகி இருக்கிறதே தவிர, மீதி வசூலாக வேண்டிய சூழ்நிலைகள் இருக்கின்றன.

ஆகவே தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நடப்பு ஆண்டினுடைய வரியையும், பழைய பாக்கியில் ஒரு பகுதியையும் செலுத்த வேண்டும் என்று ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில், விவசாயச் சங்கத் தலைவர்களும், விவசாயிகளும், மற்றவர்களும் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் இப்போது வசூல் செய்து

கொண்டு வருகிறோம். ஆனால் நாம் நினைத்த அளவிற்கு வரவில்லை. அதையும் நாம் மேற்கொண்டு செய்ய இருக்கிறோம். தஞ்சை மாவட்டம்தான் இருப்பதிலேயே மிகவும் குறைந்த அளவிற்கு இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். 1—7—1983 முதல் 30—6—1984 வரையில் இருக்கிற இந்தப் பசலி ஆண்டை நாம் கணக்கிட்டால் டிமான்ட் 16,95,76,000 ரூபாய் தஞ்சை மாவட்டத்திலே மட்டும் இருக்கிறது. ஆனால் அங்கே வசூலானது 84,03,564 ரூபாய். இன்னும் நிலுவையில் இருப்பது 16,11,72,436 ரூபாய். ஆகவே 85 லட்சம்தான் வசூலாகியிருக்கிறது. 16 கோடிக்கு மேல் நிலுவையில் நிற்கிறது என்கிறபோது, அவர்களிடத்திலே பழைய பாக்கிகளைச் செலுத்துவதற்கான முயற்சிகளை ஏற்கவேண்டும் என்று ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேதான் பழைய பாக்கி ஒன்றையும், நடப்பு ஆண்டு பாக்கியையும் செலுத்தினால் சிலபல ஆண்டுகளிலே அவற்றைத் தீர்த்து விடலாம் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் இந்த முறை கையாளப்பட்டு வருகிறது. ஆகவே ஜப்தி போன்ற கடுமையான நடவடிக்கைகள் மற்றவைகள் எல்லாம் கூட்டுறவுத்துறைக் கடன்களில்தான் வருகின்றன. அந்தக் கூற்றைத்தான் உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள் கூட்டுறவுக் கடன்கள் கொடுப்பதைப் பற்றி. கூட்டுறவுக் கடன்களை ரிசர்வ் வங்கி தருகிறது. ரிசர்வ் வங்கிக்கு நாம் வட்டி செலுத்தவேண்டி இருக்கிறது. அவர்கள் இவ்வளவு வசூல் செய்யாவிட்டால், அடுத்த ஆண்டுக்கு கடன் தரமாட்டோம் என்று திட்டவட்டமாக தெளிவாகச் சொல்கிறார்கள். ரிசர்வ் பேங்குக்கு செலுத்த வேண்டிய வட்டியையும், அவர்களுக்குச் செலுத்த வேண்டிய கடனையும் நாம் ஒழுங்காகச் செலுத்தினால்தான் அவர்கள் தரவேண்டிய கிரடிட்டை நமக்குத் தருவார்கள். அடுத்த ஆண்டு நாம் கடன் கேட்பதற்கு வசதி ஏற்பட முடியும். ஆகவே அவர்கள் சொல்லி, சென்ட்ரல் பேங்குக்கு வந்து, பிறகு டிஸ்ட்ரிக்ட் பேங்குக்கு போய், மற்ற பேங்குகளுக்கு எல்லாம் போகும்போது வட்டியினுடைய அளவு ஏறிக்கொண்டு போகிறது.

ஆகவே அவைகளைத் தள்ளுபடி செய்யவும், முழுவதையும் செய்கின்ற தன்மைகள் இருக்கின்றபோது, மாநில அரசு தான் பொறுப்பேற்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த நிலைமைகள் ஏற்படும்போதுதான் நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரைக்கும், 46, 47 சதவீதம் தான் ஆகியிருக்கிறது. ஏன் இதைச் சொல்ல வருகிறேன் என்றால், 'அப்படிப்

பட்டவர்கள் மிக ஏழையாக இருந்தாலும் கூட நாம் தள்ளிக் கொடுக்கலாம். டிராக்டர்கள் வைத்திருப்பவர்கள், வசதி படைத்தவர்கள், நம்மிடத்திலே கடனுக்கு டிராக்டரை வாங்கி, அந்த டிராக்டரை வாடகைக்கு விட்டு, பணத்தையும் சம்பாதித்துக் கொண்டு, அசலையும் வட்டியையும் கட்டாமல் இருப்பவர்கள்தான் அவர்கள் என்பதை நாம் எல்லா மாவட்டங்களிலேயும் பார்க்கிறோம்.

**திரு. கோ. வீரய்யன்:** தலைவர் அவர்களே, நில வரிக்காக தஞ்சை மாவட்டத்தில் 1 பிளஸ் 1 என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு உடன்பாடு வந்து ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்பது சரியானது. எனவே அந்தப் பாக்கியை வசூலித்துவிட முடியும். ஆனால் பி.ஏ.பி. பாசனத்திலே கோவை மாவட்டத்திலே நில வரிக்காக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன். கூட்டுறவுத் துறை பற்றி அந்த மானியக் கோரிக்கை வரும்போது அந்த நிலைமைகளை விரிவாகப் பேசலாம். ஆனால் நில வரிக்காக ஜப்தி என்பது கோவை மாவட்டத்திலே நடைபெற்று இருக்கிறது. தண்ணீருக்கு தண்டத் தீர்வை போட்டு, அதைக் கட்டாவிட்டால் ஜப்தி நடவடிக்கைகள் வருகிறது. அதையும் தவிர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற நல்லவர்கள் போலவே கோவை மாவட்டத்தில் இருக்கிற நல்லவர்கள் அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரோடு உட்கார்ந்து, இருக்கிற நிலுவை எவ்வளவு, இருக்கிற நிலைமைகள் என்ன, இவ்வளவு இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாங்கள் செலுத்துகிறோம் என்ற ஒரு முடிவுக்கு வந்து விடுவார்களானால் அதிலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவது போன்று கஷ்டப்படுத்த வேண்டிய நிலைமை இல்லை. ஆனால் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் இருந்து பின்வாங்காமல் அதையும் அவர்கள்

மதித்து நடக்கவும், அந்த ஒப்பந்தத்திற்கு மதிப்பு தந்து நடந்து கொள்வார்களானால் அதன்படி ஆட்சியாளர்கள் நடந்து கொள்ள வசதி வாய்ப்புகள் ஏற்படும். தஞ்சை மாவட்டத்தில் எப்படிப்பட்ட ஒரு உடன்பாடு அடிப்படையில் இது செயல்படுகின்றனவோ அதை இந்த மாவட்டங்களுக்கு எல்லாம் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கலாம். குறிப்பிட்ட காலத்தில் அது இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டு, அதற்கு அடுத்த ஆண்டு வரும் என்ற ஒரு நம்பிக்கை இருந்தால் விவசாயிகளை கஷ்டப்படுத்த வேண்டிய அவசியம் நமக்கு இல்லை. ஆனால் பெரியார் மாவட்டத்தில் வசதி படைத்தவர்களைப் பற்றி நான் கணக்கு சொல்ல முடியும். கூட்டுறவு மானியக் கோரிக்கை வரும்போது கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களை நான் சொல்லச் செய்யயிருக்கிறேன். சில குறிப்பிட்ட பெயர்களைச் சொன்னால் அவர்கள் எப்படிப்பட்ட வசதி படைத்தவர்கள் என்று எல்லோருக்கும் தெரியும். யாரை ஏழை என்று கருதுகிறோமோ அவர்களில் முக்கால்வாசிப் பேர்கள் செலுத்தி விடுகிறார்கள் வரியை. அவர்களுக்கு சிபாரிசுக்கு ஆள் கிடைக்காது. அவர்கள் யாரிடமும் போகவும் முடியாது. அவர்கள் சட்ட திட்டங்களுக்கு அஞ்சி நடந்து கொள்கிற அளவுக்கு இருக்கிறார்கள். ஆனால் வசதி படைத்தவர்கள் நாம் எதையும் செய்யலாம், நாம் எதையும் செய்ய முடியும், கொடுக்காமல் இருக்கலாம் என்ற துணிவு அப்படிப்பட்டவர்களுக்கு வருகிறது. புள்ளிவிவரத்தை வேண்டுமானால் இன்னொரு சந்தர்ப்பம் வரும்போது சொல்கிறேன். ஆனால் கடுமையான வசூல் செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் வசூல் செய்து தீரவேண்டும் என்பதற்காக இதைக் குறிப்பிடுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஜப்தி சம்பந்தமாக வசதி உடையவர்கள் கொடுக்கவில்லை என்ற விவரங்களை எல்லாம் சொல்கிறார்கள். ஆனால் நடைபெற்று இருக்கிற தவறை அவையின் மூலம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து அந்தத் தவறு களையப்படவேண்டும் என்பதற்காக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். பெரியார் மாவட்டத்தில் பவானி வட்டம், கவந்தபாடி கிராமத்தில் அரவாங்காட்டூரிலே சுப்பம்மாள் என்ற ஒரு விதவைப் பெண்மணி அந்த கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை, கடன் வாங்கவில்லை, ஆனால் அவர்கள் வீட்டில் இல்லாதபோது பூட்டை





உடைத்து வீட்டிற்குள் நுழைந்து அங்கேயிருந்த ஏறத்தாழ 3,500 ரூபாய் பெருமானம் உள்ள கடலை மூட்டைகள் இருபதை ஜப்தி செய்துகொண்டு போயிருக்கிறார்கள். அவருடைய மருமகன் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறார். அவர்கள் ஜாயின்டு குடும்பத்தில் இல்லை. அவர் வேறு இடத்தில் இருக்கிறார். ஆனால் இது போன்ற ஜப்தி நடவடிக்கை நடைபெற்று இருக்கிறது. நான் கூட்டுறவுத் துறை மானியத்தில் இதைப் பேசவேண்டும் என்று சொன்னாலும் வசதி படைத்தவர்கள் கட்டாமல் இருக்கிறார்கள், அவர்கள் கட்டவேண்டும் என்று வலியுறுத்துகிறபோது இதே அரசு அதிகாரிகள் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லாதபோது, கடன் வாங்காதபோது போலீசார் சென்று ஒரு விதவையின் வீட்டில், கிழவியின் வீட்டில் இவ்வளவு பெரிய அக்கிரமத்தைச் செய்கிறார்கள். இது சரிதானா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அந்த நிலைமைகள் உண்மையாக இருக்குமானால் அது அக்கிரமம்தான். ஆகவே இலட்சக்கணக்கான ரூபாய்கள் வசூல் செய்கின்றபோது இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகிறது என்றால் இப்படிச் செய்கிறவர்கள் நம்முடைய நாட்டைச் சேர்ந்தவர்கள் தான். நம்முடைய மாமன் மகன், மைத்துனன் மகன்கள் தான் இருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவில் இருந்தோ, ஆப்பிரிக்காவில் இருந்தோ அவர்கள் வரவில்லை; இந்தக் காரியத்தைச் செய்யவில்லை. ஆனால் அப்படிப்பட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அப்படிப்பட்ட இடங்களில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட சில பல தவறுகள் இங்கு ஒன்றும், அங்கு ஒன்றுமாக நடைபெறுகின்றன. இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் இதற்கான உதவிகளை எல்லோரும் செய்யவேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் கூடுமானவரையில் எல்லோருடைய ஒத்துழைப்பின் அடிப்படையில்தான் இது முடியும். மேற்கு வங்கத்தில் 87, 88 சதவீதம் வசூல் செய்து இருக்கிறார்கள்; உத்திரப்பிரதேசத்தில் 85, 86 சதவீதம் வசூல் செய்து இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் கேரளாவில் 90 சதவீதம் வசூல் செய்து இருக்கிறார்கள். எப்படி வசூல் செய்து இருக்கிறார்கள் என்று பார்த்தால் இதற்கு சட்ட திட்டங்களை வைத்து, அவர்கள் கொடுக்காவிட்டால் காவல் துறையை வைத்து வசூல்

செய்யலாம் என்று அளவுக்கு செய்து இருக்கிறார்கள். ஆக கொடுக்க வேண்டியதை கட்டாயம் கொடுத்தே தீரவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் வைக்கும்போது—அப்படிப்பட்ட நடவடிக்கைகள் 4, 5 ஆண்டு காலமாக நாம் எடுக்கவில்லை. ஆண்டுக்கு ஆண்டு அப்படி செய்து இருப்போமானால் அதே அளவில் செய்து இருப்போமானால் அதனால் சிரமமும் குறையும், ஓரளவுக்கு வசூலும் வரும். ஆகவே அந்த நிலைமையை உணர்ந்து வாங்கியவர்கள் தங்களுடைய கடனை திரும்பச் செலுத்த வேண்டும். அதேபோல் வசூல் செய்பவர்கள் அவர்களை கொடுமைப்படுத்தாமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் செயல்பட வேண்டும். இதன் காரணமாக நாங்கள் தொழிலாளர்களுக்கு விரோதிகள், விவசாயிகளுக்கு விரோதிகள், அவர்களுடைய பாவத்தை வாங்கி கட்டிக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். விவசாயிகள், தொழிலாளர்கள் பெரும்பாலும் முழு ஆதாவு தந்ததன் அடிப்படையில் தான் 1977-லும் சரி, 1980-லும் சரி, 1985-லும் சரி ஆட்சி பீடத்திற்கு வந்து இருக்கிறோம். விவசாயிகளைக் கொடுமைப் படுத்தி நாங்கள் இருக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? பல அறிவிப்புகளைச் செய்கிறோம், சொன்னதைச் செய்கிறோம், செய்ததைச் சொல்கிறோம். கூடுமானவரையில் சொன்னதைச் செய்கிறார்கள் என்ற அந்த நோக்கத்திலே மக்கள் அன்போடு, அரவணைப்போடு, நம்பிக்கையோடு, நன்மதிப்போடு இருக்கிறார்களே தவிர அந்த நோக்கத்திலே தொடர்ந்து நாங்கள் வருகிறோமே தவிர வேறு அல்ல. பெருமைக்கும் சிறுமைக்கும் தன் கருமமே கட்டளைக் கல் என்று வள்ளுவர் சொல்வதைப்போன்று அந்த வகையிலே தொழிலாளர்களோ உழவர்பெருங்குடி மக்களோ எங்கள் ஆட்சியை எதிர்க்கவில்லை. அவர்கள் நியாயத்தைப் பார்க்கிறார்கள். நாங்கள் எதைச் செய்கிறோம் என்பதைப் பார்க்கிறார்கள். எதை எங்களால் செய்ய முடியும் என்பதைப் பார்க்கிறார்கள், முடிந்ததை நாங்கள் செய்கிறோம் என்பதை அவர்கள் பார்த்து அதற்கு மேல் என்ன செய்வார்கள் பாவம் என்று அவர்கள் எங்களைப் பார்த்து இரக்கப்படுகிறார்கள். நாம்தானே ஏமாற்றுகிறோம் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். அவர்கள் எங்கள்மீது கோபப்படுகிறார்கள் என்பதல்ல, எங்களுடைய நிலையைப் பார்த்து இரக்கப்படுகிறார்கள், இவ்வளவையும் தாங்கிக்கொண்டு இவர்கள் ஆண்டு கொண்டு இருக்கிறார்கள் என்று எங்களைப் பார்த்து இரக்கப்படுகிறார்கள்.





ஆகவே வசூலைப் பொறுத்தவரையில் அந்த ஏற்பாடுகளைச் செய்வதிலே ஆட்சேபணை இல்லை.

அடுத்து வறட்சி, வறட்சி என்று சொன்னார்கள். 1982-83, 1983-84-ஆம் ஆண்டுகளிலே இருந்த அளவுக்கு வறட்சி கடுமையாக, கொடுமையாக "drastic and severe drough" என்று சொல்கிற அளவுக்கு வறட்சி ஏற்படவில்லை. தமிழகம் முழுவதும் மழை பரவலாகப் பெய்யாமல் சிலபல இடங்களிலே பொய்த்து இருக்கிறது. அப்படிப் பொய்த்துவிட்ட காரணத்தினால் மானாவாரிப் பயிர்கள் பாதிக்கப்பட்டபோது எல்லாம் அப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வரி தள்ளுபடி போன்ற மற்றவைகளைச் செய்யவேண்டுமென்று அரசு உன்னிப்பாக இருந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சொல்லி வந்திருக்கிறது.

மழை சில இடங்களிலே பொய்த்து சில இடங்களிலே மழை பெய்ய வேண்டிய அளவுக்குப் பெய்யாமல் குறைவாகப் பெய்த நிலைமை இருந்தாலும் வறட்சி என்ற இலக்கணத்திற்குள் வருகின்ற அளவுக்கு மாவட்ட அளவிலோ வட்ட அளவிலோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்கிறேன், 1984 ஆம் ஆண்டை எடுத்துக் கொண்டால் ஜனவரி தொடங்கி டிசம்பர் மாதம் வரையிலும் — இயல்பாக 50 ஆண்டுகளாகப் பெய்த மழையின் அளவைக் கணக்கிட்டுப் பார்த்து ஆவரேஜாகப் பார்க்கிறபோது 942.8 மில்லி மீட்டர் ஆகும்—969 மி.மீ. பெய்திருக்கிறது. ஆகவே இயல்பாகப் பெய்யவேண்டிய அளவிற்கும் கூடுதலாக 26.2 மி.மீ. பெய்திருக்கிறது. ஆகவே 1982-83, 1983-84 ஆம் ஆண்டுகளிலே இருந்த மாதிரி வறட்சியாலே எல்லோரும் பாதிக்கப்பட்டார்கள் என்று சொல்ல முடியவில்லை. பெய்ய வேண்டிய அளவுக்குச் சற்றுக் கூடுதலாகப் பெய்திருக்கிறது.

1985 ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால் ஜனவரி மாதத்திலே — இயல்பாக அந்த மாதத்திலே பெய்ய வேண்டிய மழையின் அளவு 88.4 மி.மீ.—பெய்த மழையின் அளவு 35.1 மி.மீ. ஆகவே அந்த மாதம் 53.3 மி.மீ. மழை குறைவாகப் பெய்திருக்கிறது. அதைப்போலவே பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே மாதங்களைக் கணக்கிட்டுப் பார்த்தால் பெய்ய வேண்டிய அளவிலே பெய்யாமல்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூன் 11

போய் இருக்கிறது. மான்சூன் என்று அமைகிறபோது 1985 ஆம் ஆண்டிலே ஜனவரி முதல் மே இறுதி வரையில் 138.78 மி.மீ. இயல் பாகப் பெய்திருக்க வேண்டும், ஆனால் அந்தக் காலத்திலே 161 மி.மீ. தான் பெய்திருக்கிறது. ஆகவே 27.7 மி.மீ. குறை வாகப் பெய்திருக்கிறது. அதாவது 4 சத விகிதம் குறைவாகப் பெய்திருக்கிறது. பெய்ய வேண்டிய மழை ஓரளவுக்குப் பெய்திருக்கிறது.

இப்போது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி நமக்குக் கிடைத்து இருக்கிறது. இந்த ஆண்டு ஜூன் துவங்கிய பிறகு முதல் நாளிலிருந்து ஒரு வாரம் காலம் வரையிலே தமிழகம் முழுவதும் மழை பெய்திருக்கிறது. பருவ மழை இந்த ஆண்டு தவறாது என்ற நல்ல அறிகுறி நமக்குத் தென்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையிலே பெய்கின்ற மழையளவும் அதைப்போலவே குற்றாலத்திற்கு நீர்வருகின்ற நிலைமையைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது இந்த ஆண்டு நம்மைக் கைவிடாது என்ற நிலைமை தோன்றி இருக்கிறது என்ற முறையிலே கடந்த ஒரு வார காலமாக தமிழகம் முழுவதும் மழை பெய்திருக்கிறது. தென் மேற்குப் பருவக் காற்று நமக்கும் இலங்கைக்கும் மழை யைப் பெய்விக்கும். இலங்கையிலே இப்போது அபரிமிதமான மழை பெய்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது.

(பிற்பகல் 1-40)

இந்த ஆண்டிலே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதைப் போன்று, எங்கு, எங்கு, உள்ளபடியே மழை தவறி அங்கே பயிர்கள் பாழ்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்டிருக் கிறார்களோ அங்கு அங்கு வரி வஜா செய்யலாம் என்ற அளவிற்கு நாம் அவர்களுக்கு இடம் கொடுத்திருக் கின்றோம். அந்தவகையில் கூட இதற்குமுன் 1387-வது பசலி யில் புயலும் வெள்ளமும் வந்தபொழுது 2,83,21,850 ரூபாய்க்கு நாம் தள்ளுபடி செய்தோம். 1388 பசலியில், வெள்ளத்தின்போது 57,06,201 ரூபாய்க்குத் தள்ளுபடி செய்தோம். 1390 ஆண்டிலே கூட 1,77,94,807 ரூபாய்க்குத் தள்ளுபடி செய்திருக்கிறோம். 1392 பசலியில், 1393 பசலியிலே கூட 3,43,39,797 ரூபாய் அளவுக்கு பெரும் வெள்ளம் வந்து தஞ்சை மாவட்டத்திற்கெல்லாம் பாதிக்கப்பட்டபொழுது தள்ளுபடி செய்திருக்கிறோம். ஆகவே,



1985 ஜூன் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தள்ளுபடி செய்வது என்பதையும் கொள்கையாகத்தான் வைத் திருக்கிறது. எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற கணக்கை வைத்துக்கொண்டுதான் அந்தப் பணிகள் எல்லாம் செய்யப்படுகின்றன.

குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலேயும்கூட மழை தவறி விட்டது என்று சொல்வதற்கில்லை. குமரி மாவட்டத் திலே குறிப்பிட்ட சில பகுதிகளிலே, சில பாக்கெட்டுகளிலேதான் மழை தவறி அங்கே பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற கணக்கு மட்டும் வந்திருக்கிறது.

1984 ஆம் ஆண்டு குமரி மாவட்டத்திலே பெய்த மழையி னுடைய அளவு 64.5 சதவீதம் ஆகும். 1985 ஜனவரி—மார்ச் வரை இம்மாவட்டத்தில் 11" மழை அளவு நிலையங்களில் பெய்த மழை அளவின் சராசரி 144.68 மில்லி மீட்டர் ஆகும். இயல்பான மழையைவிட 20 சதவீதம் கூடத்தான் பெய்திருக் கிறது. எனவே, பொதுவாக குமரி மாவட்டம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதற்கு இல்லை. ஆனால் சில பகுதிகளிலே, சில பாக்கெட்டுகளிலே ஏற்பட்டு இருக்கிறது. அதைப்பற்றிக் கவனித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் நாங்கள் சொல்லி இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க—இந்த நிலம் ஒப்படை செய்வதைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். இதிலே எவ்வளவு ஆக்கபூர்வமான பணிகளை விரைவாக மேற்கொள்ள வேண்டுமோ அதை மேற்கொள்வதற் கான முயற்சிகளிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம். அதைப் பற்றிய புள்ளிவிவரங்களெல்லாம் இந்தக் குறிப்புகளிலே மிகச் சிறப்பாகத் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, சென்ற ஆண்டு மட்டும் — 1-4-1984 முதல் 31-3-1985 வரையில் பயன்பெற்ற ஆதிதிராவிடர்கள் 1,460 பேர்; மற்றவர்கள் 5,459 பேர். மொத்தம் 6,919 பேர்.

பிரித்துக் கொடுக்கப்பட்ட நிலம் மட்டும், 10,510 ஏக்கர் 35 சென்ட் என்ற அளவிற்கு அவர்களுக்கு ஒப்படை செய்யப்பட் டிருக்கிறது. மேலும் அதற்கான தன்மைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. 1977-78 முதல் 1983-84 வரையிலும் வீட்டு

மனைப் பட்டா வழங்குவதிலேயும்கூட மொத்தத்திலே ஆதி திராவிடர்கள் 2,48,663 பேர் பலன் பெற்று இருக்கிறார்கள். மலை வாழ் பழங்குடியினர் 17,911 பேர். இதர இனத்தினர் 3,38,350 பேர். 6,04,924 பேர் மனைப்பட்டா பெற்றிருக்கிறார்கள்.

1—4—1984 முதல் 31—3—1985 வரையிலும் ஆதிதிராவிடர்கள் 93,483 பேர், மலைவாழ் பழங்குடியினர் 4,818 பேர், இதர இனத்தினர் 1,14,186. மொத்தம் 2,12,487.

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதைப்போன்று இந்த மனைப் பட்டாக்கள் கொடுப்பதிலே சில பல சங்கடங்கள் இருக்கின்றன. பலயிடங்களில் புஞ்சை நிலமோ, புறம்போக்கு நிலமோ மற்றவைகளோ இருந்தால், மனைப் பட்டா செய்வதற்கு வாய்ப்பு இருக்கின்ற இடங்களில், எளிதாகச் செய்ய முடிகிறது. தஞ்சை மாவட்டம் போன்ற பகுதிகளில், சிதம்பரம் போன்ற பகுதிகளில் ஆதி திராவிடர்களுக்கு மனைப் பட்டா செய்ய வேண்டுமென்றால் குறிப்பிட்ட நிலத்தை நாம் கையகப்படுத்த வேண்டி இருக்கிறது. குறிப்பிட்ட நிலத்தை கையகப்படுத்தலாம் என்ற யோசனை வந்து கையகப்படுத்துகின்றபொழுது அதற்கு உரியவர்கள் தடை ஆணை வாங்கி வந்து நிறுத்தி விடுகிறார்கள்.

இப்படிப்பட்ட சங்கடங்களெல்லாம் வருவதன் காரணமாகத் தான் பெருவாரியாகச் செய்ய முடியவில்லை இந்த நில அளவு எடுக்கின்ற வகையில் 166 வட்டங்கள் இருக்கின்றன. ஏற்கனவே தீவிர நில அளவை, மறு நில அளவை ஆகிய திட்டங்களின் மூலம் நில அளவை அண்மைக் காலத்தில் 68 வட்டங்களுக்கு முன்பு செய்து முடிக்கப்பட்டன. அதற்குப் பிறகு காலத்திற் கேற்றவாறு, சீர்மைப்படுத்தப்படும், மேம்பாடு செய்யப்படும் திட்டத்தின் கீழ் நில அளவை செய்தவை 95 வட்டங்களுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த 95 வட்டங்களுக்காகத்தான், நான்கைந்து ஆண்டுக் காலமாக நாம் எட்டாயிரத்துச் சில்லறை பேரை நியமித்து— தற்காலிக வேலை என்று சொல்லித்தான் அவர்களை நியமித்தோம். அவர்களிடத்தில் ஒப்பந்த உடன்பாடு கையெழுத்து வாங்குகின்ற பொழுது இது தற்காலிக வேலை, வேலை நின்றவுடனே வேலையை விட்டு நீங்க வேண்டிய





அவசியம் ஏற்படும் என்று முன்னரே எடுத்துச் சொல்லித்தான் அவர்களை வேலைக்கு வைத்திருக்கிறோம். இந்த வேலையை நீட்டித்துக்கொண்டு போக முடியாது. இந்த 95 வட்டங் களிலும் நில அளவை முறைகள் சீர்படுத்தப்பட்டு முடிந்து விடுமேயானால் இந்த வேலை முடிந்துவிடும். அப்படி இன்றைய நிலையில் வேலை செய்பவர்கள் 8,268 பேர் இருக்கிறார்கள். 30—9—1985 க்குள் இந்த வேலை முடிந்து விடும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 கோடி செலவாகிறது. இதுவரையில் ரூ. 26 கோடி ஆகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதுபோன்று 3, 4 ஆண்டுகளாக இருந்தவர்களை இந்தத் துறையிலேயே, இதே வேலையிலேயே திருப்பி வைக்க முடியாது. ஆனால் வேறு பல வாய்ப்புகள் இருக்குமானால், வேறு பல துறைகளைக் கலந்து வழங்கும்படியாகச் சொல்லியிருக்கிறோம். வேளாண்மைத் துறை, போக்குவரத்துத் துறை, நெடுஞ்சாலைத் துறை, மற்றவைகள் அவர்களை ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்குமேயானால் அந்தத் துறைகளோடு கலந்து முன்னுரிமை தர முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் துறையிலே கொடுப்பதற்கு வழிவகை ஏற்படாது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சாகுபடி ஆகிற அளவிலே கூட சில் பல கஷ்டங்கள் இருந்தாலுங்கூட 1982-83, 1983-84 ஆண்டுகளிலிருந்து அவ்வளவு கொடுமை—அப்பொழுது நாம் அரியானா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம், ஆந்திரா போன்ற மாநிலங்களுக்குச் சென்று அதிக விலை கொடுத்து அரிசியை வாங்கிக் கொண்டு வந்து இங்கே குறைந்த விலையிலே, நியாய விலைக் கடைகளிலே கொடுக்க வேண்டிய கட்டாயம் வந்தது. ஆனால், சென்ற ஆண்டு ஓரளவுக்கு அந்தச் சிரமம் குறைந்தது. இந்த ஆண்டு பிற மாநிலங்களை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இருக்காது என்றுதான் வேளாண்மைத் துறை கணக்கும் நமக்கு வருகிறது. இந்த ஆண்டு நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு பருவ மழை சிறப்பாக, செம்மையாக பெய்யுமேயானால் நாம் தொடர்ந்து அடுத்த ஆண்டும் வசதி வாய்ப்போடு இருக்க முடியும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூன் 11

தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இயல்பாக நாம் பார்ப்போமானால், எல்லாம் சரியாக நடைபெறுமானால், இது மார்ஜினல் சர்பிளஸ் ஸ்டேட்தான்—கூடுதலாகவே உபரியாக இருக்கக்கூடிய மாநிலம் தான் தமிழக மாநிலம். ஆனால், மார்ஜினல் டெபிசிட் ஸ்டேட் கர்நாடகம்; ஓரளவுக்குக் குறைந்த தன்மையைக் கொண்டது கர்நாடகம். எப்போதுமே பற்றாக்குறையைக் கொண்டிருப்பது கேரளம். எப்போதுமே அதிகமான உபரியைக் கொண்டிருப்பது ஆந்திரம். இந்த 4 மாநிலங்களும் கூட ஒன்றாகக் கூட்டாகுமேயானால், 4 மாநிலங்களுடைய பிரச்னைகள் கூட ஓரளவுக்கு ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்குவதிலுங்கூட சிரமம் குறையும். ஆனால் இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை நாம் பருவ மழையை எதிர்பார்க்கக் கூடிய சூழ்நிலை ஏற்படாது. 1983-84-ல் நெல் மற்றும் எல்லா தானியங்களும் சேர்ந்து 40.81 இலட்சம் ஹெக்டேரிலே பயிரிடப்பட்டது. 1984-85 லே 44.50 இலட்சம் ஹெக்டேர் நிலப் பரப்பிலே பயிரிடப்பட்டது. 1985-86-ல் எதிர்பார்ப்பது 47.50 இலட்சம் ஹெக்டேரிலே இவை யெல்லாம் பயிரிடப்பட முடியும் என்ற அளவுக்கு ஒரு யோசனையை வேளாண்மைத் துறை சொல்லி இருக்கிறது.

1983-84-ல் 22.84 இலட்சம் ஹெக்டேர் நிலப் பரப்பில் நெல் பயிரிடப்பட்டது. 1984-85-ல் 23.50 இலட்சம் ஹெக்டேர் நிலப் பரப்பில் பயிரிடப்பட்டது. 1985-86-ல் 26.50 இலட்சம் ஹெக்டேர் நிலப் பரப்பில் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1984-85-ல் 60 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி கிடைத்திருக்கிறது. 1985-86-ல் 63 இலட்சம் மெட்ரிக் டன்னாவது கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த நிலைமை சரியாகத்தான் இருக்கிறது.

மற்றொன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் கிராம நல அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுகிற தன்மையைப் பற்றிச் சொன்னார்கள். கிராம அதிகாரிகளைப் பொறுத்து சுப்ரீம் கோர்ட் என்ன தீர்ப்பு வழங்கியதோ அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே பலவற்றை நாம் செய்து கொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு 12,000-க்கு மேற்பட்டவர்களைத் தேர்ந்தெடுத் திருக்கிறோம். இன்னும் 200 பேர்களைத் தேர்ந்தெடுக்கப்பட முடியாத அளவிலே தடையாணை வாங்கி வைத்திருப்பதன் காரணமாக, முடிவு வருகிற வரையில் அதை நிரப்ப முடியாத நிலைமையில் இருக்கிறோம்.



1985 ஜூன் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கிராம அதிகாரிகள் பதவி நீக்கச் சட்டத்தின்படி பணியிலிருந்து விடுவிக்கப்படும் முன்னாள் கிராம அதிகாரிகள் ஒரு தொகை பெறத் தகுதியுள்ளவர்கள் ஆவார்கள். அவர்கள் பணி புரிந்த ஒவ்வொரு ஆண்டுக்கும் ½ மாத மதிப்பியல் ஊதியம் என்ற கணக்குப்படி தொகை வழங்கப்படும். உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் முடிவடையும் வரை அவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை இதிலே சேர்க்கப்பட்டு மீதித் தொகை வழங்கப்படும். இதுநாள் வரை பெறப்பட்ட மனுக்கள் 1,433; தொகை வழங்கப் பட்ட மனுக்கள் 831; தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் 324; நிலுவையில் உள்ள மனுக்கள் 278; இதுநாள் வரையில் ரூ. 4,78,330 வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எடுத்துச் சொன்னவாறு மற்றவைகள் எல்லாம் வழங்கப்படும்.

ஓய்வூதியம் பற்றி சொல்கின்றபொழுது கூட 1968-க்கு மேல் ஓய்வுபெற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கு அடிப்படை சம்பளம் ரூ. 60 ஆக இருந்திருக்கும்; பாதிச் சம்பளம் என்றால் ரூ. 30 தான் இருக்கும். அப்பொழுது ரூ. 18 தான் ஆசிரியர் களுக்குச் சம்பளம்; காவல் துறையினருக்குச் சம்பளம் என்று சொல்லும்போது ஓய்வூதியம் ரூ. 10 தான் வரும். அப்படி ரூ. 30, ரூ. 40, ரூ. 50 வரைக்கும் இருந்தவர்களுக்குத்தான் குறைந்த ஊதியம் என்று ரூ. 100 ஆக்கினோம். அந்தக் குறைந்த அளவை ரூ. 125 ஆக்கினோம். அந்தக் குறைந்த அளவை ரூ. 235 ஆக்கி யிருக்கிறோம். இப்பொழுது ஓய்வு பெறுகின்ற கடைநிலை யிலிருந்து மேல்நிலை வரையில் இருக்கின்றவர்களுக்கு, அதற்கென விதிமுறைகள் எல்லாம் வைத்திருக்கிறோம். ரூ. 600 சம்பளம் வாங்குகிறார்கள் என்றால் கிட்டத்தட்ட ரூ. 300-க்கு மேல் அவர்கள் வாங்குகிற அளவுக்குத்தான் இப்பொழுது நிலைமையிருக்கிறது. இதே 235 ரூபாய் என்பது எல்லோருக்கும் சேர்ந்து அமைகின்ற ஒன்று அல்ல என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன்.

(பிற்பகல் 1-50)

தமிழ் மொழிக் காவலர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் தெரிவித்தார்கள். ஏற்கெனவே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு ஓய்வூதியம் அளிக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டு, அதை எதிர்த்து ஒருவர் உச்ச நீதி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூன் 11

மன்றத்திற்குச் சென்றார். இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி, அது ஒரு பொது மொழி, அதை எதிர்த்துப் போராடியவர்களுக்கு தியாகி என்ற பெயரால் ஓய்வூதியம் வழங்கக்கூடாது என்று வேறு யாரும் அல்ல, தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவர்தான் வழக்குத் தொடர்ந்து, ஓய்வூதியம் வழங்குவதை தள்ளுபடி செய்தார்கள். அதன் பிறகு எப்படிக் கொடுக்கலாம் என்று யோசித்து, தமிழ் மொழிக் காவலர்கள், தமிழ் காக்க தியாகம் செய்தவர்கள் என்று அறிவித்து ஓய்வூதியம் தரலாம் என்று 20—6—1984 அன்று தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறையின் மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்டு, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அறிக்கை அனுப்புவதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விசாரணை செய்து, பரிந்துரை செய்து அனுப்பும் அறிக்கைகளை முற்றிலுமாக எதிர்பார்க்கிறோம். முற்றிலுமாக அறிக்கை வந்த பின்னால் 7 நபர்கள் கொண்ட உயர்மட்டக் குழு அதைப் பரிசீலனை செய்யும். பொது வழித் தலைவராக இந்தத் துறையின் செயலாளர் இருப்பார். 7 பேர்களும் ஒன்று சேர்ந்து பரிசீலனை செய்து, அவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கின்ற தன்மை ஏற்படும். அதற்கான நடவடிக்கை விரைந்து எடுக்கப்படும். எந்தத் தேதியிலிருந்து ஓய்வூதியம் வழங்கலாம் என்று வரும்போது, அதற்கான சட்ட திட்டங்கள் வரும்போது அதுபற்றி முடிவு செய்யலாம். இப்போதா அல்லது முன் தேதியிலிருந்தா என்பது பற்றி அப்போது முடிவு செய்யலாம். ஆக, விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, இந்தி எதிர்ப்புத் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் சில விதிகளை வைக்கிறோம் என்று சொல்லி, பலர் பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டுவிடாமல், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஒரு நாள் சிறையிலே இருந்தால் கூட ஓய்வூதியம் அளிக்க வேண்டுமென்று இந்த அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூன் 11]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அது எல்லாம் விவரக் குறிப்புகள்; நான் வாக்குறுதி தர முடியாது. காங்கிரஸ் தியாகிகளுக்கு முதலிலே 6 மாதம் என்று இருந்தது, 3 மாதம் என்று குறைக்கப்பட்டு, பிறகு ஒரு மாதம் இருந்தால் போதும் என்று தமிழ் நாட்டிலே ஆக்கினோம். ஆனால் மத்திய அரசு இன்னும் இந்த முடிவுக்கு வரவில்லை. அவர்களுடைய ரிக்கார்டுகளைப் பார்த்ததில் சிறையில் சரியாக இல்லை. அதன் பிறகு யாராவது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரியவர்கள் திரு. பக்தவத்சலம் போன்றவர்கள், திரு. சோமையாஜுலு போன்றவர்கள், திரு. கக்கன் போன்றவர்கள் பரிந்துரை செய்தால் தியாகிகளாக ஏற்றுக்கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் இதை ஒட்டு மொத்தமாகக் கண்காணித்து, எந்த வகையில் வைக்கலாம் என்பது பரிசீலனையின்போது வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது ஒரு நாளா, இரண்டு நாளா என்பதை இப்போது திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. நாடு காக்க தன்னுடைய நேரத்தை, உழைப்பை முழுமையாகச் செலவழித்த தியாகிகள் இருக்கிறார்கள். அதைப் போன்று மொழி காத்த தியாகிகளும் இருக்கிறார்கள். நாட்டைக் காப்பது எவ்வளவு முக்கியமோ அதைப்போன்று மொழியைக் காப்பதும் முக்கியமானது, மொழியின் மூலமாகத்தான் நாட்டின் சிறப்பு, நாட்டின் பண்பாடு, நாட்டின் நாகரீகம், பழக்க வழக்கங்கள் எல்லாவற்றையும் அறிந்து கொள்ள முடியும். அந்த வகையிலே நாம் முயற்சி செய்கிறோம்.

கடுமையான வார்த்தைகளை வழக்கம்போல் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுவதில் சிலவற்றிற்கு நான் அவ்வளவு அதிக அர்த்தம் கொடுத்து எடுத்துக்கொள்வதில்லை. சிலவற்றை அசையாகத் தள்ளிவிடுவது உண்டு. இலக்கியத்தில் அசை என்பது ஒன்று உண்டு. அந்த அசைக்கு பொருள் இல்லை. எடுத்துக்காட்டாக 'என்று சொன்னேன் அம்மா' என்று வரும். அந்த 'அம்மா' என்பதற்கு பொருள் கிடையாது. திரு. ரகுமான்கான் அவர்கள் சில சொற்களை, இந்த நேரத்தை விட்டால் வேறு நேரம் வராது. இடம் கிடைக்காது என்று எண்ணி, இங்கே பேசியிருக்கிறார்கள், அவற்றை எல்லாம் அசையாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, சொல்லுகின்ற குற்றச்சாட்டுகளுக்குக் கூட, நேரடியாகப் பொறுப்பில் இருக்கிற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இலக்கியப் பாணியில் அவற்றை அசையாகக் கருதி நான் கணக்கில் எடுத்துக்கொள்ள வில்லை என்று சொன்னால் அது இங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு பயன் இல்லாமல் போய்விடும். அதை அசையாகக் கருதுகிற நீங்கள் அசைகின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டும்: நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தி எதிர்ப்புத் தியாகிகளுக்கு 150 ரூபாய் தருவோம் என்று அறிவித்து பல ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அவர்களுக்குத் தரவில்லை. இதையும் வெறும் அசை என்று இலக்கியப் பாணியில் நீங்கள் சொல்வதாக இருந்தால் இந்தச் சமுதாய மக்களை நீங்கள் ஒதுக்கி வைப்பதாக ஆகும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்போது திரு. ரகுமான்கான் அவர்கள் பேசியதுதான் அசை (சிரிப்பு). நான் பேசும்போது நீங்கள் கூர்ந்து கவனித்திருக்க வேண்டும். அவர்கள் பேசுவதில் சில அசைகள் உண்டு, அவற்றை தள்ளி விடுவேன் என்பதாகச் சொன்னேன்; ஆக, எது அசை என்றால் இப்போது நீங்கள் பேசியதுதான் அசை என்ற வகையில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே துறை செம்மையாக இயங்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் நாம் இருக்கிறோம். மிகத் திறம்பட பணியாற்றுகின்றவர்கள் பல பேர் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களும் பாராட்டுதலுக்குரியவர்கள். அத்தனை பேருமே மோச மானவர்கள், அத்தனை பேரும் குற்றம் செய்பவர்கள், குறைபாடு உடையவர்கள் என்று அனைவரையும் அந்தத் துறையிலே நாம் தள்ளிவிட முடியாது. சில பேர் அவ்வாறு இருக்கக் கூடும். ஏசுபிரான் நம்பிய 12 பேரில் ஏசுபிரானையே காட்டிக் கொடுக்கக் கூடிய அளவுக்கு, ஏசுபிரானே ஏமாந்து போகின்ற அளவுக்கு ஜூடாஸ் என்று ஒருவன் இருந்தான். ஏசுபிரான் 12 பேரை நம்பினார். அவர்களில் ஒருவன் ஏசுபிரானைக் காட்டிக் கொடுக்க வந்துவிட்டான். இப்படி ஏசுபிரானுக்கே இந்தக் கதி என்றால் நம்மைப் போன்ற ஏமாளிகளுக்கு எப்படிப்பட்ட கதி ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் பலரையும் நம்புகிறோம். அவ்வாறு நம்புகின்ற சமயத்தில் எதிராக





அமைந்துவிடுகிறார்கள். ஒட்டுமொத்தமாக எல்லோரையும் சொல்லிவிட முடியாது. வருவாய்த் துறையில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னது மாதிரி அமைச்சர்கள் எல்லாம் போனாலும் கூட வட்ட ஆட்சியர்களும், மாவட்ட ஆட்சியர்களும் கடைசி வரையில் கூடவே இருந்து எல்லா பணிகளையும் பார்க்க வேண்டியவர்கள். அவைகளுக்கு அவர்கள் தலைமை தாங்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கின்ற கருத்துக்களை அனுதாபத்துடன் கேட்டு அதற்குரிய மரியாதை தந்து உரிய வகையில் செய்ய வேண்டும் என்று தாக்கீதுகள் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், தாசில்தார்களுக்கும் நாம் அனுப்பி வைத்திருக்கிறோம். சட்ட மன்ற உறுப்பினர்கள் என்று வந்தால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று வந்தால் அவர்கள் சொல்கின்ற குறைபாடுகளைக் கேட்டு அதில் எது நியாயமாக இருக்குமோ அதை எடுத்துச் செய்து, நியாயம் இல்லை என்றால் அவர்களுக்கு விளக்கம் தந்து அவர்களைக் கன்வின்ஸ் பண்ணி அனுப்புகின்ற முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று எல்லா மாவட்ட ஆட்சியர்களுக்கும், வட்டாட்சியர்களுக்கும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வளவு சிரமங்களுக்கு இடையிலே பணியாற்றுகின்ற நல்லவர்கள் பலரும் இருக்கிறார்கள்.

20 அம்சத் திட்டத்திலே இந்தியாவிலேயே முதலிடத்திலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை நன்றாகக் காணலாம். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திலும் தமிழகம் சிறப்பான இடத்தைப் பெற்று இருக்கின்றது. நலிந்தோருக்கு நல்வாழ்வு அளிக்கின்ற வகையிலேயும் திட்டமிட்டு, திட்டமிட்டு பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறார்கள். அதேபோன்று ஓய்வூதியம் முதியோருக்குக் தருகின்ற வகையிலேயும் நன்றாகச் செய்து வருகிறார்கள். ஆனால் குறைபாடுகள் இல்லாமல் இல்லை. ஆங்காங்கு குறைபாடுகள் இருக்கும். சாமார்த்தியம் உள்ளவர்கள் வென்றுவிடுவார்கள். கைத் திறனும், வாய்த் திறனும் கொண்டவர்கள் என்று பாரதிதாசன் அவர்கள் சொல்வது மாதிரி அப்படிப்பட்டவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் களையப்படுவதற்கு இருக்கின்றவர்கள் உதவி செய்ய வேண்டும். குறைகளைச்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூன் 11

சுட்டிக்காட்ட வேண்டும், ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வருவாய்த் துறை, மற்றைய துறைகளில் பணியாற்றுகின்றவர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்து வருவாய்த் துறையினுடைய சிறப்பு நிர்வாக ஆணையாளருக்கும் பாராட்டுதலைத் தெரிவித்து, துறையைச் சேர்ந்த செயலாளருக்கும் மற்றைய உதவியாளர்களுக்கும், அத்தனை பேர்களுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்து ஒத்துழைப்பு தந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.**

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

திரு. கோ. வீரய்யன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,26,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்.**

திரு. டி. ஆர். வேங்கடரமணன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.



1985 ஜூன் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 33,70,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.**

திருவாளர்கள் மு. இராமலிங்கம், கோ. வீரய்யன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 40,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

(பிற்பகல் 2-00)

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.**

திரு. கோ. வீரய்யன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 56,45,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

[1985 ஜூன் 11

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 27,31,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (12—6—1985) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

**(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.**

212. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

213. தமிழ்நாடு மாநில பண்ணைக் கழகத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

214. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசு தேர்வாணைக் குழு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு —நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 10—4—1985 ஆம் நாளிட்ட 367 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



1985 ஜூன் 11]

215. பழுது பார்க்கும் பணியின் காரணமாக உரிய உரிமங்களைக் கொண்டு பொது சாலைகளைப் பயன்படுத்தும் போக்குவரத்து வண்டிகளுக்கு செலுத்தும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 12—4—1985 ஆம் நாளிட்ட 903 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

**(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.**

96. கோரிக்கை எண் 1—நில வரித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

97. வருவாய்த் துறையின் 1985-86 ஆம் ஆண்டிற்கான சாதனை அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I.

(323ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 219 (1704)-க்கான விடையைக் காண்க.)

**விடை—**

(அ) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக்கள், சிறந்த தொழில்நுட்பம், கலைத்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறந்த படங்கள் அரசால் அமைக்கப்படும் உயர் மட்டக் குழுவின் மூலம் பரிசுக்குரியனவாக தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

இவ்வாறே, தாம் ஏற்றுள்ள பாத்திரத்தின் தனித்தன்மைக்கேற்ப, தம்மை ஈடுபடுத்தி, இயல்பான நடிப்பாற்றலை வெளிப்படுத்தும் திறமைகளின் அடிப்படையில் சிறந்த நடிகர், நடிகையர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

(ஆ) வழங்கப்படும் பரிசுகளின் விவரம்:—

| பரிசின் தரம். 1 | ரொக்கப் பரிசு. 2 | தங்கம்/வெள்ளி பதக்கங்களின் மதிப்பு. 3 |
|---|---|---|
| 1. சிறந்த படம் முதல் பரிசு | ரூ. 50,000 | ரூ. 250 (தங்கமுலாமிட்ட வெள்ளிப்பதக்கம் |
| 2. சிறந்த படம் இரண்டாவது பரிசு | ரூ. 30,000 | ரூ. 200 (வெள்ளிப்பதக்கம்) |
| 3. சிறந்த படம் மூன்றாவது பரிசு | ரூ. 20,000 | ரூ. 200 (வெள்ளிப்பதக்கம்) |
| 4. சிறந்த படம் சிறப்புப் பரிசு | ரூ 25,000 | ரூ. 200 (வெள்ளிப்பதக்கம்) |
| 5. சிறந்த குழந்தைகள் படம் முதல் பரிசு | ரூ. 10,000 | ரூ. 5,000 (தங்கப்பதக்கம்) |







| (1) | (2) | (3) |
|---|---|---|
| 6. சிறந்த குழந்தைகள் படம் இரண்டாவது பரிசு | — | ரூ. 5000 (தங்கப்பதக்கம்) |
| 7. சிறந்த குழந்தைகள் படம் மூன்றாவது பரிசு | — | ரூ. 5,000 (தங்கப்பதக்கம்) |
| 8. சிறந்த கருத்து விளக்கப் படம் ஒரே பரிசு | ரூ. 5,000 | ரூ. 200 (வெள்ளிப்பதக்கம்) |
| 9. இராஜா சாண்டோ நினைவுப் பரிசு | ரூ. 25,000 | ரூ. 850 (இராஜா சாண்டோ உருவம் பதித்த வெள்ளிக் கேடயம்) |

மேலும் தேர்வு செய்யப்படும் சிறந்த நடிகர், சிறந்த நடிகை, இயக்குநர், கதாசிரியர், உரையாடலாசிரியர், இசையமைப்பாளர், ஒளிப்பதிவாளர், பின்னணிப் பாடகர், பின்னணிப் பாடகி, பாடலாசிரியர், படத்தொகுப்பாளர், நகைச்சுவை நடிகர், நகைச்சுவை நடிகை, சண்டைக் காட்சி இயக்குநர் மற்றும் சிறப்புப்பரிசுக்குரிய சிறந்த நடிகர், சிறந்த நடிகை ஆகியோர் ஒவ்வொருவருக்கும் ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கங்கள் பரிசாக வழங்கப்படுகின்றன.

## இணைப்பு II.

( 363ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### 1. முன்னுரை.

நிர்வாக மேம்பாட்டுக்காக 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வருவாய் வாரியம் என்ற அமைப்பு கலைக்கப்பட்டு, வருவாய் மற்றும் நில நிருவாகம் குறித்த அலுவல்கள் மாநில அளவில் அதிகார வரம்பு கொண்ட மூன்று ஆணையர்களிடம் (சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், நில நிருவாக ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர்) பகிர்ந்தளிக்கப்பட்டது.

2. வருவாய் நிருவாகம் மாநிலத்தின் அடிப்படை நிருவாகமாகும். மாவட்ட வருவாய் மற்றும் பொது நிர்வாகம், நிலவரி மற்றும் தொடர்புடைய மேல் வரிகள் விதித்தல் மற்றும் வசூலித்தல், வேளாண்மை வருமானவரி, நகர்ப்புற நிலவரி கடன்கள் நில வருவாய் ஆவணங்கள் பராமரித்தல் ஆகிய அலுவல்கள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் பொறுப்பிலும், நில எடுப்பு, நில ஒப்படை, நில உரிமை மாற்றம், வீட்டுமனை ஒப்படை மற்றும் நிலப்பட்டாக்கள் வழங்கல் குறித்த அலுவல்கள் நில நிருவாக ஆணையர் பொறுப்பிலும், நிலச் சீர்திருத்தம் மற்றும் நில குடிவாரம் குறித்த அலுவல்கள் நிலச் சீர்திருத்த ஆணையர் பொறுப்பிலும் ஒப்படைக்கப்பட்டது.

3. மாவட்ட அளவில் இப்பணிகள், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களால், கோட்ட ஆட்சியர், வட்ட ஆட்சியர், நிலவருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர்கள் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட அளவிலான நிர்வாக வரம்பு, நில நிர்வாகம், வருவாய் நிர்வாகம் மற்றும் அத்தியாவசிய மீட்புப்பணிகளுடன் நின்று விடாமல் எண்ணற்ற வளர்ச்சி, மேம்பாட்டு பணிகளையும் உள்ளடக்கியுள்ளது. இம்மாநிலம் 16,549 வருவாய்க் கிராமங்கள் 1,097 உள் வட்டங்கள், 166 வட்டங்கள், 55 கோட்டங்கள் மற்றும் 18 மாவட்டங்களைக் கொண்டுள்ளது.

4. நில அளவை மற்றும் நில்வரி ஏற்பாட்டுத் துறை, வேளாண்மைப் பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் தேவையான வகையில் முதலில் நில அளவை செய்தல் அல்லது மீண்டும் நில அளவை செய்தல் பணியை மேற்கொள்கிறது. இத்துறை, மாவட்ட வரைபடங்களையும், வட்ட வரைபடங்களையும், கிராம வரைபடங்களையும் ஒவ்வொரு நில அளவை புலம் குறித்த (அவற்றின் உட்பிரிவினைகளைக் காட்டி) திட்ட வரை படங்களையும் தயாரிக்கிறது. நகர்ப் பகுதிகளில் செய்யப்படும் நில அளவைகளில் தனி நபர்களின் சொத்துக்களின் நகர்ப்புற எல்லைக்குள் புலப்படும் வகையில், நகரம். வளர்ச்சி வட்டாரங்கள், வார்டுகள் ஆகியவற்றின் வரைபடங்களைத் தயாரித்தளிக்கிறது. விற்பனை வாரிசுரிமை, கொடை பரிவர்த்தனை, நீதி மன்றத் தீர்ப்பாணை முதலியவற்றால் ஏற்படும் மாற்றங்களைக் கருத்தில் கொண்டு நாளது வரையிலான ஆவணங்களைப் பராமரிப்பதற்கும் இத்துறை பொறுப்பு வகிக்கிறது.



5. நில அளவை மற்றும் நில்வரி ஏற்பாடடுத்துறை இயக்குநருக்கு நில அளவை தொடர்பாக, நில அளவை மற்றும் நில ஆவணங்கள் கூடுதல் இயக்குநர் ஒருவர் உதவி புரிகிறார். மூன்று வட்டார துணை இயக்குநர்களும் உள்ளனர். இவர்களின்கீழ் நில அளவை மற்றும் நில ஆவணங்களும் குறித்த 16 உதவி இயக்குநர்களும், 12 தனி உதவி இயக்குநர்களும் உள்ளனர். தலைமையிட அலுவலகத்தில் துணை இயக்குநர் தலைமையில் மைய நில அளவை அலுவலகம் ஒன்றும் உள்ளது. வரைபடங்கள் வரைவதற்கு இரு உதவி இயக்குநர்களும், "போட்டோ சிங்க்" அச்சகத்தைக் கவனித்துக் கொள்ள பணி மேலாளர் ஒருவரும் இவருக்கு உதவி புரிகின்றனர். இந்த அலுவலகம், துறையின் வரைபடங்களைத் தயாரிப்பதிலும், அச்சிடுவதிலும், வெளியிடுவதிலும், கருவிகளையும், பொருட்களையும் வாங்குவதிலும், ஈடுபட்டுள்ளது. நவீன தொழில்நுட்ப முறைகளை மேற்கொண்டு, இத்துறை வரைபடங்கள், நில வரைபடங்கள் ஆகியவற்றை வரையும் பணியின் தரத்தை மேலும் மேம்படுத்தும் பொருட்டு வரைபடங்கள் வரையும் நவீன மேஜைகள் வரைபடக் கருவிகள் ஆகியவை இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 2. கிராம நிருவாகம்.

புதிய முழுநேர அலுவலர்கள் முறை 14—11—1980 முதல் அமுலுக்கு வந்தது. 12,550 முழுநேர கிராம நிர்வாக அலுவலர்கள் பதவிகள் தோற்றுவிக்கப்பட்டன. முன்னாள் கிராம அதிகாரிகளுள் தகுதியுடையோர் மாநில தேர்வுகாண் குழு மூலமும் மற்றும் தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணைக்குழு மூலமும் நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு நில அளவை மற்றும் கிராம நிர்வாகம் ஆகியவற்றுள் பயிற்சி அளித்து, அவற்றுள் தேர்ச்சி பெற்றபின் கிராம நிர்வாக அலுவலர்களாக நியமிக்கப்பட்டு விட்டனர்.

புதிய கிராம நிர்வாக அலுவலர்களை மாவட்டத்திற்குள் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு மாற்றம் செய்ய இயலும். முழுநேர அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து சலுகைகளும், கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன. முன்பிருந்த பகுதிநேரக் கிராம அதிகாரிகள் அமைப்பில், தாழ்த்தப்பட்டோருக்கு உரிய விழுக்

காடு பணியிடங்கள் ஒதுக்கப்படவில்லை. தற்போது, புதிய முறையில் தாழ்த்தப்பட்டோருக்கு உரிய பணியிடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. 252 பெண்களும் கிராம நிர்வாக அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பகுதிநேரக் கிராம ஊழியர்களான, கிராமக் காவலர்கள், கிராமப்பணியாளர்கள், மற்றும் பாசனக் காவலர்கள் தொடர்ந்து பணியில் உள்ளனர். அவர்களுக்கெனத் தனியாக, 1980-ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊழியர்கள் பணிவிதிகள் என்ற பணி விதிகள் இயற்றப்பட்டுள்ளன. அவர்களது ஓய்வு பெறும் வயது 60 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முழுநேர அரசு ஊழியர் களுக்கு அகவிலைப்படி உயர்த்தும்போதெல்லாம், ஒவ்வொரு தவணைக்கும் ரூ. 5 வீதம் கிராம ஊழியர்களுக்கும் உயர்த்தப் பட்டு, அவர்களது தற்போதைய மதிப்பூதியம் ரூ. 140 லிருந்து ரூ. 270 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1—5—1985 முதல் அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி ஒரு தவணை உயர்த்தப் பட்டதன் பேரில் கிராம ஊழியர்களின் மதிப்பூதியத்தை மேலும் ரூ. 5 உயர்த்தி 1—5—1985 முதல் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**3. மாவட்ட வருவாய் திருவாகம் குறித்த ஒரு நபர் குழு.**

மாவட்ட வருவாய் நிருவாகத்தைச் சீரமைக்க வேண்டுமென்ற கிராம மக்களின் நெடுநாள் கனவு நனவாக, மாவட்ட வருவாய் நிருவாகத்தின் திறனை உயர்த்தி நிருவாகத்தைச் சீரமைக்கவும் பொது மக்களின் நலன் கருதி குறைகளை விரைவில் தீர்த்து வைக்கவும் அரசு பலவகையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

திரு. எஸ். பி. அம்புரோஸ் அவர்கள் தலைமையில் அமைக்கப் பட்ட ஒருநபர் குழு, 184 பரிந்துரைகளைக் கொடுத்துள்ளது. அவை பெரும்பாலும் தற்போதுள்ள நடைமுறைகளை எளிமைப் படுத்துவது, பயனற்ற பணியை நீக்கிவிடுவது, கோட்பாடுகள் வகுத்துக்கொண்டு பணிகளை விரைந்து முடிப்பது, வருவாய் அதிகாரிகளுக்கு வசதிகள் செய்து கொடுப்பது, வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு திடீரென்று சென்று, பதிவேடுகளைச் சோதனையிடுவது, மாவட்ட ஆட்சியாளர்களும், மாவட்ட வருவாய் அதிகாரிகளும் நேரடியாகச் சென்று பணிகளைப் பார்வையிடுவது, வட்ட அலுவலகங்களிலும், கோட்ட அலுவல



கங்களிலும் சில பதவிகளை ஏற்படுத்துவது, வட்டாட்சியர் களுக்கு ஜீப் வழங்குவது, மாவட்ட ஆட்சியர்களும் கோட்டாட்சி யர்களும் சுற்றுப்பயணத்தில் அதிக காலத்தைக் கழிப்பதைக் குறைப்பது, நிலவரி முறையில் நடைமுறை மாற்றங்கள் செய்வது, மாவட்ட ஆட்சியர்களுக்கும் மாவட்ட வருவாய் அதிகாரி களுக்கும், கோட்டாட்சியர்களுக்கும, வட்டாட்சியர்களுக்கும் நிதி சம்பந்தமாகவும், நிருவாக சமபந்தமாகவும், அதிகாரங் களைப் பிரித்துக் கொடுப்பது ஆகியவை தொடர்பானவையாகும். அரசு இப் பரிந்துரைகளை கவனமாகப் பரிசீலித்து 154 பரிந் துரைகள் மீது ஆணைகள் பிறப்பித்துள்ளது. ஏனைய பரிந் துரைகள், பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

4. வருவாய்த் துறை ஆட்சி வரம்பு.

நிர்வாக அமைப்பில் கிராமத்தை அடுத்து முக்கிய இடம் வகிப்பது பிர்க்கா (குறு வட்டம்) ஆகும். ஒரு நபர்க் குழுவின் (அம்பு ரோஸ் குழு) பரிந்துரைகளுக்கேற்ப பிர்க்காகளின் எண்ணிக்கை 1977-78-ல் 774 ஆக இருந்ததை 1980-81-ல் 1,097 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

2. வருவாய் நிருவாக அமைபபில் வட்ட அலுவலகம் அதிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. தற்போதுள்ள வட்ட அலுவலகங்களில் வேலைப் பளுவைக் குறைத்து நிர்வாகத் திறனை மேம்படுத்தும் பொருட்டு 33 சார்நிலை துணை வட்டங்கள் 1977-78 ஆம் ஆண்டிலிருந்து வட்டங்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

3. 1978-79-ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கோத்தகிரி என்ற புது வட்டம் அமைக்கப்பட்டது. கிராமங்கள், குறுவட்டங்கள் மற்றும் வட்டங்கள் ஆகியவற்றை அதிகப்படுத்தி சீரமைத்ததை அடுத்து வருவாய்க் கோட்டங்களையும் சீரமைத்தல் அவசியம் என கருதப் பட்டது. எனவே, அரசு 1978-79 இல் நாகர்கோவில் மற்றும் 1979-80-இல் அருப்புக்கோட்டை மற்றும் கூனூர் ஆகிய மூன்று வருவாய்க் கோட்டங்களையும் 1982-83-இல் தாராபுரம் மற்றும் 1983-84-இல் கடலூர் மற்றும் திருப்பூர் ஆகிய மேலும் மூன்று வருவாய்க் கோட்டங்களையும் அரசு ஏற்படுத்தியது. மேலும்

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி என்ற புதிய வருவாய்க் கோட்டம் ஏற்படுத்தவும் அரசு ஆணை பிறப்பித்து வருவாய்க் கோட்டங்களின் எண்ணிக்கையை 48-லிருந்து 55-ஆக உயர்த்தியுள்ளது.

4. நிர்வாக சீர்திருத்தக் குழு இம்மாநிலத்திலுள்ள பெரிய மாவட்டங்களைச் சீரமைத்து பிரித்து புதிய மாவட்டங்கள் ஏற்படுத்த பரிந்துரை செய்துள்ளது. மிகப்பெரிய மாவட்டங்களில் ஒன்றாக இருந்த கோயம்புத்தூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்ட பெரியார் மாவட்டம் 1979-80-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

5. 1984-85-ஆம் ஆண்டு ஆளுநர் தமது உரையில் புதிதாக உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்ட எட்டு புதிய மாவட்டங்களைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்குப் பதிலாக மூன்றாகப் பிரித்து நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட காயிதே மில்லத் மாவட்டம் அமைக்கவும் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய மாவட்டங்களில் அடங்கியுள்ள நிலப் பகுதிகள் மற்றும் அதன் தொடர்பான பரிந்துரைகளை அரசுக்கு நல்க ஒரு வல்லுநர் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

6. வல்லுநர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டம் மற்றும் விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராசர் மாவட்டம் ஆகியவற்றை உருவாக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. புதிய மாவட்டங்கள் 15—3—1985-இலிருந்து செயல்படத் துவங்கியுள்ளன.

7. புதிதாக அமையவுள்ள மாவட்டத் தலைமையகங்களான இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் நவீன நகரங்களை உருவாக்க அரசு முடிவெடுத்துள்ளது. புதிய மாவட்டங்களின் தலைமையிடங்களில் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுவது சம்பந்தமான பெருந்திட்டத்திற்கான வரை படங்கள் தயாரிப்பதற்காக சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் தலைமையில்



ஒரு குழுவினை அரசு நியமித்துள்ளது. அக்குழு தயாரித்த வரைபடங்களுக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்டுவதற்கு நிலங்களை கையகப்படுத்துதலுக்காக அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

8. வல்லுநர் குழு மதுரை மாவட்டத்தை இரண்டாக பிரித்து திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு அண்ணா மாவட்டம் அமைக்க அறிக்கை அளித்துள்ளது. இது சம்பந்தமாக முன்னோடி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அண்ணா மாவட்டத்தில் கொடைக்கானல் மற்றும் பழனி ஆகிய இரு புதிய வருவாய்க் கோட்டங்கள் உருவாக்கவும், எஞ்சியுள்ள மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி என்ற புதிய வட்டம் அமைக்கவும் அரசு முடிவெடுத்துள்ளது.

9. வல்லுநர் குழு திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரிப்பது சம்பந்தமான அறிக்கையை அரசுக்கு நல்கியுள்ளது. அவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு மற்றும் தென்னாற்காடு மாவட்டங்கள் குறித்த அறிக்கைகளை வல்லுநர் குழு அரசுக்கு அளிக்க வேண்டியுள்ளது.

10. 1985-86-ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து செய்யூரில் ஒரு புதிய வட்டம் ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. அதுபோன்று 1985-86-ல் தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி மற்றும் ஓசூர் வருவாய்க் கோட்டங்களைச் சீரமைத்து கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய வருவாய்க் கோட்டம் ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

### 5. இயற்கை இடர்பாடுகள்.

(அ) பாதக பருவநிலை—

1984 ஆம் ஆண்டில் மாநிலத்தில் தென்மேற்குப் பருவமழை இயல்பான அளவில் இருந்தது. வடகிழக்குப் பருவகாலத்தில் சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் இயல்பான மழை பெய்துள்ளது. மற்ற மாவட்டங்களில் இக்காலத்தில் குறைவான அளவே மழை பெய்துள்ளது. மாநிலத்தில் 1984-ஆம் ஆண்டுக்கான இயல்பான

மழையின் அளவு 942.8 மி.மீ. ஆகும். பெய்த மழையின் அளவு 969.0 மி.மீ. ஆகும். ஆகவே 1984 ஆம் ஆண்டு முழுவதும் பெய்த மழையின் அளவு இயல்பான அளவே ஆகும். 1985 ஆம் ஆண்டு சனவரி மாதம் மாநிலத்தில் நல்ல மழை பெய்தது. சனவரி மாத இயல்பான மழை அளவு 35.1 மி.மீட்டர். பெய்த மழை அளவு 88.4 மி.மீ. இது இயல்பான மழை அளவைவிட 151 சதவீதம் அதிகமாகும். 1985 ஆம் ஆண்டில் மார்ச் மாதத்திலும், தென் மாவட்டங்களில் பரவலாக மழை பெய்தது.

2. குடிதண்ணீர் கட்டுப்பாடு உள்ள மாநிலத்தில் சில பகுதிகளில் மாவட்ட ஆட்சி தலைவர்கள், பொது குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்தும் பணிக்காக நிதி அனுமதிக்கக் கோரி செயற்குறிப்புக்கள் அனுப்பியிருந்தனர். மாநிலத்தில் நிலவிவரும் பருவநிலை குறித்தும், குறிப்பாக குடிநீர் தட்டுப்பாடு நிலைமையையும் ஆராயும் பொருட்டு தலைமைச் செயலர் அவர்களின் தலைமையில் 28—3—1985 அன்று அரசின் உயர்மட்ட அதிகாரிகளின் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுத்த முடிவின்படி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்கள் மற்றும் நகர பஞ்சாயத்துக்களில் உள்ள பொதுக் குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்தும் பணிக்காக அரசு ரூபாய் 100 இலட்சம் தொகையை அனுமதித்துள்ளது.

3. குடிநீர் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொண்டு செயல்படுத்த வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து 11—4—1985, 29—4—1985 மற்றும் 20—5—1985 ஆகிய தேதிகளில் தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட கூட்டங்களில் விவாதிக்கப்பட்டது. இக்கூட்டங்களில் எடுத்த முடிவின்படி, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர், தொடர்புடைய அரசுச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் ஆகியோர் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து தங்களது அறிக்கைகளை அரசுக்குச் சமர்ப்பித்தனர். அனைத்து நிலவரங்களுடன்



நிலைமையை ஆய்வு செய்த பின், நிலத்தடி நீரின் தன்மையைக் கருத்திற் கொண்டு கீழ்க்கண்ட 25 வட்டங்களும் குடிநீர்ப் பற்றாக்குறை பகுதிகள் என கருதப்பட்டுள்ளது.

| | வட்டம். (1) | மாவட்டம் (2) |
|---|---|---|
| 1 | கரூர் | திருச்சிராப்பள்ளி. |
| 2 | குளித்தலை | டி |
| 3 | மணப்பாறை | டி |
| 4 | முசிறி | டி |
| 5 | துறையூர் | டி |
| 6 | பெரம்பலூர் | டி |
| 7 | சேலம் | சேலம் |
| 8 | திருச்செங்கோடு | டி |
| 9 | நாமக்கல் | டி |
| 10 | சங்கரி | டி |
| 11 | ராசிபுரம் | டி |
| 12 | ஓமலூர் | டி |
| 13 | ஆத்தூர் | டி |
| 14 | மேட்டூர் | டி |
| 15 | வேடசந்தூர் | மதுரை. |
| 16 | திண்டுக்கல் | டி |
| 17 | பழனி | டி |
| 18 | நிலக்கோட்டை | டி |
| 19 | உசிலம்பட்டி | டி |
| 20 | பெரியகுளம் | டி |
| 21 | பல்லடம் | கோயம்புத்தூர். |
| 22 | அவினாசி | டி |
| 23 | தாராபுரம் | பெரியார் |
| 24. | பவானி | டி |
| 25 | அரூர் | தர்மபுரி |

4. குடிநீர்ப் பற்றாக்குறை நிலவிடும் பகுதிகள் என கருதப்படும் மேற்கண்ட 25 வட்டங்களிலும் உள்ள மொத்த ஊராட்சி ஒன்றியங்கள் 89 ஆகும். தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் தனது சாதாரணத் திட்டங்களை செயல்படுத்துவதுடன் மேற்குறித்த 25 வட்டங்களிலும் 660 குழாய்ச் கிணறுகளை அமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

5. கீழ்க்கண்ட செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.—

(1) லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய திண்டுக்கல் நகராட்சிக்கு ரூ. 1.50 இலட்சமும், ராசிபுரம் நகராட்சிக்கு ரூ. 50,000 மும் வழங்க அனுமதித்தல்;

(2) நகராட்சிப் பகுதிகளில் உள்ள குழாய்க் கிணறுகளை ஆழப்படுத்த ரூ. 2.50 இலட்சம் வழங்குதல்;

(3) குடிநீர் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட நகராட்சிகளுக்கு 25 புதிய குழாய்க் கிணறுகள் அமைக்க அனுமதி வழங்குதல்.

6. சென்னை நகரில் கடைமுனைப் பகுதிகளில் குறைந்த அளவு நீர் கிடைக்கும் நிலைமையைச் சமாளிக்க சென்னை மாநகர பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் முடுக்கி விடப்படும். பம்பு செட்டுகளைப் பழுது பார்த்து பராமரித்தல், குடிநீர்க் கிணறுகளை தூர் எடுத்தல், அடைப்புகளைச் சுத்தப்படுத்தல் முதலிய நடவடிக்கைகளை துரிதமாகச் செயல்படுத்துவது தற்போதைய குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்படும்.

7. குழாய்க் கிணறுகளின் அடைப்புக்களை நீக்கி சுத்தப்படுத்தும் (Flushing) பணியைச் செய்யுமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மாநில அளவில் சுற்றுப்பயணம் செய்யும் அலுவலர்கள் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து குழாய்க் கிணறுகள். கைப் பம்புகள் போன்றவை சரியாக செயல்படும் நிலையில் உள்ளனவா வென்றும் இவைபற்றிய பதிவேடுகள் சரிவர பராமரிக்கப்பட்டு வருகின்றனவாவென்றும் சோதனை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

8. மாநிலத்தில் எந்தப் பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டாலும் அதைத் திறம்பட சமாளிக்க சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுரைகள் வழங்கி தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்வதன் மூலம் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.





(ஆ) புயல் மற்றும் வெள்ளம்.

1984 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், தமிழ் நாட்டின் பெருவாரியான பகுதிகள் பருவம் தவறிய பெருமழைக் குள்ளாகின. இப்பெருமழையினால், சென்னை, தஞ்சாவூர், தென் னாற்காடு, செங்கை, திருநெல்வேலி, இராமநாதபுரம், வட ஆற்காடு, புதுக்கோட்டை, திருச்சி மற்றும் மதுரை மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. 2.543 இலட்சம் ஹெக்டேர் சாகுபடி நிலங்களும், 85,710 குடிசைகளும் (முழுமையாகவும் பகுதி யாகவும்) பாதிக்கப்பட்டன. பொதுச் சொத்துக்களின் சேதம் ரூ. 13.94 கோடியாகும். இம்மழையினால், 19 பேர் உயிர் இழந்தனர்.

மீண்டும், மார்ச்சு 1984-ல் பலத்த மழை பெய்தது. மார்ச்சு 1984 முதல் பத்து நாட்களில், தென் மாவட்டங்களாகிய இராமநாதபுரம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங் களில் மிக பலத்த மழை பெய்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் 1942-ம் ஆண்டில் பாபநாசம் அணை கட்டியதிலிருந்து இன்று வரை என்றும் காணாத வகையில் பெருமழை பெய்து, தாமிரபரணி ஆற்றுப்படுகையை வெள்ளத்தில் மூழ்கடித்தது. ஏறத்தாழ 1.51 இலட்சம் ஹெக்டேர் சாகுபடி நிலங்களும் 42,678 குடிசைகளும் (முழுமையாகவும் பகுதியாகவும்) பாதிக்கப் பட்டன. 8,013 கால்நடைகள் உயிரிழந்தன. 28.22 கோடி ரூபாய் பெருமானமுள்ள பொதுச் சொத்துக்கள் சேதமடைந்தன.

நவம்பர் 9-ம் தேதி சென்னைக்கு தென் கிழக்கே 830 கி.மீ. தொலைவில் குறைந்த காற்றழுத்த மண்டலம் ஒன்று வங்கக் கடலில் உருவானது. அது மேலும் தீவிரமடைந்து புயற்காற்றாக மாறி ஆந்திர மாநிலத்திலுள்ள ஸ்ரீஹரிக்கோட்டா அருகில் நவம்பர் 14 ஆம் தேதி கரையைக் கடந்தது. சென்னை நகரமும் பொன்னேரி தாலுகாவின் சில பகுதிகளும், 120 கி.மீ. வரை வேகமுள்ள புயல் காற்றோடு சேர்ந்த மிக பலத்த மழைக் குள்ளாகின. இதன் விளைவாக நவம்பர் 13 மற்றும் 14 தேதி களிலும் மழை பெய்தது. செங்கல்பட்டு மாவட்டத்தின் கடலோர வட்டாரங்களாகிய செங்கல்பட்டு மற்றும் மதுராந்தக வட்டாரங்களும் இம்மழையினால் பாதிக்கப்பட்டன. செங்கை மாவட்டத்தில் 0.198 இலட்சம் ஹெக்டேர் சாகுபடி நிலங்களும்

பாதிக்கப்பட்டன. சென்னை நகரம் மற்றும் செங்கை மாவட்டத்திலும் சேர்த்து 2,05,787 குடிசைகள் முழுவதுமாகவும் பகுதியாகவும் பாதிக்கப்பட்டன. சென்னை நகரில் சாலைகள் சேதமடைந்ததோடு 954 சாலையோர மரங்கள் வேரோடு சாய்ந்து கட்டிடங்களுக்கும் மின் இணைப்புகளுக்கும் சேதம் விளைவித்தது. சுமார் 50 கோடி ரூபாய் பெருமானமுள்ள பொதுச் சொத்துக்கள் நாசமடைந்தன. இப்புயலினால் செங்கையில் 46 நபர்களும், சென்னை நகரில் 17 நபர்களும் உயிரிழந்தனர்.

27—11—1984 அன்று வங்கக் கடலில் உருவான புயற்காற்று காரைக்காலுக்கு அருகில் 1—12—1984 அன்று மாலை கரையைக் கடந்தது. இதன் விளைவாக தஞ்சாவூர் மற்றும் தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் சூறைக் காற்றுடன் கூடிய மிக பலத்த மழை பெய்தது. இதனால் தஞ்சாவூர் மாவட்டத்தில் 3,173 ஏக்கர் பரப்பிலுள்ள பயிர்கள் நாசமடைந்ததோடு 3,152 குடிசைகள் (முழுமையாகவும் பகுதியாகவும்) பாதிக்கப்பட்டன. இதேபோல் தென் ஆற்காடு மாவட்டத்தில் 291 குடிசைகள் பாதிக்கப்பட்டன.

## நிவாரணமும் புனர் வாழ்வும்.

வறட்சியைப் போல் அல்லாமல், வெள்ளமும் புயலும் மக்களுக்கு குறிப்பாக வறுமை நிலையிலுள்ள மக்களுக்கு சொல்லொணா துயரத்தை அளிக்கிறது. அரசு இவ்விஷயத்தை எப்போதும் மிகுந்த அக்கறையோடு கவனிப்பதோடல்லாமல், தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் விரிவான திட்டங்களை வரைந்துள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க 17—8—84 அன்று மாநில அளவில் நடந்த கூட்டத்தில் கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்களும், இதர துறைத் தலைவர்களும், காவல்படை அதிகாரிகளும் பங்கு பெற்றனர். பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் அத்தியாவசிய பொருட்களை சேகரித்து வைக்கவும், தேவைப்படும்போது போர்க்கால அடிப்படையில் நிவாரப்பணிகளை மேற்கொள்ள விழிப்புணர்வோடு இருக்கவும் மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டனர். வெள்ளத்தால் மூழ்கிய பகுதியிலுள்ள மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்க விமானப்படை மற்றும் கப்பற்படை ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டன. பாதிக்கப்பட்ட மற்றும் தாழ்வான

பகுதிவாழ் மக்களை பள்ளி மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி உணவளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட இடங்களுக்கு தேவையான மருந்துப் பொருட்கள் அவசர மருத்துவ அணிகள் அனுப்பப்பட்டன. அரசாணை பல்வகை எண். 1887, வருவாய், நாள், 19—11—1984-ல் முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தற்போதுள்ள நிவாரணத்தொகையாகிய ரூ. 200ஐ ரூ. 300 ஆக உயர்த்தியும், பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 50-ஐ 150 ஆக உயர்த்தியும் ஆணையிட்டுள்ளது. இதைத்தவிர பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும், 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், 1 சேலை, மற்றும் 1 வேஷ்டி ஆகியவைகள் இனாமாக வழங்கப்பட்டன. இயற்கை இன்னல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, முதலமைச்சர் நிவாரணத் தொகையிலிருந்து வழங்கப்படும் நிதித்தொகையை ரூ. 1,000-த்தை ரூ. 2,000 ஆக உயர்த்தி அரசு தனது ஆணை பல்வகை எண். 1905, வருவாய், நாள், 21—11—1984-ல் ஆணையிட்டுள்ளது.

நிவாரணத்திற்கான உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் மத்திய குழுவின் அறிக்கையின் அடிப்படையில் பிப்ரவரி 1984 மற்றும் மார்ச்சு 1984 வெள்ளத்தினால் ஏற்பட்ட நிவாரணப் பணிகளுக்கு 1984-85-ல் செலவிட ரூ. 8.41 கோடி உச்சவரம்பை மைய அரசு அங்கீகரித்தது. இதனை சம்பந்தப்பட துறைகளுக்கு சீரமைப்பு பணிகளுக்கு ஒப்பளிக்கப்பட்டது. நவம்பர் 1984-ல் வெள்ளம் மற்றும் புயலினால் ஏற்பட்ட பாதிப்புகளை மத்தியக்குழு பார்வையிட்டது. மத்திய அரசு ரூ. 18.76 கோடி உச்சவரம்புத் தொகையாக நவம்பர் 1984 வெள்ளத்திற்கு அளித்தது. இதனை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு சீரமைப்பு பணிகளுக்கு ஒப்பளிக்கப்பட்டது.

1984 டிசம்பர் மாதம் ஏற்பட்ட புயல்/வெள்ளச் சேதத்திற்கு மத்திய அரசு ரூ. 79.31 இலட்சம் உச்சவரம்பு தொகையாக அளித்தது. இதனை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஒப்பளிக்கப்பட்டது.

[1985 ஜூன் 11

### புயல் பாதுகாப்பிடங்கள்.

புயல், வெள்ளம் முதலியவற்றால் பாதிக்கப்படும் அல்லது அச்சுறுத்தப்படும் கடற்கரைப்பகுதிகளிலுள்ள மக்களுக்கு பாதுகாப்புக்கு வகைசெய்யும் பொருட்டு, அரசு இதுவரை 110 புயல் பாதுகாப்பிடங்களைக் கட்டுவதற்கு அனுமதியளித்துள்ளது. இவற்றில் 78 புயல் பாதுகாப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

புயல் பதுகாப்பிடங்களில் பெரும்பான்மையானவை மாவட்டங்களில் கடற்கரைப் பகுதிகளில் அமைந்துள்ளன. இங்கு அரசுக்கு அல்லது உள்ளாட்சி மன்றங்களுக்கு சொந்தமான பள்ளிக் கட்டிடங்கள் போன்ற நிலையான கட்டிடங்கள் இல்லை. புயல் பாதுகாப்பிடங்களில் முக்கியமான சுகாதார முதலுதவி வசதிகள், பொது சமையலறை, மளிகை சாமான்களையும் உணவு தானியங்களையும் சேமித்து வைப்பதற்கான வசதிகள், குளியலறை, கழிப்பறை வசதிகள் ஆகியவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளன. இவை வெள்ளத்தின் போதும் பயன்படுகின்றன. மழை இல்லாத காலங்களில், இப்பாதுகாப்பிடங்கள், அரசு அல்லது மற்ற தொண்டு முகவரமைப்புகள், மருந்தகங்கள், தையல் வகுப்புகள் முதலியவற்றை நடத்துவதற்கான சமூகப் பணி/சமுதாயப் பணி நிலையங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு மாவட்ட ஆட்சியர்கள் வரையறுக்கும் குறைந்த அளவு வாடகையைச் செலுத்துவதன் பேரில் அனுமதி வழங்கப்படுகிறது.

### ( III ) தீ. விபத்து.

வெள்ளம் மற்றும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை உயர்த்தி தரப்படுவது தீ விபத்தால் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கும் பொருந்தும்.

அகவிலைப்படி மற்றும் இதர ஈட்டுப்படிகள் நீங்கலாக மாத வருமானம் ரூ. 200-க்கு மிகைப்படாமல் பெறுவோர், மேற்படி ரொக்க மானியம் பெறத் தகுதியுடையவராகின்றனர்.



1985 ஜூன் 11]

மேற் குறிப்பிட்டவாறு ரொக்க மானியம் கொடுப்பதுடன், வெள்ளத்தாலும், புயலாலும், பாதிக்கப்படுவோர்களுக்கு இப்போது அளிக்கப்படுகிற நிவாரண உதவியை, தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அரசு அளித்து வருகிறது. அதன்படி தீ விபத்தில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய் (72 மணி நேரத்திற்கும் மேலாக மின்சார சக்தி தடங்கல் ஏற்படக்கூடுமாயின்) ஒரு வேட்டி, அல்லது லுங்கி, ஒரு புடவை இலவசமாக வழங்கப்படுகின்றது.

ஒரு குடும்பத்தில் வருமானம் ஈட்டி குடும்பத்தைக் காப்பாற்றுபவர் தீ விபத்தால் உயிரிழந்து அதனால் அவருடைய குடும்பம் வறுமைக்குள்ளானால், உயிரிழந்தவருடைய வாரிசுதாரர்களுக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 2,000 வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது.

### 6. நிலமற்ற ஏழை மக்களுக்கு நிலம் ஒப்படை செய்தல்.

பயிர்த் தொழிலில் நேரடியாக ஈடுபடக்கூடிய நிலமற்ற ஏழை மக்களுக்கு நீண்ட நாள் தரிசாக உள்ள நிலங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. 5 பேர் அல்லது அதற்குக் குறைவாக உள்ள ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக வருமானமிருப்பின் அவர் "ஏழை" எனக் கருதப்படுகிறார். அவ்வாறே, ஒரு குடும்பத்தில் 5 பேருக்கு அதிகமாக இருப்பின் அவரது மாத வருமானம் ரூ. 250 அல்லது அதற்குக், குறைவாக இருந்தால் "ஏழை" எனக் கருதப்படுகிறார்.

2. பயிரிடத்தக்க நிலங்கள் தகுதியுள்ளவர்களுக்கு பின்வரும் முன்னுரிமை அடிப்படையில் ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன:—

(1) போரில் வீரமரணம் அடைந்த அல்லது ஊனமையுற்ற எல்லைப் பாதுகாப்புப் படையினர், பிரதேச இராணுவத்தினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்கள்.

[1985 ஜூன் 11

(2) நிலமற்ற ஏழை ஆதி திராவிடர், பழங்குடியினர்.

(2அ) பொதுக் காரியங்களுக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டதனால் பாதிக்கப்பட்டு, நிலச் சொந்தக்காரராகவோ, குத்தகைதாரராகவோ. தாம் நேரடியாகப் பயிரிட்டு வந்த நிலங்கள் புன்செய் நிலமாயிருந்தால் 3 ஏக்கருக்குக் குறைவாக அல்லது நன்செய் நிலமாக இருந்தால் 1 ½ ஏக்கருக்குக் குறைவாக வைத்துள்ளவர்கள். ஆனால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டிருப்பின் ஒப்படை செய்யப்படும் நிலத்தின் மதிப்பு அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

(2ஆ) 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்புச்) சட்டத்தின் (மத்திய சட்டம் 19/1976) கீழ் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்.

3. முன்னாள் எல்லைப் பாதுகாப்புப் படையினர், முன்னாள் அஸ்ஸாம் துப்பாக்கிப் படையினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர்,

4. பர்மா, ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள்.

5. தங்கக் கட்டுப்பாடு ஆணையினால் வேலையிழந்த பொற்கொல்லர்.

6. முன்னாள் கள் இறக்குவோர்.

7. ஏனைய நிலமற்ற ஏழை மக்கள்.

8. விடுதலை செய்யப்பட்ட கைதிகள்.

3. பயிரிடுவதற்காக நிலம் ஒப்படை செய்யப்படுவதில் மேற்கூறிய முன்னுரிமை வரிசைப்படி, போரில் வீர மரணமடைந்த அல்லது ஊனமுற்ற எல்லைப் பாதுகாப்புப் படையினர், பிரதேச இராணுவத்தினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்களுக்கு அடுத்த உயர் முன்னுரிமை நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள் பழங்குடியினருக்கு அளிக்கப்பட்டுள்ளது.



1985 ஜூன் 11]

4. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவு பரப்பும் அவர் ஏற்கனவே வைத்திருக்கும் நிலப் பரப்பும் சேர்ந்து மொத்தம் 3 ஏக்கர் புன்செய் நிலமாக அல்லது 1 ½ ஏக்கர் நன்செய் நிலமாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் விலை அதிகமானதால் அங்கு ஒருவருக்கு உயரளவு அரசு தரிசு புன்செய் நிலமாயிருந்தால் ஒரு ஏக்கர் புன்செய் நிலமோ, அரசு தரிசு நன்செய் நிலமாயிருந்தால் ½ ஏக்கர் நன்செய் நிலமோ ஒப்படை செய்யப்படுகிறது.

5. நிலம் ஒப்படை செய்யப்பட்டவர், ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்குள் அந்த நிலத்தில் பயிர் செய்ய வேண்டும். 10 ஆண்டு காலத்திற்குள் அந்நிலத்தை விற்கவோ அன்றி உரிமை மாற்றம் செய்யவோ கூடாது. ஆனால் பயிரிடுவதற்காக கடன் வாங்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கலாம். நிலம் ஒப்படை செய்யப்பட்டவரே நிலத்தைப் பயிரிட வேண்டும் அல்லது அவருடைய குடும்ப உறுப்பினரோ, கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளரோதான் அந்த நிலத்தைப் பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்த நிலத்தை பயிரிடக் கூடாது.

6. இப்பணியை கவனிக்கும் பொருட்டு ஒவ்வொரு பிரிவிலும் வட்டாட்சியர் ஒருவர், உதவியாளர் பதவித் தரத்தில் வருவாய் ஆய்வாளர்கள் இருவர், உதவியாளர் ஒருவர் அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகிய சிறப்புப் பணியாளர்கள் அடங்கிய கீழ்க்கண்ட இரண்டு பிரிவுகள் அமைக்கப்பட்டன :—

| மாவட்டத்தின் பெயர். | பிரிவுகளின் எண்ணிக்கை. | பிரிவு ஒன்றுக்கு திங்கள் ஒன்றுக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| திருச்சிராப்பள்ளி | 1 | 250 ஏக்கர் அல்லது 200 இனங்கள். |
| மதுரை | 1 | 250 ஏக்கர் அல்லது 200 இனங்கள். |
| மொத்தம். | 2 | |

அரசு நிலங்களில் மறுப்புக்கிடமில்லா ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட தனிப் பணியாளர்கள் பிரிவு 28—2—85 பிற்பகல் முதல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கலைக்கப்பட்டுவிட்டது. மதுரை மாவட்டத்தில் இச் சிறப்புப் பிரிவின் பணியை 28—2—1985-க்கு மேல் நீட்டிக்க கருத்துரு அரசுக்கு தற்போது கிடைக்கப்பெற்று அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

7. இம்மாநிலத்தில் 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாளில் இருந்து 1985 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாள் வரையில் ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் மொத்தப் பரப்பு அவற்றால் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | | வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை. | | ஒப்படை செய்யப் பட்ட நிலங் களின் மொத்த பரப்பு. |
|---|---|---|---|---|
| | | ஆதி திராவிடர் / பழங் குடியினர். | ஏனையோர். | |
| (1) | | (2) | (3) | (4) |
| | | | | ஏ. செ. |
| 1. | செங்கல்பட்டு .. | 261 | 387 | 750.76 |
| 2. | தஞ்சாவூர் .. | 95 | 326 | 440.86 |
| 3. | சேலம் .. | 50 | 270 | 588.05 |
| 4. | திருச்சிராப்பள்ளி .. | 298 | 653 | 1,301.52 |
| 5. | கோயம்புத்தூர் .. | 10 | 2 | 10.44 |
| 6. | மதுரை .. | 38 | 775 | 1,922.93 |
| 7. | தர்மபுரி .. | 57 | 248 | 462.02 |
| 8. | இராமநாதபுரம் .. | 53 | 1,078 | 1,522.12 |
| 9. | திருநெல்வேலி .. | 39 | 319 | 858.67 |
| 10. | வடாற்காடு .. | 290 | 671 | 1,408.42 |
| 11. | தென்னாற்காடு .. | 217 | 427 | 942.57 |
| 12. | கன்னியாகுமரி .. | 15 | 77 | 16.52 |
| 13. | நீலகிரி .. | .. | .. | .. |
| 14. | புதுக்கோட்டை .. | 27 | 201 | 232.04 |
| 15. | பெரியார் .. | 10 | 25 | 53.43 |
| | மொத்தம் .. | 1,460 | 5,459 | 10,510.38 |





8. தகுதியற்றவர்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்டிருப்பதையும் நிலம் ஒப்படை செய்தபோது விதிக்கப்பட்ட நிபந்தனைகள் மீறப்பட்டுள்ள ஒப்படைகளையும் ரத்து செய்யும் நோக்கத்துடன் மாவட்டங்களில் செய்யப்பட்டுள்ள நில ஒப்படைகள் மறு ஆய்வு செய்யப்படுகின்றன. முன்பு ஒப்படை செய்த நிலம் குறித்து மறு ஆய்வு செய்வது தொடர்பாக அரசின் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு கீழ்க்கண்ட மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் இப்பணிக்காக கீழே குறிப்பிட்டுள்ள பணியாளர் அமர்த்தப்பட்டனர் :—

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | | பிரிவுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | | (2) |
| 1. | இராமநாதபுரம் .. | 2 (இரண்டு) |
| 2. | தஞ்சாவூர் .. | 2 (இரண்டு) |
| 3. | சேலம் .. | 2 (இரண்டு) |
| 4. | திருச்சிராப்பள்ளி .. | 2 (இரண்டு) |
| 5. | வடாற்காடு .. | 2 (இரண்டு) |
| 6. | தென்னாற்காடு .. | 2 (இரண்டு) |

ஒவ்வொரு பிரிவிலும் கீழ்க்காணும் பணியாளர்கள் உள்ளனர் :

| தொடர் எண்ணும் பதவியின் பெயரும். | | எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | | (2) |
| 1. | வட்டத்துணை ஆட்சியர் .. | 1 (ஒன்று) |
| 2. | வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் பதவி தரத்தில்) .. | 2 (இரண்டு) |
| 3. | உதவியாளர் .. | 1 (ஒன்று) |
| 4. | தட்டச்சர் .. | 1 (ஒன்று) |
| 5. | அடிப்படை பணியாளர் .. | 1 (ஒன்று) |

அரசு ஆணை நிலை எண். 1648, வருவாய்த்துறை, நாள் 29—9—84-ல் மேற்கூறிய மாவட்டங்களில் தனிப் பணியாளர்கள் நியமனம் செய்த நாளிலிருந்து ஆறு மாதத்திற்கு பணியாற்ற உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

செய்யப்படுகிறது. இத்திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்படுகிறது. இதுவரை 2,439 ஆதி ஆந்திரர்கள் ஆக்கிரமிப்புச் செய்துள்ளனர். இதில், 1,366 ஆக்கிரமிப்புகள் இதுவரை முறைப்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை மாநகரத்தில் குடிசைப் பகுதி மேம்பாட்டுச் சட்டத்தின்கீழ் அறிவிக்கையிடப்படாத பல்வேறு குடிசைப் பகுதிகளில் உள்ள குடிசைகள் ஆக்கிரமிப்பு முறைப்படுத்தல் பற்றிய பிரச்சினையை அரசு பரிசீலித்து, சென்னை மாநகரத்தில் ஆங்காங்கே விரவிக் கிடக்கின்ற ஆட்சேபனையற்ற குடிசைப் பகுதிகளைத் தவிர ஏனைய எல்லா குடிசைப் பகுதிக்கும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மேம்பாட்டுச் சட்டத்தின்கீழ் மேம்படுத்துவதற்காக அறிவிக்கையிடப்பட வேண்டுமென்றும், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விலை ஏதுமின்றி குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், ஆணையிடப்பட்டுள்ளது. குடிசை மாற்று வாரியம் இப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு அனுபோகதாரர் இடமிருந்து மனை ஒன்றுக்கு ரூ. 7,700-ம் மேம்பாட்டுச் செலவு ஏதேனுமிருந்தால் அதனையும் பெற்றுக்கொண்டு குத்தகை பத்திரம் எழுதிக் கொடுக்கும். நிலத்தின் விலையை ஐந்து ஆண்டுகளில் தவணை முறையில் வசூலிக்கக் கருதப்படுகிறது. நிலத்தின் பரப்பு 750 சதுர அடிக்கு அதிகமாயிருந்தால், உயர் அளவு, அரைமனை என்ற வரையறைக்குட்பட்டு, அந்த இடம் எப்படி உள்ளதோ அதே நிலையில் கொடுத்து விடுவது என்ற அடிப்படையில் நில ஒப்படை செய்யப்படும். தமிழ்நாடு குடிசைப்பகுதி மேம்பாட்டுச் சட்டத்தின்கீழ் மேம்படுத்துவதற்காக அறிவிக்கையிடப்படாததும், ஆட்சேபனையற்றதும் ஆங்காங்கே விரவிக் கிடப்பதுமான ஆக்கிரமிப்புகளை பொறுத்தவரையில் மனை ஒன்றுக்கு ரூ. 7,700 வசூலித்து வீட்டுமனை ஒப்படை செய்யப்படும். மனையில் உச்ச வரம்பு 750 சதுர அடியாக இருக்கும்.

வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள அனைத்து மக்களுக்கும் வீட்டுமனைகள் வழங்க வேண்டும் என்று சுதந்திர தின விழாவில் (15—8—1984) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு இணங்க ஒரு குடும்பத்தின் மொத்த ஆண்டு வருமானம் ரூ. 3,500-க்கு குறைவாக இருந்தால் அத்தகைய குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களாக கருதப்பட்டு,



சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்கள் தவிர பிற இடங்களில் 30—6—1984 வரையுள்ள ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் வீட்டு மனைகள் வழங்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பெரியநகரங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

"வீட்டுக்கு ஒரு மரம் வளர்த்தல்" திட்டத்தை செவ்வனே செயல்படுத்துவதற்காக அரசு நிலங்களில் வீட்டுமனை அளிக்கப்பட்ட ஒவ்வொருவரும் வீட்டின்முன் பக்கத்தில் அல்லது புறக்கடையில் குறைந்தது ஒரு மரமாவது வளர்க்க வேண்டும் என்ற நிபந்தனை கொண்டு வரப்பட்டுள்ளது.

**8. வளர்ச்சியை ஊக்குவிக்க அளிக்கப்பட்ட அரசு நிலங்கள்.**

கீழ்க்கண்ட நிலங்களை அரசு நிறுவனங்களுக்கு உரிமை மாற்றம் செய்ய அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது:

திருநெல்வேலி மாவட்டம், குலவணிகபுரம் கிராமத்தில் அலுவலர்கள் குடியிருப்புகள் கட்டுதலுக்கும் வீடு கட்டுவதற்காகவும் காவல் துறைக்கும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கும் நிலக்கிரயம் வசூல் செய்து கொண்டு 46.23 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்வதற்காக.

கோவை மாவட்டம், வலவாடி கிராமத்தில் 400 கி.வா. துணை மின் நிலையம் அமைப்பதற்காக மின்சார வாரியத்திற்கு 38.05 ஹெக்டேர் நிலம் நிலக்கிரயம் வசூல் செய்து கொண்டு நில உரிமை மாற்றம் செய்வதற்காக.

சென்னை ஸ்டான்லி மருத்துவமனை வளாகத்தில் அறுவை சிகிச்சை பிரிவிற்கு மின்சாரம் வழங்குவதற்காக 33/11 கி.வா. துணை மின் நிலையம் அமைக்க 31.90 15 ச. அடி. நிலத்தை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழங்க.

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு சைட்ஸ் மற்றும் சர்வீஸ் திட்டத்திற்காக செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டத்தில் மொகப்பேர் கிராமத்தில் 78.50 ஏக்கர்,

மதுரவாயில் கிராமத்தில் 0.94 ஏக்கர், நொளம்பூர் கிராமத்தில் 26.21 ஏக்கர் நிலங்களில் இறுதி ஆணையை எதிர்நோக்கி முன் நுழைய தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு அனுமதி வழங்கப் பட்டது.

தந்தை பெரியார் போக்குவரத்து கழகத்திற்கு பேருந்து நிலையம், உணவு விடுதி, சிறு வாகனங்கள் பராமரிக்கும் மற்றும் பழுது பார்க்கும் பட்டறை, பொது வசதிகள் அமைக்க செங்கல் பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மாமண்டூர் கிராமத்தில் 17.44 ஏக்கர் நிலங்களில் இறுதியாணையை எதிர்நோக்கி பிரவேசிக்க முன் அனுமதி வழங்கப்பட்டது.

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு கிராமத்தில் உள்ள அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கோவிலுக்கு மலைப்பாதை அமைப்பதற்காக 6 ஏக்கர் நிலம் கோவில் நிர்வாகத்திற்கு உரிமை மாற்றம் செய்வதற்கு.

நீலகிரி மாவட்டம், நஞ்சநாடு கிராமத்தில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆய்வு மையம் அமைப்பதற்கு 25.00 ஏக்கர் நிலத்தில் இறுதி ஆணையை எதிர்நோக்கி முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம், சூரியூர் கிராமத்தில் சிமிண்ட் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா ஆராய்ச்சி நிலையம் அமைப் பதற்கு 20 ஏக்கர் நிலத்தில் இறுதி ஆணையை எதிர்நோக்கி முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

9. மத்திய அரசின் துறைகளுக்கு மாற்றப்பட்ட நிலங்கள்.

இம்மாநிலத்தில் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளிப்பதையொட்டி, தொழிற்சாலைகளையும், ஏனைய பணிகளையும் தோற்றுவிப்பதற்கான திட்டத்தை மேம் படுத்தும் பொருட்டு, மாநில அரசு மத்திய அரசின் துறைகளிட மிருந்தும், மத்திய அரசின் நிறுவனங்களிடமிருந்தும், நில மதிப்பை வசூலித்தும், சில சமயம் இலவசமாகவும் நிலங்களை ஒதுக்கியுள்ளது.



2. மத்திய அரசின் பணிகளுக்காக, அதன் பல்வேறு துறை களுக்கு மாற்றப்பட்ட மாநில அரசின் நிலங்கள் பற்றிய விவரங் கள் வருமாறு :—

| தொடர் எண்ணும் மாற்றப்பட்ட அரசு நிலம் பற்றிய விவரங்கள். | துறையும், எந்நோக்கத்திற்காக நிலம் மாற்றப்பட்டது என்பதும். | நிலம் மாற்றப்பட்ட அரசாணை எண்ணும், பிறப்பிக்கப்பட்ட நாளும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம் குலவணிக புரம் கிராமத்தின் 870/13ஆம் எண் நி.அ. புலத்தில் 2.81 ஏக்கர் நிலம் (ஏரி புறம்போக்கு). | நிலத்தை மறுவகைப் பாடு செய்த பின்னர் மத்திய ஆயத்துறை அலுவலக கட்டிடம் கட்டுவதற்கும் அதன் பணியாளர் களுக்கு குடியிருப்பு கள் கட்டுவதற்கும் நிலமதிப்பு வசூலிக்கபபட்டு அத்துறைக்கு நிலம் மாற்றப்பட்டது. | வருவாய்த் துறையின் 27-3-1984 ஆம் நாளிட்ட 545 ஆம் எண் அரசாணை. |
| 2 செங்கற்பட்டு மாவட்டம் ஊத்துக் கோட்டை வட்டம், மாலந்தூர் கிராமம், ஏனைய கிராமங் களும், திருவள்ளூர் வட்டம், வேங்கல், செம்பேடு கிராமங் களிலும், 469.81 ஏக்கர் நிலம். | ஆவடி, கனரகத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் நவீன போர் டாங்குகளைச் சோதிக்கும் பாதை யின் ஒரு பகுதியாக இந் நிலத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, இந்நிலம் இலவசமாக மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு மாற்றப்பட்டது. | வருவாய்த்துறை யின் 17-4-1984 ஆம் நாளிட்ட 702 ஆம் எண் அரசாணை. |

| தொடர் எண்ணும் மாற்றப்பட்ட அரசு நிலம் பற்றிய விவரங்கள். | துறையும், எந்நோக்கத்திற்காக நிலம் மாற்றப்பட்டது என்பதும். | நிலம் மாற்றப்பட்ட அரசாணை எண்ணும், பிறப்பிக்கப்பட்ட நாளும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 3 சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், மங்களபுரம் கிராமத்தில் 94/8 ஆம் எண். நி. அ. புலத்தில் 0.43 ஏக்கர் நிலம். | தொலைபேசி இணைப்பகம் கட்டுவதற்காக நில மதிப்பை வசூலிப்பதின் பேரில் மத்திய அரசின் செய்தித் தொடர்பு அமைச்சகத்திற்கு நிலம் மாற்றப் பட்டது. | வருவாய்த்துறையின் 4-7-1984 ஆம் நாளிட்ட 1104 ஆம் எண் அரசாணை. |
| 4 செங்கற்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், மீனம் பாக்கம் கிராமத்தில் 171-177/3 ஆம் எண். உள்ள நி.அ. புலங்களில் 63.48 ஏக்கர் நிலம். | முறையான மாற்றல் ஆணைகள் பிறப் பிக்கப்படும் வரை தொலையுணர்வு தகவல் சேகரிப்பு நிலையம் கட்டுவதற்காக நிலத்தில் நுழைவதற்கு மத்திய அரசின் சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அனுமதிக்கப்பட் டுள்ளது. | வருவாய்த்துறையின் 9-8-1984 ஆம் நாளிட்ட 27920/எம்1/84-4 எண். கடிதம். |
| 5. சென்னை, மாநகரில் 18 எக்டேர் 60 ஏக்கர் 15 சதுர மீட்டர் நிலம். | சென்னை மாநகரில் விரைவுப் போக்குவரத்துத் திட்டத்திற்காக, சென்னை பெருநகர் போக்குவரத்துத் திட்டத்திற்கு (இரயில்வே) இல்வசமாக நிலம் மாற்றப்பட்டது. | வருவாய்துறையின் 3-9-1984 ஆம் நாளிட்ட 1505 ஆம் எண் அரசாணை. |



| தொடர் எண்ணும் மாற்றப்பட்ட அரசு நிலம் பற்றிய விவரங்கள். | துறையும் எந்நோக்கத்திறகாக நிலம் மாற்றப்பட்டது என்பதும். | நிலம் மாற்றப்பட்ட அரசாணை எண்ணும் பிறபிக்கப் பட்ட நாளும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 6. சென்னை மாவட்டம், வ.உ.சி. நகர் கோட்டை தண்டையார் பேட்டை வட்டத்தில் 11724/3 ஆம் அ. புலத்தில் 9 கிரவுண்டு 70 சதுர அடி நிலம். | நிலமதிப்பை முடிவு செய்கிற வரையும், முறையான நில மாற்றல் ஆணை பிறப்பிக்கப்படும் வரையிலும், சென்னை துறை முகப் பொறுப்புக் கழகத்திற்கு புதிய நிருவாக அலுவலக கட்டிடம் கட்டு வதற்காக அந் நிலத்தில் நுழை வதற்கு சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத் திற்கு அனுமதி யளிக்கப்பட்டுள்ளது. | 29-9-1984 ஆம் நாளிட்ட 1600 ஆம் எண், அரசாணை. |

3. கரூரிலிருந்து திண்டுக்கல் வரை அகல இருப்புப் பாதை போடுவதற்காக திருச்சி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங் களில் தேவைப்படும் 22.57 எக்டேர் புறம்போக்கு நிலங்களை மாற்றிக் கொடுக்குமாறு தெற்கு இரயில்வே கேட்டுக் கொண்டதை இவ்வரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

4. ஸ்ரீஹரிக்கோட்டாவில் செயற்கைக் கோள் ஏவுதளத்திற் காக "அபாய இடம்" அமைப்பதற்காக மத்திய அரசின் விண்வெளி ஆராய்ச்சித் துறையிடமிருந்து நில மதிப்பை வசூலிப்பதன் பேரில், செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரி வட்டம், கரிமணல் கிராமத்தில், அதிக அளவில் புறம்போக்கு நிலங்களை அத்துறைக்கு மாற்றுவதற்கு 1982 மே திங்களில் அரசு ஆணையிட்டது. தேவையான நடைமுறைகளை முடித்த பின்னர், ஸ்ரீஹரிகோட்டா ஆராய்ச்சித் திட்டத்திற்காக, SHAR அண்மையில், 1,683.25 ஏக்கர் புறம்போக்கு நிலம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. 3.22 ஏக்கர் நிலம் மட்டுமே ஒப்படைக்கப்படாமல் உள்ளது.

## 10. பொதுமக்கள் தொடர்புத் திட்டம்.

பொதுமக்கள் தொடர்புத் திட்டமான "மனுநீதித்திட்டம்" குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை கிராமங்களுக்கு வருகை தரும் அதிகாரிகளினால் கிராம மக்களின் பிரச்சினைகளை அவ்விடத்திலேயே தீர்த்து வைக்க வாய்ப்பளிக்கிறது. இத்திட்டம், தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1—1—1984 முதல் 31—12—1984 வரை வரப்பெற்ற 55,435 மனுக்களில் 49,301 மனுக்கள்மீது நடவடிக்கை எடுத்து முடிவு செய்யப்பட்டது. அதாவது, 89 சதவீத மனுக்களின் மீது நடவடிக்கை எடுத்து முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 11. தண்ணீர் கட்டண வீதங்கள்.

இம்மாநிலத்திலுள்ள நிலங்கள் பொதுவாக நன்செய், புன்செய் என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. மண்வளம், வேளாண்மை விளைபொருட்களின் விலை, அண்மையிலுள்ள பாசன வாயில்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நன்செய், புன்செய் நிலங்களுக்கு தண்ணீர் தீர்வை நிர்ணயிக்கப்படுகிறது. நன்செய் நிலங்களுக்கு விதிக்கப்படும் வரியில் ஒரு பகுதி தண்ணீர்த் தீர்வையாகும். அரசு நீர்ப்பாசன ஆதாரங்கள் வாயிலாக பாசனம் பெறும் புன்செய் நிலங்களைப் பொறுத்த மட்டில் அந்நிலங்களுக்கு விதிக்கப்படும் நிலவரியுடன் தண்ணீர் தீர்வையும் கூடுதலாக விதிக்கப்படுகிறது. தாலிதங்கள் அடிப்படையில் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படுகிறது. பெரிய பாசனத் திட்டங்கள், நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மற்றும் சிறப்புச் சிறு பாசனத் திட்டப் பணிகளினால் பாசனம் பெறும் பகுதிகளில் தனி தண்ணீர் தீர்வை வீதங்கள் நடைமுறையில் உள்ளன.

2. தமிழ் நாடு 1963 ஆம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர் தீர்வை சட்டத்தின் கீழ், கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி முறையே நன்செய் நிலங்கள் இதர நிலங்களின்மேல் விதிக்கப்படுகின்றன.

3. மாநிலத்திலுள்ள தண்ணீர் தீர்வை வீத அமைப்பு முழுவதையும் சீரமைப்பது பற்றி அரசு அமைத்த குழு தனது அறிக்கையை அரசிடம் கொடுத்துள்ளது. அக்குழுவின் பரிந்துரைகள் மீது தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், அரசு





விவசாயிகளுக்கு அளித்துள்ள பல சலுகைகளையும் கருத்தில் கொண்டு அதன் விளைவுகளை ஆராய்ந்து மறு அறிக்கையை சமர்ப்பிக்கும்படி மேற்படி குழுவினை அரசு கேட்டுக்கொண்டுள்ளது. இறுதி அறிக்கை பெற்றபின் முடிவெடுக்கப்படும்.

## 12. வேளாண்மை வருமான வரி.

தமிழ்நாட்டில் வேளாண்மை வருமான வரி 1955 ஆம் ஆண்டிலிருந்து செயலிலுள்ளது. 1955 ஆம் ஆண்டு சென்னை மலைத் தோட்ட வேளாண்மை வருமான வரிச் சட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டபோது, காபி, தேயிலை, ரப்பர், ஏலக்காய், சின்கோனா போன்ற மலைத் தோட்டப்பயிர்களுக்கு மட்டுமே வேளாண்மை வருமான வரி விதிக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதும் மலைத் தோட்டம் அல்லாத பயிர்களுக்கும் வேளாண்மை வருமான வரி விதிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது வரிவிலக்கு வரம்பு ரூ. 10,000 ஆகும். வரி இணைக்கத் திட்டத்தின்படி வரிவிலக்கு வரம்பு 20 தர ஏக்கர் ஆகும். மலைத் தோட்டப் பயிரைப் பொறுத்தவரை 100 தர ஏக்கர் வரை வரி இணக்க வசதி அளிக்கப்படுகிறது. மலைத் தோட்டப் பயிரல்லாத ஏனைய பயிர்களுக்கு அத்தகைய வரம்பு ஏதுமில்லை. தர ஏக்கர் என்பது அந்நிலத்தில் பயிரிடப்படும் பயிரின் தன்மையைப் பொறுத்து கணிக்கப்படுகிறது.

2. முந்தைய ஆண்டின் (கணக்காண்டு) மொத்த வேளாண்மை வருமானத்தின் மீது ஒவ்வொரு நிதியாண்டிலும், வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுகின்றது. தற்பொழுது செயலில் உள்ள வருமான அடிப்படையிலான வரி வீதமும், நில வரம்பின் அடிப்படையிலான இணக்க வரி வீதமும் வருமாறு:—

### வருமான அடிப்படையிலான வரி வீதங்கள்.

1. மொத்த வேளாண்மை வருமானத்தில் முதல் ரூ. 8,000-க்கு — வரி கிடையாது
2. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 7,000-க்கு — ரூபாய்க்கு 25 காசு

[1985 ஜூன் 11

3. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு — ரூபாய்க்கு 30 காசு

4. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு — ரூபாய்க்கு 35 காசு

5. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு — ரூபாய்க்கு 45 காசு

6. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 20,000-க்கு — ரூபாய்க்கு 55 காசு

7. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 50,000-க்கு — ரூபாய்க்கு 60 காசு

8. மொத்த வேளாண்மை வருமானத்தில் எஞ்சிய தொகைக்கு — ரூபாய்க்கு 65 காசு.

ஆனால்,

(1) ரூ. 10,000-க்கு மேற்படாத மொத்த வேளாண்மை வருமானத்திற்கு வரி செலுத்த வேண்டியதில்லை;

(2) மொத்த வேளாண்மை வருமானம் ரூ. 10,000-க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 11,100-க்கு மேற்படாதபொழுது அது குறித்து செலுத்தத்தக்க வேளாண்மை வருமான வரியானது மொத்த வேளாண்மை வருமானம் ரூ. 10,000 ஐவிட எவ்வளவு அதிகமாக உள்ளதோ, அத்தொகையில் எழுபது சதவிகிதத்திற்கு மேற்படக் கூடாது;

(3) மேலும், ஒவ்வொரு கம்பெனியைப் பொறுத்தவரையில் மொத்த வேளாண்மை வருமானம் முழுவதற்கும், உயரளவு வீதத்தில் வேளாண்மை வருமான வரி விதிக்கப்பட வேண்டும்.



[1985 ஜூன் 11

5. 1980-81 முதல் 1984-85 வரையிலான வரிவிதிப்பு ஆண்டுகளில் வருமானத்தின் அடிப்படையிலும் இணக்க வரியின் கீழும் வரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு:

மலைத்தோட்டம்.

| ஆண்டு. | வருவாய் அடிப்படை. | இணக்க முறை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1980-81 .. .. | 991 | 3,613 | 4,609 |
| 1981-82 .. .. | 1,020 | 3,550 | 4,570 |
| 1982-83 .. .. | 1,000 | 3.660 | 4,660 |
| 1983-84 .. .. | 920 | 3,714 | 4,634 |
| 1984-85 .. .. | 913 | 3,705 | 4,61 |

மலைத்தோட்டமல்லாதவை.

| ஆண்டு. | வருவாய் அடிப்படை. | இணக்க முறை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1980-81 .. .. | 4,429 | 27,736 | 32.165 |
| 1981-82 .. .. | 3,992 | 28,621 | 32,613 |
| 1982-83 .. .. | 3.901 | 26,360 | 30,261 |
| 1983-84 .. .. | 3,814 | 26,216 | 30,030 |
| 1984-85 .. .. | 3,736 | 23,824 | 27,560 |

6. இத்துறைக்குப் புதிதாக வந்த அனைத்து வேளாண்மை வருமான வரி உதவி ஆணையர்களுக்கும், வேளாண்மை வருமான வரி அதிகாரிகளுக்கும் விரிவான பயிற்சித் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்பட்டு, வேளாண்மை வருமான வரி தொடர்பான பல்வேறு சட்டங்கள், கணக்குகள் குறித்து 9 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் பங்கு கொள்வோருக்கு பல்வேறு தொழில்களில் வல்லுநத்துவம் பெற்ற துறைகளிலிருந்து வரவழைக்கப்பட்ட வல்லுநர்கள் பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றனர். ஏனைய உதவி ஆணையர்களுக்கும், வேளாண்மை வருமான வரி அதிகாரிகளுக்கும் நினைவூட்டுப் பயிற்சியும் அளிக்

நில வரம்பின் அடிப்படையிலான இணக்கவரி வீதங்கள் :—

| நிலப்பரப்பு | தர ஏக்கர் ஒன்றுக்கு வரி வீதம் |
| --- | --- |
| | ரூ. பை. |
| 1. முதல் 20 தர ஏக்கருக்கு | வரி கிடையாது |
| 2. அடுத்த 5 தர ஏக்கருக்கு | 15.00 |
| 3. அடுத்த 5 தர ஏக்கருக்கு | 20.00 |
| 4. அடுத்த 5 தர ஏக்கருக்கு | 30.00 |
| 5. அடுத்த 5 தர ஏக்கருக்கு | 40.00 |
| 6. அடுத்த 10 தர ஏக்கருக்கு | 50.00 |
| 7. அடுத்த 10 தர ஏக்கருக்கு | 60.00 |
| 8. அடுத்த 10 தர ஏக்கருக்கு | 70.00 |
| 9. அடுத்த 10 தர ஏக்கருக்கு | 80.00 |
| 10. எஞ்சிய தர ஏக்கருக்கு | 100.00 |

மேலும் ஒவ்வொரு கம்பெனியைப் பொறுத்தவரையில், 65, 65-ஏ பிரிவுகளின் கீழ் செலுத்தத்தக்க மொத்த வரி எந்த அளவு நிலப்பரப்புக்கு மேற்சொன்ன 65, 65-ஏ பிரிவுகளின் கீழ் வேளாண்மை வருமான வரியை இணக்கம் செய்துகொள்ள கம்பெனி அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ அந் நிலப்பரப்பு முழுவதுக்கும் உயரளவு வீதத்தில் விதிக்கப்பட வேண்டும்.

3. வேளாண்மை வருமான வரி ஆணையர், வேளாண்மை வருமான வரித்துறையின் தலைவர் ஆவார். அவர் நிலச் சீர்திருத்த ஆணையாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளார்.

4. வேளாண்மை வருமான வரியில் பெரும்பகுதி வருவாய், மலைத் தோட்டப் பயிரிலிருந்து கிடைக்கின்றது. மொத்த வருவாயில் 90 விழுக்காடு இதிலிருந்து கிடைக்கின்றது. தற்பொழுது மலைத்தோட்டம் மற்றும் மலைத் தோட்டமல்லாத பகுதிகளில் வேளாண்மை வருமான வரி மதிப்பீடு மற்றும் வரிவசூல் பணியை வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் செய்து வருகின்றனர். இதற்காக, வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் வருவாய் வசூல் செய்யும் அதிகாரிகளுக்குள்ள அதிகாரம் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.





கப்படுகிறது. வேளாண்மை வருமான வரி மதிப்பீட்டை முடிவு செய்வதற்கு இப்பயிற்சி அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது.

## 13. நகர்ப்புற நிலவரி.

அறிக்கையிடப்பட்ட சில பகுதிகளிலுள்ள நகர்ப்புற நிலங்களைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின்கீழ் நகர்ப்புற நிலவரி செலுத்தத்தக்கதாகும். ரயத்துவாரி, வரி குறிட்டெண்ட், மனைவரி போன்றவற்றிற்குப் பதிலாக நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுகிறது. இச்சட்டம் சென்னை மாநகரில் 1—7—1963 ஆம் நாள் முதலும், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களிலும் மதுரை மாநகரிலும் இச்சட்டம் 1—7—1971 ஆம் நாள் முதலும் செயலுக்கு வந்தது. சென்னை புறநகர்ப்பகுதி கிராமங்களில் 1—7—1975 முதல் இச்சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

2. சென்னை மாநகரில் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் செயலுக்கு வந்தபோது 1—7—1963 அன்று இருந்த நிலத்தின் அங்காடி மதிப்பைக் கொண்டு அதில் 0.4 சதவீதம் என்ற வீதத்தில் நகர்ப்புற நிலவரி கணக்கிடப்பட்டது. இச்சட்டம் அவ்வப்போது திருத்தப்பட்டது. 1—7—1975-லிருந்து சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளுக்கும் இச்சட்டத்தை நீட்டித்து, 1—7—1971 அன்று இருந்த அங்காடி மதிப்பைக் கொண்டு நகர்ப்புற நிலவரியைக் கணக்கிடுவதற்கு வகை செய்து 1975-இல் இச்சட்டம் இறுதியாகத் திருத்தப்பட்டது. 0.5 சதவீதத்திலிருந்து 1 சதவீதம் வரை இருந்த வீதம் 0.7 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதம் வரை உயர்த்தப்பட்டது. நகர்ப்புற நிலங்களை குடியிருப்பு காரியங்களுக்கும், குடியிருப்பு அல்லாத காரியங்களுக்கும் பயன்படுத்துவதில் வேறுபாடு கொண்டு வாப்பட்டு வெவ்வேறு வீதத்தில் வரி விதிக்கப்பட்டது.

3. இதனால் நகர்ப்புற நிலவரி மிகவும் அதிகரித்துவிட்டது. நகர்ப்புற நிலவரி அதிகரிக்கப்பட்டதை எதிர்த்து பல முறையீடுகள் செய்யப்பட்டதின் பேரில் வருவாய்த் துறையில் 27—12—1976 ஆம் நாளிட்ட 2625 ஆம் எண் அரசாணையில் பல சலுகைகளை அரசு வழங்கியது. தற்போது வரையறுக்கப்பட்டுள்ள வரிவிகிதம் வருமாறு :

சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளிலுள்ள நகர்ப்புற நிலங்கள்.

| | | |
|---|---|---|
| 1. முதல் இரண்டு மனைகளுக்கு. | இல்லை. | .. |
| 2. மொத்தப் பரப்பு 5 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் 0.7 சதவீதம். | இரண்டு மனைகளுக்கு மேல் உள்ள பரப்பு. |
| 3. மொத்தப் பரப்பு 5 மனைகளுக்கு மேற்பட்டு ஆனால் 10 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் ஒரு சதவீதம். | -டி- |
| 4. மொத்தப் பரப்பு 10 மனைகளுக்கும் மேற்பட்டு, ஆனால் 20 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் 1.5 சதவீதம். | -டி- |
| 5. மொத்தப் பரப்பு 20 மனைகளுக்கு மேற்பட்டு இருந்தால். | அங்காடி மதிப்பில் 2 சதவீதம். | -டி- |

சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளிலுள்ள நகர்ப்புற நிலங்கள்.

| | | |
|---|---|---|
| 1. முதல் மூன்று மனைகளுக்கு | இல்லை. | ... |
| 2. மொத்தப் பரப்பு 7 மனைகளுக்கு மேற்படாமல், இருந்தால். | அங்காடி மதிப்பில் 0.7 சதவீதம். | மூன்று மனைகளுக்கு மேல் உள்ள பரப்பு. |
| 3. மொத்தப் பரப்பு 7 மனைகளுக்கு மேற்பட்டு, ஆனால் 10 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் 1 சதவீதம். | -டி- |
| 4. மொத்தப் பரப்பு 10 மனைகளுக்கு மேற்பட்டு ஆனால் 20 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால் | அங்காடி மதிப்பில் 1.5 சதவீதம். | -டி- |
| 5. மொத்தப் பரப்பு 20 மனைகளுக்கு மேற்பட்டு இருந்தால். | அங்காடி மதிப்பில் 2 சதவீதம். | -டி- |





மேலும் கீழ்க்காணும் சலுகைகள் அரசால் அளிக்கப்பட்டது:—

1. அரசுக்கு தனிப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் கல்வி, அறசமய சம்பந்தமான நிறுவனங்கள் காலி நிலம் மற்றும் கட்டிடங்கள் உள்ள நிலம், அதன் மூலம் வரும் வருவாய் அந்த நிறுவன சம்பந்தமான காரியங்களுக்கு பயன்படுத்தப்பட்டால் நிலவரியிலிருந்து முழு விலக்குப் பெறலாம்.

2. சமுதாய மன மகிழ் மன்றங்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான காலி நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் உள்ள நிலங்களுக்கும் 50 விழுக்காடு நிலவரி குறைக்கப்பட்டது.

3. திரைப் படப்பிடிப்பு நிலையங்களுக்குச் சொந்தமான காலி நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் உள்ள நிலங்களுக்கும் 50 விழுக்காடு நிலவரி குறைக்கப்பட்டது.

4. தமிழ்நாடு குடிசை குடியிருப்பு ஒழிப்புச் சட்டம் 1977, பிரிவு 3(பி)-ன்கீழ் குடிசை குடியிருப்பாக அறிவிக்கப்பட்ட எல்லா நிலங்களுக்கும் வரிவிதிக்கக் கூடாத இனங்களாகக் கொள்ளப்பட்டது.

5. எல்லா திரைப்பட அரங்கங்களுக்கும் 10 விழுக்காடு நிலவரியிலிருந்து தள்ளுபடி தரப்பட்டது.

6. சங்கீதம், நாடகம் மற்றும் இதர கலை நிகழ்ச்சிகள் நடத்தும் சபாக்களுக்கு 50 விழுக்காடு நிலவரி குறைக்கப்பட்டது.

7. நிலதாரர் தனக்குச் சொந்தமான கட்டிடத்தை தன்சொந்த குடியிருப்புக்கு உபயோகப்படுத்தினால் அவருக்கு விதிக்கப்படும் நிலவரியிலிருந்து 50 விழுக்காடு நிலவரி குறைத்து சலுகை வழங்கப்பட்டது.

8. சென்னை நகரில் 1975-ம் ஆண்டு சட்டத்தின்கீழ் 1—7—1971-ல் தீர்மானிக்கப்பட்ட அங்காடி மதிப்பு 1963-ல் இருந்த அங்காடி மதிப்பை விட இரண்டு மடங்குக்கு மேல் இருக்குமேயானால் அது இரண்டு மடங்குக்கு வரையறுக்கப்பட்டது.

9. குடியிருப்புக்குப் பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்கள் குடியிருப்புக்கல்லாமல் வேறு காரியங்களுக்கும் பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்கள் ஆகியவற்றிற்கிடையே 1975-ம் சட்டத்தினால் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்ட குறைபாடு நீக்கப்பட்டது.

[1985 ஜூன் 11

10. அரசாணை எண் 25, வருவாய், நாள் 4—11—1979-ல் அரசு பசலி 1385-லிருந்து சிறு தொழில் நிறுவனங்கள் செலுத்தும் நகர்ப்புற நிலவரியில் 25 விழுக்காடும் ஏனைய தொழில்களைப் பொறுத்தவரையில் 10 விழுக்காடும் குறைந்துள்ளது.

மேலும் அரசு இந்து, சமய அறக்கட்டளைகள், இஸ்லாமிய அறக்கட்டளை வாரியங்கள், கிறித்துவ அறநிலையங்கள் ஆகியவற்றுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் மத்திய, மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இடைநிலைக் கல்விக்கான மத்திய வாரியங்கள் ஆகியவற்றால் அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு விதிவிலக்கு வழங்கும் அதிகாரம் முன்னாள் வருவாய் வாரியத்துக்கும் தற்போது சிறப்பு ஆணையர் (நிலச் சீர்திருத்தம்) அவர்களுக்கும் வழங்கியுள்ளது. 1—12—1982 லிருந்து ஆணையர் (நிலச் சீர்திருத்தம்) அவர்கள் வருவாய் வாரியம் நகர்புற நிலவரி மற்றும் உச்சவரம்புக்குரிய பொறுப்புகளை வகிக்கிறார்.

மேலும் அரசு எந்த வகையான நிலங்களுக்கும் எந்த வகையான தனிப்பட்டவருக்கும் முந்தைய காலம் முதலோ அல்லது அப்போதைய காலத்திலிருந்தோ அவர்கள் இடர்பாடுகள் காரணமாக நிலவரி கட்ட முடியாத நிலையில் இருப்பதாகத் தீர்மானித்தால் வரியைக் குறைப்பதற்கோ அல்லது விலக்கு அளிப்பதற்கோ பிரிவு 27 சட்டப்படி முடியும்.

நன்செய், புன்செய் நிலங்களாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்கு 1—7—1972-லிருந்து நிலவரி விலக்கு அரசாணை 3526, நாள் 15—6—1973-ல் வழங்கப்பட்டது. அரசாணை எண் 288, வருவாய், நாள் 13—2—1975-ல் கிராமப்புற நிலங்களாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்களும் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன் 5 வருடங்கள் தொடர்ந்து நன்செய் அல்லது புன்செய் பயிர்கள் பயிர் செய்யப்பட்டதாக நில வருவாய் கணக்குகளின்படி குறிப்பிடப்பட்டிருக்கும் நிலங்களுக்கும் 1—7—1975-லிருந்து நிலவரி விலக்கு வழங்கப்பட்டது.



1985 ஜூன் 11]

4. ஏற்கெனவே வழங்கப்பட்ட சலுகைகளை சட்டப்படி செல்லுபடியாக்க தமிழ்நாடு அரசு 1979-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன் வடிவைக் கொண்டு வந்தது. அப்போது சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்ட காரணத்தால் இச்சட்ட முன்வரவு காலங்கடந்ததாகிவிட்டது. தமிழ்நாடு 1980-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வரைவு 1980-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் சட்டமன்ற ஆய்வுக் குழுவிற்கு இது அனுப்பப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது.

5. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம் வருவாய்த் துறையில் 25—6—1981-ம் நாளிட்ட அரசாணை எண் 1455-ன்படி திருநெல்வேலி நகர்ப்புற கூட்டுப்பகுதிகளுக்கும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய நகரங்களிலுள்ள பிற பகுதிகளுக்கும் 1—7—1981-ம் நாளிலிருந்து நீட்டிக்கப்பட்டது. இதனால் மேற்சொன்ன பகுதிகளிலிருந்து விளைச்சல் ஆண்டு ஒன்றுக்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூபாய் 56 லட்சமாகும்.

6. 19 வருவாய் கிராமங்களில் உள்ள 12 ஊராட்சிகளை சென்னை மாநகர எல்லைக்குள் சேர்த்து ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையில் 29—5—1978 ஆம் நாளிட்ட 790 ஆம் எண் அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டதையடுத்து தமிழ்நாடு அரசு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தை 38 கிராமங்களுக்கு நீட்டிக்க முடிவு செய்துள்ளது. அவை சைதாப்பேட்டை வட்டத்திலுள்ள 8 கிராமங்களுக்கும், பொன்னேரி வட்டத்திலுள்ள 7 கிராமங்களுக்கும், திருவள்ளூர் வட்டத்திலுள்ள 3 கிராமங்களுக்கும், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்திலுள்ள 10 கிராமங்களுக்கும், செங்கற்பட்டு வட்டத்திலுள்ள 10 கிராமங்களுக்கும் ஆகும். மேற்சொன்ன பகுதிகளில் எதிர்பார்க்கப்படும் வருவாய் விளைச்சல் ஆண்டிற்கு ரூ. 3 லட்சமாகும்.

7. 1984-85 ஆம் ஆண்டில் 3.48 கோடி ரூபாய் வசூலாயிற்று. சென்னை உயர்நீதி மன்றம் தனது முறைமை பேராணை (எண்கள் 4397/78 மற்றும் 4439/78) மனுக்களின்மீது தீர்ப்பளிக்கையில் நிலத்தின் மொத்தப் பகுதியின் மீது போடப்படும் படிப்படியாக விதிக்கப்படும் நகர்ப்புற நிலவரி ஒருவருடைய சொத்தின்மீது போடப்பட்டுள்ள வரி என்றும், இப்யோர்ப்பட்ட

வரி நிலத்தின் மீது போட்ட வரி என்ற நோக்கில் எடுத்துக் கொள்ள இயலாது என்றும் அது மாநில அரசின் அதிகாரத்திற்குள் இல்லை என்றும், எனவே 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில வரிச்சட்டம் பிரிவு 6 செல்லத்தக்கதல்ல என்றும் தீர்ப்பளித்துள்ளது.

அரசு, உயர் நீதிமன்ற தீர்ப்பினை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துகொண்டு, உயர்நீதிமன்ற தீர்ப்பினை நடைமுறைப் படுத்துவதிலிருந்து தடை செய்ய கோரும் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது.

14. நிலச் சீர்திருத்தம்.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பை நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) 6—4—1960 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. 5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றும் ஆனால் அதுவும் சேர்த்து மொத்த உச்சவரம்பு 60 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற்படக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டது.

இந்த உச்சவரம்பு குறைக்கப்பட்டு மூலச் சட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டிருந்த சில விதிவிலக்குகள் 17/70 ஆம் சட்டத்தினாலும், அடுத்து இயற்றப்பட்ட பிற சட்டங்களாலும் ரத்து செய்யப்பட்டன. ஐந்து அல்லது அதற்கும் குறைவான பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகும். 28—2—1985 ஆம் நாள்வரையில் நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | உபரியாக அறிவிக்கப்பட்ட பரப்பு | 1,62,631 |
| 2. | நிலத்தை அரசு வசம் எடுத்துக் கொண்டுள்ள முன்னரும் பின்னரும் தடையாணையின் கீழ் உள்ள பகுதி. | 23,199 |
| 3. | (அ) தகுதி வாய்ந்தவர்களுக்கு கொடுக்கப் பட்ட பரப்பு. | 1,18,120 |
| | (ஆ) தமிழ்நாடு சர்க்கரை கழகத்திடம் ஒப்படைத்த பரப்பு. | 4,041 |





| | | |
|---|---|---|
| | (இ) உபரி நில விநியோக விதிகளின் 13ஆம் விதியின் கீழ் ஒதுக்கி வைக்கப் பட்டவை. | 9,976 |

| பயனடைந்தோர் எண்ணிக்கை. | நபர்கள். | பரப்பு (சாதாரண ஏக்கர்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆதி திராவிடர் .. .. | 40,506 | 44,873 |
| பழங்குடியினர் .. .. | 33 | 27 |
| ஏனையோர் .. .. | 51,729 | 73,220 |
| மொத்தம் .. | 92,268 | 1,18,120 |

4. வழங்க வேண்டி இருக்கும் பரப்பு. — 7,295

உபரி நிலங்கள் விநியோக விதிகளின் கீழ் உயரளவு 3 ஏக்கர் புன்செய் நிலத்தையோ அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலத்தையோ தகுதி வாய்ந்தவர்களுக்கு ஒப்படை செய்யப் படுகிறது.

நில உச்சவரம்பினைச் செயல்படுத்துவதும், உபரி நிலங்களை வழங்குதலும் இருபது அம்சத் திட்டத்தின் (நெம்பர் 4) ஒரு பகுதியாகும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இலக்கான 14,000 ஏக்கர்களுக்கு 31—3—1985 வரை தகுதிவாய்ந்த நபர்களுக்கு 5,000 ஏக்கர்கள் வரை விநியோகிக்கப்பட்டுள்ளன. நிலச் சீர்திருத்தங்களை விரைந்து செயல்படுத்துவதற்கு எப்படியும் நடைமுறையில் சில இயல்பான இடையூறுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று, நீதிமன்றத்தில் வழக்குகள் விசாரிக்கப்பட்டு முடிக்கப் படுவதற்கு அதிக காலம் ஆவதேயாகும். ஆகவே, நில நடுவர் மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகளையும், பரிசீலனை மனுக்களையும் விசாரிக்க அதிகாரம் அளிக்க, தனி மேல்முறையீட்டு நடுவர் மன்றத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டது. இந்த நோக்கத்திற்காக பிப்ரவரி 84-ல் சட்டம் தகுந்தவாறு திருத்தப்பட்டுள்ளது.

**[1985 ஜூன் 11**

**2. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1969).—** தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவணத் திருத்தச் சட்டத்தின் மூலம் (திருத்தச் சட்டம் 45/1981) மூலச் சட்டத்தில் சேர்த்துள்ள புதிய பிரிவு 5-ஏ, வட்ட அளவில் ஆலோசனைக் குழு அமைக்க வழிவகை செய்கிறது. இந்த ஆலோசனைக் குழுவில் (ஐந்து உறுப்பினர்கள்) ஆதி திராவிடர், அல்லது பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த நிலமற்ற விவசாயத் தொழிலாளி ஒருவரும், ஒரு பயிரிடு குத்தகைதாரரும், மூன்று சமூகப் பணியாளர்களும் உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். இக் குழு அவ்வட்டத்தைச் சேர்ந்த ஆவண அதிகாரிக்கு குத்தகை ஆவணங்கள் தயாரிக்கும் அளவில் உதவி செய்யும். அந்த ஆலோசனைக் குழுவின் முக்கிய அலுவல் வட்டத்திலுள்ள நிலச் சொந்தக்காரரின் பெயர், முகவரி, இடையாள், குத்தகைதாரரின் பெயர் முதலிய விவரங்களைச் சேகரிக்கவும் இச்சட்டத்தின்கீழ் குத்தகைதாரரைப் பதிவு செய்ய ஆவண அதிகாரிக்குப் பரிந்துரைப்பதும் ஆகும். இக் குழுக்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் 57 வட்டங்களில் முதற்கட்டமாக அமைக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்களிலுள்ள ஏனைய வட்டங்களிலும், எஞ்சிய மாவட்டங்களிலும் கூட இந்தக் குழுக்கள் அமைப்பது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இச் சட்டத்தின்கீழ் 31—3—1985 வரை 4,39,582 குத்தகைதாரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மொத்தப் பரப்பு 6,36,656 ஏக்கராகும்.

**3. தமிழ்நாடு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (விவசாய நிலங்களின் நிர்வாகத்தினைச் சீர்படுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/1961).—**இச் சட்டத்தின்கீழ் 874 வழக்குகள் முடிவு செய்யும் பொருட்டு வருவாய்க் கோட்ட ஆட்சியர்களிடம் நிலுவையில் உள்ளன. தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்டம் 1984 (தமிழ்நாடு சட்டம் 29/84) செயலாக்கப்பட்டு விட்டதால், தமிழ் நாட்டில்



**1985 ஜூன் 11]**

தஞ்சை மாவட்டம்தவிர எல்லா மாவட்டங்களிலும், நிலுவையில் உள்ள குத்தகை வழக்குகளை முடிவு செய்வதற்காக நான்கு வருவாய் நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**4. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்கல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/1971).—**31—3—1985 வரை வழங்கப்பட்டுள்ள குடியிருப்புப் பட்டாக்கள் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| ஆதி திராவிடர் | 93,968 |
| பழங்குடியினர் | 244 |
| பிற்பட்டோர் | 43,910 |
| ஏனையோர் | 31,961 |
| மொத்தம் | 1,80,083 |

964 இனங்கள் விசாரணையில் உள்ளன. 128 வழக்குகள் நீதி மன்ற விசாரணையில் உள்ளன.

**5. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு ஊரகக் கைவினைஞர்கள் (குடியிருப்பு உடைமை உரிமை வழங்கல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 38/76).—**31—3—1985 ஆம் நாள் வரையில் வழங்கப்பட்டுள்ள குடியிருப்புப் பட்டாக்கள் வருமாறு :—

| | |
|---|---|
| ஆதிதிராவிடர் | 37 |
| பழங்குடியினர் | 15 |
| பிற்பட்டோர் | 230 |
| ஏனையோர் | 116 |
| மொத்தம் | 398 |

**6. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம்.—**இச்சட்டம், கிழக்கு தஞ்சாவூர் மாவட்டத்திற்குப் பொருந்தும்.

தமிழ் நாட்டில் கிழக்கு தஞ்சாவூர் பகுதி நீங்கலாக மற்றப் பகுதிகளில் 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் தற்போது அமுலில் உள்ளது. கிழக்கு தஞ்சாவூர் பகுதியில் உள்ள வேளாண் தொழிலாளர்களுக்கு 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியச் சட்டத்தின் கீழ் கூலி வழங்கப்படுகிறது. மேற்கண்ட சட்டங்களின் கீழ் வழங்கப்படும் கூலி விகிதங்களில் மாறுபாடுகள் உள்ளன. இந்நிலையில்

விவசாயத் தொழிலில் அமைதியின்மையைத் தோற்றுவிப்பதால், இதனைத் தவிர்க்க மாவட்டம் முழுவதற்கும் ஒரே மாதிரியான விவசாயக் கூலி வீதங்கள் அமுல்படுத்துவது பற்றி அரசு தீவிர மாகப் பரிசீலித்து வருகிறது. மேற்படி முடிவு எடுப்பதற்கு முன் உழுதல், விதைத்தல், நாற்று நடுதல் போன்ற வேலைகளில் ஈடு படும் நபர்களுக்கு ரூ. 9 லிருந்து 11 ரூபாயும், களை எடுத்தல் போன்ற வைகளில் ஈடுபடுவோருக்கு ரூ. 7 லிருந்து 8 ரூபாயும் உரிய வயது அடையாதவர்களுக்கு அனைத்து வகை வேளாண்மை தொழில்களுக்கும் ரூ. 5 லிருந்து ரூ. 6 ஆகவும் கிழக்கு தஞ்சைப் பகுதியில் உயர்த்த அரசு முடிவெடுத்துள்ளது.

### 15. நகரப்புற நில உச்சவரம்பு :

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக, பல்வேறு காரணங்களால், நகர்ப்பகுதி மக்கள் தொகை பெருமளவு அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணம், கிராமங்களிலுள்ள மக்களுக்குப் பெரும் அளவில் வேலை வாய்ப்பு அளிக்கின்ற தொழிற்சாலைகளும், ஏனைய நிறுவனங்களும் நகர்ப் பகுதிகளில் வளர்ந்து வருகின்ற படியால், கிராம மக்கள், கிராமங்களை விட்டு வெளியேறுகின் றனர். சிறு நகரங்கள், நடுத்தர நகரங்கள் ஆகியவற்றில் மக்கள் சென்று குடியேறுவதைவிட பெருநகர்களிலும், அதிகப் பரப்பள வுள்ள மாநகர்களிலும், மக்கள் சென்று குடியேறுவது அதிக மாகும். இதனால், கட்டுக்கடங்காத குடிசைகள் பெருகி வருவ தாலும், சுகாதாரமற்ற வாழ்க்கைச் சூழல்கள் பெருகி வருவதா லும், பொருளாதார சமூகச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே, அரிதாகக் கிடைக்கும் நகர்ப்பகுதிகளைப் பயன்படுத்துவதை முறைப்படுத்தி, முறையாக மேம்படுத்துவது, ஒரு சிலரிடமே நிலங்கள் குவிந்து, அதனால் ஊக வாணிகம் நடப்பதை தடுப் பதும் அவசியமாகும் என்று கருதப்பட்டது.

2. நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள நிலங்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. இதன் பலனாக, அரிதாகக் கிடைக்கும் மதிப்பு மிக்க நகர்ப்புற நிலங்களை வாங்கி முடக்கி வைப்பதும், பின்னர் அதிக விலைக்கு விற்க முயலும் ஊக வாணிகம் நடத்துவதும் பெருகி விட்டது. தனிப்பட்ட ஒருவர் வைத்துள்ள நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கலாம் என்றும், நியாயமான அளவிற்கு அதிக மாக நகர்ப்பகுதி நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பதைத் தடை செய்யலாம் என்றும், இவ்வாறு செய்தால், இப்பிரச்சினைக்





குத் தீர்வு காண முடியுமென்றும் கருதப்பட்டது. தனியாரின் உடைமையில் உள்ள நிலங்களின் அளவுக்கு உச்சவரம்பு விதித்தும், வீடுகளின் அளவை வரையறுத்தும் நகர்ப்பகுதி நிலங்கள் அனைத்தையும் சமுதாய உடைமையாக்குவதே இதன் நோக்க மாகும். இந்நோக்கத்துடன், தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு, நகர்ப்பகுதி நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 34/1976) இயற்றப்பட்டது.

3. இச் சட்டத்தின் மூன்று முக்கிய அம்சங்கள் வருமாறு :—

(i) தனிப்பட்ட ஒருவர், ஒரு குடும்பம், ஒரு நிறுவனம், ஒரு கம்பெனி, அல்லது ஒரு குழு அல்லது தனிப்பட்டவர்கள் சேர்ந்த ஒரு சங்கம், வைத்திருக்கின்ற வெற்று நிலத்தின் மீது உச்சவரம்பு விதித்தல்.

(ii) எதிர்காலத்தில் கட்டப்படும் வீடுகளின் பரப்புக்கு உச்சவரம்பு விதித்தல்.

(iii) நகர்ப்பகுதி சொத்தை உரிமை மாற்றம் செய்து கொடுப் பதை முறைப்படுத்தல் ஆகியவையாகும்.

4. இச் சட்டத்தைச் செயலாக்குவதில், பொது மக்கள் அடைந்த இடர்பாடுகள் குறித்து, எண்ணற்ற முறையீடுகளும், பத்திரிகை களில் வெளியிடப்பட்ட செய்திகளும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பொதுமக்களின் வேண்டுகோளைக் கருத் திற்கொண்டு குடியரசுத் தலைவரின் 1976 ஆம் ஆண்டு, 34 ஆம் சட்டத்தை நீக்கி, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப்படுத்துதல்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 24/1978) அரசு இயற்றியது. நகர்ப்பகுதி சொத்துக்களை அரசுடைமை ஆக்குவதென்ற குறிக்கோளைக் கடைப்பிடிக்கும் பொருட்டும், பழைய சட்டத்தின் இடர்பாடான விதித்துறைகளின் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் தொல்லைகளை நீக்கும் பொருட்டும், பொது மக்களின் கோரிக்கைக்குச் செவி சாய்க்கும் வண்ணம் இச்சட்டம் இயற்றப்பட்டது.

5. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) சட்டத்தின் 14, 15, 20 (3), 27, 48 ஆகிய பிரிவுகள் நீங்கலாக, ஏனைய பிரிவுகள் 3—8—1976 ஆம் நாளி லிருந்து செயலுக்கு வந்தன. 14, 15, 20 (3), 27, 48 ஆகிய பிரிவுகள் 17—5—1978 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன.

6. புதிதாக இயற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப் பகுதி (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 24/1978) சென்னை நகர்ப்புறக் கூட்டுப்பகுதியின் பரப்பு 1,400 சதுர கிலோ மீட்டரிலிருந்து 575 சதுர கிலோ மீட்டராகக் குறைக்கப்பட்டுள்ளது. ஏனைய நகர்ப்புறக் கூட்டுப் பகுதி களைப் பொறுத்தமட்டில், எல்லையோரப் பகுதிகளை நீக்கியதன் மூலம், மொத்தப் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியாகக் குறைத் துள்ளது.

7. இச்சட்டம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி நகரக் கூட்டுப் பகுதிகளில் செயலில் உள்ளது.

8. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகர் கூட்டுப்பகுதி ஒவ்வொன்றி லும் தனிப்பட்ட ஒருவரோ, ஒரு குடும்பமோ, ஒரு தொழில் நிறு வனமோ, நிலம் வைத்து வர அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பின் விவரம் பின்வருமாறு :—

**தமிழ்நாடு சட்டம் 24/1978.**

| நகர் கூட்டுப் பகுதி. | வகைப் பாடு. | தனிப் பட்ட ஒருவர். | ஒரு குடும்பம். | தொழில் நிறுவனம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சென்னை .. .. | i | 500 | 2,000 | 2,000 |
| மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் .. .. | ii | 1,500 | 3,000 | 3,000 |
| திருநெல்வேலி . | iii | 2,000 | 4,000 | 4,000 |

9. நகர்ப்புற கூட்டுப்பகுதியிலுள்ள வேளாண்மை நிலங்கள் வேளாண்மை அல்லாத பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டாலும், அதன் தன்மை (அதாவது வேளாண்மை) மாறுபட்டாலும் அத் தகைய நிலங்கள் நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும்.

10. விற்பனைத் பத்திரம், ஏனைய பத்திரங்கள் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள நிலங்கள் வெற்று நிலங்களா அல்லது பயிரிடும் நிலங்களா என்பது குறித்து, தகுதி வாய்ந்த அதிகாரிகளால் சரி பார்க்கப்பயன் படும் வகையில் 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச்

சட்டத்தின்படி, பதிவு செய்வதற்காகப் பத்திரங்களை தாக்கல் செய்யும்போது, உரிமை மாற்றம் செய்து கொடுப்பவரும் செய்து கொடுக்கப் பெறுபவரும், எல்லா தேர்வுகளிலும் படிவம் XIII இல் அமைந்த உறுதி மொழியை இரட்டையாக தாக்கல் செய்ய வேண்டும் என்று பத்திரப் பதிவு செய்யும் அதிகாரிகள் வலியுறுத்த வேண்டும் என்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

11. இச்சட்டம் செயலுக்கு வந்த நாளன்று உச்சவரம்பிற்குள் கூடுதலாக காலி நிலம் வைத்துள்ள ஒவ்வொருவருக்கும் அவ்வாறு கூடுதலாக வைத்துள்ள நிலம் குறித்த அறிக்கை ஒன்றை அப்பகுதியின் அதிகார வரம்பைப் பெற்றுள்ள தகுதி வாய்ந்த அதிகாரியிடம் தாக்கல் செய்ய வேண்டும். பொது மக்களும், நிறுவனங்களும், வணிகப் பேரவைகளும், முறையீடு செய்ததின் காரணமாக, இந்திய குடியரசுத் தலைவரின் 1976 ஆம் ஆண்டு, 34 ஆம் சட்டத்தின்படி 6(1) விவர அறிக்கையைத் தாக்கல் செய்வதற்குரிய கடைசி நாள் மேற்கொண்டு 697 நாட்கள் நீட்டிக்கப்பட்டது. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புறப் பகுதி நில (உச்சவரம்பு-முறைப்படுத்துதல்) சட்டத்தின் (சட்டம் 24/1978) 7(1) வது பிரிவின் கீழ் விவர அறிக்கை தாக்கல் செய்வதற்குரிய கடைசி நாள் 14—8—1978 ஆம் நாளோடு முடிவடைந்தது. பொது மக்களும், வணிகப் பேரவைகளும் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்த விவர அறிக்கையை தாக்கல் செய்யும் கால வரம்பு ஒரு திங்கள் கால அளவிற்கு அதாவது 14—9—1978 ஆம் நாள் வரையில் நீட்டிக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டு சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழும் 1978 ஆம் ஆண்டு சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் கீழும் 17,392, அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. 1978 ஆம் ஆண்டு சட்டத்தின் விதித்துறைகளின்படி, தாக்கல் செய்யப்பட்ட 15,359 அறிக்கைகள் உச்சவரம்பு அளவிற்கு வருகின்றன என அறிவிக்கப்பட்டது. எஞ்சியுள்ள 2,033 அறிக்கைகள் தகுதி வாய்ந்த அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கைகளையொட்டி கையகப்படுத்தக் கிடைக்கப்பெறும் உபரியாகவுள்ள காலி நிலங்களின் பரப்பளவு, 2,800 ஹெக்டேராகும். தகுதி வாய்ந்த அதிகாரிகள் அந்த விவர அறிக்கைகளைப் பரிசீலித்து வருகின்றனர். 550 ஹெக்டேர் பரப்பளவுள்ள காலி நிலம் மிகையாக உள்ளது என்று அறிவிக்க 519 அறிக்கைகள்மீது அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த அறிக்கைகள், தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நகர்ப்புறப்

பகுதி நில (உச்சவரம்பு-முறைப்படுத்துதல்) சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின்கீழ், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 30—4—1985 ஆம் நாள் வரையில், 418 இனங்களில் உபரியான 416 ஹெக்டேர் பரப்பளவு வெற்று நிலம் குறித்து மேற்படி சட்டத்தின் 11(3) ஆம் பிரிவின் கீழ் அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. 316 இனங்களைப் பொறுத்தமட்டில், 364 ஹெக்டேர் பரப்பளவுள்ள வெற்று நிலம் சுவாதீன உரிமையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பொருத்தமான அதிகாரிகள், மேற்படி சட்டத்தின் 9 முதல் 11 வரையிலான பிரிவுகளின் கீழ் அந்த அறிக்கைகளை பரிசீலித்து வருவதால் மிகையான வெற்று நிலத்தின் பரப்பளவில் எவ்வளவு என்பதை இந்நிலையில் துல்லியமாக மதிப்பிட இயலாது.

12. நகர்ப்புறக் கூட்டுப் பகுதி ஒவ்வொன்றிலும் கையகப்படுத்தப்படும் மிகையான வெற்று நிலங்களுக்கு வழங்கத்தக்க ஈட்டுத் தொகை குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| நகர்ப்புறக் கூட்டுப் பகுதி. | வகை. | தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு 24 ஆம் சட்டம் வழங்கத்தக்க தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சென்னை | (i) | ஒரு சதுர மீட்டருக்கு 50 ரூபாய்க்கு மேற்படாமல். |
| மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் | (ii) | ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய்க்கு மேற்படாமல். |
| திருநெல்வேலி | (iii) | ஒரு சதுர மீட்டருக்கு 15 ரூபாய்க்கு மேற்படாமல். |

13. இச்செயல் நோக்கத்திற்காக, இம்மாநிலத்திலுள்ள நகர்ப்புறக் கூட்டுப்பகுதி ஒவ்வொன்றும் முறையான நகர்பகுதி வளர்ச்சி பணியையும், அது தொடர்பான ஏனைய நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக, நகர்ப்புறக் கூட்டுப்பகுதியில் அப்பகுதி அமைந்துள்ள இடம் பகுதி, நகர்ப்புற கூட்டுப்பகுதியில் அமைந்துள்ள அந்நிலத்தின் பொதுப் பயன், நகர்ப்புறக் கூட்டுப் பகுதியிலுள்ள அந்நிலத்தின் பயன்பாடு ஆகியவற்றைக் கருத்திற்



கொண்டு வெவ்வேறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அரசு எடுத்துக் கொண்ட மிகையான காலி நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவது தொடர்பாக இதுவரையில் 39.90 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

14. அரசு வெற்று நிலங்களைக் கையகப்படுத்தும்போது, அந் நிலத்திற்காக வழங்கத்தக்க மொத்தத் தொகையில் 25 சதவீதத் தொகையை அல்லது 25,000 ரூபாயை இவற்றில் எத்தொகை குறைவானதோ, அத்தொகையை உடனடியாக வழங்க வேண்டும். எஞ்சியுள்ள தொகையை, வெற்று நிலத்தை அரசு எடுத்துக்கொண்டுள்ளதாகக் கருதப்படும் நாளிலிருந்து 15 ஆண்டு கால அளவில், ஆண்டு ஒன்றிற்கு 6 சதவீத வட்டியுடன் சம ஆண்டுத் தவணைகளில் வழங்க வேண்டும். 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்பகுதி (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்தும்) சட்டத்தின் பிரிவு 16(2)-ன் படி முதலாவதாக கொடுக்கப்படும் 25 விழுக்காடு இழப்பீட்டுத் தொகை மேற்சொன்ன பிரிவை திருத்துவதின் மூலம் உயர்த்துவதற்குரிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

15. மத்திய, மாநில அரசுகள், அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், அட்டவணையிடப்பட்ட வங்கிகள், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், சமய அறக்கட்டளை நிறுவனங்கள் முதலியவை வைத்துள்ள நிலங்களுக்கு இச்சட்டத்தின் விதித்துறைகள் பொருந்தாது.

16. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு 24 ஆம் சட்டத்தின் 20 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் விதித்துறைகளை செயற்படுத்துவதில் நடைமுறை இடர்பாடுகள் இருந்தன. இவ்விடர்பாடுகளை களையும் பொருட்டு, மேற்கூறிய 20 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவுக்குப் பதிலாக, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நில (உச்சவரம்பு முறைப்படுத்தல்) (தமிழ்நாடு சட்டம் 14/1979) திருத்தச் சட்டத்தின் மூலம் புதிய உட்பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. பொது அறக்கட்டளைகள் அல்லது சமயப் பொறுப்பு கழகங்கள் (வக்ஃப் வாரியம் உட்பட) எனவும், உச்ச வரம்புக்குக் கூடுதலாக உள்ள நிலங்களை முழுமையாகவோ அல்லது அவற்றில் ஒரு பகுதியாகவோ, விற்பனை செய்தல், தானமாகக் கொடுத்தல், குத்தகைக்கு விடுதல் அடைமானம் வைத்தல், ஆகியவற்றின் மூலமோ அல்லது பிற வழிகளிலோ

உரிமை மாற்றம் செய்யக் கூடாது என்றும் அவ்வாறு செய்யப்படும் உரிமை மாற்றம் சட்டப்படி செல்லாது என்றும் இச் சட்டம் வகை செய்கிறது. மேலும், பொது அறக்கட்டளைகள், அல்லது சமயப் பொறுப்புக் கழகங்கள் (வஃப் வாரியம் உட்பட) வைத்துள்ள நிலங்கள் பொது அறப்பணிகளுக்கு அல்லது சமயப் பணிகளுக்கு தேவைப்படுவதும் பயன்படுவதும் அற்றுப் போகுமானால், மேற்கூறிய தமிழ்நாடு சட்டத்தின் விதித்துறைகள் அவற்றிற்குப் பொருந்தும். மேற் கூறிய தமிழ்நாடு சட்டத்தின் III ஆம் அத்தியாயத்தின் விதித்துறைகளுக்கிணங்க அத்தகைய மிகை வெற்று நிலங்களை அரசு கையகப்படுத்தும். பொது நலன் கருதி அல்லது யாதொரு தனி நபருக்கும் இடர்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, விதி விலக்களிக்கும் அதிகாரம் அரசுக்கு உண்டு.

17. மேற்சொன்ன சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட மிகையான வெற்று நிலங்கள் மேற்சொன்ன சட்டத்தின் 24 ஆம் பிரிவின் விதித்துறைகள், மேற்சொன்ன சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதிகளின் 23 ஆம் விதி ஆகியவற்றின்படி ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நில (உச்சவரம்பு—முறைப்படுத்தல்) சட்டத்தின் 11(3) ஆம் பிரிவின் கீழ், கையகப்படுத்தப்பட்ட வெற்று நிலங்களை ஒதுக்கீடு செய்வதற்காக, விண்ணப்பதாரர் பலருடைய தகுதி குறித்து, மதிப்பிடுவதற்காகவும், அரசுக்குப் பரிந்துரைப்பதற்காகவும், அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

18. மேற்சொன்ன சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட வெற்று நிலங்களில் 113 ஏக்டேர் நிலத்தை, அரசுத் துறைகள், அரசுக் கழகங்கள், வீட்டு வசதி வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அரசு 30—4—1985 வரை ஒதுக்கீடு செய்துள்ளது.

### 16. வருவாய்த்துறைக் கட்டிடங்கள்.

கடந்த சில வருடங்களாக மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்கள் நிர்வாகத் திறமையைக் கருதி இரண்டாக மற்றும் மூன்றாகப் பிரிக்கப்படும்போதும், வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும் வருவாய்த்துறை அலுவலகங்களை சொந்த கட்டிடங்களில் அமர்த்தும் பொருட்டும், அரசு அதி முக்கியத்துவம் கொடுத்து, புதிய கட்டிடங்கள் கட்ட ஆணை பிறப்பித்து வருகிறது.





**மாவட்ட ஆட்சித் தலைவரலுவலகம் :**

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களும், அரசுக் கட்டிடங்களிலேயே செயல்பட்டு வருகின்றன. வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடங்கள் கட்ட வேலூருக்கு அருகில் உள்ள சத்துவாச்சேரி கிராமத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான 14 ஏக்கர் நிலம் நிலமாற்றம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

**கோட்டாட்சி அலுவலகங்கள் :**

இம்மாநிலத்தில் 55 வருவாய் கோட்ட அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் 51 அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள மூன்று கோட்டாட்சி அலுவலகங்களில் திருப்பூரில் கட்டிடப் பணி நடைபெற்றும், கடலூரில் 1985-86 ஆம் ஆண்டில் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டும், தாராபுரத்தில் நிலம் கையகப்படுத்தப்பட்டு கட்டிடப் பணி நாளடைவில் துவங்கும் என கருதப்பட்டும் வருகின்றது. பரமக்குடியில் கோட்ட அலுவலகம் கட்டும் பணி காலப்போக்கில் மேற்கொள்ளப்படும்.

**வட்டாட்சி அலுவலகங்கள் :**

இம்மாநிலத்தில் 166 வட்டாட்சி அலுவலகங்கள் உள்ளன. அவற்றுள் 156 அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. அதில் சில மிகப் பழையன. திருவாரூர், கும்மிடிப் பூண்டி, மேட்டுப்பாளையம் மற்றும் குடவாசல் ஆகிய இடங்களில் வட்டாட்சி அலுவலகங்களுக்கான பணி நடைபெற்று வருகிறது. 1985-86 ஆம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஊத்துக் கோட்டை மற்றும் சென்னை மாவட்டத்தில் மாம்பலம், கிண்டி ஆகிய இடங்களில் புதிய வட்டாட்சி அலுவலகங்கள் கட்ட கருதப் பட்டுள்ளது.

**குடியிருப்புகள் :**

**பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கான அலுவலகம் இணைந்த குடியிருப்புகள் :**

இம்மாநிலத்தில் 1,097 பிர்க்காக்கள் உள்ளன. 1978-79 ஆம் ஆண்டிலிருந்து பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கென அலுவலகம் இணைந்த குடியிருப்புக்களைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப் படிப்படியாக அரசு நிறைவேற்றி வருகிறது.

இதுவரை அனுமதி வழங்கப்பட்டுள்ள 973 குடியிருப்புக்களில், 687 குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியவை கட்டப்பட்டு வருகின்றன. சென்னை மாவட்டம் நீங்கலாக, இன்னும் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ள பிர்க்காக்கள் 104 ஆகும். 1985-86 ஆம் ஆண்டுக் காலத்தில், 10 குடியிருப்புக்களைக் கட்டுவதற்கு அனுமதி வழங்க அரசு கருதியுள்ளது.

மேலும், குன்னூர் கோட்டாட்சித் தலைவருக்கும், இராமநாதபுரம் வட்டாட்சியருக்கும் குடியிருப்புக்கள் 1985-86 ஆம் ஆண்டு கட்டித் தர அரசு கருதி வருகிறது.

**மோட்டார் வாகனங்கள் :**

மாவட்டங்களில் சமூக பொருளாதாரத் திட்டங்களை வெகு விரைவில் செயலாற்றுவதற்கு வட்டாட்சியர் முதல் மற்றைய வருவாய் அலுவலர் அனைவருக்கும் மோட்டார் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1984-85 ஆம் ஆண்டில், வருவாய் அலுவலர்களின் அலுவலக உபயோகத்திற்காக 8 அம்பாசிடர் சிற்றுந்துகளையும் மற்றும் 2 ஜீப்புகளையும், ரூ. 8,03,968.20 செலவில் வாங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**மரத்தளவாடங்கள் :**

பல்வேறு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர்களின் குடியிருப்புகளுடன் சேர்ந்த அலுவலகங்கள் முதலியவைகளுக்கு மரத்தளவாடங்கள் வாங்குவதற்காக 1984-85 ஆம் ஆண்டில் அரசு ரூ. 7.25 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

**கிராமச்சாவடிகள் மற்றும் கால்நடைப் பட்டிகள் :**

சமுதாயத்தின் தேவையின்பொருட்டு, 1983 ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து புதிய கிராமச்சாவடிகள் மற்றும் கால்நடைப் பட்டிகள் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டலாம் என்று ஆணை வழங்கப்பட்டுள்ளது. தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் வழிமுறைகளின்படி மேற்படி திட்டத்தின்கீழ் கட்டப்படும் கட்டிடங்களின் மொத்த செலவில், பொருள் மதிப்பு மற்றும் கூலி மதிப்பு 50:50 என்ற அடிப்படையில் இருக்க வேண்டும். கிராமச்சாவடி மற்றும்





கால்நடைப்பட்டிகள் கட்டுவதற்கான மொத்த செலவில், பொருட்செலவு, 50 விழுக்காட்டிற்கும் அதிகமாவதால், மேற்படி அதிகப்படியான செலவினத்தை வருவாய்த் துறையின் வருடாந்திர நிதி ஒதுக்கத்தில் சேர்க்கவேண்டும். எனவே, 1984-85 ஆம் ஆண்டிற்கான வருவாய்த்துறை நிதி ஒதுக்கத்தில் புதிய கால்நடைப்பட்டிகள் மற்றும் கிராமச்சாவடிகள் அமைக்க முறையே ரூ. 10 இலட்சம் மற்றும் ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மேற்படி புதிய கிராமச்சாவடிகள் மற்றும் கால்நடைப்பட்டிகள் அமைக்க மாவட்டவாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, 17 புதிய கிராமச்சாவடிகள் மற்றும் 103 புதிய கால்நடைப்பட்டிகள் கட்டுவதற்கேற்ற புலன்களைத் தெரிந்தெடுக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

## 17. நிலவரி, செஸ்வரி முதலியன.

**நிலவரி முதலியவற்றைத் தள்ளுபடி செய்தல் :**

1390 ஆம் விளைச்சல் (பசலி) ஆண்டில் சிறு உழவர்களிடமிருந்தும், வளவாய்ப்பு ஏதுமில்லாத வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் வாழும் உழவர்களிடமிருந்தும் வலுக்கட்டாயமாக நிலவரி வசூலிப்பதில்லை என்பது அரசின் கொள்கையாக இருந்தது. இதற்காக அரசு 1981 ஆம் ஆண்டு மே திங்களில் பின்வரும் விளக்கங்களை வெளியிட்டது :—

(i) ஜப்தி நடவடிக்கைக்காக 10 ஏக்கரும் அதற்கு மேற்பட்ட நிலத்தை சொந்தமாகக் கொண்டு பயிரிடுபவர்கள் சிறு உழவர்களாகக் (ஏழை உழவர்களாக) கருதப்படமாட்டார்கள். மொத்தப் பரப்பளவில் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்டு விளைச்சல் கிடைத்தால் நிலவரி, தக்காவி, அரசுப் பாக்கித் தொகை ஆகியவற்றிற்காக ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

(ii) உழவர் ஒருவர் 10 ஏக்கரும் அதற்கு மேற்பட்டும் சொந்தமாகக் கொண்டு பயிரிட்டு அதில் ஒரு பகுதியில் அவருக்கு 50 சதவிகிதமும் அதற்குக் குறைவாகவும் பலன் கிடைத்தால் பாதிக்கப்பட்ட பரப்பளவிற்கு அவருக்கு தள்ளுபடி கிடைக்கும்.

இந்தப் பகுதியைப் பொறுத்தமட்டில் பாக்கித் தொகை வசூலிப்பது தள்ளி வைக்கப்படும். ஆனால், 50 சதவிகிதமும் அதற்கு மேற்பட்டும் விளைச்சல் கிடைத்த எஞ்சிய நிலப் பகுதியில் பாக்கித் தொகை வசூலிக்க ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கலாம்.

(iii) உழவர் ஒருவர் 10 ஏக்கருக்குக் குறைவாக நிலத்தை வைத்திருந்து பயிரிட்டு அதில் 50 சதவிகிதமும் அதற்கு மேற்பட்டு அவருக்கு விளைச்சல் கிடைக்குமானால் இயல்பான போக்கில் நிலுவையும் நடப்பு கேட்புத் தொகையும் வசூலிக்கப்படவேண்டும். எனினும், ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதில்லை.

(iv) உழவர் ஒருவர் 10 ஏக்கருக்குக் குறைவாக வைத்திருந்து பயிரிட்டு அதில் ஒரு பகுதியில் அவருக்கு 50 சதவிகிதமும் அதற்குக் குறைவாகவும் விளைச்சல் இருக்குமானால், அப்பகுதிக்கு வரித் தள்ளுபடி கிடைக்கும். நிலுவைகள் வசூலிப்பது ஒத்தி வைக்கப்படும். 50 சதவிகிதத்திற்கு மேற்பட்டு பயிர் விளைச்சல் கிடைத்த எஞ்சிய பகுதியைப் பொறுத்தவரை நடப்பு நிலுவை கேட்புக்தொகை வசூலிக்கப்பட வேண்டும்; எனினும் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய அவசியமில்லை.

2. 1390 ஆம் விளைச்சல் (பசலி) ஆண்டிற்கு, சிறு உழவர்களிடமிருந்தும், வளவாய்ப்பு ஏதுமில்லாத வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் வாழும் உழவர்களிடமிருந்தும் வலுக்கட்டாயமாக நிலவரி வசூலிப்பதில்லை என்று அரசு முடிவெடுத்தது. இச்சலுகை 1391 ஆம் விளைச்சல் ஆண்டிலும் தொடர்ந்து அளிக்கப்பட்டது. 1392 ஆம் விளைச்சல் ஆண்டிற்கும், சென்னை தவிர பிற எல்லா மாவட்டங்களைப் பொறுத்தமட்டில் கடந்த விளைச்சல் ஆண்டுகளில் சலுகை அளிக்கப்பட்ட அதே முறையிலேயே உழவர்களுக்கு நிலவரி, உள்ளூர் செஸ்வரி முதலியவற்றைத் தள்ளுபடி செய்வதென அரசு முடிவெடுத்தது.

3. 1393 ஆம் விளைச்சல் ஆண்டிற்கு செலுத்தத்தக்க நிலவரி, தண்ணீர்த் தீர்வை, உள்ளூர் செஸ்வரி, கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை முதலியவற்றை (1—7—1983 முதல் 30—6—1984 வரை) 1393 ஆம் விளைச்சல் ஆண்டிற்கு முழுமையாக தள்ளுபடி செய்வதென அரசு முடிவெடுத்துள்ளது. இச்சலுகை, இம்மாநிலத்தில் 1983 டிசம்பரில் ஏற்பட்ட பெருத்த



மழையாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள எல்லா வகை நிலங்களிலும் ஏற்பட்ட மொத்த இழப்பு தொடர்பான வருவாய் நிலை ஆணைகளில் குறிப்பிட்டதற்கேற்ப அளிக்கப்படும். அங்கு பயிர் விளைச்சல் ஆறு அணாக்களும் (37 காசுகள்) அதற்குக் குறைவாகவும் உள்ளது. நிலத்திற்கு நிலம் சரிபார்க்கும் அடிப்படையில் அணாவாரி சான்றுகள் வழங்குவதற்கு இது அடிப்படையாகும். 1393 ஆம் நடப்பு விளைச்சல் ஆண்டிற்கு நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததால் நிலவரி நிலுவைத் தொகை, தண்ணீர்த் தீர்வை, உள்ளூர் செஸ் வரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை கூடுதல் வரி விதிப்பு, தனி வரி விதிப்பு, தண்ணீர்த் தீர்வை, தக்காவிக் கடன், நிலுவைத் தொகை மற்றும் நடப்பு தவணைத் தொகை ஆகியவற்றை வசூலிப்பதை 1394 ஆம் விளைச்சல் ஆண்டிற்குத் தள்ளிப்போட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது. இச்சலுகைகள் 1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருத்த மழையாலும் வெள்ளத்தாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, அதனால் விளைந்து நின்ற பயிர்களுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ள பகுதிகளுக்கு மட்டுமே அளிக்கப்படும். 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் மேற்சொன்ன சலுகைகள் அளிக்கப்படும்.

4. நிலவரி வசூலிக்கும் விஷயத்தில் ஜப்தி நடவடிக்கை குறித்த தடையைத் தொடர்ந்து செயல்படுத்துவது குறித்து அரசு பரிசீலித்து சிறு உழவர்கள் சொற்ப நில உழவர்கள், ஆகியோரைப் பொறுத்தவரை இத்தடையைத் தொடர்ந்து செயலில் வைத்திருப்பது அவசியமாய் இருக்கும்போது, பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலும் சிறிது காலம் நிலவரி பெருமளவில் நிலுவையாய் இருப்பதை கருத்தில் கொண்டு பார்த்தால் பெரிய பட்டாதாரர்கள் குறித்த இத்தடை தொடர்ந்து செயல்படுத்த வேண்டிய அவசியமில்லை. முன்பு அரசு அளித்த சலுகைகளின் வரம்பிற்குள் வாராதவர்களும் 1983 டிசம்பர், 1984 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் ஏற்பட்ட கடும் வறட்சி, மழை, வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்படாதவர்களுமான பெரிய பட்டாதாரர்களிடம் நிலவரி வசூல் செய்யும் விஷயத்தில் ஜப்தி நடவடிக்கை எடுப்பதென 1984 அக்டோபர் மாதத்தில் அரசு முடிவு செய்தது. அரசு அளித்துள்ள பொருள் விளக்கத்திற்குள் வரும் இச்

உழவர்கள் மட்டுமின்றி மழையால் பாதிக்கப்பட்ட பட்டா தாரர்கள் (பெரிய பட்டாதாரராயினும் சரி அல்லது சிறிய பட்டா தாரராயினும் சரி அனைவரிடமிருந்தும் நிலவரி வசூலிப்பதைப் பொறுத்தவரையில் ஜப்தி நடவடிக்கை மீதான தடையைத் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய்தது. சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தக்க கட்டளைகள் பிறப்பிக்குமாறு சிறப்பு ஆணையர்—வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

**(ஆ) நிலவரி, செஸ் முதலியவற்றை வசூலித்தல் :**

1391 ஆம் ஆண்டு விளைச்சல் ஆண்டில் (1981 ஜூலை முதல் 1982 ஜூன் வரை) செஸ் (உள்ளூர் செஸ், உள்ளூர் செஸ் மேல் வரி முதலியன) உட்பட நிலவரி வசூல் ரூ. 24,95,84,334 ஆக இருந்தது. இதுவே, 1392 ஆம் விளைச்சல் ஆண்டில் (அதாவது 1982 ஜூலை முதல் 1983 ஜூன் வரை) ரூ. 10,64,41,955 ஆகும். 1982-83 ஆம் ஆண்டில் பருவ மழை பொய்த்ததால் ஏற்பட்ட மோசமான பருவ நிலை காரணமாக இந்த வசூல் குறைந்தது 1392, 1393 ஆம் விளைச்சல் ஆண்டுகளில் இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்ட கால அளவில் வருவாய்த்துறை அமைப்பு முழுவதும் (கிராம அளவு வரையுள்ள அனைத்து அலுவலகங்களும்) மீட்புப் பணிகளிலும், நிவாரணப் பணிகளிலும் முழுமையாக ஈடுபட்டிருந்தது. அரசு அதிக அளவில் வரி, கடன் தள்ளுபடிகளை அளித்துள்ளது. இவ்வாறு அதிக அளவில் தள்ளுபடி அளித்தது சுமார் ரூ. 12 கோடி ஆகும். 1392 ஆம் விளைச்சல் ஆண்டில் நிலவரி வசூல் செய்ய அதிக அளவில் வலுக்கட்டாய முறை கடைப்பிடிக்கப் பட்டதால் குறைவான அளவிற்கு வரி வசூல் ஆகியது.

அதிக அளவில் நில வரியை வசூல் செய்யும் நோக்கத்துடன், ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் அவசியமான பிற நடவ டிக்கைகள் அனைத்தையும் சிறப்பாக எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவருக்கும் அரசும், வருவாய் நிருவாக ஆணையாளர் சிறப்பு ஆணையாளரும் 1984 பிப்ரவரியில் உத்தர விட்டனர். ஜப்தி நடவடிக்கையை மட்டும் மேற்கொள்ளாமல் நிலவரி வசூலை அதிகப்படுத்தி 1984 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் தேதி முதல் 1984 ஆம் ஆண்டு ஜூன் இறுதி வரை மாவட் டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்த வரி வசூல் நடவடிக்கைகளின்





முன்னேற்றத்தை உன்னிப்பாகக் கவனித்து ஒவ்வொரு வாரமும் இதில் ஏற்படும் முன்னேற்றத்தைச் சிறப்பு ஆணையாளர்—வருவாய் நிருவாக ஆணையாளருக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. இணை ஆணையாளர் (கடன்கள்) மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள் ஆகியோருடன் நிலைமையை ஆய்வு செய்தார். சிறப்பு ஆணையாளர்—வருவாய் நிருவாக ஆணையாளர், மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும்போது, வரி வசூலில் ஏற்பட்டிருந்த முன்னேற்றத்தை நுணுக்கமாக ஆய்வு செய்தார். அரசும் வசூலில் ஏற்பட்டிருந்த முன்னேற்றத்தை உன்னிப்பாகக் கவனித்து வந்தது.

1393 ஆம் விளைச்சல் ஆண்டில் (அதாவது 1—7—1983 முதல் 30—6—1984 வரை) செஸ் (உள்ளூர் செஸ், உள்ளூர் செஸ் மேல்வரி) உட்பட நிலவரி வசூல் ரூ. 20,51,75,987 ஆகும். 1380 ஆம் விளைச்சல் ஆண்டிலிருந்து, நிலவரி வசூல் அதிகமாக இருந்ததில் இது இரண்டாவது முறையாகும். மிக அதிகமான வசூல் 1391 ஆம் விளைச்சல் ஆண்டில் 24.96 கோடி ஆகும். சில மாவட்டங் களில் வறட்சியும், வெள்ளப் பெருக்கும் இருந்தபோதிலும் கட்டாய வசூல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாத நிலையிலும் 1393 ஆம் பசலி ஆண்டில் ரூ. 20.52 கோடி வசூல் ஆகியது. இச்சாதனை மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையின் கீழ் வருவாய்த் துறை மொத்தத்தில் மேற்கொண்ட சிறப்பான பணியின் மூலம் ஏற்பட்டது. இதில் மாவட்ட வருவாய் அதிகாரிகள்/மாவட்டக் கூடுதல் ஆட்சித் தலைவர்கள் உதவி புரிந்துள்ளனர். மேலும் இதில் சிறப்பு ஆணையாளர் வருவாய் நிருவாக ஆணையாளரும் இப்பணிகளை—உன்னிப்பாக கண்காணித்து வந்ததோடு, அரசும் இப்பணிகளை—உன்னிப்பாக கண்காணித்து வந்ததோடு, சிறந்த முறையில் இவற்றை ஆய்வு செய்ததோடு சில வழிமுறை களை நல்கியுள்ளனர்.

(இ) மூன்று விளைச்சல் ஆண்டுகளின் வசூல் குறித்த விவரங்கள்.

(i) 1391ஆம் விளைச்சல் ஆண்டு (1—7—1981 முதல் 3 –6—1981 வரை)

| (1) | கேட்பு. (2) | வசூல். (3) | நிலுவை. (4) |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| நிலுவை | 44,61,26,850 | 14,97,6[illegible],431 | 29,63,65,419 |
| நடப்பு தொகை. | 22,87,02,542 | 9,98,22,903 | 12,88,79,639 |
| மொத்தம்.. | 67,48,29,392 | 24,95,84,334 | 42,52,45,058 |

(ii) 1392 ஆம் விளச்சல் ஆண்டு (1—7—1982 முதல் 30—6—1983 வரை).

| (1) | கேட்பு. (2) | வசூல். (3) | நிலுவை. (4) |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| நிலுவை | 46,21,12,429 | 5,93,41,091 | 40,27,72,338 |
| நடப்புத் தொகை. | 19,71,34,252 | 4,71,00,864 | 15,00,33,388 |
| மொத்தம்.. | 65,92,46,681 | 10,64,4[illegible],955 | 55,28,04,726 |

1393ஆம் விளைச்சல் ஆண்டு (1—7—1983 முதல் 30—6—1984 வரை)

| (1) | கேட்பு. (2) | வசூல். (3) | நிலுவை. (4) |
|---|---|---|---|
| நிலுவை | 5[illegible],83,74,140 | 10,28,40,280 | 41,55,33,860 |
| நடப்புத் தொகை. | 19,08,12,299 | 10,23,35,707 | 8,84,76,592 |
| மொத்தம்.. | 70,91,86,439 | 20,51,75,987 | 50,40,10,452 |



1394ஆம் விளைச்சல் ஆண்டு (1—7—1984 முதல் 30—6—1985 வரை) 10—5— 985 அன்று உள்ளவாறு.

| | | | |
|---|---|---|---|
| நிலுவை | 51,57,20,355 | 15,12,69,4[illegible]3 | 36,44,50,942 |
| நடப்புத் தொகை. | 21,68,82,635 | 13,15,49,432 | 8,53,33,203 |
| மொத்தம்.. | 73,26,02,990 | 28,28,18,845 | 44,97,84,145 |

## 18. இடைத் தரகர்களை ஒழித்தலும் ரயத்துவாரியாக மாற்றுதலும்.

அரசுக்கும் நிலத்தை உழுபவருக்கும் இடையிலான ஜமீன் இனாம், கீழ்காணி ஆட்சி, உடைமைகளையும் மற்றும் இதர சிறப்பு உரிமை முறையையும் ஒழிக்கும் பணி அரசால் பல்வேறு சட்டங்களின் கீழ் அமுலாக்கம் செய்யப்பட்டு இப்பணியின் பெரும் பகுதி முடிவுற்றுள்ளது. இது 1947-ல் சுதந்திரத்திற்குப் பின் அரசின் ஓர் பெரும் விவசாயச் சீர்திருத்தமாகும்.

இவ்வினத்தில் பெருவாரியான முன்னேற்றம் கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஏற்பட்டுள்ளது.

(அ) தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1948 (சட்டம் 26/48):—

| (1) | மொத்த உடைமைகள். (2) | ச. கி. மீட்டரில்.. (பரப்பு) (3) |
|---|---|---|
| 1. அரசால் எடுத்துக்கொள்ளப் பட்ட மொத்த உடைமைகள். | 5,134 | 29,931.21 |
| 2. 31-12-1984 வரை நிலவரித் திட்டம் செயல் படுத்தப் பட்ட பரப்பு. | 5,134 | 29,931.21 |
| 3. நிலுவை .. .. .. | இல்லை. | இல்லை. |

[1985 ஜூன் 11

(ஆ) தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும், ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம், 1963 (சட்டம் 26/1963)—

| (1) | மொத்த உடைமைகள். (2) | ச. கி. மீட்டரில். (பரப்பு). (3) |
|---|---|---|
| 1. அரசால் எடுத்துக்கொள்ளப் பட்ட உடைமைகள். | 2,095 | 4,152.0 |
| 2. 31–12–1984 வரை நிலவரித் திட்டம் செயல் படுத்தப் பட்ட பரப்பு. | 2,063 | 4,126.59 |
| 3. நிலுவை (இந்திய உச்ச நீதி மன்றம், சென்னை உயர் நீதிமன்றம், சிவில் நீதி மன்றங்களின் தடை யாணைகள் மூலம் நிலுவையில் உள்ளன.) | 32 | 25.51 |

(இ) தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மற்றுதலுமான) சட்டம், 1963 (சட்டம் 30/63:—

| (1) | மொத்த உடைமைகள். (2) | ச. கி. மீட்டரில். (பரப்பு.) (3) |
|---|---|---|
| 1. அரசால் எடுத்துக்கொள்ளப் பட்ட மொத்த உடைமை கள். | 13,565 | 4,049.02 |
| 2. 31–12–1984 வரை நிலவரித் திட்டம் செயல்படுத்தப் பட்ட பரப்பு. | 13,564 | 4,048.92 |
| 3. நிலுவை (இனாம் ஒழிப்பு மன்றத் தடையாணை நீக் கத்தை எதிர்பார்த்து உள் ளது.) | 1 | 0.10 |



1985 ஜூன் 11]

(ஈ) தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம், 1963 (சட்டம் 27/1963).—

| (1) | மொத்த உடைமைகள். (2) | ச. கி. மீட்டரில். (பரப்பு). (3) |
|---|---|---|
| 1. அரசால் எடுத்துக்கொள்ளப் பட்ட மொத்த உடைமைகள் | 13 | 83.20 |
| 2. நிலவரித் திட்டம் செயல்படுத் தப்பட்ட பரப்பு. | 13 | 83.20 |
| 3. நிலுவை .. .. .. | இல்லை. | இல்லை. |

(உ) தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம் 1969:—

| (1) | மொத்த உடைமைகள். (2) | ச.கி. மீட்டரில். (பரப்பு). (3) |
|---|---|---|
| 1. அரசால் எடுத்துக்கொள்ளப் பட்ட உடமைகள். | 10 | 324.10 |
| 2. நிலவரித் திட்டம் செயல்படுத் பட்ட பரப்பு. | 3 | 146.18 |
| 3 நிலுவை .. .. .. | 7 | 177.92 |

ரயத்துவாரிப்பட்டா வழங்கலும் மற்றும் பயனடைவோரும்.

31–12–1984 வரை பல்வேறு சட்டங்களின் கீழான விதி முறைகளின்படி ரயத்துவாரிப் பட்டா வழங்கப்பட்டுள்ள பட்டா தாரர்களின் எண்ணிக்கை கீழ்க்காணும் பட்டியலில் காணப்படு கிறது :—

| சட்டத்தின் பெயர். (1) | பயனடைந்தோர் எண்ணிக்கை. (2) | வழங்கப் பட்ட நிலப்பரப்பு. (ஹெக்டேரில்) (3) |
|---|---|---|
| தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப் பும் ரயத்துவாரியாக மாற்று தலும்) சட்டம், 1948 (சட்டம் 26/1948). | 23,33,840 | 18,17,390 |
| தமிழ்நாடு இனாம் உடைமையின் (ஒழிப்பும், ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963 (26/1963). | 3,56,036 | 1,93,806 |

| சட்டத்தின் பெயர். | பயனடைந்தோர் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட நிலப்பரப்பு. (ஹெக்டேரில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963 (27/1963). | 6,003 | 5,606 |
| தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963 (30/1963). | 5,11,150 | 3,23,246 |
| கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1969 (24/1969). | 6,468 | 10,771 |

ஒழிப்புச் சட்டங்களுக்கு புறம்பாக பட்டா வழங்கல்:—

தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம், 1948 அமுல்படுத்தப்பட்ட பின்னர்தான் அரசின் நடைமுறை ஆணைகளின்படி பட்டா வழங்குவதில் தளர்த்தப்பட்டதால் அரசால் அச்சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட உடைமைகளின் மிகப் பெரும்பான்மையான நபர்கள் பல ஆண்டுகளாக நிலங்களைக் கைப்பற்றியும், ஆளுகையிலும் வைத்திருந்தார். அவர்கள் சட்டத்தின் பல விதிகளின் கீழோ அல்லது அரசின் ஆணைகளுக்குக் கீழோ வாராமையால் பட்டா பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர் என்பது காணப்பட்டது. எனவே, அரசு 1971-ல் விளம்பரப்படுத்தப்பட்ட நாளுக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடர்ந்து அனுபவத்தில் வைத்திருந்த நிலங்களுக்கும் கைப்பற்றுதாரர்களுக்கும் பட்டா வழங்கப்படுதல் வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தது. இச்சலுகை பின்னர் சட்டம் 26/63 மற்றும் 30/63-ன் கீழ் வரும் இனங்களுக்கும் நீடிக்கப்பட்டது. இதுபோன்று உரிமை பெறும் நபர்கள் பல்வேறு உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களுக்கு புறம்பாக பட்டா கேட்டு செய்யப்படும் விண்ணப்பங்களுக்கான கடைசி நாளை அவ்வப்போது நீடித்து மற்ற எல்லா பகுதிகளுக்கும் கடைசியாக 31—3—1977 வரை நீட்டித்து அரசு ஆணை பிறப்



பித்துள்ளது. தென்னாற்காடு மாவட்டம். சின்னகல்ராயன் மலைப்பகுதிக்கு மட்டும் இக்கால நிர்ணயம் 31—12—1978 வரை நீடிக்கப்பட்டது. இது மேலும் மலை ஜாதியினர் பொறுத்த வரை 31—3—1985 முடிய நீடிக்கப்பட்டுள்ளது.

இன்று வரை 22,527 பேர்கள் உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களுக்குப் புறம்பாக பிறப்பிக்கப்பட்ட ஆணைகளால் பயனடைந்து 34,191 ஹெக்டேர் நிலங்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள ஜென்மம் உடைமைகள் ஒழிப்பு.**

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் மிகப் பெரும்பான்மை நிலப்பரப்பைக் கைவசம் வைத்திருந்த ஜென்மிகள் சாகுபடி உரிமைகளை வழங்கி குத்தகைக்கு விட்டு வந்தனர். அக்குத்தகை உரிமை 1929-ம் ஆண்டில் மலபார் குத்தகைதாரர்கள் சட்டத்தினால் ஏற்புடையதாக்கப்பட்டு குத்தகைதாரர்கள் பயிரிடும் நிரந்தர உரிமையைப் பெற்று விட்டனர். ஜன்மம் உரிமை, முறையை நீக்கி கைப்பற்றுதாரர்களுக்கு அவ்வுரிமையை வழங்கவே கூடலூர் ஜென்மம் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம், 1969 (சட்டம் 24/1969) இயற்றப்பட்டது. சில சட்டப் பிரச்சினைகளால் இச்சட்டம் 27—11—74 முதல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன்படி 324.10 சதுர கிலோ மீட்டர் கொண்ட நிலப்பரப்பு அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு நில அளவைப் பணி முடிக்கப்பெற்றது. இப்பரப்பு முழுவதுக்குமான ரயத்துவாரி பட்டா வழங்குவதற்காக சட்டப்பூர்வ விசாரணைப் பணியும் முடிக்கப்பட்டு விட்டது. சில ஜென்மம் உடைமைகளைக் கைப்பற்றில் வைத்திருப்பவர்கள் அவர்கள் கைப்பற்று நிலங்களை இச்சட்டம் செல்லுபடியாகாதென வாதிட்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் செய்த ரிட் மனுக்கள் 23—9—1976 அன்று தள்ளுபடி செய்யப்பட்டன. ஆனால் அவர்களுக்குள் சிலர் டெல்லி உச்சநீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்து தடையாணையும் பெற்றுள்ளனர். உச்ச நீதிமன்றத்தில் மாற்றப்பட்டு தடையாணையின்படி கூடலூர் வட்டத்தில் தடையாணைக்குட்பட்ட பகுதியில் சட்டபூர்வ விசாரணை வரையிலான நிலவரித் திட்டப் பணிகள் வரை நடைபெற்று, அத்துடன் நிறுத்தப்பட்

டுள்ளன. 31—12—1984 வரை நிலவரித் திட்டம், 146.18 சதுர கிலோ மீட்டர் பரப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ரயத்துவாரிப் பட்டாக்கள் 10,771 ஹெக்டேர் நிலப்பரப்புக்கு 6,468 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 177.92 சதுர கிலோ மீட்டரில் நிலவரித் திட்ட அமுலாக்கம் உச்ச நீதிமன்றத்தில் தடையாணை நீக்கத்தை எதிர்பார்த்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வரியற்ற நிலங்களின் மீது ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்டம், 1973 :**

1859 ஆம் ஆண்டிலிருந்து சில ரயத்துவாரி நிலங்கள் அவற்றின் மீதான 20 தடவை ஆண்டுத் தீர்வையைச் செலுத்திவிட்டு நிலவரி விதிக்கப்படாமல் வரியில்லாமால் கைப்பற்றில் உள்ளன. வேறு சில நிலங்கள் நிலவரியை சலுகை விகிதத்தில் செலுத்திப்படி கைப்பற்றில் உள்ளன. இவை வரியற்ற நிலங்கள் என சொல்லப் படுகின்றன. இவற்றிற்கும், மற்ற ரயத்துவாரி நிலங்களுக்கும் உள்ள ஒரே வித்தியாசம் என்னவெனில் முன்னதில் ரயத்துக்கள் ஆண்டுதோறும் தீர்வை செலுத்துகின்றனர். பின்னதில் சில இனங்களுக்குத் தீர்வையே கிடையாது. மற்றும் சில இனங்களுக்கு சலுகை தீர்வை வசூலிக்கப்படுகிறது என்பதே. 1972-ம் ஆண்டில் அத்தகைய வரியற்ற வரி குறைந்த நிலங்களை ஒழித்து அவற்றை ஏனைய ரயத்துவாரி நிலங்களுக்குள்ளது போன்ற தீர்வை முறையை அமுல்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது. இச்சட்டத்தின்படி இந்த நோக்கத்தை அடைவதற்கு 1972 வரியற்ற நிலங்களுக்கு (வரிவிதித்தல் சட்டம் 31/73) 1979-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் தேதி அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

இச்சட்டம் 12 மாவட்டங்களில் 4,777-23 ஹெக்டேர் விஸ்தீரணமுள்ள பரப்பில் வரியற்ற நிலங்கள் என உள்ளவற்றிற்குப் பொருந்தும். இதனுடன் 231·56 ஹெக்டேர் நிலங்கள் "மோறைனி இனாம் நிலங்கள்" என்ற பெயரில் மத சம்பந்தமான நிலையங்களின் கைப்பற்றில் கும்பகோணம், மயிலாடுதுறை, சீர்காழி மற்றும் நன்னிலம் வட்டங்களில் தஞ்சாவூர் மாவட்டத்தில் சட்டத்தின் 2-வது ஷெட்யூலில் காணப்படுகின்றன.

கட்டத்தின் பட்டியலுக்கு மேலும் கூடுதலான வரியற்ற நிலங்களுக்கு இணைப்புப்பட்டியல் தயாரித்து 27—4—1983 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் விளம்பரம் மூலம் சேர்க்கப்பட்டது.



இச்சட்டத்தை (31/73) அமுலாக்கம் செய்ய சட்டப்பிரிவு 8-ன் கீழ் மாவட்டம் வாரியாக அறிவிக்கைகள் (பெரியார், திருச்சி பகுதி மாவட்டம் தவிர) அரசின் ஏற்புடன் பிரசுரிக்கப்பட்டன. இப்பணி கீழ்க்கண்ட பட்டியலில் கண்டவாறு முடிக்கப்பட்டுள்ளது.—

| மாவட்டம். | கிராமம். |
|---|---|
| தஞ்சாவூர் | 45 |
| தென்னார்க்காடு | 1 |
| வட ஆற்காடு | 3 |
| திருநெல்வேலி | 1 |
| தர்மபுரி | 1 |
| மதுரை | 2 |
| சேலம் | 2 |
| மொத்தம் | 55 |

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமாரபாளையம் அக்ரஹாரம் கிராமத்தில் இச்சட்டத்தின் அமுலாக்கம் செய்வதை சென்னை உயர்நீதிமன்றம் எண். டபிள்யு.பி. 11205/83 என்ற ரிட் மனுவின் மீது தடையாணை விதிக்கப்பட்டு அதன் மூலம் நிலவரித் திட்டப்பணி நடைபெறுவது நிறுத்திவைக்கப்பட்டது.

**வருவாய்ப் பின்தொடர்ப்பணி :**

மாநிலத்தின் சில பகுதிகளில் காலப்போக்கில் அசல் நில அளவை உருவழிந்துள்ளதாலும் உள்ள ஆவணங்களைக்கொண்டு பராமரிப்புப் பணியைத் தொடர்ந்து மேற்சொன்ன இயலாமையாலும் அரசின் ஆணை பெற்று அப்பகுதிகளில் மறு சில அளவை மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து அங்கு நில உடைமைகளை மேம்படுத்தி பராமரிப்புக்கு, உகந்ததாகச் செய்ய மறு நிலவரித் திட்டம் மேற்கொள்வதற்குப் பதிலாக வருவாய்ப் பின்தொடர்ப்பணி மேற்கொள்ளப்படுகிறது. வருவாய்ப் பின் தொடர்ப்பணிக்கும் மறு நிலவரித்திட்டத்திற்கும் இடையான முக்கியமான வேறுபாடு மண் நயனம் வகைப்பாடு, தீர்வை விகிதம் ஆகியவை வருவாய்ப் பின்தொடர்ப்பணியில் மாற்றப்படு

[1985 ஜூன் 11

வதில்லை என்பதே, மறு நில அளவை ஆவணங்களைக் கொண்டு நில உடைமைகளை மேம்படுத்தியும் பழைய தீர்வை விகிதங் களை அப்படியே வைத்துக்கொண்டும் ஒரு புது கிராம ஆவணங் களின் தொகுப்பு தயாரிக்கப்படுகிறது. வருவாய்ப் பின் தொடர் பணி கீழ்க்காணும் வட்டங்களில் முடிக்கப் பெற்றுள்ளன :—

| மாவட்டம் | வட்டம் | பரப்பு ச.கி.மீ. | பயனடைந்தோர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பெரியார் .. | கோபி செட்டி பாளையம். | 657.67 | 88,182 |
| ஷை | சத்தியமங்கலம். | 729.07 | |
| ஷை | பவானி .. | 699.17 | 472,02 |
| ஷை | ஈரோடு .. | 1,548.79 | 139,632 |
| தென்னாற்காடு. | கடலூர் .. | 649.13 | 64,785 |
| ஷை | திண்டிவனம் | 1,404.14 | 41,476 |
| சேலம் .. | மேட்டூர் | 237.67 | 9,646 |
| மதுரை .. | கொடைக்கானல் | 392.10 | 16,687 |
| நீலகிரி .. | கூடலூர் .. | 413.06 | 961 |

வருவாய்ப் பின் தொடர்ப்பணி கீழ்க்காணும் மாவட்டங்களில் நடைமுறையில் உள்ளது, அதன் விபரம் வருமாறு :—

| வட்டம். | மொத்த விஸ்தீரணம் | பணி முடிவு பெற்றவை. | பணி நிலுவையுள்ளவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ச.கி.மீ. | ச.கி.மீ. | ச.கி.மீ. |
| பெரியார் மாவட்டம்.— | | | |
| தாராபுரம் .. .. | 757.69 | 228.49 | 529.20 |
| காங்கேயம் .. .. | 491.54 | 59.28 | 432.26 |
| வடஆற்காடு மாவட்டம்.— | | | |
| திருவண்ணாமலை .. | 264.56 | 52.09 | 212.47 |
| வேலூர் .. .. | 61.08 | .. | 61.08 |
| வாணியம்பாடி .. | 24.28 | .. | 24.28 |
| நீலகிரி மாவட்டம்.— | | | |
| உதகை .. .. | 1,195.03 | 134.02 | 1.061.01 |
| கூடலூர் .. .. | 228.33 | .. | 228.33 |
| கோத்தகிரி .. .. | 279.99 | .. | 279.99 |



1985 ஜூன் 11]

தஞ்சாவூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரே நிலவரித்
திட்ட அலுவலர் பணி புரிகிறார். அவர் கீழ் தஞ்சை, மதுரை,
திருவண்ணாமலை, தாராபுரம், கூடலூர் ஆகிய இடங்களில் கிளை
நிலவரித் திட்ட அலுவலகங்கள் எஞ்சிய நிலவரித் திட்டப்
பணிகளைச் செய்யவும் வருவாய்ப்பின் தொடர்ப் பணியை
மேற்கொள்ளவும் உள்ளன.

**பல்வேறு உடைமைகள் ஒழிப்புச்சட்டங்களின்கீழ் ஈட்டுத்தொகை மற்றும் அரசுக் கொடைகள்:—**

நில உடைமையாளர்கள் மற்றும் இனாம்தார்கள் ஆகியோரிட
மிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களின் மேல் முறை
யீடுகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இனங்களைத்
தவிர ஏனைய நிலங்களுக்குப் பல்வேறு ஒழிப்புச் சட்டங்களின்
கீழ் அனுமதிக்கப்படும் ஈட்டுத் தொகை நிர்ணயிக்கப்பட்டு அவர்
களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மதம் சார்ந்த நிறுவனங்கள்,
கல்வி நிலையங்கள் மற்றும் அறக் கட்டளைகள் ஆகியவற்றின்
கைவசமிருந்த உடைமைகளுக்கு நட்ட ஈட்டுத் தொகை அரசுக்
கொடையாக ஆண்டுதோறும் அச்சங்கங்களில் வகை
செய்துள்ளபடி நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

**…திய திட்டம்:**

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு என்னுமிடத்தில் ஒரு நில
அளவைப் பயிற்சி நிலையம் 31—5—1985-இல் ஆரம்பிக்கப்
பட்டுள்ளது. இந்நிலையில் நில அளவை மற்றும் கூட்டுறவுத்
துறை அலுவலர்களுக்கும், பயிற்சியில் ஈடுபட்டுள்ள துணை
ஆட்சியர்களுக்கும் உதவி ஆட்சியர்களுக்கும் கிராம நிர்வாக
அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கவும் பயிற்சி காலத்தில்
அவர்கள் தங்குவதற்கான வசதிகளையும் கொண்டது. டிராவர்ஸ்
கணிதம் சம்பந்தப்பட்ட பணிகளை விரைவாக முடிப்பதற்கு
சென்னை மத்திய நில அளவை அலுவலக உபயோகத்திற்காக
ஒரு மைக்ரோ-கம்ப்யூட்டர் இயந்திரம் வாங்குவதற்கும்
உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 11

### நில அளவை ஆவணங்களைப் பராமரித்தல் :

நில அளவை ஆவணங்களைப் பராமரிக்கும் பணி, வட்ட ஆட்சியர்களால் அவர்களின் கீழ் உள்ள நில அளவை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களின் உதவியுடன் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இப்பணி வருவாய் கோட்ட அதிகாரிகளால் மேற்பார்வை இடப்படுகிறது. மாவட்டங்களில் உள்ள நில அளவை அலுவலகத்தின் உதவி இயக்குநர் நில அளவை தொடர் பான பணிகளில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாள ராவார். இவரது உதவியுடன் மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வருவாய் அதிகாரிகளால் வட்டங்களின் பராமரிப்புப் பணிகள் முறையாக ஆய்வு செய்யப்படுகின்றன. மாநில அளவில் நில நிர்வாக சிறப்பு ஆணையர் அல்லது ஆணையர் ஆகியோரால் இப்பணிகள் ஆய்வு செய்யப்படுகின்றன. பராமரிப்புப் பணியில் புதிய உட்பிரிவு செய்ய வேண்டிய அல்லது வேண்டாத, பட்டா மாறுதல் இனங்களும், புதிய உட்பிரிவு ஏற்படுத்தக் கோரும் மனுக்களும், எல்லை குறித்துக் காண்பிக்கக் கோரும் மனுக்களும் எல்லைக் கற்களை ஆய்வு செய்தலும் காணாமல் போன கற்களை புதுப்பித்தலும் அடங்கும்.

### தீவிர உட்பிரிவுத் திட்டம் :

மறு நில அளவை மற்றும் மறு நிலவரித் திட்டம் 30 ஆண்டு களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டதால் இடையில் ஏற்படும் மாறுதல்களைக் கண்காணிக்க பராமரிப்பு நடைமுறை விதிகள் ஏற்படுத்தப்பட்டன. 1937 ஆம் ஆண்டில் மறு நிலவரித் திட்டம் கொள்கை அளவில் கைவிடப்பட்டதால் நில அளவை ஆவணங்கள் நாளடைவில் காலத்திற்கேற்ப இல்லாததாகி விட்டன. கூட்டுப் பட்டாக்களும் மிகப் பெரிய அளவில் இருந்தன. ஆகவே ஆவணங்களில் இருந்த பதிவுகளுடன் ஒத்துப் போக வில்லை. இந்த நிலையை நிவர்த்தி செய்ய 1968 ஆம் ஆண்டில் தீவிர உட்பிரிவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இத் திட்டத்தின்படி நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து கூட்டுப் பட்டாக்களைத் தனிப் பட்டாவாக்கி தனி உட்பிரிவு செய்து கொடுக்குமாறு கோரி மனுக்கள் பெறப்பட்டன. 1977 ஆம் ஆண்டு வரை இத் திட்டம் தொடர்ந்தது. இந்தக் காலத்தில் 166 வட்டங்களில் 44 வட்டங்கள் இத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.



1985 ஜூன் 11]

### மறு நில அளவை :

சில பகுதிகளில் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட புல எல்லைகள் பெரும் மாற்றம் அடைந்ததால், புதிய மாற்றங் களின்படி பராமரிப்புத் திருத்தங்களை ஆவணங்களில் மேற் கொள்ள இயலாததால் மறு நில அளவை மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறான மறு நில அளவை பெரியார் மாவட்டத்தில் கோபிச்செட்டிப்பாளையம், சத்தியமங்கலம், பவானி மற்றும் ஈரோடு வட்டங்களிலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூர், திண்டிவனம் வட்டங்களிலும், சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டத்திலும், மதுரை மாவட்டம் கொடைக்கானல் வட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும், நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நான்கு வட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. இந்த இடங்களில் பின்பு வருவாய்த் தொடர் பணி மேற்கொள்ளப்பட்டு புதிய ஆவணங்கள் வட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டன. இத்துறை தற்போது நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம், கூடலூர், கோத்தகிரி வட்டங்களிலும், வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை, வேலூர் மற்றும் வாணியம்பாடி வட்டங்களில் உள்ள சில கிராமங்களிலும், பெரியார் மாவட்டம் தாராபுரம் மற்றும் காங்கேயம் வட்டங்களில் சில கிராமங்களிலும் மேற்கொண்டுள்ள மறு நில அளவைப் பணியை முடிப்பதில் ஈடுபட்டுள்ளது.

நகர்ப்புறத்தில் முதல் அல்லது மறு நில அளவைக்குப் பின் நில அளவைத் துறையினரால் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அதன்பின் அவை வருவாய்த் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறையினரால், அளவை செய்து தருமாறு கோரப்பட்டு விகிதாச்சாரப்படி நில அளவை செலவுத்தொகையை அவர்கள் ஏற்றுக் கொண்டதால் இந்த அளவை மேற்கொள்ளப்பட்டது. தற்போது நான்கு நகரங்களில் நில அளவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகரப் பஞ்சாயத்துக்கள் மற்றும் பஞ்சாயத்து எனில் சம்பந்தப்பட்ட எல்லைக்குள் அடங்கியுள்ள தெருக்கள், சந்துகள் ஆகியவை தெரு நில அளவை என்ற பெயரால் நில அளவைத் துறையால் இந்த அளவையில் ஏற்படும் செலவுத் தொகையில் 1/3 பாகம் ஏற்றுக் கொள்வதாக சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள்

ஒத்துக் கொண்ட பின்பு அளவை செய்து தாப்படுகிறது. தற்சமயம் நிலஉடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டப் பணியை வெகு விரைவில் முடிக்கத் திட்டமிட்டுள்ளபடியால் தெரு நில அளவைப் பணி எதுவும் இத்துறையால் 1984 ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**நத்தம் அளவை :**

கிராமங்களில் உள்ள நத்தங்கள் பிரிவாக இத்துறையால் தற்போது அளவை செய்யப்படவில்லை. நத்தப் புலங்களின் வெளி எல்லைகள் மட்டும் நிர்ணயிக்கப்பட்டு குடியிருப்புகளில் உள்ள முக்கியமான பொதுக் கட்டிடங்கள் மட்டுமே விளக்கிகளாகக் குறிக்கப்படுகின்றன. தற்போது அமுல்படுத்தவிருக்கும் தமிழ் நாடு பட்டா பதிவுப் புத்தகச் சட்டம் தொடர்பாக நத்தப் புலங்களை விரிவாக அளவை செய்யும் பணியை 1985 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் :**

மறு நில அளவை மேற்கொள்ளப்படாததால், நில அளவைப் பதிவு ஆவணங்களை இன்றைய நிலவரத்திற்கேற்ப மாற்றி அமைப்பது மிக அவசியம் என உணரப்பட்டது. விரும்பிய நோக்கத்தை மிகக்குறைந்த செலவிலும் குறைந்த கால அளவிலும் அடைவதற்கு நிலஉடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டம் 1979 ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கிராமத்தில் உள்ள எல்லா சாகுபடி நிலங்களிலும் துணை நில அளவை மேற்கொள்ளப் பட்டது. இதில் புலங்களுக்கு ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட வெளி எல்லையை எதுவும் மாற்றாமல் புலத்தில் அடங்கியுள்ள புதிய உட் பிரிவுகளுக்கு மட்டுமே அளவை செய்யப்பட்டது. மேலும் துறை நில அளவையையும் வருவாய்த் தொடர் பணியையும் ஒருங்கே இணைத்து நில அளவைக்கென ஏற்படுத்தப் பட்ட அலுவலகத்திலேயே நில அளவைத் துறை அலுவலர்களைக் கொண்டு ஒரு நில அளவை ஆய்வாளர் மற்றும் தனித் தாசில்தார் ஆகியோரின் தலைமையின் கீழ் இத் திட்டம் செயல்படுத்தப் பட்டது.

ஒவ்வொரு புலத்திலும் மேற்கொள்ள வேண்டிய மற்றும் பரிசீலனையில் காணாமல் போன கற்களைப் புதுப்பித்தும் புதிய விளக்குகள் மற்றும் தேவையான புதிய உட் பிரிவுகள் அளக்கப் பட்டும் 'அ' பதிவேடு, சிட்டா, அடங்கல், புலப்படச் சுவடி, கிராமப் படம் ஆகியவற்றில் திருத்தங்கள் மேற்கொண்டு அவை புதிதாகத் தயாரிக்கப்பட்டன. இப்புதிய ஆவணங்களின் அடிப்படையில் ஒவ்வொரு பட்டாதாருக்கும் அவரது அனுபவத்தில் உள்ள நிலத்தைக் குறித்து விபரங்களுடன் நிலத்தின் தோராய படமும் கொண்டு ஒரு புதிய பட்டா வழங்கப் பட்டது. ஆட்சேபனை ஏதாகிலும் இருப்பின் அதனைக் கேட்டறிந்த பின் ஆவணங்கள் வட்டாட்சியருக்கு பராமரிப்பிற் காக வழங்கப்பட்டன. இந்த உரிய நடைமுறையினால் கிராமங்களின் ஆவணங்கள் சுமார் ஏழு மாத காலத்திற்குள் நவீனப்படுத்த இயலுகிறது. அதே சமயம் இதற்காகும் செலவு கிராமத்திற்கு மறு நில அளவையும் வருவாய்த் தொடர் பணியும் மேற்கொள்ளுவதில் ஏற்படும் செலவைக் காட்டிலும் குறைவானதே யாகும்.

இவ்வாறு இன்றைய நிலவரத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் வருவாய் நிர்வாகத்தை எளிதாக்குகிறது. மேலும் அமுல்படுத்தவிருக்கும் பட்டா பதிவு சட்டத்தை அறிமுகப் படுத்துவதற்கும் ஆவணங்களை இன்றைய நிலவரத்திற்கேற்ப தயாரிப்பதும் அத்தியாவசியமாகும். கூட்டுப்பட்டாக்கள் தனிப்பட்டாக்களாக மாற்றப்படுகின்றன. நவீனப்படுத்தப்பட்ட பட்டாவைக் கொண்டு ரயத்துக்கள் அவர்களது நிலம் சம்பந்தப் பட்ட பதிவுகளைத் தெரிந்து கொள்வதோடு சாகுபடிக்காக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்றப் பணிகளுக்குத் தேவைப் படும் கடன் பெறவும் இது அவருக்குப் பெரிதும் உதவுகிறது.

1979 ஆம் ஆண்டில் நில உடைமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டம் 30 வட்டங்களில் அமுல்படுத்தப்பட்டது. இத்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டபோது நில அளவைத் துறையில் பல்வேறு நிலைகளில் இருந்த அலுவலர்கள் ஒன்று திரட்டப்பட்டு 28 அலகு களில் நியமிக்கப்பட்டனர். 1982 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் நடைமுறை குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் உபயோகம் குறித்து திருப்தி

அடைந்தபடியால் 1982 ஆம் ஆண்டில் கூடுதல் அலுவலர்களை நியமிக்க அரசு அனுமதி அளித்தது. நகர அளவை, மறு நில அளவை மற்றும் தீவிர உட்பிரிவுத் திட்டத்தில் மேற்கொள்ளப் பட்ட பகுதிகளைத் தவிர நாடு பூராவும் இத்திட்டத்தில் பரவலாக்கி விரைந்து முடிக்கும்படி அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தில் 13 மாவட்டங்களில், அதாவது செங்கல்பட்டு, தென்னாற்காடு, வட ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், பெரியார் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 98 வட்டங்களில் சுமார் 80,000 ச.கி.மீ. அடங்கும்.

இத்திட்டம் 108 அலகுகளினால் அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு அலகும் ஒரு ஆய்வாளர் மற்றும் ஒரு தனித்தாசில்தார் ஆகியோர் தலைமையில் இயங்குகிறது. இவ் வலகுகள் 16 உதவி இயக்குநர்களாலும், 12 தனி உதவி இயக்குநர் களாலும், மேற்பார்வை இடப்படுகின்றன. மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அதிகாரிகளாலும் இப்பணி கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகிறது. சென்னை, மதுரை, கோவை ஆகிய மண்டலத்தைச் சேர்ந்த பணிகள் சம்பந்தப்பட்ட மண்டலத் துணை இயக்குநர்களால் மேற்பார்வையிடப்படுகிறது. மாநில அளவில் நில அள்வை மற்றும் நிலப்பதிவேடுகளின் கூடுதல் இயக்குநர் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் அவர்களால் இப்பணி ஆய்வு செய்யப்பட்டு பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கை அரசுக்கு அனுப்பப்படுகிறது. சிறப்பு ஆணையர், நில நிர்வாக ஆணையர் மற்றும் வணிக வரி அறநிலையத் துறை அரசு செயலர் ஆகியோரும் குறித்த காலங்களில் இத்திட்டத்தின்கீழ் நடைபெற்றுள்ள பணியை ஆய்வு செய்து வருகின்றனர். 30—9—1985-க்குள் புலப்பணியையும் 31—3—1986-க்குள் அலுவலகப் பணியையும் முடிப்பதற்கு எல்லாவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு பணி முழு மூச்சுடன் நடைபெற்று வருகிறது.

இதுவரை 13 வட்டங்களில் அனைத்துப் பணிகளும் முழுவதுமாக முடிவுற்றுள்ளது. அவையாவன :





செங்கற்பட்டு மாவட்டத்தில் கும்மிடிபூண்டி வட்டம், வட ஆற்காடு மாவட்டத்தில் ஆற்காடு வட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் நீடாமங்கலம் வட்டங்கள், மதுரை மாவட்டத்தில் நத்தம் வட்டம், தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி வட்டம், சேலம் மாவட்டத்தில் நாமக்கல் மற்றும் ஏற்காடு வட்டங்கள், தென்னாற்காடு மாவட்டத்தில் செஞ்சி வட்டம், பெரியார் மாவட்டத்தில் காங்கேயம் வட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் சிவகிரி மற்றும் நாங்குநேரி வட்டங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை வட்டம் ஆகியன. இதைத்தவிர, 26 இதர வட்டங்களில் புலப்பணி முடிவுற்று அலுவலகப் பணி மட்டும் இறுதி நிலையில் உள்ளது. மீதமுள்ள 59 வட்டங்களிலும் புலப்பணியும் அலுவலகப் பணியும் முன்னேற்றத்தில் உள்ளன. கடந்த 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அரசால் அனுமதிக்கப்பட்ட புதிய பதவிகளுக்காக 30—9—1985 வரை ரூ. 17.36 கோடி செலவாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. இதைக் கணக்கில் கொண்டு இத்துறையில் ஏற்கனவே வேறு பணிகளுக்காக உள்ள அலுவலர்களில் சிலரை இத்திட்டப் பணிக்காக திருப்புவதிலும் எல்லைக்கற்கள் நடுவதில் ஏற்படும் ஆரம்ப செலவுகள் தொடர்பாகவும் இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ. 33.05 கோடி செலவாகலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இத்தொகையில் இத்திட்டப்பணி முடிவுற்ற பின் ரயத்துக்களிடமிருந்து ரூ. 25.12 கோடி வசூலிக்க வேண்டிய தொகையாகும்.

31—3—1985 வரை இத்திட்டத்தின்கீழ் செய்து முடிக்கப்பட்ட பல்வேறு பணிகளின் விவரம் பின்வருமாறு :—

| | | கிராமங்களின் எண்ணிக்கை. | விஸ்தீரணம் ச.கி.மீ |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | மொத்த விஸ்தீரணம் .. | .. | 80,000 |
| 2 | அளக்கப்பட்ட விஸ்தீரணம் .. | 8,413 | 60,514 |
| 3 | பட்டா வழங்கப்பட்ட பரப்பு. | 6,913 | 46,712 |
| 4 | துணை கணக்குகள் ஒப்படைக்கப்பட்ட பரப்பு .. | 6,568 | 43,859 |
| 5 | 13-வது இறுதி விளம்பரம் செய்யப்பட்ட பரப்பு .. | 5,076 | .. |

[1985 ஜூன் 11

| | | | |
|---|---|---|---|
| 6 மத்திய நில அளவை அலுவலகத்திற்கு அனுப்பபட்ட பரப்பு .. .. .. | 4,908 | | 30,857 |
| 1 அளக்கப்பட்ட உட்பிரிவுகளின் எண்ணிக்கை .. .. | | 74,37,(21 | |
| 2 புதுப்பிக்கப்பட்ட கற்களின் எண்ணிக்கை .. .. | | 23,(7,115 | |
| 3 ஆக்கிரமிப்புகளின் தெரிவிக்கப் பட்ட எண்ணிக்கை .. | | 83,298 | |
| 4 அளந்து குறிக்கப்பட்ட விளக்கிகளின் எண்ணிக்கை .. | | 6,20,584 | |
| 5 முடிக்கப்பட்ட ஆட்சேபணைகளின் எண்ணிக்கை .. | | 1,89,473 | |
| 6 தரம் மாற்றம் 'தேவை என அறிவிக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை .. .. | | 24.100 | |
| 7 வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை .. .. | | 47,37,919 | |
| 8 பயனடைந்தோரின் எண்ணிக்கை | | 70,78.4(6 | |

| திட்டத்தின் பெயர். | தனிபட்டா. | கூட்டுபட்டா. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 நில உடைமை பதிவு மேம் பாட்டுத் திட்டத்திற்கு முன் .. | 20,80,684 | 14,28,931 | 35,09,615 |
| 2 நில உடைமை பதிவு மேம் பாட்டுத் திட்டத்திற்குப் பின் .. | 34,65,666 | 12,72,453 | 47,37,919 |



1985 ஜூன் 11]

**நில அளவை மத்திய அலுவலகம் :**

நில அளவை மத்திய அலுவலகத்தில் உள்ள வரைப்பட பிரிவு கிராமம், நகரர் மற்றும் பஞ்சாயத்துக்களின் படங்களைத் தயாரிப்பதும் முறைப்படி வட்ட மற்றும் மாவட்ட படங்களை மறு பதிப்பு செய்வதும் ஆகும். நில உடமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டம் முடிவுற்ற 3,397 கிராமங்களுக்கு கிராமப்படங்கள் பல மாவட்ட அலகுகளிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றில் 844 கிராமங்களுக்கு பணி மேற்கொள்ளப்பட்டு படங்கள் அச்சிட்டு பராமரிப்புக்கு கிராமப் படங்கள் வழங்கப்பட்டு விட்டன. இதைத் தவிர 30 பஞ்சாயத்துகளுக்கு ஆவணங்கள் மாவட்ட அலகு களிலிருந்து பெறப்பட்டுள்ளன. இவற்றில் 27 பஞ்சாயத்துக் களுக்கு அலுவலகப் பணி முடித்து படங்கள் அச்சிட்டு வழங்கப் பட்டு விட்டன.

போட்டோ லித்தோகிராபி உத்திகளைக் கையாண்டு அரசு துறைகளுக்குத் தேவையான படங்கள், சார்ட் முதலான வற்றையும் கிராம வட்ட மற்றும் நகரப்படங்கள் கருப்பு மற்றும் ஆறு வண்ணங்களிலும் மறு பதிப்பு செய்து அச்சிடுவது போட்டோ சிங்கோ அச்சகத்தின் பணியாகும்.

## 19. நில உரிமைப் பதிவேடு வழங்கல் திட்டம்.

1972 ஆம் ஆண்டில் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட நில உரிமைப் பதிவேடு வழங்கல் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டம் நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும், ஒரு கோடிக்கு மேல் நில உரிமைப்பதிவேடு புத்தகங்கள் பட்டாதாரர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. இந்நில உரிமைப் பதிவேடு புத்தகம், நிலப்பட்டா தாரர்கள் தங்களிடம் உள்ள நில உடமைகளின் நாளது வரையி லான விவரங்களை உள்ளடக்கியுள்ளது. இது வருவாய்த் துறை நிர்வாகத்திற்குப் பயனுள்ள ஒரு புத்தகமாகவும் உள்ளது. ஆனால், இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நில உரிமைப் பதிவேடு புத்தகம் சட்ட அடிப்படையில் இல்லை. நிதித் துறையைச் சேர்ந்த மதிப்பீடு செயல்முறை ஆராய்ச்சித் துறை முன்னோடி ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. அதன்படி நில உரிமைப் பதிவேடு திட்டத்தைத் திறமையான முறையில் செயல் படுத்துவது பற்றி ஆய்வு செய்ய முன்னாள் வருவாய் வாரியத்தின் நிலவரி ஆணையாளரின்கீழ் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது,

உழவர்கள் பயனடையும் வகையில் நில உரிமைப் பதிவேடு அடங்கல் புத்தகமாக ஆக்க அதனை மாற்றி அமைக்க வேண்டுமென இக்குழு கருத்து தெரிவித்தது. நிதி உதவும் நிறுவனங்கள், கடன் வழங்கும் நிறுவனங்கள், ஆகியவை நில உரிமைப் பதிவேட்டை தாக்கல் செய்தவுடன் கடன்கள் வழங்க இயலும் வகையில் நில உரிமைப் பதிவேட்டுக்குச் சட்டத் தகுதிநிலை கொடுக்கச் சட்டமியற்றவும் பதிவு அலுவலகங்களில் விற்பனை அடமானம் போன்ற சொத்து மாற்றம் பற்றிய ஆவணங்களைப் பதிவு செய்யும்போது பதிவுகளைச் செய்வதற்காகவும் நில உரிமைப் பதிவேடு கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத்தப் படவும் குழு பரிந்துரை செய்தது.

தமிழ்நாடு நில உரிமைப் பதிவேடு வழங்கல் சட்ட முன்வடிவு (சட்ட முன்வடிவு எண் 49/81) 1981 ஆம் ஆண்டு மே திங்களில் சட்ட மன்றத்தில் கொண்டுவரப்பட்டது. கூட்டாய்வுக் குழுவின் பரிந்துரைகளின்படி திருத்தப்பட்ட சட்ட முன்வடிவு, நிலத்தின் உரிமையாளர் ஒவ்வொருவருக்கும், அவர் சொந்தமாக வைத்துள்ள நிலத்திற்கு விண்ணப்பிக்கும்போது நில உரிமைப் பதிவேடு ஒன்றை வட்டாட்சியர் வழங்க வகை செய்கிறது. இச்சட்ட முன்வடிவு சட்டமாக்கப்பட்டுச் செயலுக்கு கொண்டுவரும்போது ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நில சொந்தக்காரரும் நில உரிமைப் பதிவேடு பெற விண்ணப்பிக்க வேண்டும் என்று வட்டாட்சியர் அறிக்கை ஒன்றினை வெளியிட வகை செய்யப் பட்டுள்ளது. விற்பனை, கொடை, அடமானம், பரிவர்த்தனை மற்றும் செட்டில்மென்ட் மூலமாக அல்லது வேறு வகையில் ஏதேனுமொரு நிலத்தை உரிமை மாற்றம் செய்வதற்காகத் தாக்கல் செய்யப்படும் பத்திரம் எதையும் அந்நிலம் தொடர்பான பதிவேட்டைத் தாக்கல் செய்தாலன்றி மற்றபடி பத்திரப் பதிவு செய்யும் அலுவலர் பதிவு செய்யக்கூடாது. வீட்டுமனை நிலங்களுக்கும் நில உரிமைப் பதிவேடு வழங்க இச்சட்ட முன்வடிவு வகை செய்கிறது.

இச்சட்ட முன்வடிவு 1983 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நடந்த சட்ட மன்றக் கூட்டத் தொடரின் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற 1983 ஆம் ஆண்டு டிசம்பரில் அனுப்பப்பட்டது. நில உரிமைப் பதிவேடு புத்தகத்தில் குத்தகைச் சாகுபடியாளரின்





பெயரைக் குறிப்பிட வேண்டும் என்பது குறித்து சில வினாக்களை மைய அரசு எழுப்பியது. அவ்வினாக்களுக்கான தகுந்த பதில் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து மைய அரசு ஊரக வளர்ச்சித்துறை இணைச் செயலருடன் விவாதிக்கப்பட்டது. இதுபற்றி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 20. நிலம் கையகப்படுத்துதல்.

திரு. சிவராமன் தலைமையிலான வல்லுநர் குழுவின் பரிந்துரைகள் மற்றும் திரு. ஏ. என். முல்லா என்பவரின் தலைமையிலான நிலம் கையகப்படுத்துதல் மறு ஆய்வுக் குழுவின் பரிந்துரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அனைத்து மாநில அரசுகளைக் கலந்தாலோசித்து, மைய அரசினால் 30—4—1982 ஆம் நாளில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நிலம் கையகப்படுத்துதல் திருத்த சட்ட முன்வடிவு, 1984 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 24—9—1984 ஆம் நாளில் இந்தியக் குடியரசுத் தலைவரால் ஒப்பளிக்கப்பட்டது. இத்திருத்தச் சட்டம் 24—9—1984 ஆம் நாள் [illegible] வந்துள்ளது. நிலம் கையகப்படுத்துதலில் வழங்கப்படும் தீர்ப்புகள், திருத்தச் சட்டத்தின் விதித்துறை களுக்கிணங்க இருக்கவேண்டுமென்பதற்காக, மைய அரசிட மிருந்து கிடைக்கப்பெற்ற செய்தியின் அடிப்படையில் நிலுவை யிலுள்ள நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் வழங்கப் படும் தீர்ப்புகளை நிறுத்திவைக்குமாறு 1—10—1984 ஆம் நாளன்று அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப் பட்டார்கள். மேலும் இத்திருத்தச் சட்டத்தின் "படி" மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி தொடர்புள்ள அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது. இத்திருத்தச் சட்டத்தினால் ஏற்படும் விளைவுகள் பற்றி தலைமைச் செயலகத்தில் 29—11—1984 ஆம் நாள் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் நன்கு விவாதிக்கப்பட்டது.

[1985 ஜூன் 11

இத்திருத்தச் சட்டம், கீழ்க்கண்ட குறிக்கோள்களை, ஏனையவற்றுள் நோக்கமாகக் கொண்டது :

). 4 (1) அறிவிக்கைக்கும், விளம்பல் அறிவிக்கைக்கும் உள்ள இடைப்பட்ட காலத்தை மூன்று ஆண்டுகளிலிருந்து ஓராண்டாகக் குறைத்ததன் மூலமாக நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தி அலுவலகக் காலதாமதத்தைக் குறைத்தல், நிலச்சொந்தக்காரர்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை துரிதமாகப்பெற, பிரிவு 6-ன் விளம்பல் அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டு காலத்திற்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமென காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு, அவ்வாறு இக்கால அளவுக்குள் தீர்ப்பு வழங்கப்படவில்லையாயின், நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அற்றுப்போகும் ;

). 4 (1) மற்றும் விளம்பல் அறிவிக்கைகளை அரசிதழில் வெளியிடுவதோடு, செய்தித்தாள்களிலும் (அதிலொன்று வட்டார மொழியாக இருத்தல் வேண்டும்) வெளியிடுவதனால் நிலம் கையகப்படுத்துதலுக்கு விரிவான விளம்பரம் கொடுத்தல் ; மற்றும்

(iii) நிலச் சொந்தக்காரர்களுக்கு நியாயமான ஈட்டுத் தொகையும் உயர்ந்த விகித வட்டியும் அளித்தல்.

3. உயர்மட்டக் கட்டத்தில் எடுக்கப்பட்ட பலதரப்பட்ட முடிவுகளுக்கிணங்க தீர்ப்புகள் வழங்குதலை நிறுத்திவைக்க வேண்டுமென்று ஏற்கனவே விதிக்கப்பட்ட தடையாணை நீக்கப்பட்டதென அனைத்து அலுவலர்களுக்கும் உடனே தெரிவிக்கப்பட்டது. திருத்தச் சட்டத்தின் விதித்துறைகளுக்கொப்ப நிலம் கையகப்படுத்துதல் நடவடிக்கைகளை, கையகப்படுத்துதல் அலுவலர்கள் பின்பற்றும் வண்ணம், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் கூடுதல் மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அனைத்து அலுவலர்களுக்கும் அவ்வப்போது தேவையான அறிவுரைகள், ஆணைகள் மற்றும் வழிமுறைகள் வழங்கப்பட்டன.

4. நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அறிவிக்கைகளை குறிப்பிட்ட நாட்களில் தவறாமல், அரசிதழில் வெளியிட வேண்டுமென எழுதுபொருள் அச்சக இயக்குநருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. உள்ளூரில் வெளியாகும் நாளேடுகளில்



1985 ஜூன் 11]

அறிவிக்கைகளை வெளியிடும் ஒருங்கிணைப்புப் பணியினை செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் கவனித்து வருகிறார்.

5. இத்திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த, புதிய விதிகள் ஏற்படுத்துதல், உருபடிவங்களை மாற்றி அமைத்தல், தொடர்புள்ள விதிகள், வருவாய் நிலையாணை மற்றும் கையேட்டிற்குத் தேவையான திருத்தங்களை அனுப்புதல் போன்ற பணிகளைத் தீவிரமாக செயலாற்ற நில நிருவாகத்துறையில் மாவட்ட வருவாய் அலுவலரின் பொறுப்பில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அமைப்பு பணியாற்றிவருகிறது. இது தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை, அரசு கூர்ந்து கவனிப்பதோடு, அவ்வமைப்பிலிருந்து பெறப்படும் கருத்துக்கள் மீது உடனுக்குடன் ஆணைகள் வெளியிடும். தற்போது திருத்தம் செய்யப்பட்ட நிலம் கையகப்படுத்துதல் மூலச் சட்டத்தின் விதித்துறைகளுக்கு , ஒப்ப, நிலம் கையகப்படுத்துதல் நடவடிக்கைகள் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் தலைமைச் செயலகத்துறைகள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## இணைப்பு III

(363 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### நிதி (ஓய்வூதியம்) துறை.

**கோரிக்கை 42--ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.**

இக் கோரிக்கையில் கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன :—

| | ரூ. |
|---|---|
| 266. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். | 54,65,25,000 |

| | ரூ. |
|---|---|
| 288. சமூகப் பாதுகாப்பு நலனும் சமூகப் பாதுகாப்பு நலன் குறித்து ஏனைய திட்டங்களும். | 1,79,75,000 |
| | 56,45,00,000 |

அரசுப் பணியாளர்கள், மான்யம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள், நகராட்சி பணியாளர்கள், முதலியோர் தொடர்பாக ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்குதல் உட்பட ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள், வருங்கால வைப்பு நிதிக்கான பங்குத் தொகை அல்லது அவர்களுடைய குடும்பங்கள் தொடர்பாக குடும்ப ஓய்வூதியம் முதலியவை குறித்த செலவுகளை செய்வதற்காக இக் கோரிக்கை ஏற்பட்டுள்ளது.

### ஓய்வூதியம், இறப்பு-ஓய்வூதியம் பணிக்கொடை.

தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள் 1—7—1960 முதல் செயலுக்கு வந்தன. இந்த விதிகளின்படி 1—10—1979 வரை அரசுப் பணியாளர் ஒருவர் 25 ஆண்டுகள் தகுதிப் பணி புரிந்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது சராசரி ஊதியத்தில் 30/80 என்ற வீதத்தில் ஓய்வூதியம் பெற்றார். 25 ஆண்டுகளுக்கு மேல் அவர் தகுதிப் பணி புரிந்திருந்தால், சில நிபந்தனைகளுக்குட்பட்டு சராசரி ஊதியத்தில் 33/80 வரை அதிக ஓய்வூதியம் வழங்கப்பட்டது. இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட நடைமுறைக்கேற்ப, ஓய்வூதியம் கணக்கிடும் நடைமுறையை 1—10—1979 முதல் அரசு பின்வருமாறு மாற்றி அமைத்துள்ளது :—

| | மாதாந்திர ஓய்வூதியம். |
|---|---|
| (1) ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப்படும் சராசரி ஊதியத்தில் முதல் 1,000 ரூபாய் வரை. | சராசரி ஊதியத்தில் 50 சதவீதம். |
| (2) ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப்படும் சராசரி ஊதியத்தில் அடுத்த 500 ரூபாய் வரை. | சராசரி ஊதியத்தில் 45 சதவீதம். |





| | மாதாந்திர ஓய்வூதியம். |
|---|---|
| (3) ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப்படும் சராசரி ஊதியத்தில் எஞ்சிய தொகைக்கு. | சராசரி ஊதியத்தில் 40 சதவீதம். |

ஓய்வு பெறும் வயது 55 ஆண்டுகள் என்பதிலிருந்து 58 ஆண்டுகள் உயர்த்தப்பட்டதைக் கருத்தில் கொண்டு, மேற்சொன்னபடி நிலைகளின் அடிப்படையில் கணக்கிடப்படும் ஓய்வூதியம், உயர்ந்த அளவு பணிக்கால அளவான 33 ஆண்டுக்குத் தொடர்புடையதாயிருக்கும். ஓய்வூதியத்தின் உச்சவரம்பான ரூபாய் 1,500-யும் நீக்கப்பட்டிருக்கிறது.

இருபது ஆண்டுகளே பணி புரிந்திருந்தாலும் ஓய்வுகாலக் கூடுதல் நன்மைகளுடன் அரசுப் பணியாளர்கள் தாங்களாகவே ஓய்வு பெற அரசு அனுமதி வழங்கியுள்ளது. உயரளவு 5 ஆண்டுகள் வரையில் ஓய்வூதியக் கணக்கில் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப் படுகிறது. இவ்வாறாக, அரசுப் பணியாளர்கள் 20 ஆண்டுகள் பணிபுரிந்து தாமாகவே ஓய்வு பெற்றால், அவர்களும் நிதித் துறையின் (ஓய்வூதியம்) 2—2—1980 நாளிட்ட 57 ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பட்ட வீதங்களில் ஓய்வூதியம் பெறுவர். இத்துடன், முடிவு பெற்ற ஒவ்வோர் ஆறு மாதப் பணிக்கும் ஊதியத்தில் ¼ பங்கு என்ற வீதத்தில் இறப்பு ஓய்வூதியப் பணிக்கொடையும் அனுமதிக்கப்படுகிறது. இது ஊதியத்தில் 16½ மடங்கு என்ற உயரளவிற்கு உட்பட்டதாகும். உயரளவு பணிக்கொடை 31—3—1985 முதல் ரூ. 36,000-லிருந்து ரூ. 50,000 ஆக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

1—10—1979-க்கு முன்னர் ஓய்வு பெற்ற எல்லா அரசு ஊழியர் களுக்கும் தளர்த்தப்பட்ட ஓய்வூதியத்தின் பயன்கள் நீட்டிக்கப் பட்டுள்ளது.

1—4—1978-க்கு முன்னர், ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர் ஒருவரின் குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயாக இருந்தது, தமிழ்நாடு மூன்றாவது சம்பளக் குழு செய்த பரிவுரைகளின் அடிப்படையில் 1—4—1978 முதல் குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயாக உயர்த்தப்

பட்டுள்ளது. பின்னர் 1—4—1982 முதல் குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் 125 ரூபாயாக உயர்த்தப்பட்டு, இது தமிழ்நாடு நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரையின்படி 1—10—1984 முதல் மேலும் ரூ. 235 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரையின்படி ஓய்வூதிய தாரர்களுக்கு பணியாளர்களுக்கு வழங்கும் அகவிலைப்படியைப் போலவே வழங்கப்பட உள்ளது.

ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால், அத் தொகை பண அஞ்சல் மூலமாக அரசுச் செலவில் அனுப்பப்படுகிறது. மேற்படி தொகை 300 ரூபாய்க்கு மேற்பட்டால், அவரவர் விரும்புகிற வங்கி மூலமாக அனுப்பப் படுகிறது.

ஓய்வூதியம் பெறுபவர்கள் சில மருத்துவச் சலுகைகள் பெறவும் தகுதியுடையவர் ஆவர். இது ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய் என்ற உயரளவிற்குட்பட்டு ஆண்டு ஓய்வூதியத்தில் 10 சதவீதமாகும்.

மாதம் ஒன்றுக்கு 750 ரூபாய் வரை ஓய்வூதியம் பெறுபவர்கள் பண்டிகை முன்பணம் ஒரு மாத ஓய்வூதியம் அல்லது ரூ. 100 இதில் எது குறைவோ அதைப் பெறத் தகுதியுடையவர் ஆவர்.

28—2—1978 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரை, தங்களுடைய ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுக்க வேண்டும் என அவர்கள் ஓய்வு பெற்ற நாளிலிருந்து ஓராண்டிற்குள் விண்ணப்பித்துக் கொண்டால், மருத்துவச் சோதனை இன்றியே அவர்களுடைய ஓய்வூதியத்தில் ஒரு பகுதி அவர்களுக்கு மொத்தமாக்கிக் கொடுப்பது அனுமதிக்கப்பட்டு வருகிறது. தாமாகவே முன்வந்து ஓய்வு பெற்று, தங்களுடைய ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுக்க வேண்டு மென தாம் ஓய்வு பெற்ற நாளிலிருந்து ஓராண்டுக்கால அளவிற்குள் விண்ணப்பித்துக் கொண்டால், அவர்களுக்கும் இச்சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது. 1—4—1981 முதல் ஓய்வூதியம் பெறும் அரசு அலுவலர்களுக்கு அவர்கள் ஓய்வு பெற்ற



நாளிலிருந்து 15 ஆண்டுகள் நிறைவு பெற்றவுடன் அவர்கள் ஓய்வூதியத் தொகையில் முன்பு ஒரு பகுதியை மொத்தமாகப் பெற்றுக்கொண்டதை முழுமையாக்கி முழு ஓய்வூதியம் பெற ஆணை பிறப்பித்துள்ளது.

நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரைப்படி இடைக்கால நிவாரணமாக ரூபாய் 20 எல்லா ஓய்வூதியதாரர்களுக்கும் அளிக்கப்படவிருக்கிறது. இத்துடன் 1—10—1984 முதல் அடிப்படை ஓய்வூதியத்தில் (7-லிருந்து 30 சதவிகிதம்) வரை உயர்வு அளிக்கப்பட உள்ளது.

## குடும்ப ஓய்வூதியம்.

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ ஓய்வு பெற்ற பின்னரோ இறந்துவிட்டால், அவரது குடும்பம் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஆனால், அவர் இறக்கும் போது ஓராண்டு காலமாவது பணியாற்றியிருக்க வேண்டும். அலுவலர் இறக்கும்போது அல்லது பணியிலிருந்து ஓய்வு பெறும் போது அவர் பெற்று வந்த சம்பளத்தின் அடிப்படையில் இந்த குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது, இறந்த அலுவலரின் மனைவிக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப் படும், அவர் இறந்த பிறகும்கூட உரிய வயதடையாத அவரது குழந்தைகளுக்கு அந்த ஓய்வூதியம் வழங்கப்படும். 1—4—1979-க்கு முன்னர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வராத குடும்பங்கள் அனைத்திற்கும் 1—4—1979-லிருந்து அத் திட்டம் நீட்டிக்கப் பட்டுள்ளது. குடும்ப ஓய்வூதியம் கணக்கிடும் அளவை, அலுவலர் ஓய்வு பெறும் நாளில் கடைசியாக பெற்று வந்த சம்பளத்தில் 30 சதவிகிதமாக மேலே குறிப்பிட்ட நாளிலிருந்து மாற்றி யமைக்கப்பட்டிருக்கிறது. இந்த குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 125 ஆக 1—4—1982 முதல் உயர்த்தப்பட்டு, மேலும் அதை ரூ. 235 ஆக 1—10—1984 முதல் தமிழ்நாடு நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரையின்படி உயர்த்தப்பட உள்ளது. தற்போதுள்ள விதிகளின்படி, தொடர்ந்து ஏழாண்டுகளுக்குக் குறையாமல் பணியாற்றியுள்ள அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போது இறக்க நேரிடின் அவருடைய குடும்பத்திற்கு, அவர் இறந்த பிறகு ஏழாண்டுக் காலம் அவர் உயிருடன் இருந்திருந்தால் ஆண்டு முதிர்வு

காரணமாக அவர் ஓய்வு பெற்றிருக்கலாகும் நாள் இவற்றில் எது குறைவோ அக் காலம் வரையில் அதிக விதத்தில் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும். அரசுப் பணியாளர் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதம் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி, அனுமதிக்கத்தக்க குடும்ப ஓய்வூதியத்தைப்போல் இரு மடங்கு இவற்றில் எது குறைவோ அத் தொகை குடும்ப ஓய்வூதியத் தொகையாக இருக்கும். முன்பு உயர்த்தப்பட்ட உயரளவு குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 300 ஆகும். தமிழ்நாடு மூன்றாவது சம்பளக் குழு பரிந்துரைத்த அடிப்படையில் 1—4—1979-லிருந்து அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம், திங்கள் ஒன்றுக்கு ரூ. 500 என்னும் வரம்புக்குட்பட்டு பணியாளர் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் 50 சதவீதமாக இருக்கிறது. உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம், பணியிலிருக்கும் போது இறந்த நாளுக்குப் பிறகு ஏழாண்டுக்கால அளவு, ஆண்டு முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றிருக்கலாகும் நாள் இவற்றுள் எது குறைவோ அதுவரையில் அனுமதிக்கப்படும்.

1956 ஆம் ஆண்டின் மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின்படி மாநிலங்கள் பிரிக்கப்படாமலிருந்த சென்னை மாநிலத்தில் எந்த இடத்திலிருந்தும் ஓய்வு பெற்று இறந்த அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கு 1—4—1979 முதல் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அத் தீர்ப்பின்படி, முன்பு பிரிக்கப்படாத சென்னை மாநிலத்திலிருந்து ஓய்வு பெற்று பின்னர் இறந்த அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கும் ஓய்வூதியம் பெற அரசு வகை செய்துள்ளது.

குடும்ப ஓய்வூதியம் தொடர்ந்து அளிக்கும் சலுகை, அரசுப் பணியாளரின் மகன்கள், திருமணமாகாத மகள்கள் முறையே 18, 21 வயது அடைகின்ற வரையில் என்பதற்குப் பதிலாக, 21, 24 வயது அடைகின்ற வரையில் அவர்களுக்கு அளிக்கப்படலாமென்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

## ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்.

தனியார் (மான்யம் பெறும், உள்ளாட்சி மன்றம்) பள்ளிகளிலிருந்து 1—6—1970-ல் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் மான்யம் பெறும் பள்ளிகளிலிருந்து 1—1—1972-ல் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வுபெற்ற ஆசிரிய



ரல்லாத பணியாளர்களுக்கும், மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்துகிற . தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள் பொருந்தும். குறிப்பிட்ட பல்வேறு தேதிகளுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மாநில அரசுப் பணியாளர்களுக்கு நிகராக ஓய்வூதியம், பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றை அவர்கள் பெறுகின்றனர்; ஓய்வூதியத்திற்கு இறுதி அனுமதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால், தற்காலிக ஓய்வூதியம், பணிக்கொடையும் பெற அவர்களுக்குத் தகுதியுண்டு.

தனியார் (உள்ளாட்சி மன்றத் தனிப்பட்ட) கல்வி நிறுவனப் பணியாளர்களுக்குக் குறிப்பிட்ட பல்வேறு தேதியிலிருந்து குடும்ப ஓய்வூதிய நன்மைகள் அனுமதிக்கப்பட்டன; அதாவது, தனியார் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு 1—4—1962-லிருந்தும், தனியார் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1—4—1972-லிருந்தும் இந்த நன்மைகள் வழங்கப்பட்டன. குடும்ப ஓய்வூதியம் குறித்த நிர்ணயிக்கப்பட்ட தேதிகளுக்கு முற்பட்ட தேர்வுகளிலும் குடும்ப ஓய்வூதிய நன்மைகள் வழங்குவதற்கு 13—3—1980-ல் அரசு ஆணை பிறப்பித்தது.

## நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்.

14—1—1970-க்கு முன்னர் ஓய்வுபெற்ற நகராட்சிப் பணியாளர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 தனி ஓய்வூதியம் பெற்று வந்தனர். இந்த ஓய்வூதியத்தை அரசு 16—4—1980-லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 100 ஆக உயர்த்தியுள்ளது. இது மேலும் 1—4—1982 முதல், 125 ரூபாயாக உயர்த்தப்பட்டிருந்தது. நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரைப்படி, மறுபடியும் இக் குறைந்த அளவு ஓய்வூதியத்தினை ரூபாய் 235 ஆக 1-[illegible]-1984 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்பட்டு வரும் இடைநிலைப் படியினையும் வழங்கப்பட்டுள்ளது.

136401